## SEMESTER – V

## CORE PAPER - VI

# CONTEMPORARY HISTORY OF INDIA 1947 A. D. TO 2000 A.D

**Objectives:**

1. To know the consequences of partition
2. To study policies of various governments
3. To understand the impacts of new economic policies

UNIT-I

Integration and Reorganization of Indian states – Role of Sardar Vallabhai Patel – Republican constitution, 1950 – First General Elections, 1952.

UNIT-II

Nehru Era – Five Year Plans – Agricultural development – Industrial

Development – Nehru and India's Foreign Policy – Kamaraj Plan.

UNIT-III

Lal Bahadur Sastri – Indira Gandhi – Proclamation of Emergency (MISA)

– Total Revolution – Jaya Prakash Narayan – 1977 Election and Morarji Desai – Charana Singh.

UNIT-IV

General Election of 1980 – Re emergency of Indra Gandhi – Punjab crisis

– Blue star operation – Rajiv Gandhi – Panchayat Raj.

UNIT-V

V.P.Singh – Mandal Commission Report – General Election, 1991 – Narasimha Rao – Man Mohan Singh.

**References**


1. Appadurai, India: Studies in Social and Political Development 1917 – 1967, Himalaya Publishing House, Bombay, 1963.
2. C.D. Deshmukh: Economic Development of India 1946-56, Asia Publishing House, Bombay, 1957.
3. Drierberg and Sarla Jagmohan: Emergency in India, Delhi, 1975.

# பகுதி I

# நேரு சகாப்தம், 1947–1964

## 1. சுதந்திர இந்தியா

...இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில்
இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது.

– ஜவகர்லால் நேரு.

### 1647 – 1947 பின் பார்வை

1647–இல் இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் இருபத்தி மூன்று ங்களில் வர்த்தகக் கிடங்குகளை நிறுவி நிர்வகித்து வந்தது. 1757–இல் நடைபெற்ற ாசிப் போரில்' வெற்றி பெற்றுக் கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்ட கம்பெனி களத்தில் அதன் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியது. 1857–இல் ஆங்கிலேய க்கத்துக்கு எதிராக எழுந்த 'பெருங்கிளர்ச்சி' ஒடுக்கப்பட்டு இந்தியா இங்கிலாந்தின் ாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1947–இல் இந்தியா பிரிட்டனின் பிடியிலிருந்து தலை அடைந்தது. 300 ஆண்டு கால அந்நிய ஆதிக்க இருள் விலகி இந்தியாவில் திர ஒளிபடர்ந்தது.

### விடுதலையின் போது இந்தியா

இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14–15ம் நாள் நள்ளிரவில் பிரிட்டிஷ் திக்கத்தின் பிடியிலிருந்து விடுதலை அடைந்த போது ஒரு சகாப்தம் முடிந்து றாரு சகாப்தம் ஆரம்பித்தது. சுதந்திர இந்தியா பிரிட்டிஷ் ஆட்சி போட்டுக் கொடுத்த தயை செப்பனிட்டு, மறுசீரமைத்து, சீர்திருத்தி மிகுந்த நம்பிக்கையோடு பயணத்தைத் டர்ந்தது. தேச விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் புதிய தொலைநோக்குடன் ் புனரமைப்புக்குப் பொறுப்பேற்றனர்.

**அட்லியின் அறிவிப்பு (The Attlee Declaration, 1947 பிப்ரவரி)**

1946 ஆகஸ்டு 16–ம் தேதி "இடைக்கால அரசாங்கத்தை" (Interim Government) மக்குமாறு வைசிராய் வேவல் பிரபு, ஜவகர்லால் நேருவைக் கேட்டுக் கொண்டார். நேரு ் அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜின்னா இடைக்கால அரசாங்கத்தில் முதலில் மறுத்துவிட்டார். மாறாக, அந்நாளைத் 'துக்கதின'மாகவும், **நேரடி டிக்கை நாளாகவும்** (Direct Action Day) அனுசரிக்க வேண்டுமென்று அறிவித்தார், த்தா இனக்கலவரக் களமாயிற்று. திட்டமிட்ட தாக்குதல்களால் சட்டம் ஒழுங்கு லைந்தது. வைசிராய் வேவல் பிரபு செயலிழந்தார்! அந்த நெருக்கடியான நேரத்தில் ிற்கட்சியின் பிரிட்டிஷ் பிரதமர் **கிளமண்ட் அட்லி** (Clement Attlee) வரலாற்று யத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார் (1947 பிப்ரவரி 20).

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பின்படி 1) 1948 ஜூன் முதல் தேதிக்குள் டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்; 2) இந்தியாவில் ம் அதிகாரப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு

செய்யும்; 3) வேவல் பிரபுவுக்குப் பதில் மௌண்ட்பேட்டன் பிரபு இந்திய வைசிராயாக நியமிக்கப்படுவார். சுருங்கக்கூறின், அட்லியின் அறிவிப்பு வெள்ளையன் இந்தியாவை விட்டு வெளியேறுவதை உறுதி செய்தது.

### 1.2.2 மௌண்ட்பேட்டன் திட்டம் (The Mountbatten Plan, 1947)

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து வைசிராயாக நியமிக்கப்பட்ட **மௌன்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு வந்தார் (1947 மார்ச் 22).** வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவர் ஜின்னா, நேரு, வல்லபாய் பட்டேல், அபுல் கலாம் ஆசாத், காந்தி மற்றும் முக்கிய தலைவர்களுடன் கலந்தாலோசித்தார். அதன்பின் மௌன்ட்பேட்டன் அட்லியின் அறிவிப்பையொட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அத்திட்டத்தைத் தயாரிக்க நேருவும், வைசிராயின் 'சீர்திருத்தக் கமிஷனராகயிருந்த **வி.பி.மேனனும்** உறுதுணையாக இருந்தனர். பிரிட்டிஷ் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற அத்திட்டமே **'மௌன்ட்பேட்டன் திட்டம்'** என்று அறியப்படுகிறது. இதுவே இந்தியப் பிரிவினைக்கு (Partition of India) அடிப்படையாக அமைந்தது.

**மாபெரும் மோசடி**

மௌன்ட்பேட்டன் திட்டம் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்த **400 மில்லியன்** மக்களையும், அவர்கள் நூற்றாண்டு காலமாகச் சேர்த்து வைத்த சொத்துக்களையும், சமாதான சகவாழ்வையும் சீர்குலைத்து விட்டது. இந்தியா விடுதலை அடைவதற்குச் சரியாக எழுபத்தி மூன்று நாட்களுக்கு முன் இந்தியாவை இரண்டாகப் பிளந்து விடுவதற்கான முடிவெடுத்தார் மௌன்ட்பேட்டன். 1947 ஜூன் 3 ஆம் தேதி இந்தியப் பிரிவினையைப் பற்றி மௌன்ட்பேட்டனும், நேருவும், ஜின்னாவும் டெல்லி வானொலி மூலம் அறிவித்தனர். அந்த அறிவிப்புக்கு இந்திய விடுதலைச் சட்டம் வடிவம் கொடுத்தது. இந்திய தேசிய காங்கிரஸ் அங்கீகாரம் அளித்தது. உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய சிக்கல் மிக்க 'விவாகரத்து' நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜின்னாவின் பிடிவாதத்துக்கும் வன்முறைப் போக்குக்கும் வளைந்து கொடுத்த இந்தியத் தலைவர்கள் கொள்கையை விட்டுக் கொடுத்து, மனச்சான்றை அடகு வைத்து, அதிகார ஆசைக்கு ஆட்பட்டு இந்தியாவின் இரண்டு வளமிக்க மாகாணங்களான பஞ்சாபையும், வங்காளத்தையும் கூறுபோட இசைந்தனர். இந்தியப் பிரிவினை சமகால வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட மாபெரும் மோசடியாகும்.

### 1.2.3 இந்திய விடுதலைச் சட்டம் (Indian Independence Act, 1947 ஜூலை)

'இந்தியப் பிரிவினை' முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜூலை 4), இந்திய விடுதலைச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது (ஜூலை 18).

### 1.2.4 விடுதலை விடிதல் (Dawn of Independence, 1947 ஆகஸ்ட் 15)

சுதந்திர இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14–15 நள்ளிரவில் **பிறந்தது.** புது டெல்லியில் நாடாளுமன்றக் கட்டிடத்தின் மைய மண்டபத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் கூடியது. அதற்கு ராஜேந்திரப் பிரசாத் தலைமை தாங்கினார். **சரியாக** இரவு பனிரெண்டு மணிக்கு சுசேதா கிருபளாணி 'வந்தே மாதரம்' பாடலை உணர்ச்சியோடும் பெருமிதத்தோடும் பாடினார். ராஜேந்திரப் பிரசாத்தின் தலைமை உரைக்குப் பின் ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரம் பற்றிய தீர்மானத்தை



முன்மொழிந்து பேசினார். அவரது குரல் நள்ளிரவின் நிசப்தத்துக்கிடையே கணீரென ஒலித்தது.

"நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் நாம் விதியோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது. இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது"!

நேரு முன்மொழிந்த தீர்மானத்தை சௌதரி காலிகுவாஸ்மன் வழிமொழிந்தார். அந்நிகழ்ச்சியின் இறுதியில் உரையாற்றிய தத்துவ வித்தகர் **டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்** தீர்க்கதரிசனத்தோடு குறிப்பிட்டதாவது:

"... நமக்குள்ள வாய்ப்புகள் பெரிது... நாம் அதற்கான தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர் பதவிகளில் ஊழல், உறவினர்களுக்குச் சலுகை, அதிகார ஆசை, நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயம் பெறல், கருப்புச் சந்தை ஆகியவற்றின் அடிச்சுவடுகளை அகற்றாவிடில் நிர்வாகத் திறமையையும், நல்வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தையும் உறுதி செய்ய முடியாது".

அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர்களின் சுதந்திர தின சூளுரைக்குப் பின் பெண்களின் சார்பாக **ஹன்சா மேத்தா** மூவர்ண தேசியக் கொடியை எடுத்துக் கொடுக்க, இந்தியாவின் கடைசி வைசிராயும் முதல் கவர்னர்–ஜெனரலுமான மௌன்ட்பேட்டன் பிரபு கொடி மரத்திலிருந்து யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு அதற்குப் பதில் சுதந்திர இந்தியாவின் அசோகச் சக்கரம் பதிக்கப்பட்ட மூவர்ணக் கொடியை ஏற்றினார். **'இந்தியா விடுதலை அடைகிறது'** என்று அரசியலமைப்புச் சட்டமன்றப் பிரகடனத்தில் கையெழுத்திட்டார். அன்றிலிருந்து அரசியலமைப்புச் சட்டமன்றம் இந்தியாவின் நாடாளுமன்றமாயிற்று. மக்களின் ஆரவாரத்துக்கிடையே இராணுவ அணிவகுப்புடன் முதல் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு, அவரது சகாக்களுடன் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஆனால் அக்காட்சியைக் காண மகாத்மா காந்தி அங்கில்லை. அவர் நவகாளியில் இந்து–முஸ்லீம் இனக்கலவரத் தீயை அணைப்பதில் முழுமூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்!

## 1.3 இந்தியப் பிரிவினை (Partition of India)

### 1.3.1 ராட்கிளிப் எல்லைக் கமிஷன் (The Radcliffe Boundary Commission)

மௌன்ட்பேட்டன் திட்டத்தின்படி இந்தியப் பிரிவினை முடிவாயிற்று. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சேரவேண்டிய பகுதிகளைப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை அமைத்தது. **அக்கமிஷனின் தலைவராக சர் சிரில் ராட்கிளிப்** (Sir Cyril Radcliffe) நியமிக்கப்பட்டார். ராட்கிளிப் செல்வச் செழிப்பு மிக்க விளையாட்டு வீரரின் மகன். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சட்டக்கல்வியில் தேர்ச்சி பெற்றார். திறமைமிக்க பாரிஸ்டராகப் புகழ்பெற்றார். பல்கலை வல்லவர். ஆனால் அவருக்குப் பஞ்சாப் – வங்காள எல்லைகளைப் பற்றியோ அல்லது இந்திய எல்லைச் சட்டச் சிக்கல்கள் பற்றியோ எதுவும் தெரியாது! அவர் இந்தியாவுக்கும் வந்ததில்லை! அதன் காரணமாகவே ராட்கிளிப் பாரபட்சமின்றி செயல்படுவார் என்று கருதி எல்லைக் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டார் (1947 ஜூன் 24).

ராட்கிளிப் இந்தியா வந்தவுடன் இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் பிரச்னை பற்றி வைசிராய் மௌன்ட்பேட்டனுடன் கலந்தாலோசித்தார். முஸ்லீம்களும் முஸ்லீம்களல்லா தோரும் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளையும் பிற காரணிகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு எல்லைக் கோடுகளை முடிவு செய்யுமாறு யோசனை கூறினார் மௌன்ட்பேட்டன். ஆனால் அவர் 'பிற காரணிகள்' யாவை என்பது பற்றி எதுவும் கூறவில்லை. இந்திய இராணுவத் தலைவராயிருந்த **சர் கிளாட் அச்சின்லெக்** (Sir Claude Auchinleck) எல்லைக் கோடுகளை வகுக்கையில் பாதுகாப்புப் பிரச்னை பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று ராட்கிளிப்புக்கு உறுதி கூறினார்.

எல்லைப் பிரிவினைத் திட்டத்தை 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் கொடுத்துவிட வேண்டும் என்ற வைசிராய் மௌன்ட்பேட்டனின் நிபந்தனை ராட்கிளிப்புக்குப் பெரும் கவலையை அளித்தது. பிரிக்கபபட வேண்டிய எல்லைப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிடவோ, எல்லைப் பகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கோ ராட்கிளிப்புக்குப் போதிய கால அவகாசமில்லை. அவசரமாக எல்லைக் கோடுகளை வகுப்பதில் தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது என்று எச்சரித்தார் ராட்கிளிப். எனினும் அந்த '**அறுவை சிகிச்சை**'யை மௌன்ட்பேட்டனும், ஜின்னாவும், நேரும் ஏற்றுக் கொண்டனர்.

### 1.3.2 ராட்கிளிப் தீர்ப்பு (Radcliffe Award)

நிலப்படங்கள், மக்கள் தொகை அட்டவணைகள், ஆவணங்கள், புள்ளி விவரங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய பஞ்சாப் – வங்காள எல்லைப் பகுதிகளை முடிவு செய்தார் ராட்கிளிப். அவருக்குக் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கால் அங்கீகரிக்கப்பட்ட எட்டு உயர்நீதி மன்ற நீதிபதிகள் உதவி செய்தனர். பிரிவினைக்குப் பின்னரும் பஞ்சாபிலும், வங்காளத்திலும் பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே சிறுபான்மைச் சமூகத்தினர் விடுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. இதன் பின்விளைவுகளைப் பற்றி ராட்கிளிப் நன்கறிந்திருந்தார். எனினும் கால நெருக்கடியின் கட்டாயத்துக்குட்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார். ராட்கிளிப் தீர்ப்பு 1947 ஆகஸ்டு 17 ஆம் தேதி – அதாவது இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டது!

#### பஞ்சாப் பிரிவினை (The Partition of Punjab)

ராட்கிளிப் எல்லைக் கமிஷன் தீர்ப்பின்படி பஞ்சாப் இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுடனும், கிழக்கு பஞ்சாப் இந்தியாவுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. சிந்து நதியிலிருந்து டெல்லியின் எல்லை வரை உள்ள ஒவ்வொரு நகரமும், கிராமமும், நெல் மற்றும் கோதுமை வயல்களும் பிரிக்கப்பட்டன! அதன் விளைவாக இந்தியாவின் கிழக்குப் பஞ்சாபில் வாழ்ந்த முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானின் மேற்கு பஞ்சாபில் வாழ்ந்த இந்துக்களும் சீக்கியர்களும் இந்தியாவுக்கும் குடிபெயர்ந்து செல்லவேண்டியதாயிற்று. பன்னெடுங்காலமாகப் பஞ்சாப் இந்தியாவின் நெற்களஞ்சியமாகவும், உழைப்பின் உறைவிடமாகவும், வீரத்தின் விளை நிலமாகவும் திகழ்ந்து வந்தது. அங்கு சீக்கியர்களும் இந்துக்களும், மூஸ்லீம்களும் மத நம்பிக்கைகளாலும் நடைமுறைகளாலும் மாறுபட்டிருந்தாலும், மொழியாலும் மரபாலும் பொருளாதாரப் பிணைப்பாலும் ஒன்றுபட்டிருந்தனர். எனவே, பஞ்சாப்பை வடக்கு – தெற்காகப் பிரிப்பது உடலை இரண்டாக வெட்டுவதைப் போன்றது.



#### வங்காளப் பிரிவினை (The Partition of Bengal)

ராட்கிளிப் தீர்ப்பின்படி பஞ்சாப்பைப் போன்றே வங்காளமும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடனும், மேற்கு வங்காளம் இந்தியாவுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. வங்காளத்தில் வாழ்ந்து வந்த 35 மில்லியன் முஸ்லீம்களும், 30 மில்லியன் இந்துக்களும் சமயவழி வேறுபட்டிருந்தாலும் மொழி – கலாச்சார – பொருளாதார வழி ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15 ஆம் நாளை இன வேறுபாடின்றி வங்காளப் புத்தாண்டாகக் கொண்டாடி வந்தனர். தாகூரைப் போன்ற கவிஞர்களை இரு இனத்தவரும் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்தனர். வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த முஸ்லீம்களும், மேற்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த இந்துக்களும் தேசிய உணர்வால் உந்தப்பட்டவர்கள். சணல் சாகுபடியை நம்பியிருந்த முஸ்லீம்கள் நெல் சாகுபடியைச் சார்ந்திருந்த இந்துக்களை நம்பியிருந்தனர். பஞ்சமும், பெரு வெள்ளமும் மாறி மாறி வங்காளத்தை வாட்டிய போதெல்லாம் இந்து–முஸ்லீம்கள் அவற்றை இணைந்தே எதிர்கொண்டனர். 1905–ல் இவர்களை இனவழிப் பிரிவினை செய்து தோல்வி கண்டார் கர்சன் பிரபு. இமயமலையின் அடிவாரத்திலிருந்த வங்காளத்தைக் கங்கையும், பிரம்மபுத்திராவும் வளமாக்கி விட்டு வங்காள விரிகுடாவில் கலந்தன. இத்தகைய வங்காளம் பிரிக்கப்பட்டு கிழக்கு வங்காளம் இந்தியாவின் மேற்குக் கோடியில் 970 மைல்களுக்கு அப்பாற்பட்டிருந்த பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் 'கிழக்கு பாகிஸ்தான்' ஆயிற்று. இதை '**பூகோள அபத்தம்**' (Geographical Aberration) என்று வர்ணித்துள்ளனர் கோவின்ஸ் மற்றும் லாப்பியேர்.

## 1.4 பிரிவினையின் விளைவுகள்

### 1.4.1 இனக்கலவரங்கள் (Communal Riots)

#### பஞ்சாப் படுகொலை (Punjab Massacre)

ராட்கிளிப் பஞ்சாப் பிரிவினை பற்றிய தீர்ப்பு குளவிக்கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! பஞ்சாபியரின் பெரும்பான்மையோர் அத்தீர்ப்பை ஏற்கவில்லை. 1947 துவக்கத்திலிருந்தே பஞ்சாபில் நிலவி வந்த இன ஒற்றுமை குலையத் துவங்கியது. முஸ்லீம் லீக் 'இன வெறியர்கள்' பஞ்சாப் முஸ்லீம்களை இரகசியமாகச் சந்தித்து அவர்களது உள்ளங்களில் இனவாத நச்சு விதைகளை விதைத்து வந்தனர்; இன வெறுப்பைத் தூண்டி விட்டனர்.

இந்தியப் பிரிவினை நடைமுறைக்கு வருமுன்னரே பஞ்சாபில் இனக்கலவரம் எரிமலையாய் வெடித்தது. 1947 மார்ச் மாதம் ஒரு சீக்கியத் தலைவர் முஸ்லீம் லீக்கின் கொடிக் கம்பத்தை வெட்டிச் சாய்த்ததன் விளைவாக மூவாயிரம் இந்துக்கள் – பெரும்பாலும் சீக்கியர்கள் – கொன்று குவிக்கப்பட்டனர். திட்டமிட்ட கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் பஞ்சாப்பை இனமோதல் படுகளமாக்கின. பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பஞ்சாப்பை ஆட்சி செய்து வந்த கூட்டணி அரசாங்கம் (Coalition Government) பதவி விலகியது. பஞ்சாப் ஆளுநர் **சர் இவான் ஜென்கின்ஸ்** (Sir Evan Jenkins) நிர்வாகப் பொறுப்பேற்றார்.

மார்ச் மாதம் படுகொலையால் பாதிக்கப்பட்ட சீக்கியர்கள் பழிக்குப் பழி வாங்கக் காத்திருந்தனர். 1947 ஜூன் மாதத் துவக்கத்தில் வைசிராய் மௌன்ட்பேட்டனும் இந்திய அரசியல் தலைவர்களும் டில்லியில் பிரிவினை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திக்

கொண்டிருக்கையில் சீக்கியர்கள் லாகூரில் மாஸ்டர் தாராசிங் தலைமையில் எதிர்த்தாக்குதல் பற்றித் திட்டமிட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது மேற்கு பஞ்சாபிலிருந்து இந்து – சீக்கியர்களையும், கிழக்கு பஞ்சாபிலிருந்து முஸ்லீம்களையும் விரட்டும் முயற்சியைக் கைக்கூலிகளும், இன வெறியர்களும், சமூக விரோத சக்திகளும் மேற்கொண்டனர். லாகூரில் இந்து–சீக்கியர்களின் வீடுகள் தீக்கரையாகின, சொத்துக்கள் சூரையாடப்பட்டன, கிடங்குகளில் அடைக்கப்பட்டு முஸ்லீம் காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். கற்பழிப்புக்கஞ்சி பல பெண்கள் தீக்குளித்தனர். அதேபோன்று அமிர்தசரசில் முஸ்லீம்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன, வயல்கள் நாசமாக்கப்பட்டன, வாய்க்கால்கள் பிணங்களால் நிறைந்தன. சீக்கியர்களின் சீற்றத்திலிருந்து காப்பாற்றப் பல முஸ்லீம்கள் தங்கள் மனைவிகளையும் பெண்களையும் கொன்று விட்டனர். தற்காப்புக்காக லாகூரிலும் அமிர்தசரசிலும் முஸ்லீம்கள் சீக்கியர்களையும், சீக்கியர்கள் முஸ்லீம்களையும் கொன்று குவித்தனர். இம்மனித மிருகத்தாக்குதலிலிருந்து எந்த ஒரு நகரமும், கிராமமும், தெருவும் தப்பவில்லை. வெறுப்புக்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லை அல்லவா?

**மேஜர் ஜெனரல் ரீஸ்** (Major General Rees) தலைமையில் அமைக்கப்பட்ட **பஞ்சாப் எல்லைப் படை** (Punjab Boundary Force) மேற்கொண்ட **'நெருப்பணைப்பு நடவடிக்கை'**யால் பஞ்சாப் படுகொலையைத் தடுக்கவோ இனக்கலவரங்களை ஒடுக்கவோ முடியவில்லை. பஞ்சாப் எல்லைப்படை இனக்கலவரத்தை எதிர்கொள்ளக்கூடிய போதிய பலம் பெற்றிருக்கவில்லை. அதற்குக் குதிரைப் படையும் கொடுக்கப்படவில்லை. மேலும் அப்படை வீரர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்குணர்வும் குறைந்தே காணப்பட்டது. அவர்களில் சிலர் இனக்கலவரங்களில் சார்புடையவர்களாக நடந்து கொண்டனர் என்று சந்தேகிக்கப்பட்டது. பஞ்சாபில் நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்து போயிற்று. அமிர்தசரஸ் இனக்கொலைக்குப் பதிலாக லாகூரிலிருந்து அமிர்தசரஸ் சென்ற டென்–டவுன் எக்ஸ்பிரஸில் பயணம் செய்த சீக்கிய அகதிகள் அனைவரையும் கொன்று பிணமாக அனுப்பினர்.

மதவெறி மட்டும் பஞ்சாப் படுகொலைக்குக் காரணமல்ல. நிலப் பேராசையே அதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் **எஸ்.கே.சின்ஹா.** மேற்கு பஞ்சாப் முஸ்லீம்கள் அங்கு இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் சொந்தமான நிலங்கள், கடைகள், வீடுகள், பிற சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கே சொந்தம் என்று கருதினர். அதேபோன்று கிழக்கு பஞ்சாப் இந்துக்களும் சீக்கியர்களும் அங்கிருந்த முஸ்லீம்களை பாகிஸ்தானுக்கு விரட்டிவிட்டு அவர்களது சொத்துக்களை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினர். எனவே, மதமுலாம் பூசப்பட்ட சொத்தாசையே பஞ்சாப் படுகொலைக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

### 1.4.2 வங்காள இனக்கலவரங்கள் (Bengal Communal Riots)

இந்தியப் பிரிவினை மீண்டும் வங்காளத்தில் இனக்கலவரத்தைத் **தூண்டிவிட்டது.** 1946 ஆகஸ்ட் 16–ம் தேதி முஸ்லீம் லீக் கட்டவிழ்த்து விட்ட நேரடி **நடவடிக்கை நாளன்று** பாதிக்கப்பட்ட மோசமான பகுதிகளில் ஒன்று **நவகாளி.** நவகாளி கங்கை – **பிரம்மபுத்திரா** சதுப்பு நிலப்பகுதியில் உள்ள ஸ்ரீராம்பூரில் இருக்கிறது. **நாற்பது சதுர மைல்** பரப்பளவேயுடைய நவகாளியில் வாழ்ந்த இரண்டரை மில்லியன் **மக்களில் எண்பது** விழுக்காட்டினர் முஸ்லீம்கள். மகாத்மா காந்தி நவகாளி சென்று, **'சோடேபூர் ஆசிரமம்'**



அமைத்துக் கொண்டு, அசாதாரணத் துணிவுடன் கிராமம் கிராமமாக நடந்தே சென்று, கல்லடியையும் சொல்லடியையும் எதிர்கொண்டு, முஸ்லீம்களின் மூர்க்கத்தனத்தை முனை மழுங்கச் செய்தார். அச்செயலை உலகே வியந்து பாராட்டியது. நாட்டுப் பிரிவினையையொட்டி வெடித்த கல்கத்தா இனக் கலவரத்தை அடக்க எந்த எல்லைப் படையும் அனுப்பப்படவில்லை. மாறாக, மகாத்மா காந்தி **தனி மனித எல்லைப் படை** (One Man Boundary Force)யாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபு.

மகாத்மா காந்தி வைசிராயின் வேண்டுகோளை ஏற்று இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முப்பத்தியாறு மணி நேரத்துக்கு முன்னால் நவகாளி சோடேபூர் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு பத்து மைல்களுக்கப்பால் இருந்த கல்கத்தாவுக்குச் சென்றார். கல்கத்தா முஸ்லீம்களின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்த **ஷாகீத் சூரவத்தியுடன்** ஒரே காரில் கல்கத்தா வீதிகளுக்குச் சென்று இன ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்டினார். 1947 ஆகஸ்ட் 14 ஆம் தேதி மாலை சரியாக ஐந்து மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசிய காந்தி "... நாளையிலிருந்து நாம் பிரிட்டிஷ் ஆட்சித் தளையிலிருந்து விடுபடுவோம். ஆனால் இன்றிரவு இந்தியா இரு கூறுகளாகப் பிரிக்கப்படும். நாளை இன்பகரமான நாள்; துக்ககரமான நாளும் கூட". கல்கத்தா 77 வயதான **'நவகாளி நாயகர்'** காந்தியின் காந்தக் கவர்ச்சிக்குக் கட்டுப்பட்டிருந்தது. 55,000 படை வீரர்களைக் கொண்ட பஞ்சாப் எல்லைப் படை செய்ய முடியாத அதிசயத்தை காந்தி என்ற தனிமனித எல்லைப்படை வீரர் கல்கத்தாவில் நிகழ்த்திக் காட்டினார்.

### 1.4.3 வரலாறு காணாத குடியேற்றம் (Unprecedented Migration)

1947 மார்ச் மாதத்திலிருந்தே இனக் கலவரங்களின் விளைவாக மேற்கு பஞ்சாபிலிருந்து சீக்கியர்களும் இந்துக்களும் குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வரத் துவங்கிவிட்டனர். ஆகஸ்ட் 14 ஆம் தேதி லாகூரில் இனக்கலவர பூகம்பம் வெடித்தது. அதன் எதிரொலி அமிர்தசரசிலும் கேட்டது. ஒரு நாளைக்கு ஐந்திலிருந்து ஆறு மில்லியன் சீக்கியர்களும் இந்துக்களும் மேற்கு பஞ்சாபிலிருந்து இந்தியாவுக்கும், அதே எண்ணிக்கையில் முஸ்லீம்கள் கிழக்கு பஞ்சாபிலிருந்து பாகிஸ்தானுக்கும் அகதிகளாகச் சென்றனர். முன்னுதாரணமற்ற இக்குடியேற்றத்தின் போது பல்லாயிரக்கணக்கானோர் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களால் உயிரிழந்தனர். இதை **'வரலாறு காணாத குடியேற்றம்'** என்று வர்ணித்துள்ளனர் கோலின்ஸ் – லாப்பியேர்.

இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களில் இறந்தோர் பற்றி ஆய்வு செய்த **நீதிபதி ஜி.டி.கோஷ்லா, பென்டர்சன் மூன், எச்.வி.ஹட்சன்** ஆகியோர் முறையே 5,00,000, 2,00,000, 2,50,000 என்று கணக்கிட்டுள்ளனர். பஞ்சாபின் முதல் இந்திய ஆளுநராயிருந்த **சர் சந்துலால் திரிவேதி** இறந்தோரின் எண்ணிக்கை 2,25,000 ஆக இருக்கக் கூடும் என்று மதிப்பிட்டார். **ஐயான் ஸ்டீபன்ஸ்** 5,00,000 என்றும், **எம்.எட்வர்ட்ஸ்** 6,00,000 என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதிகபட்சம் இரண்டு மில்லியன் மக்கள் மாண்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது!

பாகிஸ்தானிலிருந்து வெள்ளம் போல் வந்த அகதிகள் டெல்லியில் குடியேறினர். டெல்லியில் வெடித்த இனக்கலவரம் அகதிகள் பிரச்னையை மேலும் சிக்கலாக்கியது. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர்–ஜெனரல் லூயி மௌன்ட்பேட்டன், பிரதமர் ஜவஹர்லால் நேரு, உள்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேல் ஆகிய மூவரும் அகதிகளின் வருகையால் உருவான சட்டம் **ஒழுங்குச் சீர்குலைவுக்குத் தீர்வு காண்பதில் முனைந்தனர்.**

1947 செப்டம்பர் 6 ஆம் தேதி அவர்கள் கலந்து பேசி நிலையை சமாளிக்க ஒரு **நெருக்கடி கமிட்டி** (Emergency Committee)யை அமைக்க முடிவு செய்தனர். அமைப்பாற்றலுக்கும் விரைந்து முடிவெடுக்கும் திறனுக்கும் பெயர் பெற்ற மௌன்ட்பேட்டனால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அக்கமிட்டி விரைந்து செயல்பட்டது.

### 1.4.4 துயர்துடைப்பு நடவடிக்கை – அகதிகள் பிரச்னை

அகதிகளின் துயர்துடைப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. டெல்லியில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ரயில்களை வழிமறித்துத் தாக்கியோரைச் சுட்டுக் கொல்ல ஆணையிடப்பட்டது. பாதுகாப்புப் படையினர் முடுக்கிவிடப்பட்டனர். இராணுவத்தினர் வீதிகளில் சிதறிக்கிடந்த பிணங்களைச் சேகரித்து எரித்தனர். பொது மற்றும் ஞாயிறு விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டன. ரயில்கள் இராணுவப் பாதுகாப்புடன் ஓடின. அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டன. பாகிஸ்தானுக்குப் போக விரும்பிய டெல்லி முஸ்லீம்கள் ஹுமாயூன் நினைவு மண்டபத்திலும், புராண கிலாவிலும் தக்க பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்துதரப்பட்டன.

அகதிகள் பிரச்னையைத் தீர்க்க உறங்காமல் உழைத்தார் நேரு. **"இந்தியாவில் ஆறு மணி நேரம் உறங்க வேண்டியது அவசியம்; ஏழு மணி நேரம் உறங்குவது ஆடம்பரம்; எட்டு மணி நேரம் உறங்குவது பாவம்"** என்றார். மௌன்ட்பேட்டன் துயர்துடைப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். திருமதி **எட்வினா மௌன்ட்பேட்டன்** ஓரமைப்பின் கீழ் (United Council for Relief and Welfare) தொண்டு மன்றங்கள் மற்றும் செஞ்சிலுவைச் **சங்கப்** பணிகளை ஒருங்கிணைத்தார். மருத்துவமனைகளையும், அகதிகள் முகாம்களையும் நேரில் சென்று பார்வையிட்டார். அவதியுற்ற அகதிகளுக்கு ஆறுதல் கூறினார். **திருமதி** மௌன்ட்பேட்டன் பயன்கருதாப் பணியால் நெகிழ்ந்துபோன மகாத்மா காந்தி அவரை **'இரக்க தேவதை'** (The Angel of Mercy) என்று வெளிப்படையாகப் புகழ்ந்து பாராட்டினார்.

## 1.5 இந்தியாவின் நிலை

### அரசியல் நிலை

இந்தியா பிரிட்டிஷ் பேராதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டதேயன்றி **ஆங்கிலேய** அரசியலமைப்பு வளையத்திலிருந்து வெளியேறவில்லை. பிரிட்டிஷார் வகுத்துக் **கொடுத்த** 1935 அரசியலமைப்புச் சட்டத்தின்படிதான் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. **சுதந்திர** இந்தியாவுக்கென பிரத்யேக அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைக்கப்பட்டு **அரசியல்** சாசனம் எழுதப்பட வேண்டிய நிலையில் இருந்தது இந்தியா. பிரிட்டிஷ் வரிசைப்படி முறை சிவப்பு நாடா நிர்வாகம் நீடித்தது. **பிரிட்டிஷ் இந்தியா** (British India), **மன்னர்கள் இந்தியா** (Princely India) என்று இரு பகுதிகளாக இருந்த இந்தியாவில் பிரிட்டிஷ் இந்தியப் பகுதிக்குத்தான் ஆட்சி அதிகார மாற்றம் செய்யப்பட்டது. எஞ்சியிருந்த **562** மன்னர் மாநிலப் பகுதிகள் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ அல்லது தனித்திருக்கவோ உரிமை பெற்றிருந்தன! அவை சுதந்திர இந்திய உடலில் குத்திய முட்களாக இருந்தன. மன்னர் மாநிலங்களை இணைப்பது சுதந்திர இந்தியாவின் சவாலாக இருந்தது.

### 1.5.1 பொருளாதார நிலை

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இந்தியா மூவகைச் சுரண்டல்களுக்கு (Exploitation of Merchant Capital) **1)வணிக மூலதனச் சுரண்டல்**



கிழக்கிந்தியக் கம்பெனி மற்றும் ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆதரவோடு பிரிட்டிஷ் வணிகர்கள் இந்தியாவோடு தொடர்பு கொண்டு தங்களுக்குச் சாதகமாக வர்த்தகச் சுரண்டலில் திட்டமிட்டு ஈடுபட்டனர். **2) நிதி மூலதனச் சுரண்டல்** (Exploitation of Financial Capital). பிரிட்டிஷ் வங்கியாளர்களும், நிதி நிபுணர்களும் இந்தியத் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் நிதியுதவி அளித்துத் தங்களையும் தங்களைச் சார்ந்த நிறுவனங்களையும் வளப்படுத்திக் கொண்டனர். **3) தொழில் மூலதனச் சுரண்டல்** (Exploitation of Industrial Capital). பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் மூலப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு செய்பொருள்களை அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் பெற்று வந்தனர். இம்மூவகைச் சுரண்டல்களின் ஒட்டுமொத்த விளைவாக இந்தியா சுதந்திரம் பெற்ற போது:

1. விவசாயம் வளமிழந்திருந்தது. விவசாய உற்பத்தித் திறன் உலகிலேயே கீழ் நிலையில் இருந்தது. விவசாயிகள் வறுமையில் வாடினர். பஞ்சத்துக்குப் பஞ்சமில்லை.
2. தொழில் கட்டமைப்பு மிகவும் பலவீனமாக இருந்தது. அடிப்படைக் கனரகத் தொழில்கள் தோன்றவில்லை. இருந்த தொழில்களும் சில நகரங்களிலேயே குவிந்திருந்தன. குடிசைத் தொழில்கள் நசிந்துவிட்டன. மூலதனத் தட்டுப்பாடும், திறமையற்ற மேலாண்மையும் விரைவான தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாக இருந்தன. தொழிலதிபர்கள் வளமோடு வாழ தொழிலாளர்கள் அடிப்படை வசதிகளின்றி வாடினர்.
3. வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டு வசதிகளும் பாதுகாப்பும் செல்வந்தர்களுக்கே கிடைத்தன. நிதி நிறுவனங்கள் நகரங்களிலேயே செயல்பட்டன. சேமிப்பு விகிதம் மிகவும் குறைவாக இருந்தது.
4. மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப வேலைவாய்ப்புகள் அதிகரிக்கவில்லை. மக்கள் தொகைப் பெருக்கம், வேலையின்மை, வறுமை ஆகியவை இந்தியப் பொருளாதாரம் தேக்கமடையக் காரணங்களாக இருந்தன.
5. கிராமக் குடிசைத் தொழில்களும், கைத்தொழில்களும், சிறுகுறு தொழில்களும் குலைந்து கலைந்து போயின. கைவினைஞர்களும், நெசவாளிகளும், கலைஞர்களும் **'பொருளாதார அனாதைகள்'** ஆயினர்.
6. இந்தியாவின் வர்த்தகச் சமநிலை (Balance of Payment) பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அதற்குக் காரணம் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகரித்ததேயாகும். அந்நியச் செலவாணி பற்றாக்குறையால் இந்தியா சர்வதேசச் சந்தையில் செல்வாக்கு இழந்திருந்தது.

கருவானத்தில் ஒளிக்கீற்றைப் போன்று இந்தியா சுதந்திரம் பெற்ற போது பிரிட்டிஷார் நன்கொடைகளாக விட்டுச் சென்ற சில பங்களிப்புகளும் இந்தியாவுக்குச் சாதகமாக இருந்தன: 1) நிர்வாக நீதிமன்ற நிறுவனங்கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் இந்தியாவில் அரசியலமைப்பு ஒருங்கிணைப்பு ஏற்பட்டு இருந்தது; 2) ஆங்கிலக் கல்வியின் பயனாக கற்றோரிடையே அரசியல் விழிப்புணர்வும், பகுத்தறியும் திறனும், அறிவியல் தொழில்நுட்ப மனப்பான்மையும், பயன்பாட்டு யதார்த்த நடைமுறையும் வளர்ந்திருந்தன; 3)தொழிற்சாலைகளின் தோற்றமும், நிதிநிறுவனங்களின் பெருக்கமும், நகரங்களின் வளர்ச்சியும் இந்தியா தொழில்மயமாவதற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தன;

# 2. மன்னர் மாநிலங்கள் இணைப்பு

> என்னுடைய வாரிசு நேரு. எனக்குப் பின் என்னுடைய மொழியை அவர்தான் பேசுவார். நேருவின் கரங்களில் இந்த நாடு பத்திரமாக இருக்கும்.
>
> – மகாத்மா காந்தி

### முதல் பிரதமர்

ஜவகர்லால் நேரு 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதியிலிருந்து **1964 மே 27** வரை சுதந்திர இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றினார். பதினேழு ஆண்டுகள் தொடர்ந்து பிரதமராக இருந்து இந்திய அரசாங்கத்துக்கு உறுதியையும், தொடர்ச்சியையும், நம்பகத்தன்மையையும் கொடுத்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் குறிக்கோள்களை, கனவுகளை, திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் வாய்ப்பும் அவருக்கு இருந்தது. சுதந்திர இந்திய சவால்களைச் சாதுர்யமாகச் சமாளித்தார். இந்தியப் பிரிவினையால் உருவான அகதிகள் பிரச்னை; பிரிந்திருந்த இந்தியப் பகுதிகளை ஒருங்கிணைத்தல்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தீட்டல்; பொருளாதார, சமூக, கலாச்சாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தல்; மாநிலங்களை மறுசீரமைத்தல்; வெளிநாட்டுக் கொள்கையைக் கொடுத்து உலக நாடுகளுடன் சமாதான சகவாழ்வு உறவு கொள்ளல் போன்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியாவுக்குப் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுத்தந்த சிறப்பு நேருவுக்கு உண்டு. இந்தியாவில் இறையுரிமையுடைய ஜனநாயக, சோஷலிச, நாடாளுமன்ற மக்களாட்சி மலர்வதற்கு நேருவின் பங்களிப்புகள் வரலாற்று முக்கியத்துவமுடையவை. எனவே, நேருவின் ஆட்சிக்காலம் **'நேரு சகாப்தம்'** (The Nehru Era) என்று அழைக்கப்படுகிறது.

### ஜவகர்லால் நேரு

ஜவகர் 1889 நவம்பர் 14–ஆம் தேதி அலகாபாத்தில் காஷ்மீர் பிராமணக் குடும்பத்தில் மோதிலால் நேருவுக்கும் சொரூபராணிக்கும் மகனாகப் பிறந்தார். வழக்கறிஞர் தொழிலில் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த மோதிலால் நேரு ஜவஹருக்குத் தரமான துவக்கக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்தார். ஜவஹர் தன் இளமைக் காலத்தில் ஆங்கிலத்தாதிகளால் – குறிப்பாக புரூக்ஸ் – வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டார். பின்னர் உயர்கல்வி பெற இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு புகழ் பெற்ற ஹாரோ, கேம்பிரிட்ஜ், டிரினிட்டி கல்வி நிறுவனங்களில் பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

ஜவகர்லால் நேரு இங்கிலாந்தில் மாணவராக இருந்தபோதே **'பேபியன் சோஷலிஸ்டு'**களான **சிட்னி வெப்**, பியாட்ரிஸ் வெப், **ஜார்ஜ் பெர்னார்டு ஷா** போன்ற சிந்தனையாளர்களின் எண்ணங்களால் ஈர்க்கப்பட்டார். பிரிட்டிஷ் பாராளுமன்ற ஜனநாயக முறை நேருவின் கவனத்தைக் கவர்ந்தது. வரலாற்று வித்தகர் **ஜி.எம்.டிரவில்யன்** எழுதிய இத்தாலிய விடுதலை வீரர் கரிபால்டியின் வாழ்க்கை



வரலாற்றில் மனதைப் பறி கொடுத்தார். அதுமட்டுமல்ல. இங்கிலாந்தில் இந்திய மாணவர்கள் நடத்தி வந்த **'மஜ்லிஸ்'** என்ற அமைப்பின் மூலம் பிபின் சந்திரபால், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற பிரபல இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு நாட்டுப்பற்று கொண்டார்.

1912 இல் இந்தியா திரும்பிய ஜவகர்லால் நேரு அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வக்கீல் வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால் நேருவுக்கு வக்கீல் தொழிலை விட சமூக சேவையிலும், அரசியல் தொண்டிலும் நாட்டம் அதிகமாக இருந்தது. பாட்னாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார் (1912 டிசம்பர்). கோகலே துவக்கிய **இந்திய ஊழியர்கள் சங்கத்தில்** (Servants of Indian Society) உறுப்பினர் ஆனார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி நடத்திய போராட்டத்துக்கு நிதி திரட்டும் பணியில் நேரு, கோகலேக்கு உறுதுணையாக இருந்தார் (1914). மேடைப் பேச்சாளரானார் (1915). இரண்டாண்டுகள் அலகாபாத் நகராட்சி மன்றத் தலைவராகவும் தொண்டாற்றினார். 1916 பிப்ரவரி 8–ஆம் தேதி நேரு டெல்லி வணிகர் பண்டிதர் ஜவஹர் முல் என்பவரின் மகள் **கமலா கௌளவைத்** திருமணம் செய்து கொண்டார். அதன்பின் இந்தியரின் அரசியல் விடுதலைக்காக அன்னிபெசண்ட் அம்மையார் தொடங்கிய **'ஹோம் ரூல்'** இயக்கத்தில் தீவிர பங்கேற்றார் (1917). கிஸான் (உழவர்) சபையின் துணைத் தலைவராகி அயோத்தி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தார்; சுதேசியாக மாறினார் (1918).

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய காந்தி 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கிய போது நேரு, காந்தியின் காந்தக் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டார். வக்கீல் தொழிலைத் துறந்துவிட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருகை தந்த போது அவருக்கெதிராக ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்தமைக்காக நேரு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் (1921). காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரு (1923) பின்னர் அதன் பொதுச் செயலாளர் ஆனார் (1924). சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் 'பூரண சுதந்திரம்' பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்தார் நேரு (1927).

இந்தியா விடுதலை அடைவதற்கு முன் நேரு ஐந்து முறை **காங்கிரஸ் தலைவராகத்** தேர்ந்தெடுக்கப்பட்டார் (1929, 1930, 1936, 1937, 1946). உப்பு சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு இருமுறை சிறை தண்டனை பெற்று நைனிடால் சிறையில் அடைக்கப்பட்டார் (1930). அதன்பின் துவக்கப்பட்ட விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றுப் பலமுறை சிறை சென்றார் நேரு. ஜவஹர்லால் நேரு தனது பொது வாழ்வில் 3262 நாட்கள் – சுமார் பத்து ஆண்டுகள் சிறைப் பறவையாக இருந்துள்ளார்! 1946 செப்டம்பர் 2–ஆம் தேதி இந்திய வைசிராய் வேவல் பிரபுவின் அழைப்பை ஏற்று காங்கிரஸ் தலைவராக இருந்த நேரு இடைக்கால அரசாங்கத்துக்குத் தலைமைப் பொறுப்பேற்றார். 1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து 1964 மே 27 ஆம் தேதி வரை ஜவஹர்லால் நேரு பாரதப் பிரதமராக இருந்து நாட்டை நல்வழி நடத்திச் சென்றார்.

## 2.1 மன்னர் மாநிலங்கள்

### மூவகை இந்தியா

அகதிகள் பிரச்னையை எதிர் கொண்டிருந்த நேரு அரசாங்கம் மன்னர் மாநிலங்களான சமஸ்தானங்களை (Princely States) இந்தியாவுடன் சட்டப்படி இணைக்க

வேண்டியிருந்தது. ஏனெனில் இந்தியா சுதந்திரமடைந்த போது மூன்று பகுதிகளாகப் பிரிந்திருந்தது:

1. **பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள்** (British Indian Provinces) சென்னை, பம்பாய், உத்திரப்பிரதேசம், பீகார், மத்திய மாநிலங்கள், ஒரிசா, பஞ்சாப், வங்காளம், அஸ்ஸாம், சிந்து ஆகிய மாகாணங்களை உள்ளடக்கியது பிரிட்டிஷ் இந்தியா.
2. **தலைமைக் கமிஷனர் மாகாணங்கள்** (Chief Commissioner's Provinces) பிரிட்டிஷ் பலுசிஸ்தானம், வடமேற்கு எல்லை மாகாணமும் தலைமைக் கமிஷனரால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.
3. **மன்னர் மாநிலங்கள்** (Princely States) மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த ஐநூறுக்கும் மேற்பட்ட பகுதிகள் இந்திய மாநிலங்கள் (Indian States) என்று அழைக்கப்பட்டன.

இம்மூன்று பகுதிகளின் பிரதிநிதிகளைக் கொண்டுதான் 1946 அமைச்சரவை தூதுக் குழுவின் (Cabinet Mission) பரிந்துரைப்படி அரசியலமைப்புச் சட்டமன்றம் அமைக்கப்பட்டது. அப்போது ஜவஹர்லால் நேருவின் தலைமையில் செயல்பட்ட **இடைக்கால அரசாங்கம்** (Interim Government) இந்தியப் பகுதிகள் – மன்னர் மாநிலங்கள் – இணைப்புப் பிரச்னையைத் தீர்க்க ஒரு தனி **அமைச்சரகத்தை** (State Ministry) ஏற்படுத்தியது. அதற்குப் பொறுப்பாக இருந்த **சர்தார் வல்லபாய் பட்டேல்** மன்னர் மாநிலங்களை இந்தியாவுடன் இணைத்து அருஞ்சாதனை புரிந்தார்.

## 2.2 மாநிலங்கள் இணைக்கப்படல்

### 2.2.1 இணைப்பு உடன்பாடுகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற போது பிரிட்டிஷ் இந்தியாவுடன் தலைமைக் கமிஷனர் மாகாணங்களை இணைப்பதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை. ஆனால் மன்னர் மாநிலங்களை சட்டப்படி இந்தியாவுடன் சேர்ப்பதில் சில சிக்கல்கள் இருந்தன. ஏனெனில் மன்னர்கள் தங்களது தனித்தன்மையையும், சலுகைகளையும் சுயாட்சியையும் நிலைநிறுத்திக் கொள்ள விரும்பினர். எனவே, அவர்களுக்குச் சட்ட நிலைமையை எடுத்துக் கூறுவதற்காக கவர்னர் ஜெனரல் மௌன்ட்பேட்டன் பிரபு 1947 ஜூலை 25–ஆம் தேதி '**இந்திய மன்னர்கள் மாநாடு**' ஒன்றைக் கூட்டினார். அம்மாநாட்டில் அவர் இந்தியாவில் பிரிட்டிஷ் மேலாதிக்கம் ஆகஸ்டு 15 ஆம் தேதியுடன் முடிவடைகிறது என்றும், அதற்குள் மன்னர்கள் தங்களது ஆள் நிலப் பகுதிகளை பூகோள நிலைமைக்கேற்றவாறு இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைத்துக் கொள்ளலாம் என்றும் அறிவித்தார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மன்னர்களின் எதிர்கால வாழ்வுக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் உறுதியளித்தார் கவர்னர் ஜெனரல். அதன் பின் சர்தார் வல்லபாய் பட்டேல் மன்னர்களுடன் கலந்து பேசி இணைப்பு உடன்பாடுகளுக்கு அவர்களது இசைவிணக்கத்தைப் பெற்றார். **இந்தியாவுடன் இணையும் மன்னர்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்து வந்த ஆதரவையும், சலுகைகளையும் நீடிப்பதாக** உத்திரவாதமளித்தார் பட்டேல். அந்த உத்திரவாதத்தின் பேரில் 550 மன்னர்கள் தங்களது ஆட்சிப் பகுதிகளை இந்தியாவுடன் சட்டப்படி இணைப்பதற்கான **இணைப்புப் பத்திரத்தில்** (Instrument of Accession) கையொப்பமிட்டனர். ஆனால் ஜூனகத், ஐதராபாத் மற்றும் காஷ்மீர் மன்னர்கள் மட்டும் அவ்வாறு இணைவதற்கு இணங்கவில்லை!



### 2.2.2 ஜுனகத் இணைப்பு (Accession of Junagadh)

ஜுனகத் பம்பாய்க்கு வடக்கே மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. நவாபின் ஆட்சியின் கீழ் இருந்த அப்பகுதியின் 6,20,000 மக்கள் தொகையில் 80 விழுக்காட்டுக்கு மேல் இந்துக்கள். இந்துக்களை மிகப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த ஜுனகத்துக்கு முஸ்லீம் நவாப் 'மகாராஜா'வாக இருந்தார்! நவாப் ஒரு நாய்ப் பிரியர். மக்களை விட அவர் வளர்த்த நாய்கள் மீது அத்துமீறிய அன்பும் அக்கறையும் காட்டினார். அவரது அரண்மனையில் நாய்க்கென அனைத்து வசதிகளையும் கொண்ட தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. அது மட்டுமல்ல 'ரோஷனா'வுக்கும் 'பாபி'க்கும் நடந்த திருமணத்துக்கு வைசிராய் முதல் இந்தியப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டனர். 1,50,000 பேர் கலந்து கொண்ட அந்த 'நாய்த் திருமணம்' கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஜுனகத்துக்குப் பாகிஸ்தானுடன் எவ்வித பூகோளத் தொடர்பும் இல்லை. அப்பகுதி மக்கள் இந்தியாவுடன் சேர்வதையே விரும்பினர். எனினும் ஜுனகத் நவாப் இந்தியாவுடன் இணைவதை விரும்பவில்லை. மாறாக, ஜுனகத் பாகிஸ்தானுடன் இணைவதாகத் தன்னிச்சையாக அறிவித்தார் (1947 ஆகஸ்டு 15)! அந்த அறிவிப்பை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை எதிர்கொள்ள முடியாத நவாப் கராச்சிக்குத் தப்பிச் சென்றார். ஜுனகத் திவானாக இருந்த **ஷா நவாஸ் புட்டோ** ஜுனகத் நிர்வாகத்தை மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தார் (நவம்பர் 8). அவரது வேண்டுகோளுக்கிணங்க இந்திய அரசாங்கம் ஜுனகத் நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்றது. பின்னர் மக்கள் வாக்கெடுப்பு (Plebicite)–க்குப் பின் ஜுனகத் இந்தியாவுடன் முறையாக இணைக்கப்பட்டது (1948 பிப்ரவரி 20).

### 2.2.3 ஐதராபாத் இணைப்பு (Accession of Hyderabad)

**'நிலை ஒப்பந்தம்'**

ஆந்திராவின் பகுதியான ஐதராபாத் இந்தியாவின் வயிற்றுப் பாகத்தில் உள்ளது. இருபது மில்லியன் இந்துக்களையும், மூன்று மில்லியன் முஸ்லீம்களையும் கொண்ட ஐதராபாத்துக்கு **பத்தேஜங்** என்ற முஸ்லீம் நிஜாமாக இருந்தார். ஐதராபாத் நிஜாம் 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதிக்குள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைய இசையவில்லை. இந்திய வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபுவின் வற்புறுத்தலின் பேரில் இந்திய அரசாங்கம் நிஜாமுடன் ஓராண்டு கால நிலை ஒப்பந்தம் (Standstill Agreement) செய்து கொண்டது. அதற்குள் ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்குத் திருப்திகரமான தீர்வு காண முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் நிஜாம் அந்த நம்பிக்கையைப் பொய்ப்பித்தார்.

**ஒப்பந்த மீறல்**

ஐதராபாத் நிஜாம் ஓராண்டு கால நிலை ஒப்பந்தத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்தினார்; ஐரோப்பிய நாடுகளிலிருந்து போர்த் தளவாடங்களை வாங்கினார். **சர் வால்டேர் மான்க்டன்** (Sir Walter Monekton) என்ற ஆங்கிலேய சட்ட வல்லுநரின் ஆலோசனையைப் பெற்றார். இந்தியாவுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு காலம் கடத்தினார். முடிந்தால் சுதந்திரமாக இருப்பது முடியாவிட்டால் பாகிஸ்தானுடன் இணைந்து விடுவது என்ற முடிவில் இருந்தார் நிஜாம்! ஒப்பந்த விதிகளை மீறிக் கொண்டிருந்தார். அது மட்டுமல்ல, 'இந்தியா ஐதராபாத்தைத் தாக்கினால் பல்லாயிரக்கணக்கான பத்தானியர்கள் இந்தியாவின் மீது படையெடுப்பர்' என்று ஐதராபாத் வானொலி எச்சரித்தது (1948 ஏப்ரல்).

**ராஸாகார்கள்**

இதற்கிடையில் ஐதராபாத் நிஜாமுக்கு ஆதரவாக 'ராஸாகார்கள்' (**Razakars**) என்ற முஸ்லீம் தீவிரவாதிகள் பாகிஸ்தானின் துணையுடன் ஐதராபாத்தை ஒரு **சுதந்திர** முஸ்லீம் நாடாக்கி விட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டனர். இந்தியா **ஐதராபாத்தைக்** கைப்பற்ற முனைந்தால் இந்துக்களைக் கொன்று விடுவதாக ராஸாகார்களின் தலைவரான **காசிம் ராஸ்வி** (Kasim Razvi) அச்சுறுத்தினார். **1948 மார்ச் 31** ஆம் தேதியன்று **போராயுத வாரத்தை** (Arms-Week)த் துவக்கினார். ஐதராபாத் **முஸ்லீம்களை** இந்தியாவின் மீது படையெடுத்துச் செல்லுமாறு தூண்டிவிட்டார். அப்படையெடுப்பின் போது இந்தியாவில் இருந்த ஐந்து கோடி முஸ்லீம்களும் ஐதராபாத்துக்கு **ஆதரவாக** இருப்பார்கள் என்ற காசிம் ராஸ்வி அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் **வி.பி.மேனன்**. ஐதராபாத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, ராஸாகார்கள் **ஐதராபாத் வழியாக** பம்பாயிலிருந்து சென்னைக்குச் சென்று கொண்டிருந்த புகை வண்டியை **வழி நிறுத்தித்** தாக்கினர். ஐதராபாத்தில் **பயங்கர ஆட்சி** (Reign of Terror) கட்டவிழ்த்து விடப்பட்டது. பல இந்துக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சிறையிலடைக்கப்பட்டனர்.

**இந்திய விரோத நடவடிக்கைகள்**

ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்கு சமாதானத் தீர்வு காண **விரும்பினார் நேரு**. சமரசப் பேச்சுவார்த்தையாலும், பொருளாதாரத் தடையாலும், அச்சுறுத்தலாலும் **நிஜாமை** வழிக்குக் கொண்டு வர முயன்றார். ஆனால் நிஜாம் நேருவின் **'நில் – கவனி'** (Wait and Watch) போக்கைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்திய விரோத **நடவடிக்கைகளில்** ஈடுபடலானார். கராச்சியிலிருந்து போர்த் தளவாடங்களைப் **பெற்றார்**. **கிழக்கு** வங்காளத்திலும், மேற்கு பாகிஸ்தானிலும் ஈராக் மற்றும் ஈரானிலும் **இந்தியாவுக்கு** எதிராகப் பயன்படுத்த விமானப் படையைத் தயார் நிலையில் **வைத்திருந்தார்**. **பிரிட்டிஷ்** இரகசியப் படையினரின் உதவியைப் பெற்றார். ஐதராபாத்தை **சுதந்திரப் பகுதியாக** அங்கீகரிக்க வேண்டுமென்று பிரிட்டனை வற்புறுத்தி வந்தார். **இந்தியாவுக்கு எதிராகக்** கோவாவைப் பயன்படுத்திக் கொள்ள போர்ச்சுகலுடன் உடன்படிக்கை **செய்து** கொண்டதாகவும் கூறுகிறார் எஸ்.கோபால்.

**இராணுவத் தீர்வு**

1948 ஜூன் மாதம் மௌன்ட்பேட்டன் இந்தியாவை விட்டுச் சென்ற **பின்னரும் கூட** நேரு ஐதராபாத் இணைப்புக்கு சமாதானத் தீர்வையே விரும்பினார். **ஆனால் சர்தார்** வல்லபாய் பட்டேல் முள்ளை முள் கொண்டு எடுக்கத் தீர்மானித்தார். **ராஸாகார்களின்** தான்தோன்றித் தலைவரான காசிம் ராஸ்வி ஐதராபாத்தின் முழு **அதிகாரத்தையும்** அபகரித்துக் கொண்டதாகக் கருதினார் பட்டேல். காசிமின் நடவடிக்கை **வால் நாயை** ஆட்டும் செயலாக இருந்தது. சுதந்திர இந்தியாவில் ஐதராபாத் **தனித்தீவாக இருப்பது** இந்திய உடலில் குத்திய முள்ளாக இருக்கும் என்று எண்ணினார். **எனவே, இரத்தம்** சிந்தியாவது இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றத் **துணிந்தார் பட்டேல்**. **1948** செப்டம்பர் 13–ஆம் தேதி இந்திய இராணுவம் 'சட்டம் ஒழுங்கை **நிலைநாட்ட**' ஐதராபாத்துக்குள் நுழைந்தது. நிஜாமின் படை நான்கு நாட்களில் **இந்தியாவிடம்** சரணடைந்தது.

**இந்தியாவுடன் இணைக்கப்பட்டது**

ஐதராபாத் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. ''ஐதராபாத் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை இந்தியாவில் ஆரோக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியது... **இந்துக்கள்** ***அச்சமின்***றியும் முஸ்லீம்கள் பாதுகாப்பு உணர்வுடனும் வாழ்வதற்கான **சூழ்நிலை**



ஏற்பட்டது. இந்த நெருக்கடியின் போது இந்தியாவின் பிற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம்கள் தங்களது நினைப்பாலும் நடத்தையாலும் இந்தியாவின் முழுமையான குடிமக்கள் என்பதைத் தெளிவுபடுத்தினர். சமயம் சாராமை இந்த இரண்டாவது சோதனையையும் வெற்றிகரமாக கடந்தது'' என்று மதிப்பீடு செய்துள்ளார் எஸ்.கோபால்.

## 2.2.4 காஷ்மீர் இணைப்பு (Accession of Kashmir)

**மகாராஜா ஹரிசிங்**

ஜூனகத், ஐதராபாத் போலன்றி இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தது சிக்கலானது; சிக்கலாக்கப்பட்டது. ஜம்மு–காஷ்மீர் பகுதி எழில்மிகு இமாலயப் பள்ளத்தாக்கு. **'கிழக்கு உலகின் வெனிஸ்'** (Venice of Orient) என்று வர்ணிக்கப்பட்டது. 85,000 சதுரமைல் பரப்புள்ள இப்பகுதி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடைப்பட்ட இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இந்தியப் பிரிவினையின் போது ஜம்மு–காஷ்மீரின் மக்கள் தொகை நான்கு மில்லியன். அவர்களுள் நான்கில் மூன்று பகுதியினர் முஸ்லீம்கள். இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்த ஜூனகத்தையும், ஐதராபாத்தையும் முஸ்லீம் நவாபும், நிஜாமும் ஆட்சி செய்ததைப் போன்று முஸ்லீம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஜம்மு – காஷ்மீரை **இந்து அரசர் ஹரி சிங்** (Hari Singh) ஆட்சி செய்து வந்தார். ஹரி சிங் தோக்ரா ராஜபுத்திர வகுப்பைச் சேர்ந்தவர். அவர் பிராமணப் பண்டிதர்களை அரசாங்க ஊழியர்களாக வைத்துக் கொண்டு ஜம்மு–காஷ்மீரை ஆண்டு வந்தார்.

**ஷேக் அப்துல்லா**

1932 ஆம் ஆண்டு **'காஷ்மீர் சிங்கம்'** என்றழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா **'அகில ஜம்மு–காஷ்மீர் முஸ்லீம் மாநாடு'** (All Jammu and Kashmir Muslim Conference) என்ற அமைப்பை ஏற்படுத்தி மாநில நிர்வாகத்தில் ஜம்மு–காஷ்மீர் முஸ்லீம்களுக்கும் உரிய பங்கு வேண்டும் என்று கோரினார். அக்கோரிக்கையை அம்மாகாண இந்துக்களும் சீக்கியர்களும் கூட ஆதரித்தனர். அவர்களுடைய ஆதரவோடு ஷேக் அப்துல்லா தான் துவக்கிய அமைப்பை அகில ஜம்மு–காஷ்மீர் தேசிய மாநாடு (All Jammu and Kashmir National Conference) என்று பெயர் மாற்றம் செய்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின் மகாராஜா ஹரிசிங் ஓரளவு அதிகாரத்தை முஸ்லீம்களுடன் பகிர்ந்து கொண்டார். அதில் திருப்தியடையாமல் மேலும் அதிக அதிகாரம் கோரியதால் ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

**மகாராஜாவின் மனக்குழப்பம்**

பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகார மாற்றத்தை அறிவித்த போது ஹரிசிங் ஜம்மு–காஷ்மீரை இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைக்க விரும்பவில்லை. அவர் ஆட்சி செய்த மாகாணம் **'ஆசியாவின் சுவிட்சர்லாந்தாகவே'** சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். காந்தியும் நேருவும் மகாராஜா ஹரி சிங்குக்கு 1947 ஆகஸ்டு 15–ஆம் தேதிக்குள் இந்தியாவுடன் இணைந்து விடுமாறு ஆலோசனை கூறினார்கள். ஆனால் வைசிராய் மௌன்ட்பேட்டன் பிரபு ஹரிசிங் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ அவர் விருப்பம் போல் சேரலாம் என்று கூறினார். காஷ்மீர் மகாராஜா இருதலைக் கொள்ளி எறும்பானார். முடிவெடுக்க முடியாமல் குழம்பினார். இக்குழப்பத்திலிருந்து விடுபட இரு நாடுகளுடனும் **நிலை ஒப்பந்தம்** (Standstill Agreement) செய்து கொள்ள விரும்பினார். இந்தியாவிடமிருந்து பதிலின்மையால் ஹரிசிங் பாகிஸ்தானுடன் நிலை ஒப்பந்தம் செய்து கொண்டார்.

## 'பிரகடனப்படுத்தாப் போர்'

மகாராஜாவின் மனக்குழப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட பாகிஸ்தான் காஷ்மீரைக் கைப்பற்றத் துணிந்தது. மகாராஜா ஹரி சிங்கின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு காஷ்மீரின் மேற்குக் கோடியில் இருந்த **பூஞ்ச்** (Poonch) பகுதி முஸ்லீம் விவசாயிகள் தோக்ரா ராஜபுத்திர நிலச்சுவான்தாரர்களின் அடக்கு முறைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். **பூஞ்ச் கிளர்ச்சி**க்கு ஆதரவாக பாகிஸ்தானால் தூண்டிவிடப்பட்ட ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புறத்திலிருந்து புறப்பட்டு வந்து காஷ்மீரைத் தாக்கினர். **கார்கி** (Gargi) மற்றும் **டோமெல்** (Domel) ஆகிய இரு காஷ்மீர் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன்பின் காஷ்மீரின் புகழ் பெற்ற நகரமான முஸபராபாத் (Muzafarabad)க்குள் நுழைந்து முகாமிட்டனர். அங்கிருந்து பாராமுலா (Baramula)வைக் கைப்பற்றிக் கொண்டு யூரி (Uri) நோக்கி முன்னேறி ஸ்ரீநகரை அடையத் திட்டமிட்டனர். அப்போது காஷ்மீர் இராணுவத்துக்குப் பொறுப்பாயிருந்த **பிரிகேடியர் ராஜேந்திர சிங்** மலைவாழ் மக்களின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு விரைந்து சென்று யூரி பாலத்தைத் தகர்த்து விட்டார். படையெடுப்பாளர்களுடன் இரண்டு நாட்கள் போரிட்டு அவரது படைவீரர்களுடன் வீர மரணமடைந்தார். படையெடுப்பாளர்கள் முன்னேறிச் சென்று ஸ்ரீநகருக்கு மின்சாரம் கொடுத்து வந்த மகூரா மின் நிலையத்தைக் கைவசப்படுத்திக் கொண்டனர். காஷ்மீரின் கோடைகாலத் தலைநகரான ஸ்ரீநகர் இருளில் மூழ்கியது. ஸ்ரீநகர் நோக்கி முன்னேறிய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்கள் 1947 அக்டோபர் 26 ஆம் தேதி 'ஈத்' பண்டிகையை ஸ்ரீநகரிலிருந்து கொண்டாடப்போவதாக அறிவித்தனர்.

### மகாராஜாவின் வேண்டுகோள்

இதற்கிடையே ஜம்மு–காஷ்மீர் மகாராஜா ஹரி சிங் ஸ்ரீநகரிலிருந்து தப்பிச் சென்று குளிர்காலத் தலைநகரான ஜம்முவை அடைந்தார். பூஞ்ச் கிளர்ச்சியை அவரைப் பதவியிலிருந்து இறக்குவதற்கான சதி என்று கருதினார். பாகிஸ்தான் படையெடுப்பாளர்களின் போக்கைக் கண்ட ஹரிசிங் புதுடெல்லியின் ஆதரவை நாடினார். ஷேக் அப்துல்லாவை சிறையிலிருந்து விடுவித்து நேருவிடம் பேச்சுவார்த்தை நடத்தப் புதுடெல்லிக்கு அனுப்பினார். அதேபோன்று அவரது பிரதம அமைச்சர் மெகர் சந் மகாஜனையும் டெல்லிக்கு அனுப்பிப் பிரதமர் நேருவிடம் காஷ்மீர் நிலைமையை விளக்கச் சொன்னார் (அக்டோபர் 24). 1947 அக்டோபர் 26 ஆம் தேதி ஜம்மு–காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதாகவும், ஸ்ரீநகரைக் காப்பாற்ற இராணுவ உதவி வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

### இந்தியாவுடன் இணைந்தது

1947 அக்டோபர் 24 ஆம் தேதி இரவு காஷ்மீர்ப் படையெடுப்பு பற்றிய தகவல் இந்திய அரசாங்கத்துக்குக் கிடைத்தது. அடுத்த நாள் கூடிய பாதுகாப்புக் கமிட்டி (Defence Committee) இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்பத் தீர்மானித்தது. மகாராஜா ஹரி சிங், ஷேக் அப்துல்லாவின் துணையுடன் படையெடுப்பை எதிர்கொள்ள வேண்டும் என்று விரும்பினார். மௌன்ட்பேட்டன் தற்காலிக இணைப்பை ஆதரித்தார். அடுத்த நாள் (அக்டோபர் 25) காஷ்மீர் பிரதம அமைச்சர் நேருவை சந்தித்து இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டபோது அக்கோரிக்கைக்கு இணங்கவில்லை. பட்டேலும் ஷேக் அப்துல்லாவும் நேருவை சம்மதிக்க வைத்தனர். தற்காப்புப் போருக்குத் தயாரானார் நேரு.



பிரதமர் நேரு அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தார். அமைச்சரவையில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. வல்லபாய் பட்டேல் இந்திய இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்புவதை ஆதரித்தார். வேறு சிலர் அப்படிச் செய்வது இந்தியாவைப் பாகிஸ்தானுடன் நேரடிப் போரில் ஈடுபடுத்திவிடும் என்று கருதினர். எனவே, நேருவும் பட்டேலும் காந்தியிடம் ஆலோசனை கேட்டனர். அரிய நேரத்தை வீணாக்காமல் உரிய நேரத்திலேயே இராணுவத்தை அனுப்பியிருக்க வேண்டும் என்றார் காந்தி. தீமைக்கு அடிபணிவதால் காஷ்மீரில் அமைதி நிலவாது என்று கருதினார் காந்தி. பாகிஸ்தானுக்கு இறுதி எச்சரிக்கை கொடுத்து விட்டு, இறுதியாகப் போர் தொடுக்கலாம் என்றார் ஷேக் அப்துல்லா. காஷ்மீரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் படையெடுப்பாளர்களை அகற்றி விட்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியபின், மக்கள் வாக்கெடுப்பு நடத்தலாம் என்ற நிபந்தனைகளோடு ஹரி சிங் ஜம்மு – காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்ததை ஏற்றுக் கொள்ளலாம் என்றார் மௌன்ட்பேட்டன். அவரது ஆலோசனையை நேருவின் அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. அப்போது மாநிலங்கள் அமைச்சகத்தின் செயலராக இருந்த வி.பி.மேனனை அனுப்பி **'இணைப்பு ஒப்பந்தத்தில்'** காஷ்மீர் மகாராஜா ஹரி சிங்கின் கையெழுத்தைப் பெற்றார் நேரு. ஜம்மு–காஷ்மீர் முறையாக இந்தியாவுடன் இணைந்தது (1947 அக்டோபர் 26)

### காஷ்மீரில் இந்திய இராணுவம்

ஜம்மு–காஷ்மீர் முறையாக சட்டப்படி இந்தியாவுடன் இணைந்ததற்கு அடுத்த நாளே (அக்டோபர் 27) இந்தியத் துருப்புகள் ஆகாய விமானங்கள் மூலம் டெல்லியிலிருந்து ஸ்ரீநகருக்கு அனுப்பப்பட்டது. சரியான சமயத்தில் காஷ்மீரின் தலைநகர் ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலினின்றும் காப்பாற்றப்பட்டது. பாகிஸ்தானின் படையெடுப்புத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. ஸ்ரீநகரைக் கைப்பற்றிய உடன் ஜின்னா வெற்றி வாகை சூடி அந்நகருக்குள் நுழையும் ஆசை நிராசையாயிற்று. படையெடுப்பாளர்கள் பின்வாங்கிச் சென்றனர். ஏமாற்றமுற்ற பாகிஸ்தான் அதிபரும் கவர்னர் ஜெனரலுமான முகமது அலி ஜின்னா இராணுவத்தைக் காஷ்மீருக்கு அனுப்ப முயன்றார். ஆனால் பிரிட்டிஷ் தளபதி கிரேசி (General Gracey) பீல்டு மார்ஷல் அச்சின்லெக் (Auchinleck)கின் அனுமதியின்றி செயல்பட இயலாது என்று கூறி விட்டார். அச்சின்லெக் லாகூர் சென்று ஜின்னாவை சந்தித்து காஷ்மீர் சட்டப்படி இந்தியாவுடன் இணைந்து விட்டதால் பாகிஸ்தான் இராணுவத்தை அனுப்ப முடியாது என்றும், அப்படி அனுப்புமாறு வற்புறுத்தினால் ஜின்னாவின் கீழ் பணிபுரியும் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் அனைவரும் பதவி விலக வேண்டியிருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தினார் (அக்.28). எனவே, ஜின்னா காஷ்மீர்ப் படையெடுப்புத் திட்டத்தைக் கைவிட்டார்.

### அஸாத் காஷ்மீர்

காஷ்மீருக்குச் சென்ற இந்தியப் படை ஆக்கிரமிப்பாளர்களை பின்வாங்கச் செய்தனரேயன்றி அவர்கள் கைப்பற்றிக் கொண்ட பகுதிகளை மீட்கவில்லை. படையெடுப்பாளர்கள் யூரி மற்றும் பூஞ்ச் பகுதிகளில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். அவர்கள் கைப்பற்றிய பகுதிகளை **அஸாத் காஷ்மீர்** (Azad Kashmir) அதாவது சுதந்திர காஷ்மீர் என்றும், அதன் தலைநகர் **முசபராபாத்** என்றும், படையெடுப்பாளர்களே அஸாத் காஷ்மீரின் இராணுவம் என்றும் அறிவித்து அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைத்து விட்டனர். **ஷேக் அப்துல்லா** எஞ்சிய ஜம்மு–காஷ்மீரின் முதல் பிரதமரானார்.

**ஐ.நா.விடம் புகார்**

பிரதமர் நேரு ஆக்கிரமிப்பாளர்களைக் காஷ்மீர்ப் பகுதிகளிலிருந்து அகற்ற வேண்டும்; அதன் பின்னரே ஜம்மு–காஷ்மீரில் 'மக்கள் வாக்கெடுப்பு' நடத்த வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். பாகிஸ்தான் அதிபர் ஜின்னா இந்திய இராணுவமும் காஷ்மீருக்குள் புகுந்தோரும் ஒரே நேரத்தில் வெளியேறியபின் மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றார். பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியாக இருந்ததால் காஷ்மீர் விவகாரத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்க முடியும் என்று கருதினார் காந்தி. இந்து இனவாத சக்திகள் முஸ்லீம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பதை எதிர்த்தனர். இறுதி எச்சரிக்கை கொடுத்துவிட்டு பாகிஸ்தானுடன் போர் தொடுக்கலாம் என்பதை வலியுறுத்தினார் ஷேக் அப்துல்லா. போரின்றி ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டும் என்று விரும்பினார் நேரு. பாகிஸ்தானுடன் போர் தொடுக்காமல் நேருவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நேர்வழி காஷ்மீர் ஆக்கிரமிப்பைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையிடம் புகார் செய்வதே ஆகும் என்று ஆலோசனை கூறினார் கவர்னர் ஜெனரல் மௌன்ட்பேட்டன் பிரபு. அவரது ஆலோசனையின்படி பாகிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்பு பற்றி ஐ.நாவிடம் புகார் செய்தார் பிரதமர் நேரு. அந்நடவடிக்கையைக் காந்தியும் பட்டேலும் அரைமனதுடன் ஏற்றுக் கொண்டனர்.

காஷ்மீர் விவகாரத்தை ஐ.நா. சபைக்குக் கொண்டு சென்ற பின்னரும் ஜம்மு–காஷ்மீரில் 'தற்காப்புப் போரை'த் தொடர வேண்டும், ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டும் என்பதில் குறியாக இருந்தார் நேரு. அப்படிச் செய்வது ஐ.நா. நீதிமன்ற முறை விசாரணைக்கு முரணானது (Subjudice) என்று கூறி நேருவின் கையைக் கட்டிவிட்டார் மௌன்ட்பேட்டன். அதுமட்டுமல்ல. இந்தியா காஷ்மீரில் இராணுவ நடவடிக்கை எடுத்தால் மௌன்ட்பேட்டன் கவர்னர்–ஜெனரல் பதவியிலிருந்து விலகி விடுவதாக அச்சுறுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளார் ஆலன் காம்பெல் – ஜான்சன். நேரு, மௌன்ட்பேட்டன் காட்டிய வழி சென்றார். ஐ.நாவின் போர் நிறுத்த ஏற்பாடு 1949 ஜனவரி முதல் தேதியிலிருந்து ஜம்மு–காஷ்மீரில் நடைமுறைக்கு வந்தது. ஐ.நா. காஷ்மீர் விவகாரத்தை இந்தியா – பாகிஸ்தான் பிரச்னையாக மாற்றிவிட்டது. காஷ்மீர் விவகாரத்தை ஐநாவுக்குக் கொண்டு செல்ல மௌன்ட்பேட்டன் நேருவை சம்மதிக்கச் செய்தது அவப்பேராகும் என்று குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபால்.

**காஷ்மீர் பிரச்னை!**

காஷ்மீரிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் முயற்சியை இந்தியா கைவிட்டது. பாகிஸ்தான் அசாத் காஷ்மீரைத் தக்க வைத்துக் கொண்டது. எனவே, காஷ்மீர் விவகாரம் தீரும் வரை இந்தியா பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய **'பிரிவினை இழப்பீட்டுத் தொகை'**யான 55 கோடி ரூபாயைக் கொடுக்காமல் நிறுத்தி வைப்பதென்று 1948 ஜனவரி மாதம் நேருவின் அமைச்சரவை முடிவு செய்தது. அதற்குக் காரணம் பாகிஸ்தான் அந்தப் பணத்தைக் கொண்டு போர்த்தளவாடங்களை வாங்கி இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தும் என்று அமைச்சரவை கருதியதேயாகும். ஆனால் பாகிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்புக்கெதிராக இந்திய இராணுவத்தை அனுப்பியிருக்க வேண்டும் என்று கூறிய காந்தி பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுக்க வேண்டிய பணத்தை நிறுத்தி வைப்பது நாணயமற்ற நேர்மையற்ற செயல் என்று கருதினார். எனவே 1948 ஜனவரி மாதம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். நேருவின் அமைச்சரவை



அதன் முடிவை மாற்றிக் கொண்டு முழுத் தொகையையும் பாகிஸ்தானுக்குத் திருப்பிக் கொடுத்தது. காந்தி உண்ணாவிரதத்தை விலக்கிக் கொண்டார். ஆனால் பாகிஸ்தான் அபகரித்துக் கொண்ட அசாத் காஷ்மீரிலிருந்து விலகவில்லை. 'காஷ்மீர் பிரச்னை' இன்று வரை தீர்க்கப்படாமலேயே உள்ளது.

## 2.3 மௌன்ட்பேட்டனின் பங்கு

இந்திய மாகாணங்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்ததில் இந்தியாவின் கடைசி வைசிராயும் முதல் கவர்னர் ஜெனரலுமான லூயி மௌன்ட்பேட்டன் பிரபுவுக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பே மன்னர்களையும் மாகாணங்களின் பிரதிநிதிகளையும் கூட்டி மன்னர்களின் ஆள்நிலப் பகுதிகள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைய வேண்டியதன் இன்றியமையாமையைக் கோடிட்டுக் காட்டினார்.

மிகப் பெரும்பான்மையான மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் இணைவதற்கு மௌன்ட்பேட்டனின் முயற்சியும், அரசியல் சாதுர்யமும், நிர்வாகத் திறமையும் முக்கியக் காரணமாகும். பேராசை கொண்ட, சுதந்திரமாக இருக்க விரும்பிய மன்னர்களைத் தன்னிச்சையாகவோ, சமாதானப்படுத்தியோ அல்லது நிர்ப்பந்தத்துக்குட்பட்டோ இணையச் சம்மதிக்க வைத்ததில் மௌன்ட்பேட்டனுக்குப் பெருமைக்குரிய பங்கு உண்டு.

எனினும் ஐதராபாத் நிஜாம் மற்றும் காஷ்மீர் மகாராஜா சம்பந்தப்பட்டவரை சார்புடன் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளானார் மௌன்ட்பேட்டன். மற்றும் மான்ங்டனின் பக்கபலத்தோடு ஐதராபாத் நிஜாம் ஒப்பந்த விதிகளை மீறி இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று சந்தேகிக்கப்பட்டது. அதேபோன்று ஐ.நாவில் காஷ்மீர் விவகாரம் பற்றிப் புகார் செய்யாவிடில் பாகிஸ்தானுடன் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற காரணத்தைக் கூறி நேருவை சம்மதிக்க வைத்தார் மௌன்ட்பேட்டன். போர் நிறுத்தம் மற்றும் மக்கள் வாக்கெடுப்பு உள்ளிட்ட பொதுவான பிரச்னையை ஐ.நாவின் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று வலியுறுத்தினார். அசாத் காஷ்மீரிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதை விட்டுவிட்டுக் காஷ்மீர் விவகாரத்தை ஐ.நாவுக்குக் கொண்டு செல்லுமாறு மௌன்ட்பேட்டன் ஆலோசனை கூறியது நேருவை திசை திருப்பிய செயலாகும். கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகப் போவதாக அச்சுறுத்தி நேருவைத் தன்வழிக்குக் கொண்டு வந்தது மௌன்ட்பேட்டனின் பதவிக்கும், தகுதிக்கும் ஏற்றதாக இல்லை. காஷ்மீர் விவகாரம் இந்தியா – பாகிஸ்தான் பிரச்னையாக மாறியதற்கு மௌன்ட்பேட்டன் முக்கிய பங்கேற்றார்.

## 2.4 'இரும்பு மனிதர்' பட்டேல் (1875 – 1950)

வல்லபாய் பட்டேல் 1875 அக்டோபர் 21–ஆம் தேதி குஜராத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை 1857 பெருங்கிளர்ச்சியின் போது தலத் தலைவரோடு சேர்ந்து பிரிட்டிஷாரோடு போரிட்டவர். பட்டேல் குழந்தையாக இருந்தபோதே கிராமக் காற்றோடு கிளர்ச்சிக் காற்றையும் சுவாசித்தார். இளவயதில் அகமதாபாத் சென்று துணி ஆலைகளில் பணியாற்றினார். பகலில் வேலை. இரவில் படிப்பு. வக்கீல் தொழிலுக்கான 'ப்ளீடர்' பட்டம் பெற்றார் (1900) வக்கீல் தொழில் தொடங்கினார். சிக்கனமாக வாழ்ந்து பணம் சேமித்து, தனது 33–வது வயதில் லண்டன் சென்றார். தினமும் பத்து மைல் சென்று 'இன்ஸ் ஆப் கோர்ட்' (Inns of Court) நூலகத்தை நன்கு பயன்படுத்தினார். சட்டக் கல்வி பயின்று 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றார் (1910).

இந்தியா திரும்பிய வல்லபாய் பட்டேல் அகமதாபாத்தில் வக்கீல் தொழிலைத் துவங்கினார். தொழிலதிபர்களின் ஆதரவோடு அத்தொழிலில் வெற்றி பெற்றார்.

செல்வாக்கு பெற்றிருந்த வக்கீல் பட்டேல், காந்தியின் பேச்சைப் 'படித்து' அவரது லட்சியத்தில் மனதைப் பறிகொடுத்தார். காந்தியை சந்தித்துத் தன்னை தேசப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டார். பட்டேலின் நாட்டுப் பற்றையும் தலைமைத் திறனையும் கண்ட காந்தி பர்தோலி சத்தியாகிரகத்தை (Bardoli Satyagraha) நடத்தும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். (1922). 137 கிராமங்களில் இருந்த 87,000 மக்களை ஒன்று சேர்த்து சத்தியாகிரகத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார் பட்டேல். பட்டேலின் அமைப்பாற்றலைப் பாராட்டி அவருக்குச் 'சர்தார்' என்ற பெயரைச் சூட்டினார் காந்தி. அன்றிலிருந்து சர்தார் வல்லபாய் பட்டேல் காந்தியின் தலைமையின் கீழ் நேருவுக்கு இணையாக இருந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் **காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்** (1931). தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவை அமையக் காரணமாக இருந்தார் (1937). நாடாளுமன்ற போர்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். **'வெள்ளையனே வெளியேறு'** இயக்கத்தில் பங்கேற்று (1942) மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட **'இடைக்கால அரசாங்க'**த்தில் துணைப் பிரதமரானார் பட்டேல் (1946). முஸ்லீம் லீக் கட்டவிழ்த்து விட்ட 'நேரடி நடவடிக்கை'யால் ஏற்பட்ட கலவரத்தைத் துணிவுடனும் சாதுர்யமாகவும் சமாளித்தார் சர்தார் பட்டேல். மௌண்ட்பேட்டன் திட்டத்தின் 'இந்தியப் பிரிவினை'யைத் தீவிரமாக எதிர்த்தார். சூழ்நிலைக் கட்டாயத்தால் அத்திட்டத்துக்கு இணங்கினார்.

இந்தியா விடுதலை அடைந்தவுடன் நேருவின் அமைச்சரவையில் **துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும்** பங்கேற்றார் பட்டேல். இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களை எதிர்கொள்ளவும், இந்தியாவுக்கு வந்த பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் பட்டேல் பிரதமர் நேருவுக்கு உறுதுணையாக இருந்தார்.

மண்ணாசைமிக்க மன்னர்களுடன் கலந்து பேசி இந்தியாவுடன் இணைவதற்கு அவர்களது இசைவிணக்கத்தைப் பெற்றார். ஐதராபாத் நிஜாம் போர்க்கொடி உயர்த்திய போது குருதி கொட்டியாவது இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றத் துணிந்தார் பட்டேல். ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்கு **'அரசியல் தீர்வு'** காணவேண்டும் என்ற நேருவின் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டார். 'இப்பிரச்னையை இந்தியாவின் காஷ்மீர் கொள்கையின் பகுதியாகப் பார்த்தார் நேரு. ஆனால் பட்டேல் இதை இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையாகக் கருதினார்'. பட்டேல் இந்திய இராணுவத்தின் துணைகொண்டு ஐதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தார். அதேபோன்று ஜம்மு-காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு **இராணுவத் தீர்வையே** விரும்பினார் பட்டேல். சமகால இந்தியாவில் மன்னர் மாநிலங்களை இந்தியாவுடன் இணைத்தது இணையற்ற **'இரத்தம் சிந்தாப் புரட்சி'** ஆகும். ஐரோப்பிய வரலாற்றில் ஜெர்மனி மற்றும் இத்தாலிய ஐக்கியத்துக்குக் காரணமான பிஸ்மார்க், கவூர் ஆகியோரோடு ஒப்பிடப்பட்டார் பட்டேல். சர்தார் வல்லபாய் பட்டேல் **'இந்தியாவின் இரும்பு மனிதர் பிஸ்மார்க்'** என்று போற்றப்பட்டார். நேரு பட்டேலை **'நவ இந்தியாவை நிர்மானித்தவர்'** என்று பெருமையோடும் பெருந்தன்மையோடும் வர்ணித்தார்.

## 2.5 மகாத்மாவின் மறைவு, 1948

1947 ஜூன் மாதம் 3-ஆம் தேதி மௌண்ட்பேட்டனும், நேருவும், ஜின்னாவும் புதுடெல்லி வானொலி மூலம் இந்தியப் பிரிவினையைப் பற்றி அறிவித்தது மகாத்மா



காந்திக்குப் பேரிடியாக இருந்தது. அவரது இந்து–முஸ்லீம் ஒற்றுமைக் கனவு கலைந்தது. வாய்மை வழி சென்ற காந்தி காலத்தின் கட்டாயத்துக்கு வளைந்து கொடுக்க வேண்டியதாயிற்று. அவரால் வரலாற்றின் போக்கை மாற்ற முடியவில்லை. இந்தியாவைப் பங்கிட்டு ஜின்னாவும் நேருவும் தனித்தனியே ஆட்சி செய்வதைவிட ஒன்றுபட்ட இந்தியாவை ஜின்னாவே தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லலாம் என்று கூறினார் காந்தி. காந்தியின் அந்த யோசனை நடைமுறை சாத்தியமற்றதாகக் கருதப்பட்டது. நாடு துண்டாடப்பட்டது. காந்தி இந்தியப் பிரிவினைக்குத் துணைபோனதை தீவிரவாத இந்துக்கள் ஏற்கவில்லை.

இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களும், டெல்லிக்கு அலை அலையாக வந்த அகதிகளும் காந்திக்கு அதிர்ச்சியை அளித்தன. கல்கத்தாவிலிருந்து டெல்லி திரும்பிய காந்தியை முஸ்லீம் பிரதிநிதிகள் சந்தித்து இந்தியத் தலைநகரிலேயே தங்குமாறு கேட்டுக் கொண்டனர். புதுடெல்லியில் பிர்லா மாளிகையில் தங்கிய காந்தி தினமும் அகதி முகாம்களுக்குச் சென்று இந்து–முஸ்லீம் அகதிகளுக்கு ஆறுதல் கூறினார். இந்தியா, பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்கக் கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டார். இந்தியப் பிரிவினைக்குப் பின்னரும் காந்தி முஸ்லீம்களுக்கு 'வக்காலத்து' வாங்கியதைத் தீவிர இந்துக்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

**ராஷ்ட்ரீய சுவயம்சேவக் சங்** (RSS) தீவிரவாத இந்துக்களின் கோட்டையாக இருந்தது. பூனாவைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்ட அந்த அமைப்பைச் சேர்ந்தோர் 'இந்து இந்தியா'வை நிர்மானிக்க நினைத்தனர். இந்தியப் பிரிவினையால் ஏமாற்றமடைந்தனர். கோபமுற்றனர். முஸ்லீம்களை அந்நியர்களாக சித்தரித்தனர். இந்து–முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட காந்தியை முதல் விரோதியாகக் கருதினர். காந்தியைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினர். நாதுராம் கோட்சே கொலைக் கருவியானார்.

1948 ஜனவரி 19–20 தேதிகளில் காந்தியைக் கொல்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அம்முயற்சி வெற்றி பெறவில்லை. காந்தியின் பாதுகாப்பு கேள்விக்குறியாயிற்று. 'என் உயிர் கடவுள் கையில்' என்றார் காந்தி. **1948 ஜனவரி 30** ஆம் தேதி மாலை 5.17 மணிக்கு பிர்லா மாளிகைப் புல்வெளியில் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வழக்கத்துக்கு மாறாகச் சற்று காலதாமதமாக வந்தார் காந்தி. நாதுராம் கோட்சே காந்தியை வழிமறித்து கைத்துப்பாக்கியால் மூன்று முறை சுட்டார். 'ஹே ராம்' என்று முனகிக் கொண்டே உயிர் நீத்தார் மகாத்மா.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், இந்து–முஸ்லீம் இன ஒற்றுமைக்காகவும் பாடுபட்ட **'தேசபிதா'** காந்தி இன வெறிக்குப் பலியானார். இன்முறையை போதித்து வந்த அவர் வன்முறைக்கு இரையானார். மகாத்மாவின் மரணம் இனக்கலவரங்களை முடிவுக்குக் கொண்டு வந்தது. கண்கள் குளமாக நேரு வானொலியில் பேசினார்: "நம் வாழ்க்கையில் ஒளி வீசிக் கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது. இந்த ஒளி விளக்கு வரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு உலகுக்கு வழிகாட்டுவதாக இருக்கும்". புத்தர், ஏசுவைப் போன்று காந்தியும் அமரரானார். ""இந்தியா காந்தி பின்பற்றிய வழியைச் சந்தேகித்தது. ஆனால் அவரது குறிக்கோளை கவுரவித்தது. காந்தியை அரசியல் விவேகியாக ஏற்றுக் கொள்ளாத இந்தியா அவரை ஒரு ஞானியாக நெஞ்சில் நிலைநிறுத்திக் கொண்டது" என்று குறிப்பிட்டுள்ளார் வில் டூரண்ட். தனி மனிதராக இருந்து மக்களை வரலாற்றுக்குள் அழைத்துச் சென்ற பெருமை காந்திக்கு உண்டு என்று கூறுகிறார் சதீஷ் தேஷ்பாண்டே.

Re-Organization

# 6. மாநிலங்கள் மறுசீரமைப்பு

மொழி வழி மாநிலங்கள் முரண்பாடுகளையும் மனக்குழப்பங்களையும் தோற்றுவிக்கின்றன.

– ஜவகர்லால் நேரு

மாநிலங்கள் மறுசீரமைப்பு (State's Reorganisation) சமகால இந்திய... தலையாய சவால்களில் ஒன்றாகும். இந்தியப் பிரிவினை, மன்னர் மாநிலங்கள் இணை... அரசியலமைப்புச் சட்ட உருவாக்கம், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி ஆகிய சவால்... எதிர்கொண்ட நேரு அரசாங்கம் மாநிலங்கள் மறுசீரமைப்புப் பிரச்னையையும் சந்தி... வேண்டியதாயிற்று. அதற்குக் காரணம் மன்னர் மாநிலங்கள் இந்தியா... இணைக்கப்பட்ட பின் உருவான 'அரசியல் பகுதிகள்' (Political Units) பரப்பள... மக்கள்தொகையும், பொருளாதார வளர்ச்சி நிலையிலும் பெரிதும் வேறுபட்டிருந்... தற்காலிகமானவை. அதுமட்டுமல்ல. பல பகுதிகள் பல மொழிகளைப் பேசுவோ... கொண்டிருந்தன. எனவே, இந்திய மாநிலங்களின் எல்லைகளை அறிவுப்பூர்வ... நடைமுறை சாத்தியமாக, மக்களின் எதிர்பார்ப்புகளை மனதில் கொண்டு மறுசீரமை... செய்ய வேண்டியது இன்றியமையாததாயிற்று.

## 6.1 மொழிவழி மாநிலக் கோரிக்கை

ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய மண்ணில் காலூன்றிய பின்... ஆங்கில மொழியின் செல்வாக்கு படிப்படியாக வளர்ந்தது. அரசாங்க அலுவலகங்க... இந்தி மற்றும் உருது மொழிகளின் செல்வாக்கு குறையலாயிற்று. காலப்போக்... ஆங்கிலம் இந்தியாவின் இணைப்பு மொழி (Link Language) ஆயிற்று. மேலும் ஆங்கில... ஆட்சியாளர்கள் **நிர்வாக வசதிக்காக மாநிலங்களைப் பிரித்தனர். 1919** வரை பிரி... இந்திய அரசாங்கம் ஒற்றையாட்சி (Unitary Form of Government) அமைப்பாக இருந்த... அவ்வாறு பிரிப்பது எளிதாயிற்று. அப்படிப் பிரித்தால் இந்திய தேசிய ஒற்றுமை சக்தி... பிரித்தாளும் (Divide and Rule) உத்தியால் பலமிழக்கச் செய்வதற்கும் வசதியாக இருந்... விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இந்தியர்களிடையே அரசியல் விழிப்புண... ஏற்படவே அவர்கள் நிர்வாகத்தில் பங்கேற்க விரும்பினர். மொழிவழி மாநில... அமைக்கப்பட வேண்டும் என்று கோரினர். எனவே, மாண்டேகு–செம்ஸ்போ... அறிக்கையும், சைமன் கமிஷனும் மொழி மற்றும் இனக் காரணிகளின் அடிப்படை... மாகாணங்கள் மாற்றி அமைக்கப்படலாம் என்ற யோசனையைத் தெரிவித்தனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் **மொழிவழி மாநில அமைப்பு முடிவை 1908–ல்**... ஏற்றுக் கொண்டது. அக்கருத்தின் அடிப்படையில் தான் 1911–ல் பீ... வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டது. 1920–ம் ஆண்டில் நாக்பூரில் கூடிய காங்கி... மாநாட்டில் இந்திய மாகாணங்கள் பிராந்திய மொழிகள் அடிப்படையில் திரு... அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நாக்பூர் காங்கிரஸ் தீர்மானத்தின்...



நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட அரசியல் பகுதிகளுக்குப் பதிலாக மொழி வழி மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கை கருத்து வேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. மகாத்மா காந்தியும் மொழிவழி மாகாண அமைப்பைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். 1928–ல் நியமிக்கப்பட்ட மோதிலால் நேரு கமிட்டியும் மொழிவழி மாகாணக் கோரிக்கையைக் கோடிட்டுக் காட்டியது. அதுமட்டுமல்ல. மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் மொழிவழி மாற்றி அமைக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்டதுதான் 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' ஆகும். எனவே, இந்தியா விடுதலை அடையும் வரை மொழிவழி மாநிலக் கோரிக்கையே காங்கிரசின் கொள்கையாக இருந்தது.

## 6.2 மொழிவழி மாநிலங்கள் கமிஷன், 1948 (The Linguistic Provinces Commission)

**தார் கமிஷன்**

இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் தேசிய மொழிப் பிரச்னை பற்றி விவாதித்த போது மொழி வழி மாகாண மறு சீரமைப்பு கோரிக்கை தலை தூக்கியது. சட்ட உறுப்பினர்களில் சிலர் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். அதுமட்டுமல்ல. அத்தகைய மறுசீரமைப்பு பற்றி அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே தீர்மானிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். எனவே அரசியலமைப்புச் சட்ட மன்றத் தலைவர் ராஜேந்திர பிரசாத் மாகாணங்கள் மறுசீரமைப்புக் கமிஷனை நியமித்தார் (1948).

ஓய்வு பெற்ற அலகாபாத் உயர்நீதிமன்ற **நீதிபதி எஸ்.கே.தார்** (S.K.Dar) அக்கமிஷனின் தலைவர். ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரி டாக்டர் பன்னாலாலும், அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர் ஜகத் நாராயணன் பிற அங்கத்தினர்கள். சட்ட தார் கமிஷன் (Dar Commission) மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்படுவது பற்றியும், அவ்வாறு மறுசீரமைப்பு செய்வதால் ஏற்படக் கூடிய நிர்வாக, நிதி மற்றும் பிற விளைவுகள் பற்றியும் பரிசீலித்து தார் கமிஷன் மாநிலங்களின் கருத்தறிய நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. அது சென்ற இடங்களிலெல்லாம் மொழிவழி மாகாண மறுசீரமைப்பு பற்றிய கோரிக்கை பலமாக இருந்தது. அதே போன்று சிலர் மொழிவழி மாகாணங்களை மாற்றி அமைப்பதைக் கடுமையாக எதிர்த்தனர். மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதை ஆதரித்தும் எதிர்த்தும் 'கருத்துக் குறிப்புகள்' (Memorandum) அக்கமிஷனிடம் கொடுக்கப்பட்டன. தார் கமிஷன் பொது விசாரணைகள் மூலமாகவும் தகவல்களைத் திரட்டின.

1948 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பே தார் கமிஷன் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. உடனடியாக மொழிவழி மாகாணங்கள் மறுசீரமைக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல, என்று கருதியது அக்கமிஷன். அதற்குக் காரணம் இந்தியா கடுமையான பொருளாதார நெருக்கடிக்கும், அந்நிய ஆக்கிரமிப்புக்கும், இனக் கலவரங்களுக்கும் இலக்காயிருந்ததேயாகும். மேலும் மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் உறுதியாக இணைக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியது தார் கமிஷன். மேலும் மொழிவழி மாகாண மறுசீரமைப்பால் ஏற்படக்கூடிய பொருளாதார நிர்வாகச் செலவுகளைத் தாங்கக் கூடிய நிலையில் நாடு இல்லை என்று கருதியது அக்கமிஷன்.

அரசியலமைப்புச் சட்டமன்றத்தில் தேசிய மொழிக் கொள்கை விவாதிக்கப்பட்டதும், அதன் விளைவாக தார் கமிஷன் நியமிக்கப்பட்டதும் நாட்டில் மொழிவழி மாகாணங்கள்

மறுசீரமைப்பு பற்றிய சர்ச்சையை தீவிரப்படுத்தியது. தனி ஆந்திர மாநிலக் கோரி... புது பலம் பெற்றது. அச்சூழ்நிலையில் தார் கமிஷன் மொழிவழி மாகாண... பிரிக்கப்படுவதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தது. எனினும், சில மாகாண... நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றியமைக்கலாம் என்று பரிந்துரைத்தது.

ஒன்றுபட்ட உறுதியான இந்தியாவைக் காண விரும்பிய பிரதமர் நேரு மொழி... மாகாண மறுசீரமைப்புக்கு முன்னுரிமை தரவில்லை. கமிட்டியையும் கமிஷனை... நியமித்து மொழிவழி மாகாணச் சீரமைப்புப் பிரச்னையை ஒத்திவைப்பதில் குறி... இருந்தார் நேரு. மொழிவழி மாகாணங்களை அமைப்பது பற்றி முடிவெடுப்பதில் தொட... பலவீனம் நிலவியதாகக் கருதுகிறார் எஸ்.கோபால். மொழிவழி மாகாணச் சீரமை... காந்திக்கு இருந்த ஆர்வம் நேருவுக்கு இல்லை என்பது ஸ்டான்லி வால்பெர்ட்டின் கரு...

## 6.3 ஜே.வி.பி. கமிட்டி (J.V.P.Committee), 1948

தார் கமிஷன் அன்றி மொழிவாரி மாநிலங்களை அமைப்பது பற்றிப் பரிசீ... காங்கிரஸ் கட்சியும் ஒரு கமிட்டியை அமைத்தது (டிசம்பர் 1948). அக்கமிட்டியில்... ஜவஹர்லால் நேரு, 2) வல்லபாய் பட்டேல், 3) பட்டாபி சீத்தாராமய்யா ஆகியோர் இ... பெற்றனர். இக்குழு இவர்களது பெயர்களின் முதல் எழுத்துக்களைக் கொ... ஜே.வி.பி.என்று அறியப்பட்டது.

ஜே.வி.பி.கமிட்டி இந்தியாவை மொழிவழி பிரிப்பதற்குச் சில அளவுகோல்... நிர்ணயித்தது: 1) இந்திய தேசிய காங்கிரஸ் மொழிவழி மாகாணக் கொள்கையை ஏ... கொண்டபோது அக்கொள்கையின் நடைமுறை விளைவுகளை எதிர்கொள்ளவில்... எனவே மொழிவழி மாகாணங்களை அமைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுக... கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். 2) இந்தியாவின் பாதுகாப்பு, ஒற்... பொருளாதார வளம் ஆகியவை முன்னுரிமை பெற வேண்டும். பிரிவினை சக்திகளு... பின்னடைவு ஏற்பட வேண்டும். 3) மொழி மக்களை ஒன்று சேர்ப்பதைப் போன்று பிரி... செய்யும். எனவே, மொழியை மட்டும் அளவுகோலாகக் கொண்டு மாகாணங்... மறுசீரமைப்பு செய்வது பொருந்தாது. 4) மொழிவழி மாகாணம் பற்றிய காங்... கொள்கை நாட்டின் அரசியல், பொருளாதாரப் பாதுகாப்புக்கு ஊறு நேரா வண்ணம் மி... கவனமாக ஒவ்வொரு கோரிக்கையையும் நன்று பரிசீலனை செய்து முடிவு செ... வேண்டும். எனவே மொழிவழி புதிய மாகாணங்களை அமைப்பதைச்... ஆண்டுகளுக்காவது தள்ளிப்போட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது ஜே.வி.பி.க... இம்முடிவு காங்கிரஸ் இந்தியா விடுதலை அடைவதற்கு முன் தீவிரமாகப் பின்பற்றி... மொழிவழி மாகாணக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மொழி... மாகாணங்கள் கமிஷன் அறிக்கையும், ஜே.வி.பி.கமிட்டியின் முடிவும் மொழிவழி மாகா... மறுசீரமைப்பு கோரியவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

பிரதமர் நேரு மொழிவழி மாகாண மறுசீரமைப்பை ஒத்திப் போடுவதில் குறி... இருந்தார். கமிஷனையும், கமிட்டியையும் அமைப்பதே அதற்குச் சிறந்த வழி என... கருதினார். ஜே.வி.பி. கமிட்டியின் அறிக்கையை அவரே வரைந்தார். கட்சி... அறிக்கையை அரசாங்கத்தை ஏற்கச் செய்தார். மொழிவழி மாகாண அமைப்பைப் ப... ஆண்டுகளுக்காவது தள்ளிப் போட விரும்பினார். அவரது விருப்பத்துக்கே... அரசியலமைப்புச் சட்டமன்றமும் மொழிவழி மாகாண அமைப்பைப் பின்னர் பார்த்... கொள்ளலாம் என்று கூறியது (3வது சரத்து). நேரு தனது அதிகாரத்தை...



செல்வாக்கையும் பயன்படுத்தி காங்கிரஸ் கமிட்டியும், நாடாளுமன்றக் கட்சியும் மொழிவழி மாகாணக் கோரிக்கையை வற்புறுத்த வேண்டாம் என்று கூறிவிட்டார்.

**நேருவின் நிலை**

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது மொழிவழி மாநிலக் கோரிக்கை அகில இந்திய காங்கிரசின் கொள்கையாக இருந்தது. நாடு சுதந்திரம் பெற்றவுடன் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்கள் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைத்திடுமோ என்ற எண்ணம் நேருவுக்கு எழுந்தது. 1950க்கும் 1956க்குமிடையே மொழிவழி மாநிலப் போராட்டங்கள் பல கட்டங்களில் பல வடிவங்களில் வெளிப்பட்டன. தெலுங்கு, மலையாள, மராத்தி, பஞ்சாபி மாநிலக் கோரிக்கைகளால் தேச ஒற்றுமைக்கு ஊறு உண்டாகிவிடுமோ என்று நினைத்தார் நேரு. வடக்கு வங்கத்திலிருந்து நேப்பாளி மொழிபேசும் மக்கள் தனி மாநிலம் கோரியது அவரது சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

நாட்டு ஒற்றுமைக்கு முன்னுரிமை கொடுத்த நேரு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் மொழி வழி மாநிலக் கோரிக்கைக்குமிடையே நடுவழிகாண விழைந்தார். ஒரு மாநில மக்கள் மற்றொரு மாநிலத்துக்குச் சென்று குடியேறும் உரிமை உள்ளதால் பலமொழி பகுதிகள் இருக்கவே செய்யும் என்று கூறினார் நேரு. அதுமட்டுமல்ல. மொழி, மதம், சாதித் தடைகள் இல்லாமல் இருந்தால் தான் தேசிய மனப்பான்மையும் பொதுமைப் பண்பாடும் பலப்படும் என்பது நேருவின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. மேலும் இந்தியா நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டால் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் மூலம் நவீனமயமாக்கல் விரைவுபடுத்தப்படும் என்று வாதிட்டார் நேரு. இவைபற்றியெல்லாம் விவாதித்துப் பொதுக்கருத்தை உருவாக்க அவருக்கு அவகாசம் தேவைப்பட்டது. எனவே, நேரு மொழிவழி மாநிலக் கோரிக்கையை தள்ளிப் போடப் பார்த்தார்; நிராகரிக்கவில்லை.

## 6.4 ஆந்திர மாநிலம் அமைக்கப்படல், 1953

**எதிர்பார்ப்பு**

சென்னை ராஜதானியிலிருந்த தெலுங்கர்கள் 1917–லிருந்தே தனி ஆந்திர மாகாணக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். 1946 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட காங்கிரஸ் தேர்தல் அறிக்கை (Election Manifesto)யில் இந்திய மாகாணங்கள் மொழி மற்றும் கலாச்சார அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, நாடு விடுதலை அடைந்தவுடன் ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்று ஆந்திரர்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். பிரகாசம், ரங்கா போன்ற பல ஆந்திரத் தலைவர்கள் துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சராகவும் இருந்த வல்லபாய் பட்டேலை சந்தித்து ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தினர். 1947–ல் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாண முதலமைச்சரானவுடன் தனி ஆந்திர மாநிலக் கோரிக்கை புதுப்பலம் பெற்றது. 1947 நவம்பர் 27–ஆம் தேதி மொழிவழி மாகாணக் கொள்கையை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார் பிரதமர் நேரு. எனவே, ஆந்திர மாநிலம் 1948 ஏப்ரல் மாதத்துக்குள் அமைக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்த்தனர் ஆந்திர மக்கள்.

**ஏமாற்றம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டவரைவின் முதல் பட்டியலில் ஆந்திரா 'ஆளுநர் மாகாணங்களி'ல் (Governor's Provinces) ஒன்றாக இடம் பெறும் என்று நம்பினர் ஆந்திரத்

தலைவர்கள். ஆனால் அவ்வாறு இடம் பெறவில்லை! ஆந்திரர்கள் ஏமாற்றமடை...
அவர்களின் ஏமாற்றத்தை காங்கிரசல்லாத கட்சிகள், குறிப்பாகக் கம்யூனிஸ்டு...
நன்கு பயன்படுத்திக் கொண்டன. 1948 மார்ச் மாதம் விசாகப்பட்டினத்துக்கு...
தந்த பிரதமர் நேரு மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுவதைப் பற்றி விசாரிக்க...
குழுவை அமைக்கப் போவதாக அறிவித்து ஆந்திரர்களை சமாதானப்படுத்தி...
எனினும் இந்தியப் பிரிவினையால் பூகம்பமாக வெடித்த இனக்கலவரங்கள் அடங்கி...
தனி ஆந்திர மாநிலக் கோரிக்கை தலை தூக்கியது. 1949 நவம்பர் மாதம் ஆந்திர...
காங்கிரஸ் காரியக் கமிட்டி தனி ஆந்திர மாநிலத்தை உடனடியாக அமைக்குமாறு இ...
அரசாங்கத்தை கேட்டுக் கொண்டது.

**தார் கமிஷன் பரிந்துரை**

மொழிவழி மாகாணங்கள் தார் கமிஷன் சென்னைக்கு வந்த போது ஆ...
மகாசபை (Andhra Mahasabha), விசாலாந்திரா (Visalandhra) அமைக்கக் ...
விண்ணப்பம் கொடுத்தனர். ஆனால் ராயலசீமா மகாசபை (Rayalacema) சென்னை...
தலைநகரமாகக் கொண்ட தனி ராயலசீமா மாநிலம் உருவாக்கப்பட வேண்டு...
கோரினர்! சஞ்சீவ ரெட்டி இருபது ராயலசீமா சட்டமன்ற உறுப்பினர்கள் சா...
ராயலசீமாவுக்குச் சட்டப் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டு தனியே விண்ண...
கொடுத்தார். தனி ஆந்திர மாநிலம் பற்றி ஆந்திரத் தலைவர்களிடையே கருத்தொற்...
ஏற்படவில்லை. தார் கமிஷனும் மொழி அடிப்படையில் புதிய மாநிலங்கள் அமைக்கப்ப...
தேச நலனுக்கு ஏற்றதல்ல என்று பரிந்துரைத்தது. அதே சமயம் தனி ஆந்திர மா...
கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் அது ஆந்திரர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடு...
அவ்வாறு செய்வது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை சுட்டிக் காட்டியது ...
கமிஷன்.

தார் கமிஷன் அறிக்கைகளும் கண்டனத்துக்குள்ளாயிற்று. குறிப்...
ஆந்திரர்கள் ஆத்திரமடைந்தனர். அவர்களது ஆத்திரத்தை அடக்கும் பொரு...
காங்கிரஸ் மற்றொரு குழுவை நியமிப்பதாக அறிவித்தது. அதுதான் ஜே.வி.பி.கமி...
அக்கமிட்டியும் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுவதைத் தள்ளிப் போட வேண்...
என்றே பரிந்துரைத்தது. எனினும் இக்கமிட்டி ஆந்திராவைப் பொறுத்தவரை ...
விதிவிலக்களித்தது. அதாவது சென்னை நகரைக் கேட்காவிட்டால் ஆந்திர மா...
அமைப்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்று கூறியது ஜே.வி.பி.கமிட்டி.

**ஜே.வி.பி.கமிட்டி அறிக்கை**

ஜே.வி.பி. கமிட்டி அறிக்கை எரிகிற நெருப்பில் எண்ணெய் விட்டது போலா...
சென்னை நகரம் இல்லாத ஆந்திர மாநிலத்தை ஏற்க மறுத்தனர் ஆந்திரத் தலைவ...
சென்னை நகரம் ஆந்திராவுடன் சேர்க்கப்படாது என்பதால் அது தமிழ்நாட்டு...
சேர்க்கப்படும் என்று பொருளல்ல! என்று விளக்கமளித்தார் பட்டாபி சீத்தாராமை...
அதாவது சென்னை நகரம் தனி நிர்வாகப் பகுதியாக இருக்கும் என்று சூசகமா...
கூறினார். ஆனால் பட்டாபியின் விளக்கத்தை ஆந்திரர்கள் ஏற்கவில்லை. ஜே...
கமிட்டி அறிக்கை தங்களுக்குச் சாதகமாக இருந்ததால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்...
அரசாங்கமும் தனிஆந்திர மாநிலத்தை அமைக்குமாறு மத்திய அரசாங்கத்தைக் கே...
கொண்டது.



**பிரிவினைக் கமிட்டி**

அதுமட்டுமல்ல சென்னை அரசாங்கம் ஆந்திர மாநிலம் அமைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஒரு **பிரிவினைக் கமிட்டி** (A Partition Committee)யை நியமித்தது. சென்னை மாகாண முதலமைச்சர் **குமாரசாமி ராஜா** அக்கமிட்டியின் தலைவராக இருந்தார். ஆந்திராவின் சார்பாகப் பிரகாசம், கோபால ரெட்டி, காலா வெங்கடராவ், சஞ்சீவ ரெட்டி ஆகியோர் இக்கமிட்டியில் இடம் பெற்றனர். பிற பகுதிகளின் சார்பாக பக்தவத்சலம், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, மாதவ மேனன் இருந்தனர். பிற பகுதிகளின் தலைநகர், நிர்வாகத் துறைகள், நிதிப்பங்கீடு பற்றி இவர்களுக்குள் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. மேலும், ஆந்திர மற்றும் கேரளப் பகுதிகளில் கம்யூனிஸ்டுகளின் கரம் ஓங்கியிருப்பதைக் காரணம் காட்டி ஆந்திர மாநிலப் பிரச்னையை ஓராண்டுக்குத் தள்ளிப் போடுமாறு நேருவுக்கு ஆலோசனை கூறினார் ராஜாஜி. நெருங்கிக் கொண்டிருந்த பொதுத் தேர்தலை மனதில் கொண்டு உடனடி நடவடிக்கையைத் தவிர்க்க முனைந்தார் நேரு. ஆந்திர மாநிலம் அமைவதில் விருப்பமில்லாத மத்திய அரசாங்கம் பிரிவினைக் கமிட்டியில் நிலவிய கருத்து வேறுபாட்டைக் காரணம் காட்டி அக்கோரிக்கையை முடக்கிவிட்டது என்று கூறுகிறார் பிரகுநாதராவ்.

**சுவாமி சீத்தாராமின் உண்ணாவிரதம்**

மத்திய அரசாங்கத்தின் போக்கு ஆந்திர மக்களிடையே மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியது. 1951 சுதந்திர தினத்தன்று **சுவாமி சீத்தாராம்** (Swamy Sitaram) சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். சட்டப்புறம்பான முறையில் கட்டாயப்படுத்தி அரசாங்கத்தை அடிபணிய வைக்கமுடியாது என்று கூறி சுவாமி சீத்தாராமின் உண்ணாவிரதத்தை கடுமையாகக் கண்டித்தார் பிரதமர் நேரு. ஆந்திரர்கள் ஆத்திரமடைந்தனர். ஆந்திராவில் பதட்ட நிலை ஏற்பட்டது. சில விரும்பத்தகாத வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அமைதியான சூழ்நிலையில் அப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு வசதியாக சுவாமி சீத்தாராம் உண்ணா நோன்பைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் ஆச்சார்ய வினோபாபவே. அவரது வேண்டுகோளுக்கிணங்கி சுவாமி சீத்தாராம் தனது 35 நாள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் (1951 செப்டம்பர் 20). ஆனால் ஆந்திரா பிரச்னைக்குத் தீர்வு காணப்படவில்லை.

**தேர்தல் பிரதிபலிப்பு**

ஆந்திர மக்கள் தங்களது ஏமாற்றத்தை 1952 பொதுத் தேர்தலில் வெளிப்படுத்தினர். சென்னை மாகாணம் முழுவதிலும் காங்கிரஸ் 375 இடங்களில் 152 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. ஆந்திராவில் 140 இடங்களில் 43 இடங்களைத்தான் பெற்றது. காலா வெங்கடராவ், கோபால ரெட்டி, சஞ்சீவ ரெட்டி போன்ற பிரபல காங்கிரஸ் தலைவர்கள் தோல்வி கண்டனர். கம்யூனிஸ்ட் கட்சி 41 இடங்களில் வெற்றி பெற்றது. பிரகாசத்தின் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியும் கிசான் மஸ்தூர் பிரா கட்சியும் சேர்ந்து ஐக்கிய ஜனநாயக முன்னணி (United Democratic Front) அமைக்கப்பட்டது. அம்முன்னணி 164 உறுப்பினர்களைக் கொண்ட தனிப் பெரும் கூட்டணியாக் இருந்தது. எனினும் சென்னை மாகாண் ஆளுநர் அரசாங்கம் அமைக்க ஐக்கிய ஜனநாயக முன்னணியை அழைக்கவில்லை! மாறாக, அவர் ராஜகோபாலாச்சாரியாரை சட்டமன்ற மேலவை (Legislative Council) உறுப்பினராக நியமித்து அமைச்சரவை அமைக்க அனுமதித்தார்!

**மாநிலக் கோரிக்கைக் கிளர்ச்சி**

சென்னை மாகாண முதலமைச்சரான ராஜாஜி மேற்கொண்ட சில நடவடிக்கை
ஆந்திரர்களை மேலும் ஆத்திரமடையச் செய்தது. குறிப்பாகக் **கிருஷ்ணா பெ**
**திட்டம்** (Krishna Pennar Project). அத்திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீ
தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிட ராஜாஜி திட்டமிடுவதாக ஆந்திரர்கள் கருதி
அத்திட்டத்தைப் பரிசீலித்த **கோஸ்லா குழு** (The Khosla Committee)வும் 'தற்
வடிவில் அது நடைமுறை சாத்தியமற்றது' என்று கூறியது. மத்திய அரசாங்கம்
மாநிலக் கோரிக்கையை ஏற்காததும், மாநில அரசாங்கம் கிருஷ்ணா நதி நீ
தமிழ்நாட்டுக்குத் திருப்பி விட முயன்றதும் குளவிக் கூட்டில் கைவிட்டது போல
மிகப்பெரிய அளவில் மக்கள் கிளர்ச்சி எழுந்தது. 1952–53ல் தனி ஆந்திர மா
கோரிக்கை ஆர்ப்பாட்டம் உச்ச நிலையை அடைந்தது. ராஜாஜி ஆந்திராவுக்குச் செ
போது அவருக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஒரு இடத்தில் அவர் முக
'தார்' வீசப்பட்டது. 'தார் வீசுவதால் தனி மாநிலம் பெற முடியாது' என்றார் ராஜாஜி.

**பொட்டி ஸ்ரீராமுலுவின் உயிர்த் தியாகம்**

ஆந்திரர்களின் ஆர்ப்பாட்டத்துக்குச் சிகரம் வைத்தாற்போல் தனி ஆ
மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவாகப் **பொட்டி ஸ்ரீராமுலு** (Potti Sriramulu) சென்னை
சாகும் வரை உண்ணாவிரதத்தை துவக்கினார். **(1952 அக்டோபர்**
உண்ணாவிரதத்தின் 50–வது நாளன்று பிரதமர் நேரு பொட்டி ஸ்ரீராமுலு
நடவடிக்கையைக் குறை கூறினார். சம்மந்தப்பட்டோரிடையே பொதுக் கருத்து ஏற்ப
சென்னை நகரம் சேராத ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்று ராஜ்ய ச
அறிவித்தார் நேரு. நேருவின் அறிக்கையை ஏற்க மறுத்தார் பொட்டி ஸ்ரீராமுலு. ச
சித்தாராமைப் போன்று வாக்குறுதியை நம்பி உண்ணாவிரதத்தை விலக்கிக் கொ
மறுத்துவிட்டார். 1952 டிசம்பர் 15 ஆம் தேதி இரவு தென்னக காந்தியவாதி பொ
ஸ்ரீராமுலு தனி ஆந்திர மாநிலத்துக்காக உயிர்த்தியாகம் செய்தார்.

**கோரிக்கை ஏற்பு**

பொட்டி ஸ்ரீராமுலு உயிர்த்தியாகம் செய்த செய்தி ஆந்திராவில் காட்டுத்தீ
பரவியது. பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. ரயில் நிலையங்களும் அரசாங்
கட்டிடங்களும் தாக்கப்பட்டன. கனகாபள்ளி, விஜயவாடா போன்ற நகரங்களில் கா
படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஏழு பேர் மாண்டனர். ஐதராபாத்தில் க
காங்கிரஸ் கமிட்டி பொதுவாக மொழிவழி மாநிலங்கள் பற்றியும், குறிப்பாகத் தனி ஆ
மாநிலக் கோரிக்கை பற்றியும் விவாதித்தது. அவ்விவாதத்தின் போது ராஜாஜி மொழி
மாநிலக் கோரிக்கை காட்டுமிராண்டிக் குணத்தின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டார்.
ஆந்திர மக்களை மேலும் ஆத்திரமடையச் செய்தது. இறுதியில் காங்கிரஸ் கமிட்டி
ஆந்திர மாநிலக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.

## ஆந்திரா மாநிலம்

எனினும் ஆந்திராவின் தலைநகர் பற்றிய பிரச்னை தீர்க்கப்படவில்லை. ஆந்
தலைவர்கள் சென்னை நகரை இரண்டாகப் பிரித்து வடக்குப் பகுதியை ஆந்திராவு
இணைத்து விட வேண்டும் என்றனர். முதலமைச்சர் ராஜாஜி அக்கோரிக்கை
நிராகரித்தார். அதுமட்டுமல்ல. சென்னை மாகாணத்துக்கும் ஆந்திராவுக்கும் பொ
தலைநகர், ஆளுநர், உயர்நீதிமன்றம், பொதுச் சொத்து இருப்பதையும் அவர் ஏற்கவில்
பிரிவினையை விரும்பும் ஆந்திரர்கள் '... னோடு வெளியேற வேண்டும்' எ



உறுதியாகக் கூறினார் ராஜாஜி. 'தூணை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியேற முடியாது; தூணை விட்டால் தான் வெளியே வரலாம்' என்றார். ஆந்திரத் தலைவர்கள் சென்னை நகரப் பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு, கர்னூலைத் தலைநகரமாகக் கொள்ள சம்மதித்தனர். அதன்பின் தனி ஆந்திர மாநிலம் அமைவதை அனுமதிப்பதாக மத்திய அரசாங்கம் அறிவித்தது. (1953 டிசம்பர் 19). பொட்டி ஸ்ரீராமுலு உயிர்த்தியாகம் செய்து மூன்று நாட்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பை வெளியிட்டதற்காக நேரு கடுமையான கண்டனத்துக்குள்ளானார். நேரு தனி ஆந்திர மாநிலம் அமைவதைத் தயக்கத்துடன் ஏற்றுக் கொண்டார், என்று குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோபால். ஆந்திர மாநிலம் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு முறையாக அமைக்கப்பட்டது. சி.எம்.திரிவேதி புதிய ஆந்திர மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்: டி.பிரகாசம் முதலமைச்சராகவும், சஞ்சீவரெட்டி துணை முதலமைச்சராகவும் பதவிப் பொறுப்பேற்றனர். **1953 அக்டோபர்** முதல் தேதி பிரதமர் நேரு ஆந்திர மாநிலத்தை மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே துவக்கி வைத்தார்.

## எல்லைப் பிரச்னை

**வடக்கெல்லைப் போராட்டம்**

சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட பிரச்னைகள் பல. அவற்றுள் மிகவும் முக்கியமானது எல்லைப் பிரச்னை ஆகும். இரு மாநிலங்களுக் கிடையேயான எல்லையை வரையறுப்பதில் சிக்கல் ஏற்பட்டது. ஆந்திரத் தலைவர்கள் சென்னை நகரின் ஒரு பகுதியைக் கேட்டபோது தமிழரசுக் கட்சித் தலைவரான **மா.பொ.சிவஞானம்** திருப்பதி சென்னை மாகாணத்தோடு இருக்க வேண்டும் என்று கோரினார். பின்னர் ஆந்திரர்கள் திருப்பதிக்குத் தெற்கே உள்ள மற்றொரு கோயில் நகரமான திருத்தணியையும் ஆந்திராவுடன் சேர்க்க வேண்டும் என்று கேட்ட போது மா.பொ.சிவஞானம் அக்கோரிக்கையைக் கடுமையாக எதிர்த்தார்; போராட்டத்தில் ஈடுபட்டார். இந்த எல்லைச் சிக்கலைத தீர்க்கும் பொருட்டு நேரு அரசாங்கம் **எச்.வி.படாஸ்கர்** (H.V.Pataskar) **கமிட்டியை** அமைத்தது. அக்கமிட்டி எல்லைக் கிராம மக்கள் பேசிய மொழியை அளவுகோலாகக் கொண்டு எல்லையைத் தீர்மானித்தது. அதன்படி திருப்பதி ஆந்திராவுக்கும் திருத்தணி சென்னை மாகாணத்துக்கும் கொடுக்கப்பட்டது. திருத்தணி தமிழ் நாட்டின் பகுதி ஆயிற்று.

**தெற்கெல்லைப் போராட்டம்**

மா.பொ.சியின் தலைமையில் தமிழ்நாட்டில் வடக்கெல்லைப் போராட்டம் நடைபெற்றதைப் போன்று தெற்கில் மார்சல் **நேசமணி**யின் தலைமையில் எல்லைப் போராட்டம் விறுவிறுப்படைந்தது. பட்டம் தாணுவின் கொச்சி அரசாங்க அடக்குமுறைக்குள்ளாயிற்று. 1953–ல் பசல் அலி மாநில மறுசீரமைப்புக் கமிஷன் அமைக்கப்பட்ட பின்னரும் போராட்டம் தொடர்ந்தது. காமராஜரின் பாளையங்கோட்டை சமரச முயற்சி பலனளிக்கவில்லை. 1954 ஆகஸ்டு 11–ம் தேதி மறியல் போராட்டம் துவக்கப்பட்டது. புதுக்கடை சந்தை மைதானத்திலும், குளித்துறையிலும், கொடுவெட்டியிலும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. பலர் மடிந்தனர். மாநிலங்கள் மறுசீரமைப்புக் கமிஷன் பரிந்துரையின்படி தமிழ்நாட்டின் தெற்கெல்லையில் அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளாங்கோடு ஆகிய நான்கு வட்டங்களைத் திருவிதாங்கூரிலிருந்து பிரித்துக் குமரி மாவட்டமாக்கித் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. மலபார் கேரளாவின் திருவிதாங்கூர் கொச்சியின் பகுதியாயிற்று!

## 6.5 மாநிலங்கள் மறுசீரமைப்புச் ச The States Re-Organisation Act

### 6.5.1 பாசல் அலி கமிஷன் (Fazl Ali Commission), 1953

மொழி வழி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது 'பண்டோராவின் பெட்டி' (Pan Box)யைத் திறந்து விட்டது போலாயிற்று. இந்தியாவின் பிற பகுதிகளிலும் அத் கோரிக்கை வலுப்பெற்றது. எனவே, நேரு அரசாங்கம் 1953 டிசம்பர் மாதம் நீதிபதி அலி (Saiyid Fazl Ali)–யைத் தலைவராகக் கொண்ட மாநிலங்கள் மறுசீரமை கமிஷனை (The States Re-organisation Commission) அறிவித்தது. எச்.என்.குன்ஸ் கே.எம்.பணிக்கரும் அக்கமிஷனின் பிற உறுப்பினர்கள் ஆவர்.

பாசல் அலிக்குக் கொடுக்கப்பட்ட வழிகாட்டுக் குறிப்புகள் வருமா இந்தியாவின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் ஊறு நேராவண்ணம் மாநிலங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். 2) மொழியைப் போன்றே நிதி, நிர்வாக, பொருளா காரணிகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். 3) பொருளாதார, கலா ஒழுக்க முன்னேற்றத்துக்காக இந்தியா மேற்கொண்டுள்ள மாபெரும் திட்ட நடைமுறைப்படுத்துவதற்கேற்ப இருத்தல் வேண்டும். 4) தேசியத் திட்ட செயல்படுத்துவதற்கேற்ப குறுக்கே வரும் எந்த மாற்றங்களும் தேச நல பாதிப்பதாகும். சுருங்கக் கூறின், மொழியை மட்டும் அளவுகோலாகக் கொ மாநிலங்களை மறுசீரமைப்பு செய்யலாகாது. அதாவது, தார் கமிஷன், ஜே.வி.பி. போன்று பாசல் அலி கமிஷனும் **ஒருமைக்கோட்பாடு அணுகுமுறையை** (Mo Approach)ப் பின்பற்றக் கூடாது என்பது உணர்த்தப்பட்டது.

பாசல் அலி கமிஷன் அதற்குக் கொடுக்கப்பட்ட வழிகாட்டுக் குறிப்பு மாநிலங்கள் மறுசீரமைப்பு பற்றிய பலதரப்பட்ட பிரச்னைகளையும் பரிசீலித்த பி பின்வரும் 16 மாநிலங்களை அமைக்கலாம் என்று பரிந்துரைத்தது. 1) ஆந்திரப் பிர 2) அஸ்ஸாம் 3) பீகார் 4) பம்பாய் 5) கேரளா 6) மத்தியப் பிரதேசம் 7) மதரா மைசூர் 9) ஒரிஸா 10) பஞ்சாப் 11) ராஜஸ்தான் 12) உத்திரப் பிரதேசம் 13) வங்காளம் 14) கர்நாடகா 15) பம்பாய் நகரத்தைப் பொதுவாகக் கொண்ட மகாராஷ் குஜராத் 16) ஜம்மு – காஷ்மீர். 1961–62 பொதுத் தேர்தல்களுக்குப் பின்னர் ஐத ஆந்திராவுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும் சிபாரிசு செய்தது. மத்திய அரசு பாசல் அலி கமிஷனின் பெரும்பான்மையான பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு 1956 ஆண்டு மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது.

### 6.5.2 பி.சி.ராய் திட்டம் (B.C.Roy's Proposal) 1956

பாசல் அலி கமிஷனின் அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்த மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் பி.சி.ராய் சில தலைவர்களுடன் கலந்து மொழிவழி மாநிலச் சீரமைப்புக்கு ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொடுத்தார். இந்தி மொழிவாரியாகப் பிரிப்பதற்குப் பதிலாக ஐந்து அல்லது ஆறு பெரிய ஆ பகுதிகளாகப் பிரிந்துவிடலாம் என்பது ராய் திட்டத்தின் சாரமாகும். உதாரண பீகாரை மேற்கு வங்காளத்துடன் இணைத்து ஒரு பெரிய மாநிலத்தை உருவாக் அதேபோன்று தென்னிந்தியாவில் கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகியவற்றை சேர்த்து தக்ஷிண பிரதேசத்தை (Dakshina Pradesh) அமைத்தல்.

ராய் திட்டம் 1956–ல் அமிர்தசரசில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட் விவாதிக்கப்பட்டது. தக்ஷிண பிரதேசம் பற்றிய தீர்மானத்தை கோவிந்த் வல்ல



முன் மொழிய சி.சுப்பிரமணியம் வழிமொழிந்தார். அத்தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதிதாக அமைக்கப்படும் தக்ஷிண பிரதேசத்தின் முதலமைச்சராக கு.காமராஜ் இருப்பது என்றும் முடிவாயிற்று. அத்திட்டத்தைப் பெங்களூரில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி பரிசீலித்தது. நேருவும், காமராஜும் ராய் திட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. அதுமட்டுமல்ல. தமிழ் நாட்டில் ஈ.வெ.ராமசாமி தக்ஷிண பிரதேசத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். அத்திட்டத்தை ஆதரித்தால் சென்னை மாகாணத்தில் காமராஜின் தலைமை முடிந்துவிடும், தமிழர்கள் பிற பகுதியினரின் ஆதிக்கத்துக்குள்ளாவர் என்றும் எச்சரித்தார். எனவே, பி.சி.ராய் திட்டம் குறைப் பிரசவமாயிற்று. அத்திட்டம் கைவிடப்பட்டது. பெரிய மாநிலங்களை அமைக்கவேண்டும் என்ற ராய் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் சமகால இந்திய வரலாற்றின் போக்கே மாறியிருக்கும் என்று கருதுகிறார் சி.சுப்பிரமணியம்.

### 6.5.3 மண்டல மன்றங்கள் (The Zonal Commissions)

தேசிய ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொண்டு மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம் மண்டல மன்றங்களை ஏற்படுத்துவதற்கு வழி வகுத்தது. அதன்படி இந்திய மாநிலங்களை வகைப்படுத்தி பின்வரும் **ஐந்து மன்றங்கள்** உருவாக்கப்பட்டன.

1) வடக்கு மண்டல மன்றம் : இதில் பஞ்சாப், ராஜஸ்தான், காஷ்மீர், டெல்லி, இமாச்சலப் பிரதேசம் ஆகிய பகுதிகள் அடங்கும்.

2) மத்திய மண்டல மன்றம் : இதில் உத்திரப் பிரதேசமும், மத்தியப் பிரதேசமும் இடம் பெறலாம்.

3) கிழக்கு மண்டல மன்றம் : இதில் பீகார், மேற்கு வங்காளம், ஒரிசா, அஸ்ஸாம், மணிப்பூர், திரிபூரா ஆகிய பகுதிகள் இருக்கும்.

4) மேற்கு மண்டல மன்றம் : பம்பாயும், மைசூரும் இதில் இடம் பெறும்.

5) தெற்கு மண்டல மன்றம் : இது ஆந்திரப் பிரதேசம், சென்னை, கேரளா மாநிலங்களை உள்ளடக்கியது.

மண்டல மன்றங்கள் ஆலோசனை அமைப்புகளாகும். ஒவ்வொரு மன்றத்திலும் அதன் உறுப்பு மாநிலங்களின் முதலமைச்சர்களும், பிற அங்கத்தினர்களும் இடம் பெறுவர். இம்மன்றங்கள் மண்டல மாநிலங்களுக்குப் பொதுவான சமூக, பொருளாதாரத் திட்டம், போக்குவரத்து, சிறுபான்மையினர் நிலை, உள்ளாட்சி, குடிசைத் தொழில்கள், பொதுப் பிரச்னைகள் பற்றி விவாதித்துத் தீர்வு காணும்.

### 6.5.4 மாநிலங்கள் மறுசீரமைப்பு

மாநிலங்கள் மறுசீரமைப்புக் கமிஷனின் பரிந்துரைகளின்படி இந்திய மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. மதராஸ் மாகாணம் மலபார் மாவட்டத்தைக் கேரளாவுக்குக் கொடுத்துவிட்டு அதற்குப் பதில் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பெற்றுக் கொண்டது. பெல்லாரி, தென் கனரா மற்றும் பழைய ஐதராபாத்தின் சில மாவட்டங்கள் கர்நாடகத்துடன் இணைக்கப்பட்டன. ஆனால் ஐதராபாத்தின் தெலுங்கு மாவட்டங்கள் ஆந்திராவுக்கு மாற்றப்படவில்லை. (பின்னர் 1961–ல் மாற்றப்பட்டன). அதேபோன்று ஐதராபாத்தின் மராத்தி மொழி மாவட்டங்கள் மகாராஷ்டிரா மாநிலத்துக்கு மாற்றப்படவில்லை. மாறாக, பம்பாய் பகுதியின் மராத்தி மொழி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு புதிதாக விதர்பா மாநிலம்

அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. பம்பாய் மாநிலம் மராத்தி, குஜராத்
பகுதிகளைக் கொண்ட இருமொழி மாநிலமாக உருவாக்கப்பட்டது.

மாநில மறுசீரமைப்பில் தர்க்க ஒழுங்கோ அல்லது கொள்கைப் பிடிப்போ இ
ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது விதி விலக்காகக் கருதப்பட்டதேயன்றி முன் மாதிரி
எடுத்துக் கொள்ளப்படவில்லை. மொழி அடிப்படையில் சென்னை, கேரளா, கர்நாட
மாநிலங்கள் அமைக்கப்பட்டதைப் போன்று பம்பாய் மாநிலம் ஒரு மொழி மாநில
அமைக்கப்படவில்லை. மொழிவழி மாநில அமைப்பு நாட்டொற்றுமையை உருக்குலை
விடும், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை முடக்கிவிடும் என்றே கருதினார் நே
ஒரு மொழி மாநிலத்தை விடப் பலமொழி பேசுவோரைக் கொண்ட பொது மாநில
(Mutilingual Cosmopolitan State)ப் பெரிதும் விரும்பினார் நேரு. சம்மந்தப்பட்ட
சமாதானப்படுத்தி சரிப்படுத்துவதில் குறியாக இருந்த நேரு, மக்களின் மொழியுணர்
புரிந்து கொள்ளவில்லை. சமாதானத் தீர்வு சாசுவதத் தீர்வாக இருக்கும் என
நினைத்தார். சரியான தீர்வுகள் தவறாகப் போவதைப் பார்த்துக் கொண்டு அவற்
சரிபார்க்கும் முயற்சியை மேற்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் எஸ்.கோ
மூத்த காங்கிரஸ் தலைவரான சங்கர் ராவ் தேவா மக்களின் உணர்வுகளை
அவமதிப்பதாகக் கூறினார். மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா போன்ற மாநிலங்கள்
அடிப்படையில் தங்களது கோரிக்கைகளை வலுப்படுத்த இரகசிய நிதி திரட்
மொழிவழி மாநிலக் கோரிக்கை புதுப்பலத்துடன் பரவியதேயன்றிப் பலவீனப்படவில்

## பஞ்சாப் மாநிலம்

1937 ஆம் ஆண்டு பஞ்சாப் தனி மாகாணமாக உருவாக்கப்பட்டது. 1947
இந்தியப் பிரிவினையின் விளைவாக இம்மாகாணம் மேற்கு பஞ்சாப் கிழக்கு பஞ்சாப் என
இரு பகுதிகளாயிற்று. இந்தியாவோடு இணைக்கப்பட்ட கிழக்கு பஞ்சாபில் பஞ்சாபி
பேசும் பெரும்பான்மைப் பஞ்சாபியரும் இந்தி மொழி பேசும் சிறுபான்மை இந்துக்
இருந்தனர். இந்தியா விடுதலை அடைந்ததிலிருந்து பஞ்சாபியர் மொழிவழி தனிமா
கோரி வந்தனர். ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டதிலிருந்து அவர்களது கோரிக்
வலுப்பெற்றது. பிரதமர் நேரு அமிர்தசரஸ் சென்று சீக்கியத் தலைவர்களை சந்தி
பேசி சமாதானப்படுத்தினார். அவரது நல்லெண்ணம் பற்றி மாஸ்டர் தாரா சிங்கை
வைத்துத் திரும்பினார். 1956 நவம்பர் முதல் தேதி பஞ்சாபுக்கு அருகேயிருந்த ம
மாநிலங்கள் பஞ்சாப் மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. இருப்பினும் பஞ்சாப் இரு
மாநிலமாகவே இருந்தது. மொழிவழி மாநிலம் அமையாமையால் ஏமாற்ற
பஞ்சாபியரின் கோபம் நீறு பூத்த நெருப்பாகவே இருந்தது. பத்தாண்டுகளுக்குப் பின்
இம்மாநிலம் பஞ்சாப், அரியானா என்று இரு வேறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு (
நவம்பர் 1) சண்டிகார் பொதுத் தலைநகரமாக்கப்பட்டது.

## மகாராஷ்டிர, குஜராத் மாநிலங்கள், 1960

பம்பாய் மாகாணம் மராத்தி மொழி பேசுவோரையும், குஜராத்தி மொ
பேசுவோரையும் கொண்டிருந்தது. அம்மாகாணத்தின் தென் பகுதியில் மராத்தி பேசு
பெரும்பான்மையினராகவும் இருந்தனர். மராத்தியரும் குஜராத்தியரும் மொழி
மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்றுப் போராடி வந்தனர். மாநிலங்கள் மறுசீரமை
கமிஷன் அறிக்கை எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போலாயிற்று. இரு
பம்பாய் மாநில அமைப்பை மராத்தியரும் குஜராக்தியரும் கடுமையாக எதிர்த்
சம்யுக்த மகாராஷடிர சமிதி, மகாகுஜராத் பரிஷத் என்ற இரு கட்சிகள் தே



முறையே மகாராஷ்டிர குஜராத் மாநிலங்கள் அமைய வேண்டுமெனப் போராடின. மொழிப்பற்று தேசப் பற்றை விட வலிமை வாய்ந்தது என்பதை இப்புதுக்கட்சிகள் புலப்படுத்தின. காங்கிரஸ் ஓரங்கட்டப்பட்டது. பிரதமர் நேருவும் காங்கிரசும் மராத்திய மற்றும் குஜராத்தியரின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காமையால் பம்பாய் கலகக்காடாயிற்று.

மகாராஷ்டிரமும், குஜராத்தும் தனி மாநிலங்களாவதற்குப் பம்பாய் நகரம் முட்டுக் கட்டையாக இருந்தது. அந்த நகரம் எந்த மாநிலத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பது பற்றிக் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பம்பாய் நகரத்தைத் தனியே நகர் – நாடாக (City State) ஆக்கி விடலாம் என்ற நேருவின் யோசனையை மராட்டியர் ஏற்கவில்லை. அதேபோன்று மகாராஷ்டிரம் – குஜராத் – பம்பாய் நகரம் உள்ளிட்ட ஒருங்கிணைந்த பம்பாய் மாநிலத்தையும் (Composite Bombay State) சம்மந்தப்பட்ட பிரிவினர் எதிர்த்தனர். மத்திய நிதி அமைச்சர் சி.டி.தேஷ்முக் இருமொழி மாநில அமைப்பைக் கடுமையாகக் குறை கூறினார். பிரதமர் நேரு அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் முக்கிய முடிவுகளை எடுப்பதாகக் குற்றம் சாட்டினார்.

இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்து மராத்திய குஜராத்திய மாவட்டங்கள் கிளர்ச்சியில் இறங்கின. பம்பாய் போலீசார் ஆர்ப்பாட்டத்தை அடக்கத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் போலீஸ் அத்துமீறலை விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்கவில்லை. கிளர்ச்சி தீவிரமடைந்து நிதி அமைச்சர் சி.டி.தேஷ்முக் மத்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை மற்றும் நேருவின் செயல்பாட்டை எதிர்த்துப் பதவி விலகினார். கிளர்ச்சியால் ஆத்திரமடைந்த நேரு மொழிவழி மாநிலக் கிளர்ச்சியைக் குறுகிய பிராந்தியப் பற்றின் வெளியீடாகவே கருதினார். 'வன்முறைக் கிளர்ச்சிகள் அரசியல்வாதிகளிடமிருந்தே வேர்விட்டு வளர்கின்றன' என்று 'இந்து' நாளேடு அதன் தலையங்கத்தில் குறிப்பிட்டது (1956 மே 31). அகமதாபாத்தில் ஆரம்பித்த வன்முறைக் கிளர்ச்சி குஜராத்தின் பிற பகுதிகளுக்கும் காட்டுத்தீ போல் பரவியது. சம்யுக்த மகாராஷ்டிர சமிதியும், மகா குஜராத் பரிஷத்தும் இக்கிளர்ச்சிகளில் பெரும் பங்கேற்றன. நான்காண்டுப் போராட்டங்களுக்குப் பின்னர் 1960 மே முதல் தேதி பம்பாய் நகரம் உள்ளிட்ட மகாராஷ்டிரமும், குஜராத்தும் தனி மாநிலங்களாக அமைக்கப்பட்டன.

## நாகாலாந்து, 1963

நாகாலாந்து, அஸ்ஸாம், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்குக்கும், மியான்மருக்கும் (பர்மா) இடைப்பட்ட குறுகலான மலைப்பகுதி ஆகும். நாகர்கள் தனி மாநிலம் கோரிப் போராடி வந்தனர். நாகர்கள் வாழ்ந்த மலைப்பகுதிகள் அஸ்ஸாமிலிருந்தும், டியூன்சாங் எல்லைப் பகுதி வடகிழக்கு எல்லைப் பிராந்தியத்திலிருந்தும், பிரிக்கப்பட்டு நாகாலாந்து உருவாக்கப்பட்டது. 1957 ஆம் ஆண்டு அப்பகுதிகள் மத்திய நிர்வாகப் பகுதி (Eventually Administrated Area)யாக ஆக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் அப்பகுதியை அஸ்ஸாம் ஆளுநர் மூலம் ஆட்சி செய்து வந்தார். நாகர்களின் தொடர்ந்த போராட்டத்துக்குப் பின்னர் 1961 ஜனவரி மாதம் இந்திய அரசாங்கம் நாகாலாந்துக்கு மாநில அந்தஸ்து அளித்தது. 1963 டிசம்பர் முதல் தேதி நாகாலாந்து மாநிலம் முறைப்படி நடைமுறைக்கு வந்தது.

1947 ஆகஸ்டு மாதத்திலிருந்து 1951–52 முதல் பொதுத் தேர்தல் நடந்து முடியும் வரை பிரதமர் நேரு மதவாதத்தை எதிர்த்துத் தொடர்ந்து போராடினார். இந்தக் காலகட்டத்தில் அவர் மூன்று வழிகளில் மதவாதத்தைப் புறங்கண்டார்: 1) **சமயச்சார்பற்ற அரசியலமைப்புச் சட்டம்.** பாமரர்களிடையேயும் படித்தவர்களிடையேயும் சமயத் தப்பெண்ணங்களும் (Prejudices) மூட நம்பிக்கைகளும் நிறைந்துள்ள நாட்டில் மதச்சார்பற்ற அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து மக்கள் அனைவருக்கும் எவ்வித வேறுபாடின்றி வாக்குரிமை வழங்கியது சிறப்புச் சாதனையாகும். 2) **நேரு – லியாகத் உடன்பாடு.** கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த இந்து அகதிகளால் மதவாதம் தீவிரமடைந்தது. எஸ்.பி.முகர்ஜி வங்கப் பிரிவினையை ரத்து செய்ய வேண்டும் அல்லது கிழக்கு பாகிஸ்தானில் இந்துக்கள் வாழ்வதற்கென தனியாக நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றார். இச்சூழ்நிலையில் 1950 பிப்ரவரி இரண்டாம் தேதி பிரதமர் நேருவும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். இந்த நேரு–லியாகத் உடன்பாட்டின்படி, 1) பாகிஸ்தானின் இருபகுதிகளில் வாழும் சிறுபான்மையினர்க்கு சமஉரிமை வழங்கப்படும்; 2) அங்கிருந்து வரும் அகதிகள் தங்கள் சொத்தை விற்று அந்த பணத்தை உடன்கொண்டு வரலாம்; 3) இந்தியா வந்த அகதிகள் மீண்டும் பாகிஸ்தானுக்கு வரத் தடையில்லை; இந்த உடன்படிக்கை இந்து மதவாதிகளின் எதிர்ப்பை முறியடித்தது. 3) **1951–52 பொதுத்தேர்தல்.** இத்தேர்தல் பிரச்சாரத்தின் போது '**மதவாதிகள் தேசத் துரோகிகள்**' என்று சாடினார் நேரு. அவர்களை வீழ்த்தப் போவதாக சூளுரைத்தார் (1951 அக்டோபர் 23). இத்தேர்தலில் மதவாதத்தின் சார்பாகப் போட்டியிட்ட ஜன சங்கம் வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்டது. மதவாதம் அரசியல் தோல்வியைத் தழுவியது.

**காங்கிரஸ் தலைவர் தேர்தல், 1951**

நேரு காங்கிரசுக்குள்ளேயே மதவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. முதன் முறையாக காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்குப் போட்டி ஏற்பட்டது (1950 ஆக.). இப்பதவிக்குப் **புருஷோத்தம் தாஸ் தாண்டனும், ஆச்சார்ய கிருபளானியும்** போட்டியிட்டனர். தாண்டன் மதவாதி; கிருபளாணி காந்தியவாதி. கிழக்கு பாகிஸ்தான் அகதிகள் பிரச்சினையில் தாண்டன் மதவாதிகளை ஆதரித்தார்; இந்து மகாசபை மற்றும் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆதரவைப் பெற்றவர். எனவே இத்தலைவர் தேர்தலில் பட்டேலும் காங்கிரஸ் மதவாதிகளும் தாண்டனுக்கு ஆதரவளித்தனர்! தாண்டன் 214 வாக்கு வித்தியாசத்தில் கிருபளானியை வென்றார். "காந்தியசத்தோடு பட்டேலிசமா அல்லது காந்தியசத்தோடு நேருவிசமா" என்ற இந்த போட்டியில் முன்னது வெற்றி பெற்றதாக எஸ்.பி.முகர்ஜியும் ஆர்.எஸ்.எஸ்.சாரார்களும் கூறி மகிழ்ந்தனர். நேரு சமயச்சாராக் கொள்கைக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. 1950 டிசம்பர் மாதம் பட்டேல் இறந்த பின்னர் நேரு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலகிக் கொண்டார். அதைத் தொடர்ந்து அவரது ஆதரவாளர்களும் விலகினர் (1951 ஆக.6). நாடாளுமன்றத்தில் நேரு காங்கிரஸ் உறுப்பினர்களின் நம்பிக்கை வாக்கு பெற்றார் (ஆக.21). தாண்டன் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் (செ.8). உடனே நேரு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேரு கட்சித் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் இருந்து மதவாதத்தை முறியடித்து சமயச்சாராக் கொள்கையை மேலும் தீவிரமாக செயல்படுத்தினார். **இந்து சட்ட மசோதா** (Hindu Code Bill)வை நிறைவேற்றினார். நேருவின் நான்காண்டுகால (1947–51)த் தொடர் போராட்டத்தின் விளைவாக சுதந்திர இந்தியாவில் மதவாதம் தலைதூக்க முடியாமல் போயிற்று. மதவாதம் தக்க தருணத்தை எதிர்பார்த்துப் பின்வாங்கியது!

Committee)வை நியமித்தது. நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இ... பெற்றிருந்த டாக்டர் **பி.ஆர்.அம்பேத்கார் வரைவுக் குழுவின் தலைவராக**... என்.கோபாலசுவாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசுவாமி ஐயர், கே.எம்.முன்ஷி, ... முகமது சாதுல்லா, என்.மாதவராவ், டி.பி.கைத்தான் ஆகியோர் உறுப்பினர்களாக... இருந்தனர். வரைவுக் குழு அடிப்படை உரிமைகள், யூனியன் அரசியலமைப்புச் ... யூனியன் அதிகாரங்கள், மாநில அரசியலமைப்புச் சட்டங்கள், சிறுபான்மையின... பட்டியலிடப்பட்ட பகுதிகள், பட்டியலிடப்பட்ட சாதிகள் பற்றிய துணைக் குழுக்க... நியமித்தது. வரைவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட துணைக் குழுக்களின் அறிக்கைக... நன்கு பரிசீலிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தி... முன்வரைவு தயாரிக்கப்பட்டது.

## சட்ட முன்வரைவு

1948 பிப்ரவரி 21 ஆம் தேதி கூடிய இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றக் கூட்... கூட்டத்தில் அரசியலமைப்புச் சட்டத்தின் முன்வரைவு விரிவாக சரத்து வாரியா... விவாதிக்கப்பட்டது. மொத்தம் 7,635 திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்று... 2473 திருத்தங்கள் விவாதத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. 165 நாட்கள் விவா... நடைபெற்றது. இவற்றில் **114** நாட்கள் அரசியலமைப்புச் சட்ட முன்வரைவ... விவாதிப்பதற்கே செலவிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டமன்றம் 1946 டிசம்பர் 9 ஆ... தேதியிலிருந்து மொத்தம் 2 ஆண்டுகள், 11 மாதங்கள், 17 நாட்கள் கூடியது... அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க 6.4 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 12... உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர். 1949 நவம்பர் 26 ஆம் தேதி வ... விவாதம் நீடித்தது. அரசியலமைப்புச் சட்டமன்றம் **395 சரத்துக்களையும்** (Articles), ... **அட்டவணைகளையும்** (Schedules) கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தைப் பலத்... ஆரவாரத்துடன் ஏற்றுக் கொண்டது.

## அரசியலமைப்புச் சட்டம்

டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு மனதாக... தேர்ந்தெடுக்கப்பட்டார். **1950 ஜனவரி 26 ஆம் தேதி இந்திய அரசியலமைப்புச் சட்... நடைமுறைக்கு வந்தது.** 1930 ஜனவரி 26 ஆம் தேதி இந்தியாவை அந்நி... ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் மேற்கொண்... முடிவிலிருந்து சரியாக இருபதாண்டுகளுக்குப் பின் இந்தியா **இறையுரிமையுடைய ஜனநாயகக் குடியரசாக** (Sovereign Democratic Republic)ப் பிரகடனப் படுத்தப்பட்... வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். 42வது சட்டத்தின் மூலம் **'சோஷலிச... 'மதச்சார்பற்ற'** என்ற சொற்கள் சேர்க்கப்பட்டன.

## 3.3 அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் **ஆதார ஆவணமாகும்.** இதற்... மிஞ்சிய அரசியல் அதிகார அமைப்பு முறை வேறெதுவுமில்லை. இந்தியாவின் அனைத்... சட்டங்களும் இச்சட்டத்துக்குட்பட்டே இருத்தல் வேண்டும். மத்திய மாநில அரசாங்கங்க... அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டே செயல்பட முடியும். இச்சட்டத்தின் சட்டம் இந்தி... அரசியல் முறை ஏற்பாட்டின் மணி முடியாகும். இது இந்திய அரசியலமைப்பு வரலாற்... தொடர்ச்சியை உறுதி செய்கிறது. சுதந்திர இந்தியாவின் தேவைகளையு... எதிர்பார்ப்புக்களையும், குறிக்கோள்களையும் உள்ளடக்கியது. எதிர்காலம் கட... காலத்தைவிடச் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசியல், பொருளாத...

பின் முஸ்லீம் லீக் வலுவிழந்தது. அகாலி தளம் பஞ்சாபில் பிரதான எதிர்க்கட்சியா
உருவெடுத்தது. தமிழ்நாட்டில் தி.மு.கவும், ஜம்மு–காஷ்மீரில் தேசிய மாநாடு கட்சியு
பீகாரில் ஜார்கண்ட் கட்சியும், ஒரிசாவில் ஜனதந்திர பரிஷத்தும், அஸ்ஸாமில் அனைத்து
கட்சி மலைவாழ் தலைவர்கள் மாநாடு கட்சியும், மேற்கு வங்காளத்திலும், கேரளாவிலு
பார்வர்டு பிளாக்கும், மகாராஷ்டிரத்தில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் கட்சி
முக்கிய மாநிலக் கட்சிகளாகச் செயல்பட்டன.

## 7.5 பொதுத் தேர்தல்கள்

### 7.5.1 தேர்தல் கமிஷன் (Election Commission)

இந்தியா உலகிலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடாகும். மக்களாட்சி வெ
பெறப் பொதுத் தேர்தல்கள் இன்றியமையாதவை. இத்தேர்தல்களைச் சுதந்திரமாக
பாரபட்சமின்றியும், முறையாகவும் நடத்த சட்டப் பாதுகாப்புடன் கூடிய சுயேச்சைய
அமைப்பு வேண்டும். அத்தகைய அமைப்பே **தேர்தல் கமிஷன்** (Election Commissi
ஆகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15வது பகுதியின் 324(2)வது சரத்து தேர்
கமிஷனரைப் பற்றிக் கூறுகிறது. **தலைமைத் தேர்தல் கமிஷனர்** (Chief Elect
Commissioner) தேர்தல் கமிஷனின் தலைவர். இவர் குடியரசுத் தலைவரா
நியமிக்கப்படுகிறார். குடியரசுத் தலைவர் விரும்பினால் மேலும் சில தேர்த
கமிஷனர்களை நியமிக்கலாம். தலைமைத் தேர்தல் கமிஷனருக்குச் சட்டமன்ற மற்
ஆட்சித் துறைக் கட்டுப்பாடின்றி சுதந்திரமாகச் செயல்படுவதற்குரிய பணி மற்றும் ஊதி
பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவர் மாநிலத் தேர்தல் கமிஷனர்கள் மற்றும் தேர்
அதிகாரிகளின் தலைமைத் தேர்தல் கமிஷனின் மேற்பார்வையின் கீழ் செயல்படுவ
இவர்களை மாநில அரசாங்கம் கட்டுப்படுத்த முடியாது.

தேர்தல் கமிஷனின் **பணிகள்** வருமாறு: 1) பொதுத் தேர்தல்களை
பாரபட்சமின்றியும், சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடத்தல். குடியரசுத் தலை
தேர்தலை நடத்தல்; 2)தேர்தல் இயந்திரத்தைச் சட்டமன்றம் மற்றும் ஆட்சித்து
செல்வாக்குக்கு உட்படாமல் பார்த்துக் கொள்ளல்; 3) நாடாளுமன்ற, சட்டப்பேரவை மற்
உள்ளாட்சி நிறுவனங்களுக்கான வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல்; 4) ந
முழுவதிலும் நடைபெறும் தேர்தல்களை மேற்பார்வையிட்டு, நெறிப்படுத்தி, கட்டுப்படுத்
5)குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்களுக்குத் தேர்தல் சம்மந்தமா
ஆலோசனைகளை வழங்குதல்; 6) மாநிலத் தேர்தல் கமிஷனர்களின் பணிக
ஒருங்கிணைத்தல்; 7)வாக்குப் பதிவை இரகசியமாக வைத்துக் கொள்ளல்; 8) அரசி
கட்சிகளின் நடத்தை விதிகளை நிர்ணயித்தல்; 9) தேர்தல் செலவுகளைத் தீர்மானித்
10) தேர்தல் சம்மந்தமான சிக்கல்களைத் தீர்த்து வைத்தல். அனைத்துத் தேர்
முடிவுகளும் தேர்தல் கமிஷனால் அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு முறை
அறிவிக்கப்படாத எந்த வேட்பாளரும் தேர்ந்தெடுக்கப்பட்டவராகக் கருதப்படமாட்டா

இந்தியாவில் பொதுத் தேர்தல்களை நடத்துவது எளிதன்று. கோடிக்கணக்க
வாக்காளர்கள் அமைதியாகப் பாதுகாப்புடன் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளைச் செ
வேண்டும். எழுத்தறிவற்ற வாக்காளர்கள் எளிதில் தெரிந்து கொள்வதற்கான தே
சின்னங்களை வழங்க வேண்டும். வாக்காளர் பட்டியல்களை அவ்வப்போது திரு
செய்ய வேண்டும். வாக்காளர்கள் சிரமமின்றிச் சென்று வாக்களிப்பதற்கேற்ப வா
சாவடிகளை அமைக்க வேண்டும். தேர்தல் தில்லுமுல்லுகளைத் தடுக்கவும், தே
வன்முறைகளைத் தவிர்க்கவும், வாக்குச் சாவடிகளைச் சுற்றி சட்ட ஒழுங்
நிலைநாட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வாக்குச் சீட்டுக



அச்சடித்து, பதிவேடுகளை எழுதி, ஒவ்வொரு வாக்குச் சீட்டும் சரியாக முறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். யாவற்றுக்கும் மேலாகத் தேர்தல் வேலைகளைக் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும்.

நேருவின் ஆட்சிக் காலத்தில் தேர்தல் கமிஷன் பொதுத் தேர்தல்களை அரசியலமைப்புச் சட்டப்படி, சுதந்திரமாக, சந்தேகத்துக்கிடமின்றி நடத்திக் காட்டியது. முதல் மூன்று பொதுத் தேர்தல்களும் முறைப்படி, பாரபட்சமின்றி, அரசியல் கட்சிகள் பாராட்டும்படி நடைபெற்றன. தேர்தல் கமிஷன் முதல் பொதுத் தேர்தலை நடத்த ஒரு மில்லியன்னு (பத்து இலட்சம்)க்கு மேற்பட்ட அதிகாரிகளை நியமித்தது. 173 மில்லியன் வாக்காளர்களைப் பற்றிய விவரங்களை வீடுவீடாகச் சென்று திரட்டியது. தொகுதிகளைப் பிரிப்பதில் எழுந்த பிரச்னைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டன. வேட்பாளர் பட்டியல்கள் உரிய சின்னங்களோடு தயாரிக்கப்பட்டன. வாக்களித்தோரின் கைவிரல்களில் அழியா–மை முத்திரை பதிக்கப்பட்டது. முதல் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க 100 நாட்கள் தேவைப்பட்டன. பின்னர் இரண்டாவது தேர்தல் 3 வாரங்களிலும், மூன்றாவது தேர்தல் 3 நாட்களிலும் நடத்தி முடிக்கப்பட்டன. சுருங்கக் கூறின், தேர்தல் கமிஷன் நேருவின் ஆட்சிக் காலத்தில் பொதுத் தேர்தல்களை முறையாகவும் சரியாகவும் நடத்துவதற்கான முன்னுதாரணங்களை ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம்.

### 7.5.2 முதல் பொதுத் தேர்தல், 1951 – 1952

**'வயது வந்தோருக்கு வாக்குரிமை'** என்ற அடிப்படையில் முதல் தேர்தல் நடத்தப்பட்டது. 21 வயதான இந்தியக் குடிமக்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றனர். முதல் பொதுத் தேர்தல் 1951 அக்டோபர் மாதத்திலிருந்து 1952 மார்ச் வரை நடைபெற்றது. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 173,213,635. இந்தியா முழுவதும் 3,772 தொகுதிகளுக்கான 4000 இடங்களுக்கு 59 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 17,000 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளில் காங்கிரஸ் தான் மிகப் பெரிய பலமிக்க கட்சியாகும். நேரு சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 25,000 மைல்கள் பிரயாணம் செய்து 35 மில்லியன் மக்களிடையே தேர்தல் பிரச்சாரம் செய்தார். ஜெயப்பிரகாஷ் நாராயண் உள்ளிட்ட சோஷலிஸ்டுகள் நேருவின் கொள்கைகளையும் திட்டங்களையும் கடுமையாக விமர்சித்தனர். குறிப்பாக, ஜெயப்பிரகாஷ் நாராயண் நேருவின் 'வெளிப்படையான பாசிசப் போக்கை'க் கண்டித்துப் பேசினார். நேருவின் அரசாங்கம் தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஹிட்லரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகக் குற்றம் சாட்டினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் காங்கிரசின் 'பூர்ஷுவா போக்கை' எதிர்த்தனர். நேருவின் அமைச்சரவையிலிருந்து வெளியேறிய எஸ்.பி.முகர்ஜி பாரதீய ஜனசங்கத்தைத் தோற்றுவித்து, இத்தேர்தலில் பங்கேற்று இனவாதப் பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு அமோக வெற்றியைக் கொடுத்தன. மொத்த நாடாளுமன்ற மக்களவைக்கான 489 இடங்களுக்குக் கட்சிகள் வெற்றி பெற்ற இடங்கள் வருமாறு: காங்கிரஸ் 364; இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16; சோஷலிஸ்ட் கட்சி 12; கம்யூனிஸ்ட்களின் ஆதரவு பெற்ற கட்சிகள் 11; பிற கட்சிகளும் சுயேட்சைகளும் 86. காங்கிரஸ் 26 மாநிலங்களில் 22–ல் பெரும்பான்மை பலம் பெற்றது. மேலும் 4 மாநிலங்களில் தனிப் பெரும் கட்சியாக இருந்தது. ஜனசங்கம் மக்களவையில் 3 இடங்களையும், மாநிலங்களில் 35 இடங்களையும் பெற்றது. கம்யூனிஸ்ட் கட்சி மாநில சட்டப்பேரவைகளில் 106 இடங்களைப் பிடித்தது.

இந்தியாவின் சமகால வர... அமைதிப் புரட்சி ஆகும். வயது வந்தோர் வாக்குரிமை என்ற வாய்ப்பை வாக்காளர்கள் விவேகத்தோடு பயன்படுத்தினர். ஜனநாயக அரசியலில் நிகழ்ந்த ... பிராந்தியச் செல்வாக்குகளும், குறுகிய அணுகுமுறைகளும், கட்சிச் சச்சரவுகளும் காணப்படினும் இப்பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் நடைபெற்றது. உலகிலேயே 173 மில்லியன் வாக்காளர்களைக் கொண்டு ... எனலாம். வெற்றிகரமாக நடத்திய பெருமை இந்தியாவுக்குக் கிடைத்தது. இத்தேர்தல் கட்சிகளுக்கும் மக்களுக்குமிடையே நெருக்கத்தை ஏற்படுத்தியது. ... ராஜஸ்தானிலும், தென் மாநிலங்களிலும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. ஆக்கட்சியே மத்தியிலும் மாநிலங்களிலும் மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றது. இத்தேர்தலின் மூலம் மக்கள் நேருவின் தலைமையை அங்கீகரித்தனர். இத்தேர்தல் இந்தியாவின் ஒற்றுமை, ஸ்திரத்தன்மை, சமயச் சார்பின்மை, பொருளாதாரம், சமத்துவ சமுதாயம் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்ற காங்கிரசுக்குக் கொடுத்த **'உரிமைக் கட்டளை'** (Mandate) ஆகும். சுருங்கக் கூறின், இத்தேர்தல் தேர்தல் கமிஷனின் செயல்பாட்டுக்கும் நேருவின் தலைமைக்கும் கிடைத்த நிகரற்ற வெற்றியாகும்.

### 7.5.3 இரண்டாவது பொதுத் தேர்தல், 1957

நேருவின் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது பொதுத் தேர்தல் 1957 ... லிருந்து மார்ச் 14 வரை நடைபெற்றது. இத்தேர்தலில் பிரதான தேசியக் கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ், பாரதீய ஜன சங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை போட்டியிட்டன. சோஷலிஸ்ட் கட்சி, கிஸான் மஸ்தூர் கட்சி, ஆந்திராவின் கிரிஷக் கட்சி ஆகியவையின் இணைப்பே பிரஜா சோஷலிஸ்ட் கட்சியாகும். முதல் தேர்தலில் பதிவான மொத்த செல்லுபடியான வாக்குகளில் 3 விழுக்காடு வாக்குகளைப் பெற்ற கட்சியைத் தேசியக் கட்சியாக அங்கீகரித்தது கமிஷன்.

முதல் பொதுத் தேர்தலுக்கும், இரண்டாவது தேர்தலுக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை 173 மில்லியனிலிருந்து 193 மில்லியனாக உயர்ந்துவிட்டது. காங்கிரஸ் நாடாளுமன்ற மக்களவைக்கான 500 இடங்களில் ... இடங்களைக் கைப்பற்றியது. வாக்களித்தோரின் 46.5 விழுக்காடு வாக்குகளைப் பெற்று காங்கிரஸ் மீண்டும் அமோக வெற்றி பெற்றது. கேரளாவைத் தவிர பிற மாநிலங்களில் காங்கிரசின் கரமே மேலோங்கி இருந்தது. கேரளா கம்யூனிஸ்டுகளின் வசமானது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்களவையிலும் தனது பலத்தை 16 லிருந்து ... உயர்த்திக் கொண்டது. அக்கட்சி தேசிய சக்தியாக உருவெடுத்தது. கம்யூனிஸ்டுகளின் வெற்றியை அதிர்ஷ்டவசமாகப் பெற்றது என்று ... காங்கிரசாரிடையே இருந்த ஊழலும் செயலாற்றமின்மையுமே கேரளாவில் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம் என்று விளக்கமளித்தார். கம்யூனிஸ்டுகளோ 'கேரளாவின் அடுத்தபடி நம்பூதிரிபாத் தான்' என்று கோஷமிட்டனர். கேரளாவின் ... ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத்தின் தலைமையில் அரசாங்கம் அமைத்து 'உ...' படைத்தனர்.

### 7.5.4 மூன்றாவது பொதுத் தேர்தல், 1962

சுதந்திர இந்தியாவின் மூன்றாவது பொதுத் தேர்தல் 1962 ... நடைபெற்றது. ... பிறகு நேரு அ...

சந்தித்தார். காங்...
அதிகரித்திருந்த...
மக்களவையில் 375...
கொண்டது. நே...
குறையவில்லை எ...
தேர்தலில் 364 இ...
காங்கிரஸ் மூன்றா...
புரிந்தது. இவ்வெ...
தலைமைக்குக் கி...
எதிர்க்கட்சிகளால்...

சென்னை ...
காங்கிரஸ் பெரும்...
ஆந்திரா பிரிந்து ...
காங்கிரஸ் மூன்றா...
தி.மு.கவின் த...
தொகுதியிலேயே ...
இடங்களில் வெற்...
கொண்டது. சென்...
அரசியல் சவால் எ...

### 7.5.5 மதிப்பீடு

இந்திய நா...
கொண்டுள்ளது.
காங்கிரஸ், இந்திய...
சோஷலிஸ்ட் கட்சி,...
பலவீனமான கட்சி...
கட்சி'யாகவே இருந்...

இந்தியா வி...
உ.றினார் காந்தி.
மையமாகவும், சுய...
மக்களுக்குச் சேவை...
அதேபோன்று ...
வேறு முறையான ...
நேருவுக்கு யோசல...
ஆலோசனையை ஏற்...

பதினேழு அ...
இருந்தது. காங்கிரஸ்...
கட்சி முரண்பா...
காவுடவில்லை. அ...
ஏற்றாரின் திறமை...
புவருக்கு நாட்டை...
எளிதாக இருந்தது. ...
முடியவில்லை. ஏ...
அர்ப்பணித்துக் கொ...

# 5. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி 1950 – 1964

> நேரு இந்தியப் பொருளாதாரத் திட்டத்தின் சிற்பி என்று அழைக்கப்படுவதில் அதிசயமில்லை.
>
> – வி.கே.ஆர்.வி.ராவ்.

## 5.1 பொருளாதார வளர்ச்சித் திட்ட முயற்சி

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு அந்நிய ஆதிக்கச் சுரண்டல் ஆட்சியே காரணம் என்று கருதப்பட்டது. **1876–ல் தாதாபாய் நௌரோஜி 'இந்தியாவின் வறுமை'** (Poverty of India) என்ற நூலை வெளியிட்டு வறுமை ஒழிப்பின் இன்றியமையாமையை உணர்த்தினார். **1928**லிருந்து ஜவகர்லால் நேரு சோவியத் ரஷ்யாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியால் பெரிதும் கவரப்பட்டார். 1934–ல் பொருளியல் மேதை **சர்.எம்.விஸ்வேசரய்யா** இந்தியாவுக்கான **'திட்டமிட்ட பொருளாதாரம்'** (Planned Economy) என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

1938–ல் இந்திய தேசிய காங்கிரஸ் ஜவகர்லால் நேருவின் தலைமையில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி பற்றி ஆராய்ந்து தக்க பரிந்துரைகளைக் கூறுவதற்காக **தேசிய திட்டக் கமிட்டி** (National Planning Committee)–ஐ அமைத்தது. 1944–ல் எட்டு தொழில் அதிபர்கள் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கான **பம்பாய்த் திட்டத்தை** (Bombay Plan)த் தயாரித்தனர். அத்திட்டம் 'டாட்டா பிர்லா திட்டம்' என்று அறியப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியத் தொழிலாளர் கூட்டமைப்பு (Indian Federation of Labour) ஒரு **மக்கள் திட்டத்தை** (People's Plan)த் தயாரித்தது. **எஸ்.என்.அகர்வால்** தயாரித்த **காந்தியத் திட்டம்** (Gandhian Plan) சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் கிராமங்களைக் கொண்ட பரவல் பொருளாதார முறையை மையமாகக் கொண்டது. பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் சர் **அர்தேஷிர் தலால்** (Sir Ardeshir Dalal) தலைமையில் ஒரு **திட்டத் துறை** (Planning Department)யைத் தோற்றுவித்தது. அத்துறை இரண்டாம் உலகப் போருக்குப் பின் செயல்படுத்துவதற்கான குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்தது.

1946–ல் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் ஒரு உயரதிகார திட்ட **ஆலோசனை போர்டை** (Advisory Planning Board) ஏற்படுத்தியது. அது நாட்டை எதிர்கொண்டிருந்த பலதரப்பட்ட பொருளாதாரப் பிரச்னைகளைப் பரிசீலித்தது. இந்தியப் பொருளாதார வளர்ச்சி பற்றித் தொடர்ந்து கவனம் செலுத்தும் பொருட்டு **திட்டக் கமிஷன்** (Planning Commission) ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தது. இந்தியா விடுதலை அடைந்த பின் பிரதமர் நேரு அரசியல் ஜனநாயகத்துக்குப் பொருளாதார ஜனநாயகப் பரிமாணத்தைச் சேர்க்கத் தீர்மானித்தார். திட்டக் கமிஷன் உருவாக்கப்பட்டது.

## 5.2 திட்டக் கமிஷன் (Planning Commission, 1950)

இந்தியத் திட்டக் கமிஷன் 1950 மார்ச் 15 ஆம் தேதி துவக்கப்பட்டது. இது அரசியலமைப்புச் சட்ட அங்கீகாரமில்லாத ஆலோசனைக் குழு ஆகும். **இதன் தலைவர்** பிரதமர், துணைத் தலைவர் முழு நேர அதிகாரி. திட்டக்கமிஷன் மத்திய அமைச்சரவையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு செயல்படும். **திட்டக்கமிஷனின் நோக்கங்களாவன:** 1) நாட்டு வளங்களை – இயற்கை, மனித மற்றும் மூலதன வளங்கள் – மதிப்பீடு செய்து அவற்றை மேலும் வளர்ப்பதற்கான வழிவகைகளைக் காணல்; 2)பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரித்து தேவையான வளங்களைத் திரட்டி, திறமையாகப் பயன்படுத்தல்; 3) பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வளங்களில் பற்றாக்குறை இருப்பின் அவற்றைக் கண்டறிந்து நிறைவு செய்வதற்கான ஆலோசனைகளைக் கூறல்; 4)திட்டங்களின் முன்னுரிமைகளைத் தீர்மானித்தல், எந்த நிலைகளில் திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை நெறிப்படுத்தல்; 5)பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணங்களைக் கண்டறிந்து களைதல்; 6) திட்டச் செயல்பாடு பற்றி அவ்வப்போது மதிப்பீடு செய்து மேற்கொண்டு பொருளாதாரப் பெருக்கத்துக்கான கொள்கை முடிவுகள் எடுப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.

## 5.3 தேசிய வளர்ச்சி மன்றம் (National Development Council)

மாநிலங்களின் ஒத்துழைப்பும், பங்கேற்பும், பங்களிப்புமின்றிப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் வெற்றி பெறா. எனவே, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு மாநிலங்களின் ஒத்துழைப்பைப் பெரும் பொருட்டு 1952–ல் **தேசிய வளர்ச்சி மன்றம்** அமைக்கப்பட்டது. பிரதமர் இதன் தலைவர். மாநில **முதலமைச்சர்கள்;** யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள்; திட்டக் கமிஷன் உறுப்பினர்கள். **மத்திய அரசாங்கத்தின்** உணவு, உள்துறை, நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் **இம்மன்றத்தின் உறுப்பினர்கள்.** தேசிய வளர்ச்சி மன்றப் **பணிகளாவன:**

1. திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்; **2) திட்டங்களுக்கான** வளங்களை மதிப்பீடு செய்ய உதவல்; 3) **திட்டக் கமிஷனால் தயாரிக்கப்பட்ட** திட்டங்களைப் பரிசீலித்தல்; 4) பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய முக்கிய சமூக பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றி விவாதித்தல்; **5) திட்டச் செயல்பாட்டை** விமர்சித்து, திட்ட இலக்குகளை விரைந்து, அவற்றை அடைவதற்கான வழிகள் பற்றி ஆலோசனை கூறல்; 6) திட்டமிட்ட வளர்ச்சி தொடர்பான நிர்வாகப் பணிகளை செம்மைப்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிதல்; **7) பின்தங்கிய** பகுதிகள் மற்றும் மக்களின் முன்னேற்றத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ள உறுதுணையாக இருத்தல்; 8) தேவையான வளங்களைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்; 9) திட்டத்தின் செயல்பாட்டை மதிப்பீடு செய்ய உதவல்.

தேசிய வளர்ச்சி மன்றம் வழக்கமாக இரண்டாண்டுகளுக்கொருமுறை கூடுகிறது. இம்மன்றம் மத்திய – மாநில அரசாங்கங்களுக்கும் திட்டக்கமிஷனுக்கும் இணைப்புப் பாலமாக உள்ளது. இதன் பரிந்துரைகள் கொள்கை வழிகாட்டு நெறிகளாகக் கருதப்படுகின்றன. திட்டச் செயல்பாட்டின் நிறைகுறைகளை விவாதிப்பதற்கும், குறை களைந்து நிறை காண்பதற்கும், திட்ட வெற்றிக்கு மத்திய மாநில அரசுகளைப் பொறுப்பேற்கச் செய்வதற்கும் இம்மன்றம் பயன்படுகிறது. தேசிய வளர்ச்சி மன்றம் திட்டக் கமிஷனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. அமைச்சரவைக்கு மேலாக மேலாதிக்கம் செய்கிறது. 'பேச்சுக் கடை'யாக மட்டும் உள்ளது போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.



எனினும் தேசிய வளர்ச்சி மன்றத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. இம்மன்றம் திட்டங்கள் பற்றி மாநிலங்களுக்கிடையே கருத்தொற்றுமை ஏற்பட உதவுகிறது. அதுமட்டுமல்ல. **"தேசிய வளர்ச்சி மன்றம் உண்மையான கூட்டாட்சியைப் பிரதிபலிப்பதாக உள்ளது"** என்று கருதுகிறார் ஆர்.வெங்கட்ராமன்.

## 5.4 ஐந்தாண்டுத் திட்டங்கள், 1951 – 1966 (Five Year Plans)

இந்தியா விடுதலை அடைந்தவுடன் நெருக்கடிக்கு மேல் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இனக்கலவரங்கள் அடக்கப்பட்டன. அகதிகள் பிரச்னை தீர்க்கப்பட்டது. நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்படுத்துவதற்கான அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து நேரு அரசாங்கம் அதன் கவனத்தைப் பொருளாதார வளர்ச்சி மீது திருப்பியது. புதிதாகப் பெற்ற சுதந்திரம் நிலைக்க வேண்டுமாயின் வளத்தை நோக்கி முன்னேறுவதை மக்கள் உணர வேண்டும். இல்லாவிடில் இந்தியா எந்த இலட்சியங்களுக்காகப் போராடியதோ அவை நீர்க்குமிழிகளாக மறைந்துவிடும். அதுமட்டுமல்ல சோவியத் யூனியனிலும், சீனாவிலும், கிழக்காசிய நாடுகளிலும் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியதன் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டியது. எனவே, நேரு அரசாங்கம் இந்தியாவின் பொருளாதார உணர்வு தேவைகளை ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற உறுதி பூண்டது.

### 5.4.1 முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951–1956)

**நோக்கம்**

1951 ஜூலை மாதம் திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டவரைவை சமர்ப்பித்தது. நேரு அரசாங்கம் பலதரப்பு விமர்சனங்களையும் பரிசீலித்த பின் 1952 டிசம்பர் மாதம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிட்டது. முதல் திட்டம் சுதந்திர இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான "கன்னி முயற்சி" ஆகும். அதன் **மூல நோக்கங்கள்** இரண்டு: 1) உலகப் போர்களாலும், இந்தியப் பிரிவினையாலும் உருக்குலைந்து போயிருந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீரமைத்தல். 2) மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமிக்கப் பன்முக வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கல்.

**திட்டம்**

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றப் பொருள் வளங்களைத் தொழில் நுட்பரீதியாகப் பெருக்கி, மனித வளத்தைச் செம்மைப்படுத்தி, மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. பொருள் உற்பத்தியைப் பெருக்கல், தேசிய வருவாயை உயர்த்தல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், நிலையான சொத்துக்களைச் சேர்த்தல் ஆகியவற்றுக்கிடையே சமநிலையை ஏற்படுத்துவது திட்டக் கமிஷனின் முன்னுரிமையாக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் அடுத்துவரும் திட்டங்களுக்கான முன்னோடியாகும். முதல் திட்டம் இந்தியப் பொருளாதார நிலத்தைச் சமன் செய்து அதன் மீது திட்டப் பொருளாதார மாளிகையைக் கட்டுவதற்கான முயற்சியாகும். அம்முயற்சி **"மிகவும் மோசமாகத் தேக்கமுற்றிருந்த பொருளாதாரத்துக்குத் தேவையான குறைந்தபட்ச உந்துதலைக் கொடுத்தது"** என்று குறிப்பிட்டுள்ளார் ஏ.எச்.ஹான்சன்.

# 9. நேருவின் வெளியுறவுக் கொள்கை 1947 – 1964

> அறிவுஜீவிகள் சர்வதேச முறைகளைப் பகுத்தாய்கின்றனர்;
> அரசியல் விவேகிகள் இவற்றை உருவாக்குகிறார்கள்
>
> – ஹென்றி கிசிஞ்சர்.

## 9.1 வெளியுறவுக் கொள்கை (Foreign Policy)

### 9.1.1. வரையறையும் விளக்கமும்

தனிமனிதனாக இருந்தாலும், சமுதாயமாக இருந்தாலும், நாடாக இருந்தாலும், பிறரைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. **இச்சார்புடைமையே** (Interdependence) வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கிறது. ஒரு நாடு தன் தேவைகளையும், குறிக்கோள்களையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்ளப் பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. அதனால்தான் ஒவ்வொரு நாடும், பிற நாடுகளுடன் அரசியல் பொருளாதார, வர்த்தக, அறிவியல் – தொழில்நுட்ப, கல்வி, கலாச்சார, இராஜ தந்திரத் தொடர்புகள் வைத்துக் கொள்கின்றது. இத்தொடர்புகளைத் தீர்மானிப்பதே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

வெளிநாட்டுக் கொள்கை என்பது பிற நாடுகளுடன் உறவு கொண்டு தேச நலன்களை நிறைவேற்றிக் கொள்ளும் மார்க்கமாகும். நாட்டுப் பாதுகாப்பும், தேசநலனும் வெளியுறவுக் கொள்கையின் உயிர் நாடியாகும். இவை பற்றிய குறிக்கோள்கள், விதிகள், முடிவுகள் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாகும். இவற்றை அடைவதற்கான வழிமுறைகள் மறுபகுதியாகும். அதாவது நாட்டு நலன் பற்றிய கொள்கையும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான மார்க்கமும் வெளிநாட்டுக் கொள்கை என்ற நாணயத்தின் இரு பக்கங்களாகும். சுருங்கக் கூறின், வெளிநாட்டுக் கொள்கை என்பது நாட்டின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான செயல் திட்டமாகும்.

### 9.1.2 உட்கூறுகளும், காரணிகளும் (Contents and Elements)

வெளிநாட்டுக் கொள்கை பின்வரும் **உட்கூறுகளைக்** கொண்டது: 1) பொதுவான தத்துவங்கள். இவை ஆட்சியாளர்களால் தீர்மானிக்கப்படுகின்றன. 2) குறிப்பிட்ட நோக்கங்கள். தத்துவங்களைப் பிரதிபலிக்கும் நோக்கங்கள் நாட்டு நலன்களைக் குவிமையமாகக் கொண்டிருக்கும். 3) நன்கு வகுக்கப்பட்ட செயல்திட்டம். செயல்திட்டம் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வழிமுறையாகும். 4) வழிகாட்டு விதிகள். இவை செயல் திட்டப்படி பிற நாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கான வழிகாட்டிகளாகும். 5) உறவுகளில் தொடர்ச்சியும் மாற்றமும் சர்வதேச உறவு மாற்றங்களுக்கேற்ப நாட்டு நலன் பற்றிய கொள்கையின் தொடர்ச்சி பாதிக்கப்படாமல் பாதுகாத்தல். 6) மதிப்பீடு செய்தல். வெளியுறவுக் கொள்கையின் நோக்கங்களும் நடைமுறையும் ஒரே அலைவரிசையில் உள்ளனவா என்பதை மதிப்பிடல்.

வெளிநாட்டுக் கொள்கை **பல காரணிகளால்** பாதிக்கப்படுகிறது. இவை
நிலையற்றவை. மாறுபடும் தன்மையுடையவை (Variables). இவற்றைக் கட்டுப்படுத்துவது
கடினம். எனினும் இவையே வெளிநாட்டுக் கொள்கையின் இடுபொருள்கள் (inputs)
ஆகும். நாட்டின் **நிலவியல் அமைப்பு, பொருள் வளம், மனித ஆற்றல்** ஆகிய மூன்றும்
வெளிநாட்டுக் கொள்கையைப் பாதிக்கும் அடிப்படைக் காரணிகளாகும். நாட்டின்
பரப்பளவு, வரலாற்றுப் பாரம்பரியம்; கலாச்சாரத் தொடர்ச்சி; அரசாங்க அமைப்பு; ஆட்சியின்
ஸ்திரத்தன்மை; கொள்கைப் பிடிப்பு; பொருளாதார, அறிவியல், தொழில்நுட்ப, இராணுவ
பலம்; அரசியல் தலைவர்களின் ஆளுமைத் திறன்; சதா மாறிக் கொண்டிருக்கும்
உள்நாட்டு – வெளிநாட்டுச் சூழல்; கூட்டணிகள்; உடன்படிக்கைகள்; உலகப் பொதுக்
கருத்து; ராஜதந்திரத் தொடர்பு போன்ற பல்வேறு காரணிகளைக் கணக்கிலெடுத்துக்
கொண்டு வெளிநாட்டுக் கொள்கை வகுக்கப்படுகிறது.

## 9.2 இந்திய வெளியுறவுக் கொள்கை

### 9.2.1 நேருவின் பங்கு

இந்திய வெளிநாட்டுக் கொள்கை ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப்பட்டது.
இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பே நேரு பன்னாட்டுறவில் பயிற்சி பெற்றிருந்தார்.
அவர்தான் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய காங்கிரஸ் தீர்மானங்களை வரைந்தார்.
காங்கிரசின் வெளிநாட்டு விவகாரப் பகுதிக்குத் தலைமை தாங்கினார். 1927–ல் பிரசல்ஸ்
நகரில் நடைபெற்ற அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு
உரையாற்றினார். அதைத் தொடர்ந்து சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்
கலந்து கொண்டு பிரசல்ஸ் மாநாட்டில் அவர் வெளியிட்ட கருத்துக்களுக்கேற்ப
வெளிநாட்டு விவகாரங்கள் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றினார். 1930 ஜனவரி 26
தேதி இந்தியர்கள் அனைவரும் தேசியக் கொடியை ஏற்றுவித்து எடுத்துக் கொள்ள
வேண்டி நேரு வரைந்த சபதத்தில் “இந்தியா உலக அரங்கில் உரிய இடத்தைப் பெற்று
உலக சமாதானத்தின் உயர்வுக்கும், மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்கும், அ...
பங்களிப்பைச் செய்யும்” என்று குறிப்பிட்டிருந்தார்.

நேரு இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக இருந்தபோது, இந்தியாவின்
வெளிநாட்டுக் கொள்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டினார்.
இந்தியா விடுதலை அடைந்தவுடன் பிரதமராகவும் வெளியுறவு அமைச்சராகவும் இரு...
நேரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைக்கான அடித்தளத்தை ஆழமாகவும்
அழுத்தமாகவும் அமைத்தார். அந்த அடித்தளத்தின் மீதே இந்திய வெளிநாட்டுக்
கொள்கை எனும் மாளிகை எழுப்பப்பட்டது. அதனால்தான் நேரு இந்திய வெளிநாட்டுக்
**கொள்கையின் தலைமை சிற்பி** (The Chief Architect of Indian Foreign Policy) எ...
பெருமையோடு போற்றப்படுகிறார்.

### 9.2.2 அடிப்படை நோக்கங்கள் (Basic Objectives)

இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை **நோக்கங்களாவன:** 1) நா...
இறையுரிமைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்; 2) சுதந்திரமான தற்சார்பு
கொள்கையைப் பின்பற்றல்; 3) ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம், இன ஆதி...
ஆகியவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தல்; 4) உலக அமைதிக்கும் நட்புறவு...
பாடுபடுதல்; 5) நாடுகளுக்கிடையே தோன்றும் நெருக்கடிகளைப் பேச்சுவார்த்தை...
சுமூகமாகத் தீர்க்க உதவுதல்; 6) நீதி, நேர்மை, நியாயம் ஆகியவற்றின் அடிப்படை...
சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்.



இந்திய அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படை நோக்கங்கள், நாடு விடுதலை
அடைவதற்கு முன்பும் சுதந்திரம் பெற்ற பின்பும் தேசத் தலைவர்களால் தொடர்ந்து
வலியுறுத்தப்பட்டவையே ஆகும். மக்கள் தங்களது சுதந்திரத்துக்காக மட்டும்
போராடினால் போதாது; மற்றவர்களின் விடுதலைக்காகவும் தியாகம் செய்யத் தயாராக
இருக்க வேண்டும் என்று கூறினார் காந்தியடிகள். அதேபோன்று இந்திய வெளிநாட்டுக்
கொள்கை வரலாற்று மரபோடும், நாட்டின் இயல்போடும், உலக மக்களோடு சமாதானமாக
வாழவேண்டும் என்ற மகாத்மா காந்தியின் அகிம்சா மார்க்கத்தோடும் ஒருங்கிணைந்து
வகுக்கப்பட்டதாகும் என்று விளக்கமளித்தார் நேரு. ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’
என்பது இந்திய அயல் நாட்டுக் கொள்கையின் ஆதார சுருதி ஆகும்.

## 9.3 கூட்டுச் சேராக் கொள்கை (Policy of Non-Alignment)

கூட்டுச் சேராக் கொள்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கையின்
முதுகெலும்பைப் போன்றது. அடித்தளக் கல்லாகும். இது நாட்டின் வெளியுறவுக்
கொள்கையைப் புரிந்து கொள்வதற்கான சாவிச் சொல் (Key Word) ஆகும். நேரு
வடிவமைத்துக் கொடுத்த கூட்டுச் சேராக் கொள்கை தனித்தன்மை வாய்ந்தது. இதைப்
பற்றி அறிந்து கொள்ளாமல் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைப் புரிந்து கொள்ள
இயலாது.

### 9.3.1 வரையறையும், விளக்கமும்

கூட்டுச் சேராக் கொள்கை காலக் கட்டாயத்தின் விளைவாகும். இந்தியா
விடுதலை அடைந்தபோது பிரிட்டன், அமெரிக்கா,. சோவியத் யூனியன் ஆகிய
நாடுகளுக்கிடையேயான ‘போர்க்கால உறவு’ (Wartime Alliance) முறிந்தது. ஐரோப்பா
இரண்டு அதிகார மண்டலங்களாக (Power Blocks)ப் பிரிந்தது. கிழக்கு ஐரோப்பா
ரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழும், மேற்கு ஐரோப்பா அமெரிக்காவின் செல்வாக்கின் கீழும்
வந்தன. அமெரிக்க – ரஷ்யப் **பனிப்போர்** (Cold War) துவங்கியது. உலக நாடுகள்
அமெரிக்கா அல்லது ரஷ்யா பக்கம் சாய வேண்டிய சூழ்நிலைக் கட்டாயம் ஏற்பட்டது. அதன்
விளைவாக அமெரிக்க அணி, ரஷ்ய அணி என்ற இரு அணிகள் உருவாயின. சுதந்திர
இந்தியா எந்த அணியில் சேருவது?

எந்த அணியில் சேர்வது அல்லது சேராமல் இருப்பது பற்றி நேரு தீர்க்கமாக
முடிவெடுத்தார். இந்தியாவின் பாதுகாப்புத் தேவைகளை மனதில் கொண்டு உலக
நாடுகளுடன் தொடர்பு கொள்வது பற்றிய இந்தியாவின் நிலையைத் தெளிவுபடுத்தினார்.
அதன் விளைவே கூட்டுச் சேராக் கொள்கையாகும். கூட்டுச் சேராக் கொள்கை என்றால்
எந்த ஒரு இராணுவ அணி (Military Alliance)யிலும் சேராதிருப்பதாகும். அதாவது
வெளியுறவுக் கொள்கை பின்வரும் மூன்று முன்தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:
1) பன்னாட்டுத் தொடர்புகளில் இந்தியா முனைப்புடன் பங்கேற்றல்; 2) ஒவ்வொரு
பன்னாட்டுப் பிரச்னையையும் அதன் தகுதி அடிப்படையில் மதிப்பீடு செய்தல்; 3)ஒவ்வொரு
சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் தேச நலனை மனதில் கொண்டு முடிவெடுத்தல்.
இதைத்தான் ‘**சுதந்திரமான தற்சார்பு வெளியுறவுக் கொள்கை**’ என்று
பொதுமைப்படுத்திக் கூறுகிறார் ஹென்றி கிசிஞ்சர்.

### 9.3.2 இரண்டு பக்கங்கள்

இந்திய கூட்டுச் சேராக் கொள்கைக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன: 1)
**எதிர்மறைப் பக்கம்** (Negative Side). அதாவது இந்தியா பனிப்போர், இராணுவக் கூட்டு,

பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதில் குறியாக இருந்தார். இராணுவப் பலத்தை விடப் பொருளாதார பலமே நாட்டுக்கு நல்லது என்பது நேருவின் நம்பிக்கையாக இருந்தது. இப்போரின் போது அமெரிக்காவும் ரஷ்யாவும் சீனாவை ஆதரிக்கவில்லை என்பது நேருவின் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். சீனா 'நம்பிக்கைத் துரோகம்' செய்து விட்டதாகக் கருதுகிறார் துர்க்காதாஸ். இந்தியா – சீனா போர் தேசப்பற்றைப் புதுப்பித்து நாட்டு ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் சசிதரூர். இப்போர் இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. இக்கண்ணோட்டத்துடன் பார்க்கையில் இந்தியா – சீனா போரில் சீனா வெற்றி பெற்றாலும் இந்தியா தோற்கவில்லை என்று கூறலாம்.

## 8.6 காமராஜர் திட்டம் (Kamaraj Plan)

சீன ஆக்கிரமிப்பு நேருவின் உடல் நிலையையும், மனநலத்தையும் பெரிதும் பாதித்தது. ஏமாற்றமுற்ற நேரு சோகச் சித்திரமானார். நாட்டு நலனை மனதில் கொண்டு இந்திய இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை எடுத்தார். அதேபோன்று நிர்வாகத்துக்கு ஆதாரமான காங்கிரஸ் அமைப்பைச் சீரமைக்க முற்பட்டார். காங்கிரசாரிடையே பதவிப்பித்தும் ஒழுங்கின்மையும் பெருகிவிட்டதால் காங்கிரசைப் பலப்படுத்த விரும்பினார். இதுபற்றி நேரு சென்னை மாநில முதலமைச்சரான காமராஜரைக் கலந்தாலோசித்தார். அந்த சந்திப்பு ஐதராபாத்தில் நடைபெற்றது.

மூத்த காங்கிரஸ் தலைவர்கள் நிர்வாகத்திலிருந்து நீங்கி கட்சிப் பணிகளைக் கவனித்தால் காங்கிரசைப் பலப்படுத்த முடியும் என்று காமராஜர் கருதினார். காமராஜரின் கருத்தை நேரு ஏற்றுக் கொண்டார். அதுவே காமராஜர் திட்டமாக உருவெடுத்தது. காமராஜர் திட்டத்தைக் காங்கிரஸ் கமிட்டியும் ஏற்றுக் கொண்டது (1963, ஆகஸ்ட் 10). காமராஜர் திட்டப்படி நேரு பிரதமர் பதவியைத் துறக்க முன்வந்தார். மத்திய அமைச்சர்களும் மாநில முதலமைச்சர்களும் பதவிகளை ராஜீனாமா செய்தனர். மத்திய அமைச்சர்களான மொரார்ஜி தேசாய், ஜெகஜீவன் ராம், லால்பகதூர் சாஸ்திரி, எஸ்.கே.பட்டீல், பி.கோபாலரெட்டி, கே.எல்.ஸ்ரீமாலி ஆகியோரின் ராஜீனாமாக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதேபோன்று மாநில முதலமைச்சர்களில் காமராஜர், பிஜு பட்நாயக், பக்க்ஷி குலாம் முகமது, பினோதாநந் ஜா, சி.பி.குப்தா, பி.எ.மன்ட்லோய் ஆகியோரின் ராஜினாமாக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பதவி விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என்பது காமராஜர் திட்டத்தின் சாரமாகும். அத்திட்டப்படி 6 மூத்த மத்திய அமைச்சர்களும், 6 மாநில முதலமைச்சர்களும் பதவி விலகினர். காமராஜர் திட்டம் நேருவின் சோஷலிசத் திட்டங்களில் ஆர்வம் இல்லாதவர்களை நீக்குவதற்கான உத்தி என்று கருதப்பட்டது. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களைக் கொண்டு கட்சிப் பணியை எவ்வாறு பலப்படுத்த முடியும்? கிராம அளவில் இவர்களால் என்ன செய்ய இயலும்? மேலும் கட்சியைப் பலப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த செயல் திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை. இது ஒரு 'பட்டாசுக் கத்தி வெட்டு' ஆகும். வேண்டாதவர்களை விலக்குவதற்கான சூழ்ச்சி. இந்திரா காந்தி பதவிக்கு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடே இது என்று பின்னர் கருத்து தெரிவித்தார் மொரார்ஜி தேசாய். காமராஜர் திட்டம் செயல்படுத்தப்பட்ட நான்கு மாதங்களுக்குள் லால் பகதூர் சாஸ்திரியை அமைச்சரவையில் இலாகா இல்லாத மந்திரியாக சேர்த்துக் கொண்டார் நேரு. நேருவின் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டார் சாஸ்திரி.

## 8.7 நேருவின் மறைவு

1964 ஜனவரி 9, 10 தேதிகளில் அகில இந்திய காரியக் கமிட்டி (AICC) 68–வது கூட்டம் புவனேஸ்வரத்தில் நடைபெற்றது. **காமராஜர் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.** புவனேஸ்வரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற நேரு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார். அவரால் கூட்ட நடவடிக்கைகளில் கலந்து கொள்ள முடியவில்லை. டில்லி திரும்பிய நேரு சில வாரங்களுக்குப் பிறகு செயல்பட துவங்கினார். நேருவுக்குப் பின் யார்? என்ற வினா எழுப்பப்பட்டது. நேரு அவரது அரசியல் வாரிசு பற்றி எதுவும் கூற மறுத்து விட்டார். மக்கள் அதை முடிவு செய்வர் என கூறிவிட்டார். எனினும் அவருக்கு நிர்வாக உதவி செய்ய லால் பகதூர் சாஸ்திரி நியமிக்கப்படுவதை ஆட்சேபிக்கவில்லை. எனவே, சாஸ்திரி இலாகா பொறுப்பில்லா அமைச்சராக இருந்து கொண்டு நேருவுக்கு அன்றாட நிர்வாகத்தை நடத்த உறுதுணையாக இருந்தார். 1964 மே மாதம் 22–ம் தேதி டேராடூன் சென்ற நேரு 26–ம் தேதி இரவு டெல்லி திரும்பினார். அவரது உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது. சுயநினைவிழந்தார். இந்திரா காந்தி, லால் பகதூர் சாஸ்திரி, குல்சாரிலால் நந்தா, டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் நேருவின் அருகே இருந்தனர். 1964 மே 27 ஆம் தேதி நேரு உயிர் நீத்தார். ஆசிய ஜோதி அணைந்தது. இந்திய வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிந்தது.

# 12. பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி 1964-1966

> உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
> அச்சாணி அன்னார் உடைத்து.
>
> – **திருக்குறள் (667)**

## 12.1 சிண்டிகேட் (The Syndicate)

நேரு இறந்தவுடன் குல்சாரிலால் நந்தா **தற்காலிகப்** பிரதமராகப் பொறுப்பேற்றார். எனினும் நேருவுக்கு அடுத்த பிரதமரை முறையாகத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. எனவே, காங்கிரஸ் தலைவராயிருந்த காமராஜர் ஒரு உட்குழுவை உருவாக்கினார். அக்குழுவில் அரசியல் செல்வாக்குமிக்க **மூத்த காங்கிரஸ்காரர்களான** காமராஜர் (சென்னை), அதுல்ய கோஷ் (மேற்கு வங்காளம்), எஸ்.கே.பட்டீல் (பம்பாய்), என்.சஞ்சீவ ரெட்டி (ஆந்திரா), எஸ்.நிஜலிங்கப்பா (மைசூர்) ஆகியோர் இடம் பெற்றனர். இந்த காங்கிரஸ் உட்குழு **'சிண்டிகேட்'** என்று அழைக்கப்பட்டது. அதன் நோக்கம் காங்கிரசுக்குக் கூட்டு தலைமைப் பொறுப்பேற்று, அடுத்த பிரதமர் யார் என்பதை முடிவு செய்வதாகும். இவர்களைப் **'பிராந்திய அதிகார–இடைத்தரகர்கள்'** (Regional Power-Brokers) என்று வர்ணித்துள்ளார் தாரிக் அலி.

பிரதமர் பதவிக்கு குல்சாரிலால் நந்தா, மொரார்ஜி தேசாய், லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. தற்காலிகப் பிரதமராயிருந்த நந்தா அவரே பிரதமராக நீடிக்க வேண்டுமென்று விரும்பினார். மொரார்ஜி தேசாய் மூத்த தலைவர் என்ற முறையில் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான வேட்பு மனு தாக்கல் செய்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி தேர்தல் மூலம் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்பவில்லை. பிரதமர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் சார்பாகப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு காங்கிரஸ் தலைவர் காமராஜரிடம் ஒப்படைக்கப்பட்டது. காமராஜர் காங்கிரஸ் தலைவர்களின் பொதுக் கருத்தறிந்து (Consensus) பிரதமர் பதவிக்கு **லால் பகதூர் சாஸ்திரியின்** பெயரைப் பரிந்துரைத்தார். அதை காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆமோதித்தது. அதை கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பணிந்து தனது வேட்பு மனுவை திரும்ப பெற்றுக் கொண்டார் மொரார்ஜி தேசாய். காங்கிரஸ் கட்சி பிளவு படுவது தவிர்க்கப்பட்டது. காங்கிரஸ் **'சிண்டிகேட்'** பொதுக்கருத்தறிந்து பிரதமரை முடிவு செய்யும் மரபை உருவாக்கியது. **1964 ஜூன் 2–ஆம் தேதி** லால் பகதூர் சாஸ்திரி போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேருவுக்குப் பின் பிரதமர் பதவிக்கு சாஸ்திரியைத் தேர்ந்தெடுப்பதற்கு காமராஜர் 'சிண்டிகேட்' கையாண்ட **'பொதுக்கருத்து விதிமுறை'** (Consensus Formula) காங்கிரஸ் கலாச்சாரத்தின் முன்மாதிரியாயிற்று. சாஸ்திரியைப் பிரதமராக்கியதன் மூலம்



காமராஜர் **'தலைவரைத் தீர்மானிப்பவர்'** (King-maker) ஆனார். கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவரே ஆட்சித் தலைவர் என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது. அதாவது கட்சித் தலைவர்களால் பிரதமர் பதவியைத் தீர்மானிக்க முடியும் என்பது உணர்த்தப்பட்டது. எனவே, பிரதமர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமின்றிக் கட்சித் தலைவர்களுக்கும் கட்டுப்படவேண்டும் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டது. அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றில் காங்கிரசின் செல்வாக்கு இருக்க வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. சுருங்கக் கூறின் காங்கிரஸ் கட்சியின் மேலாண்மைக்கு அடங்கியே காங்கிரஸ் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடும் எதிர்பார்ப்போடும் காங்கிரஸ் சிண்டிகேட் லால் பகதூர் சாஸ்திரியைப் பிரதமராக்கியது.

## 12.2. உழைப்பால் உயர்ந்தவர்

லால் பகதூர் சாஸ்திரி 1904 அக்டோபர் 2–ஆம் தேதி காசி நகரத்துக்கு அருகாமையில் **முகல்சராய்** என்ற ஊரில் பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தார். இளவயதில் தந்தையை இழந்த லால் பகதூர் தாய் மாமன் வீட்டில் தங்கிப் படித்தார். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார் (1920). தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்றதற்காகக் கைது செய்யப்பட்டார்(1921). காசி வித்யா பீடத்தில் நான்காண்டுகள் தத்துவப் பாடத்தில் தேர்ச்சி பெற்று 'சாஸ்திரி' பட்டம் பெற்றார்(1924). நாட்டுப் பற்றுமிக்க லால் பகதூர் சாஸ்திரி சமூக சேவையில் நாட்டங் கொண்டார். 'லோக் சேவா மண்டல்' என்ற அமைப்பில் சேர்ந்தார்(1926). 1927–இல் லலிதா தேவியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஆண்டே அலகாபாத் நகர சபைத் தலைவரானார்(1928).

லால் பகதூர் சாஸ்திரி அரசியல் மேடைப் பேச்சாளர். வரி கொடா இயக்கத்தின்போது அலகாபாத் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசிய குற்றத்துக்காக இரண்டரை ஆண்டுகால சிறை தண்டனை பெற்றார்(1930). பின்னர் அலகாபாத்தில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்(1936). ஜமீன்தாரி முறையின் சீர்கேடுகளை ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட காங்கிரஸ் குழுவின் அமைப்புச் செயலாளராகவும், உத்தரப் பிரதேச 'பார்லிமெண்ட் போர்டு' தலைவராகவும் பணியாற்றினார். பண்டித கோவிந்த வல்ல பந்த் உ.பி.யின் முதலமைச்சரான போது சாஸ்திரி அவரது அமைச்சரவையில் போலீஸ் மந்திரியானார்(1937). 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார்(1942). விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மொத்தம் 9 ஆண்டுகள் சிறைவாசம் செய்தவர் சாஸ்திரி!

இந்தியா விடுதலை அடைந்தபின் நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது லால் பகதூர் சாஸ்திரி பொதுச் செயலாளராக இருந்தார்(1950). 1951–இல் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினரானார். நேரு அமைச்சரவையில் இரயில்வே அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்(1952). இவரது பதவிக் காலத்தில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளிலும் மின்விசிறிகள், தூங்க வசதிகள், இடப்பதிவு வசதி முதலிய வசதிகள் செய்யப்பட்டன. சித்தரஞ்சன் இரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளம் முதலியன தொடங்கப்பட்டன. 1952–இல் அரியலூரில் நிகழ்ந்த இரயில் விபத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1957 நாடாளுமன்றத் தேர்தலில் அலகாபாத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் நேரு

அமைச்சரவையில் இடம் பெற்றார். வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சராகவும் (1957-58), உள்துறை அமைச்சராகவும் (1958–59) திறம்படப் பணியாற்றினார். பின்னர் காமராஜ் திட்டப்படி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட்டார்(1963).

நேரு நோய்வாய்ப்பட்டதால் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 'நடைமுறை பிரதமராக' (Defacto Prime Minister)ச் செயல்பட்டார். நேரு இறந்தபின் லால் பகதூர் சாஸ்திரி இந்தியாவின் இரண்டாவது பிரதமராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். நேருவின் குடும்பப் பின்னணியும், அவரின் ஆளுமையும், அவருக்குக் கட்சியின் மீதிருந்த கட்டுப்பாடும், சர்வதேச அந்தஸ்தும் சாஸ்திரிக்கு இல்லை. எனினும் வறுமையில் பிறந்து வறுமையில் வளர்ந்த சாதாரண மனிதர் தேசப் பற்றாலும், தியாகத்தாலும், உழைப்பாலும் உயர்ந்து நாட்டின் உன்னதமான உயர்பதவியைப் பெறமுடியும் என்பதற்கு லால் பகதூர் சாஸ்திரி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## 12.3 உறுதியான பிரதமர்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு பலவீனமான பிரதமராக இருப்பார், கட்சித் தலைமைக்கு கட்டுப்பட்டு நடப்பார், கூட்டுத் தலைமையின் கீழ் ஆட்சி செயல்படும் என்று சிண்டிகேட் தலைவர்கள் எதிர்பார்த்தனர். அவர்களைக் கலந்தாலோசித்தே சாஸ்திரி அரசாங்கத்தை நடத்துவார் என்று நம்பினர். ஆனால் சாஸ்திரி சிண்டிகேட்டின் கைப்பாவையாக இருக்க விரும்பவில்லை. அவர் பிரதமர் பதவிப் பொறுப்பேற்றவுடன் சுதந்திரத்துடன் செயல்படத் துவங்கினார். குட்டையான மனிதர் நெட்டையான முடிவுகளை எடுத்தார். பஞ்சுபோல் மிருதுவாகத் தோன்றினாலும் இரும்புபோல் உறுதியாக இருந்தார். பிரதமர் பதவி பற்றிய மயக்கமோ மருட்சியோ அவருக்கில்லை. பிரதமர் பொறுப்புக்களைப் பற்றி சாஸ்திரி தெளிவாக இருந்தார். அவரது பதவியின் பரிமாணங்களைப் பற்றி நன்கறிந்திருந்தார். நேர்மை, வாய்மை, தூய்மை ஆகியவற்றை வழிகாட்டிகளாகக் கொண்டு கடமையாற்றினார். பிரதமர் பொறுப்பேற்றவுடன் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றிய சாஸ்திரி மகாத்மா காந்திக்கும், பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் எழுப்பக்கூடிய பொருத்தமான நினைவுச் சின்னம் 'சுதந்திரமான சுபிட்சமான, வலிமையான இந்தியாவை நிர்மாணிப்பதாகும்' என்று குறிப்பிட்டார். அதன்படி 'நிலையில் திரியாது' நடந்து கொண்டார்.

## 12.4 சாஸ்திரியின் அமைச்சரவை

பொதுக்கருத்து அடிப்படையில் பிரதமரானார் லால் பகதூர் சாஸ்திரி. பிரதமர் சாஸ்திரி சுதந்திரமாகவும், துணிச்சலுடனும் அவரது அமைச்சரவையை அமைத்தார். பிரதமர் பதவிப் போட்டியில் தோல்வியுற்ற குல்சாரிலால் நந்தாவுக்கு அமைச்சரவையில் பிரதமருக்கு அடுத்த இடம் அளிக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் இடம் பெறவில்லை. இந்திரா காந்திக்கு வெளியுறவு இலாகாவைக் கொடுக்காமல் தகவல் தொடர்பு ஒலிபரப்பு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. இந்திரா காந்திக்கு வெளியுறவுத்துறை கொடுக்கப்பட்டிருந்தால் ரஷ்யர்களும் இடதுசாரிகளும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்திருப்பர். அரிஜனத் தலைவர் ஜெகஜீவன் ராமுவுக்கு சாஸ்திரியின் அமைச்சரவையில் இடம் தரவில்லை.

அமைச்சர்களைத் தேர்தெடுப்பதும் அவர்களுக்கு இலாகாக்களை ஒதுக்குவதும் பிரதமரின் சிறப்புரிமை என்ற நாடாளுமன்ற ஜனநாயக நெறியை நிலைநாட்டினார் லால்



பகதூர் சாஸ்திரி. இந்த விஷயத்தில் சாஸ்திரி சிண்டிகேட் தலைவர் காமராஜரைக் கலந்தாலோசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழுபேருக்கு சாஸ்திரி அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டது. டி.டி.கிருஷ்ணமாச்சாரியும், சி.சுப்பிரமணியமும் 'காபினட்' அமைச்சர்கள். ஓ.வி.அழகேசன் 'ராஜாங்க' அமைச்சர். எஸ்.வி.ராமசுவாமி, டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன், சி.ஆர். பட்டாபிராமன், மரகதம் சந்திரசேகர் ஆகிய நால்வரும் துணை அமைச்சர்கள்.

## 12.5. புதிய பொருளாதாரக் கொள்கை

### 12.5.1. பொருளாதார விளைவுகள்

லால் பகதூர் சாஸ்திரி நேரு வகுத்துக் கொடுத்த 'திட்டமிட்ட பொருளாதாரப் பாதை' யில் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டிருந்தார். சோஷலிசமே நமது குறிக்கோள் என்று முழங்கினார். எனினும், நேருவுக்கு சோஷலிச சித்தாந்தத்தில் இருந்த ஈர்ப்பும் ஈடுபாடும் சாஸ்திரிக்கு இல்லை. சாஸ்திரியின் உதடு 'சோஷலிசம்' என்ற சொல்லை உச்சரித்தாலும், அவரது உள்ளம் 'முதலாளித்துவ முறை' 'யில் உறைந்திருந்தது. நேரு ஒரு சிந்தனையாளர். சித்தாந்திர். மாறாக, சாஸ்திரி ஒரு யதார்த்தவாதி. காரியவாதி. நடைமுறை விளைவில் நாட்டம் கொண்டவர். நேரு தூரத்துக் கானகக் காட்சியைக் காண விரும்பியவர். ஆனால், லால் பகதூர் சாஸ்திரி மரங்களைப் பார்க்கத் துடித்தவர். எனவே, லால் பகதூர் சாஸ்திரி சித்தாந்தம் பேசுவதை விடுத்து வறுமை, விலைவாசி, வேலையின்மை, ஏழைகளின் ஏற்றம் பற்றிக் கவலைப்பட்டார். சுருங்கக் கூறின், சாஸ்திரி நேருவைப் போன்று 'சோஷலிச சமுதாய' த்துக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை.

நேருவின் ஆட்சிக்காலத்தில் ஆர்வத்துடன் நடைமுறைப் படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் எதிர்பார்த்த பொருளாதார விளைவுகளைத் தரவில்லை என்பதைக் கண்டார் சாஸ்திரி. எடுத்துக்காட்டாக, ஆண்டு நாட்டு வருமானம் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப உயரவில்லை. விலைவாசி குறையவில்லை. உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. மூன்றாவது திட்டகாலத்தில் சாதனைகள் இலக்குகளுக்கு (Targets) மிகவும் குறைவாக இருந்தன. நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் பயன்களும் திருப்திகரமாக இல்லை. பல திட்டங்கள் நிறைவடையாமல் நின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் அரசாங்க ஆதரவுடன் 'வெள்ளை யானைகளாக' வளர்ந்து வந்தன. அவற்றோடு வறுமையும் வேலையின்மையும் வளர்ந்தன.

### 12.5.2. கிராமப் பொருளாதாரம்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு முழுமையான காந்தியவாதி. அவர் காந்தியடிகளின் கிராமப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தில் நம்பிக்கை உடையவர். உண்மையான இந்தியா கிராமங்களில் உள்ளது என்ற யதார்த்தத்தை உணர்ந்தவர். அரக்க இயந்திரங்களைக் கொண்டு இந்தியாவைத் தொழில்மயமாக்குவதை விரும்பாதவர். வறுமையும் வேலையின்மையும் நிறைந்த நாட்டில் அதிக முதலீடு செய்து, குறைந்த தொழிலாளர்களைக் கொண்டு, காலதாமதமாகப் பயனைத்தரும் பொருளாதாரம் நல்லதல்ல என்று நினைத்தார். எந்திரங்களைக் கொண்டு எந்திரங்களை தயாரிப்பதற்கு முன்னுரிமை கொடுத்தார் நேரு. எந்திரங்களைக் கொண்டு நுகர்வோர் பொருள்களைத் தயாரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார் சாஸ்திரி. எனவே, குறைந்த முதலீட்டில் விரைந்த பயனளிக்கக் கூடிய, சிறிய, நடைமுறை சாத்தியமான திட்டங்களைக் கொண்டுவர விரும்பினார். அடித்தட்டு மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்க வேண்டியதன்

# பகுதி II

# இந்திரா சகாப்தம், 1966 - 1984

## 13. இந்திரா காந்தியின் ஆட்சி I 1966-1967

> சுதந்திர இந்தியாவில் அதிகாரப் பலமிக்க பிரதமர்
> இந்திரா காந்திதான்
>
> – காத்தரின் பிராங்க்

### 13.1. பிறப்பும், வளர்ப்பும்

இந்திரா பிரியதரிசினி 1917 நவம்பர் 19 ஆம் தேதி ஜவஹர்லால் நேருவுக்கும் கமலா நேருவுக்கும் மகளாகப் பிறந்தார். இந்திரா அலகாபாத்திலிருந்த மாடர்ன் பள்ளி–செயிண்ட் செசிலா பள்ளி–இல்லக் கல்வி–சுவிட்சர்லாந்து ஜெனீவா சர்வதேசப் பள்ளி (1926)–மீண்டும் அலகாபாத்தில் செயிண்ட் மேரி கான்வெண்ட் பள்ளி (1927)–பூனாவில் பரிசோதனைப் பள்ளி–சாந்திநிகேதன், பிரிட்டனில் பிரஸ்டல் பள்ளி(1935) பாட்மிட்டன் பள்ளி, ஆக்ஸ்போர்டு சாமர்வைல் கல்லூரி (1936) என்று பல்வேறு கல்வி நிலையங்களில் கல்வி கற்றார். இந்திரா இங்கிலாந்தில் மாணவியாக இருந்த போது வரலாற்றிலும்; மானிடவியலிலும் ஆர்வம் கொண்டார். தொழிற்கட்சியில் உறுப்பினரானார். சோஷலிச சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டார். இந்திரா பிரியதரிசினி முறையாகக் கற்றதை விட அவர் பெற்ற முறைசாராக் கல்வியே அதிகம். நேரு சிறையிலிருந்த போது இந்திராவுக்கு உலக வரலாறு பற்றி எழுதிய 200 கடிதங்களும் தந்தை மகளுக்குக் கொடுத்த அரிய அஞ்சல் கல்வியாகும். 1941 மார்ச் மாதம் இந்தியா திரும்பிய இந்திரா பிரியதரிசினி இலண்டனில் இருந்தபோது காதலித்த பெரோஸ் காந்தியைத் திருமணம் செய்து கொண்டார் (1942 மார்ச் 26). பெரோஸ் காந்தி சொராஸ்டரிய சமயத்தைச் சேர்ந்த பார்சி வகுப்பைச் சேர்ந்தவர். ‘காந்தி’ என்ற சிறப்புப் பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்ட பெரோஸ், மகாத்மா காந்திக்கு எந்த உறவும் இல்லை.

#### தந்தையும் மகளும்

இந்திராநேரு திருமணத்திற்குப் பிறகு இந்திரா காந்தி ஆனார். இந்திரா காந்தியும் பெரோஸ் காந்தியும் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றனர். விடுதலையானவுடன் தனிக்குடித்தனம் துவங்கினர். அவர்களுக்கு ராஜீவ் (1944 ஆகஸ்டு), சஞ்சய் (1946 டிசம்பர்) என்ற இரு மகன்கள் பிறந்தனர். இந்தியப் பிரிவினையின் விளைவாக டெல்லியில் வெடித்த இனக்கலவரத்தின் போது இந்திரா காந்தி மகாத்மா காந்தியின் தலைமையில் இன ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். கமலாவின் மறைவுக்குப் பின் (1936) நேரு டெல்லி தீன் மூர்த்தி இல்லத்தில் வாழ்ந்து வந்தார். இந்திரா காந்தி தன் தந்தையின் வேலைப் பளுவைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு தன் பிள்ளைகளோடு தீன் மூர்த்தி இல்லத்துக்கே வந்து விட்டார். தீன் மூர்த்தி இல்லத்தில் இந்திரா காந்தி தந்தை ஜவஹர்லால் நேருவுக்கு மூன்று வழிகளில் உதவியாக

இருந்தார். 1) வீட்டுப் பராமரிப்பு. வீட்டில் உபசரிப்பு, விருந்தோம்பல் பொறுப்பை ஏ கொண்டார் இந்திரா காந்தி. தீன் மூர்த்தி வீட்டுப் பராமரிப்பு நடவடிக்கைக மேற்பார்வை செய்தார். 2) வெளிநாட்டுப் பயணம், இந்திரா காந்தி தந்தை நேரு பிரிட்டன், சீனா, அமெரிக்கா, சோவியத் யூனியன், இந்தோனேஷியா போ நாடுகளுக்குச் சென்றார். வெளிநாட்டுப் பயணங்களின் போது பன்னாட்டுத் தலை மற்றும் பிரமுகர்கள் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ளவும், இராஜதந்திரக் பெறவும் வாய்ப்புகள் கிடைத்தன. 3) அரசியல் தொடர்பு. தீன் மூர்த்தி இ அரசியல்தேன் கூடாகத் திகழ்ந்தது. வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் பிரமுகர்களு தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் இந்திரா காந்திக்குக் கிடைத்தது. அவரது அ ஆர்வம் வளர்ந்த வண்ணம் இருந்தது.

## 13.2. அரசியல் அறிமுகம்

### காங்கிரஸ் தலைவர்

1938–லிருந்து காங்கிரஸ் உறுப்பினராக இருந்த இந்திரா காந்தி கா காரியக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1955). காங்கிரஸ் கட்சியின் பெ பிரிவிலும் ஆர்வத்துடன் பங்கேற்றார். அவரது ஆர்வத்தையும் முனை நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்த காங்கிரஸ், இந்திரா காந்தியை அதன் தேர்தல் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தது (1957). அடுத்த ஆண்டே அவர் நாடா போர்டின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1958). 1959–ஆம் ஆண்டு இ காந்தி அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருமதி குப்தா, டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், கவிக்குயில் சரோஜினி ஆகியோருக்குப்பின் அப்பதவிக்கு வந்த நான்காவது பெண் இந்திரா காந்தி ஆ

காங்கிரஸ் கட்சித் தலைவரான இந்திரா காந்தி, கம்யூனிஸ்ட் கட்சி கேர ஆட்சி செய்வதை விரும்பவில்லை. எனவே அவ்வாட்சியைக் கவிழ்க்கத் தீர்மானி கேரளாவில் பயணம் செய்தார் (1959). அம்மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட் யதேச்சதிகார ஆட்சி நடப்பதாகப் பிரச்சாரம் செய்தார். கம்யூனிஸ்ட் அரசா அறிமுகப்படுத்திய 'கல்வி மசோதா' இளைஞர்கள் மனதைக் கெடுப்பதா சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிப்பதாகவும் குறை கூறினார். கல்வி மசோத எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்திரா காந்தி குடியரசுத் தலை பிரதமரையும் சந்தித்துக் கேரளாவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதா கம்யூனிஸ்ட் அரசாங்கம் கலைக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தினார். உண் ஜனநாயகவாதியான நேரு ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அ கலைக்கக் கூடாது என்றார். பெரோஸ் காந்தி கேரள அரசுக் கவிழ்ப்பு முயற்சியை அ அதிர்ச்சி அடைந்தார். மறுப்பு தெரிவித்தார். ஆனால் காங்கிரஸ் தலைவர் இந்திரா பிடிவாதமாக இருந்தார். கேரளாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்து முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பூத்திரிபாட் கம்யூனிஸ்ட் அர கலைக்கப்பட்டது. அரசியல் ஆதாயத்திற்காக ஆட்சியை கலைப்பத முன்னுதாரணத்தை ஏற்படுத்தினார் இந்திரா காந்தி. இந்நிகழ்ச்சி 'பிற்கால அபாயகரமான அரசியல் ஒத்திகை' என்று குறிப்பிட்டுள்ளார் தாரிக் அலி. ப மாதங்கள் காங்கிரஸ் தலைவராக இருந்த இந்திரா காந்தி அப்பதவியில் நீடிக்க விட்டார். பெரோஸ் காந்தி மாரடைப்பால் மரணமடைந்தபின் (1960) இந்திரா அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்டார். இந்தியா முழுவதும் பயணம் செய்து கா



கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து இந்தியாவைப் பற்றி உரையாற்றினார். இந்திரா காந்தி நேருவின் ஆட்சிக் காலத்திலேயே தனக்கென ஒரு அரசியல் அடித்தளத்தை உறுதியாக அமைத்துக் கொண்டார்.

### அடுத்த பிரதமர்

நேருவுக்குப்பின் யார் அடுத்த பிரதமர் என்ற கேள்வி எழுந்த போது மொரார்ஜி தேசாய், குல்சாரிலால் நந்தா, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோருடன் இந்திரா காந்தியின் பெயரும் பரிசீலிக்கப்பட்டது. நேருவின் விருப்பத்தை நன்கறிந்த காங்கிரஸ் சிண்டிகேட் தலைவர் காமராஜர் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராவதற்கு வழி செய்தார். சாஸ்திரி இந்திரா காந்தியை செய்தி–ஒலிபரப்பு அமைச்சராகச் சேர்த்துக் கொண்டார். இந்திரா காந்தி அமைச்சர் பணியை அவருக்கே உரிய ஆர்வத்தோடும் அக்கறையோடும் திறமையோடும் செய்தார். நாள்தோறும் நேருவைப் போன்றே இந்திரா காந்தியும் அவர் வசித்த சப்தர்ஜங் ரோடு முதல் இல்லத்தில் பொதுமக்களைச் சந்தித்து வந்தார். அதன் மூலம் அவர் ஒரே சமயத்தில் கட்சி ஆட்சி–பொதுமக்கள் தொடர்பைப் பலப் படுத்திக் கொண்டிருந்தார். பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி கேட்டுக் கொண்டதன் பேரில் இந்திரா காந்தி 1964–இல் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இந்தியாவின் சார்பாக பிரான்ஸ், அமெரிக்கா, யூகோஸ்லாவியா, கனடா, மங்கோலியா, பர்மா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார். இந்திரா காந்தி பிரதமர் சாஸ்திரியின் சார்பாக இருமுறை மாஸ்கோ சென்று வந்தார். குருஷேவுக்குப் பின் வந்த ரஷ்யத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய முதல் வெளிநாட்டு அரசியல்வாதி இந்திரா காந்திதான். இந்திரா காந்தியின் அமைச்சர் பணியும், வெளிநாட்டுப் பயணங்களும் அவருடைய மதிப்பைக் காங்கிரசுக்குள்ளேயும் வெளியேயும் வெகுவாக உயர்த்தியது. இந்திரா காந்தி மக்கள் செல்வாக்குடைய தலைவராகத் திகழ்ந்தார். எனவே, 1966 ஜனவரி 10 ஆம்–தேதி பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கண்டில் அகால மரணமடைந்ததால் இந்திய அரசியலில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. இந்தியாவின் கவனம் இந்திரா காந்தியின் பக்கம் திரும்பியதில் வியப்பில்லை.

## 13.3. முதல் பெண் பிரதமர்

### 13.3.1. பதவிப் போட்டி

லால் பகதூர் சாஸ்திரியின் அகால மரணம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சாஸ்திரியின் உறுதியான தலைமையால் ஓரம் கட்டப்பட்டிருந்த காங்கிரஸ் சிண்டிகேட் தன் செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள முற்பட்டது. பிரதமர் பதவிக்குக் காமராஜர், மொரார்ஜி தேசாய், குல்சாரிலால் நந்தா, பட்டீல், சஞ்சீவ ரெட்டி, ஜெகஜீவன் ராம், இந்திரா காந்தி ஆகியோரின் பெயர்கள் பேசப்பட்டன. காமராஜருக்குப் பிரதமராக விருப்பமில்லை. குல்சாரிலால் நந்தா போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். ஜெகஜீவன் ராம் ஷெடியூல்டு வகுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை இந்திரா காந்திக்காகத் திரட்டத் துவங்கினார். துவக்கத்தில் தேசாயை ஆதரித்த விஜயலட்சுமி பண்டிட் பின்னர் இந்திரா காந்தி பக்கம் சாய்ந்தார். 'நேரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதமரானால் மக்கள் மகிழ்ச்சி அடைவர்' என்றார். காமராஜர் கடைசிவரை இந்திரா காந்தியைப் பிரதமராக்குவதில் குறியாக இருந்தார். மொரார்ஜி தேசாய் இம்முறை காமராஜரின் சாணக்கிய தந்திரத்தில் சிக்குவதில்லை என்று தீர்மானித்துப் பிரதமர் பதவிக்கான போட்டிக்குத் தயாரானார். இறுதியில் மொரார்ஜி தேசாயும் இந்திரா காந்தியும் பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டனர்.

# 15. நெருக்கடி நிலை, 1975–1977

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங்கெடும்

– திருக்குறள் (448)

### 15.1 முடிசூடா மகாராணி

இந்தியா–பாகிஸ்தான் போரில் (1971) மகத்தான வெற்றி பெற்ற பிரதமர் இந்திரா காந்தி முடிசூடா மகாராணியாகத் திகழ்ந்தார். காங்கிரஸ் கட்சியும், நாட்டின் ஆட்சியும் அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. இந்தியா இந்திரா காந்தியின் அதிகாரப் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தது. இந்திரா காந்தி எவ்வித எதிர்ப்புமின்றி அதிகாரப் பிரயோகம் செய்தார். ஜெகஜீவன் ராமுக்கு பதில் டி.சஞ்சீவய்யாவைக் காங்கிரஸ் தலைவராக நியமித்தார். எம்.எல்.சுகாதியாவுக்கு பதில் பர்க்கத்துல்லாகானை ராஜஸ்தான் முதலமைச்சராக்கினார். அதேபோன்று பிரம்மானந்த ரெட்டிக்கு பதில் பி.வி. நரசிம்மராவை ஆந்திரப் பிரதேச முதலமைச்சராக்கினார். தனக்கிருந்த வரம்பற்ற அதிகாரத்தைக் கொண்டு இமாச்சலப் பிரதேசம், மேகாலயா, திரிபுரா, மணிப்பூர் ஆகியவற்றுக்கு முழு மாநில அந்தஸ்து அளிக்க முடிவு செய்தார். பிரம்மானந்த ரெட்டியின் தனித் தெலிங்கானா கோரிக்கையும், மு.கருணாநிதியின் மாநில சுயாட்சிக் கோரிக்கையும் கைவிடப்பட்டன. இந்திரா காந்தி 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன், போன்று காட்சியளித்தார். இந்தியாவின் முடிசூடா மகாராணியாகத் திகழ்ந்த பிரதமர் இந்திரா காந்தி அசாதாரணத் துணிவுடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். பல்வேறு நடவடிக்கைகள் நிகழ்வதற்கும் காரணமாக இருந்தார்.

### 15.1.1. 26 வது சட்டத் திருத்தம்

இந்தியா–பாகிஸ்தான் போரை வென்ற "வீராங்கனை" பிரதமர் இந்திரா காந்தி புது அதிகார பலத்துடன் 1971 டிசம்பர் 31–ஆம் தேதி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 26–வது திருத்தத்தை நிறைவேற்றினார். அத்திருத்தத்தின் விளைவாக முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த மானியங்களும். உரிமைகளும், சலுகைகளும் நிறுத்தப்பட்டன. இச்சட்டத் திருத்தத்தின் மூலம் இந்திய அரசாங்கத்துக்கும் மாஜி மன்னர்களுக்குமிடையே இருந்த சட்டத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. மன்னர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்ற வாக்குறுதியின்பேரில் சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்தார் சர்தார் வல்லபாய் பட்டேல். அரசியலமைப்புச் சட்டத்தின் 29–வது சரத்தில் முன்னாள் மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சிறப்புச் சலுகைகளை உறுதியாகப் பின்பற்றினார் பண்டித ஜவகர்லால் நேரு. ஆனால் அரசியல் தர்மத்தைப் பற்றிக் கவலைப்படாத இந்திரா காந்தி மன்னர் மானியத்தை ஒரேயடியாக ஒழித்து விட்டார். அவர் அவ்வாறு செய்ததன் மூலம் தன்னுடைய வானளாவிய அதிகாரத்தை வெளிப்படுத்தினார்.



### 15.1.2 மிசா (Maintenance of Internal Security Act) 1971.

1971–ஆம் ஆண்டில் மிசா என்று அறியப்படும் **"உள்நாட்டுப் பாதுகாப்புக் காப்பாற்றுச் சட்டம்"** நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தைப் பிரயோகித்துக் காரணம் காட்டாமல் யாரையும் கைது செய்யலாம். காலவரையின்றிக் காவலில் வைக்கலாம். பாதுகாப்புத் தடுப்புச் சட்டமும் (Preventive Detention Act), இந்தியப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளும் (Defence of India Regulation) நடைமுறையில் இருக்கையில் இக்கடுமையான சட்டம் (Draconian Act) கொண்டுவரப்பட்டது. **அத்யாவசியப் பொருள்கள் சட்டம்** (Essential Commodities Act), பாதுகாப்புத் தடுப்புச் சட்டம் இந்தியப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் அரசாங்கத்துக்குப் போதிய அதிகாரங்களைக் கொடுத்திருந்தன. அவை போதாதென்று பிரதமர் இந்திரா காந்தி அவரது அதிகாரப் பாசறையில் "மிசா" என்ற கூராயுதத்தையும் சேர்த்துக் கொண்டார்.

பங்ளாதேஷ் போர் முடிந்த பின்னரும் போரின்போது பிறப்பிக்கப்பட்ட "உள்நாட்டு நெருக்கடிநிலைப் பிரகடனம்" விலக்கிக் கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்ல. 1971 மே மாதத்திலிருந்து 1972 ஜூன் 30–ஆம் தேதி வரை 6,000 பேர் மிசா வின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். "மிசா" பதுக்கல் காரர்களையும், கள்ளக்கடத்தல்காரர்களையும், வரி ஏய்ப்போரையும், சமூக விரோத சக்திகளையும் ஒடுக்கப் பிரயோகிக்கப்பட்டது. "மிசா" மற்றும் இந்தியப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளின் கீழ் சமூகக் குற்றவாளிகளும், அரசியல் விரும்பத்தகாதவர்களும் தண்டிக்கப்பட்டனர். பிரதமர் "மிசா" வைப் பிரயோகித்து அரசாங்கத்துக்கு வேண்டாதவர்களைத் தண்டித்தார் என்ற குற்றச் சாட்டுக்குள்ளானார்.

### 15.1.3. மாநிலங்களுக்குத் தேர்தல், 1972

பிரதமர் இந்திரா காந்தி பங்ளாதேஷ் போரின் நினைவு மக்களிடையே பசுமையாக இருக்கும்போதே மாநிலங்களின் சட்டப் பேரவைகளைக் கலைத்து விட்டு இடைத்தேர்தல் நடத்த முடிவு செய்தார். சூழ்நிலை அவருக்குச் சாதகமாகவே இருந்தது. பங்ளாதேஷ் விடுதலைக் காற்றுள்ளபோதே துற்றிக் கொள்ளத் துணிந்தார். 1965 இல் நடைபெற்ற போரில் இந்தியா பாகிஸ்தானை வென்றபோது மாநிலங்களுக்கு இடைத்தேர்தலை நடத்திவிட வேண்டும் என்று காமராஜர் வற்புறுத்தினார். ஆனால் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அதற்கு இணங்கவில்லை. அது நியாயமில்லை என்று மறுத்து விட்டார். ஆனால் பிரதமர் இந்திரா காந்தி மாநிலங்களில் அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வர இடைத்தேர்தல் இன்றியமையாதது என்று கருதினார்.

1972 மார்ச் மாதம் நடைபெற்ற இடைத்தேர்தலில் இந்திரா காந்தி எதிர்பார்த்ததைப் போன்று காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது. காங்கிரஸ் ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், குஜராத், அரியானா, இமாச்சலப் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், மைசூர், பஞ்சாப், ராஜஸ்தான், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மகத்தான வெற்றியைப் பெற்றது. கோவா, மணிப்பூர், மேகாலயா ஆகிய பகுதிகளில் மட்டுமே காங்கிரசுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. மொத்தம் 2,722 இடங்களில் 1,926 இடங்கள் (71%) இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்தன. இந்திரா காந்தியின் கரம் மேலும் உயர்ந்தது.

### 15.1.4. கட்சிக் கட்டுப்பாடு

இந்திரா காங்கிரஸ் பிளவுபடாத காங்கிரஸ் இருந்த நிலைக்கே திரும்பிக் கொண்டிருந்தது. கட்சிக் கட்டுப்பாடின்மையும், உட்கட்சிப் பூசலும், பதவிப் போட்டியும்

பெருகின. அஸ்ஸாம், பீகார், குஜராத், இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மைசூர், ஒரிசா, திரிபுரா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் காங்கிரஸ் உட்கட்சிப் பூசல் வெளிப்படையாக வெடித்தது. காங்கிரஸ்காரர்களிடையே பொது நலனை விடச் சுயநலமே மேலோங்கி இருந்தது. சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இருந்த இடைவெளி மிக அதிகம். முற்போக்குவாதிகளால் ஆதரிக்கப்பட்ட காங்கிரஸ் சோஷலிச செயலமைப்பு (Congress Forum of Socialist Action) ம், ஜெகஜீவன் ராமின் பக்க பலத்தோடு செயல்பட்ட நேரு ஆய்வு மைய (Nehru Study Forum)–மும் ஒவ்வொரு விஷயத்திலும் மோதிக் கொண்டிருந்தன. இந்திரா காந்தி இரும்புக்கரம் கொண்டு 1972 இறுதியில் இவ்விரு கோஷ்டிகளின் பிணக்குகளுக்கு முடிவு கட்டினார். அவ்விரு அமைப்புகளும் கலைக்கப்பட்டன. இந்திரா காங்கிரசில் உட்கட்சிக் கட்டுப்பாடு உறுதியாக நிலைநாட்டப்பட்டது. இந்திரா காந்தி கட்சிக்கும் ஆட்சிக்கும் இன்றியமையாதவராகக் கருதப்பட்டார். கட்சியைப் பலவீனப்படுத்தித் தன் கரங்களை பலப்படுத்திக் கொண்டார்.

### 15.1.5. பொருளாதாரப் பலவீனம்

''வறுமையை ஒழிப்போம்'' என்ற கோஷத்தை எழுப்பி அரசியல் ஏற்றம் பெற்ற பிரதமர் இந்திரா காந்தி வறுமையையும் வேலையின்மையையும் ஒழித்து விடுவார் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அரசியல் முனையில் தன்னிகரில்லாத் தலைவராகத் திகழ்ந்த இந்திரா காந்தி பொருளாதார முனையில் பலவீனமாகக் காணப்பட்டார். விடுதலையின் வெள்ளி விழா கண்ட இந்தியாவின் பொருளாதார அடிப்படை தள்ளாடிக் கொண்டிருந்தது. இந்தியப் பொருளாதாரப் பின்னடைவுக்கு இனிமேலும் சிண்டிகேட், அதிகாரவர்க்கம், தொழிலதிபர்கள், பங்ளாதேஷ் போர் போன்ற காரணங்களைக் கூறிக் கொண்டிருக்க முடியாத சூழ்நிலைக் கட்டாயம் ஏற்பட்டது.

இந்திரா காந்தி அரசாங்கம் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தீர்க்கமான திட்டங்களையோ நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை. 1972–73 மற்றும் 1973–74 வரவு–செலவுத் திட்டங்கள் பொருளாதாரச் சிக்கல்களுக்குப் பழைய தீர்வையே புதிய மருந்தாகக் கொடுத்தன. மறைமுக வரிகளை அதிகரித்து நிர்வாக செலவைச் சரிக்கட்டும் போக்கு புண்ணுக்குப் புணுகு தடவும் சிகிச்சையாகவே இருந்தது. பொருள் உற்பத்தி ஊக்குவிக்கப்படவில்லை. தொழில் மூலதனம் தூண்டப்படவில்லை. பொதுத்துறை நிறுவனங்கள் பொது மக்களின் வரிப்பணத்தை விழுங்கிக் கொண்டு ''வெள்ளையானை''களாக (White Elephants) வளர்ந்து கொண்டிருந்தன. சோஷலிசத்தின் பெயரால் தனியார் துறை நிறுவனங்கள் முடமாகிக் கொண்டிருந்தன. விளைவு? பணவீக்கத்தால் விலைவாசி விஷம் போல் ஏறியது. 1973 மார்ச் மாத இறுதியில் விலைவாசி முந்தைய ஆண்டை விட 15 விழுக்காடு அதிகரித்தது. அதன்பின் ஒவ்வொரு ஆண்டும் 2 விழுக்காடு உயரத் துவங்கியது.

வான் பொய்த்ததால் உணவுப் பொருள் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. உணவுத் தட்டுப்பாட்டைக் குறைக்கக் கோதுமை மொத்த வர்த்தகத்தை அரசாங்கம் மேற்கொண்டது. உணவுப் பற்றாக்குறைச் சிக்கல் அதிகரித்ததேயன்றி குறையவில்லை. மின்சாரத் தட்டுப்பாடு தொழில் உற்பத்தியைப் பாதித்தது. பொதுத்துறை நிறுவனங்களின் திறமையற்ற நிர்வாகம், பொருள் போக்குவரத்துத் தட்டுப்பாடு, மூலப் பொருள் பற்றாக்குறை, உணவுப் பொருள் உற்பத்தி சரிவு, தொழிலாளர் வேலை நிறுத்தம், மாணவர்கள் கிளர்ச்சி போன்ற பல்வேறு காரணங்களால் தொழில் சக்கரச் சுழற்சி தடைப்பட்டது. தொழில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அவசரமாக மேற்கொள்ளப்பட்ட



குறுகிய கால நடவடிக்கைகளால் பொருளாதார நோயைக் குணப்படுத்த முடியவில்லை. இந்திரா காந்தி அரசாங்கத்தின் பொருளாதார சிந்தனைக் குழப்பம் ஐந்தாவது திட்டத்தைத் தாயரிப்பதில் பிரதிபலித்தது.

இந்தியா பொருளாதாரப் பள்ளத்தில் விழுந்தபோதெல்லாம் அமெரிக்க முதலுதவியை நாடுவது வழக்கமாகிவிட்டதால், இந்திரா காந்தி அரசாங்கம் அமெரிக்காவின் தயவை நாடியது. பங்ளாதேஷ் போரின் போது நிறுத்திய இந்தியப் பொருளாதார உதவியைப் புதுப்பிக்க அமெரிக்கா இணங்கியது. அமெரிக்கா 876 மில்லியன் டாலரை உடனடி வளர்ச்சிக் கடனாக வழங்கியது. பி.எல். 480 உடன்பாட்டின்படி பலதரப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்காக 2,218.6 மில்லியன் டாலர் கொடுக்க அமெரிக்கா சம்மதித்தது. காலத்தே அமெரிக்கா செய்த உதவி மூச்சுத் திணறிக் கொண்டிருந்த இந்தியாவுக்குப் பிராண வாயு கொடுத்ததைப் போன்று இருந்தது. அதே போன்று, இந்தியா சோவியத் ரஷ்யாவுடன் செய்து கொண்ட நீண்டகால வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவுக்குக் கை கொடுத்தது. எனினும் இந்நடவடிக்கைகளால் பொருளாதாரச் சரிவைத் தடுக்க முடியவில்லை. சுருங்கக் கூறின், 1973 இறுதியில் பிரதமர் இந்திரா காந்தியின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தெளிவாகவே தெரிந்தன.

### 15.1.6. ஊழல் குற்றச் சாட்டுகள்

#### உயர்மட்ட ஊழல்

இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. குறிப்பாக 'உயர்மட்ட ஊழல்' பற்றிய புகார்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டன. பொறுப்புமிக்க பீகார் ஆளுநர் ஆர்.டி. பந்தாரே 4 அமைச்சர்கள் மற்றும் 11 அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் பற்றிய ஆவண ஆதாரங்கள் உள்ளதாகக் கூறினார். பிற மாநில ஆளுநர்களும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய அறிக்கைகளில் உயர்மட்ட ஊழல்கள் பற்றிக் குறிப்பிட்டனர். பிரதமர் இந்திரா காந்தி 1972–ல் மாநிலங்கள் இடைத் தேர்தலுக்காக ரூ.200 மில்லியன் சட்டத்திற்குப் புறம்பாகச் சேர்த்ததாக வெளிப்படையாகப் புகார் கூறப்பட்டது. பாரத் சேவக் சமாஜின் 15 பகுதி அறிக்கை எவ்வாறு கோடிக்கணக்கான ரூபாய் சரியான கணக்கு வைப்பின்றி வீணடிக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்தியது. எனினும், இந்திரா காந்தி இப்புகார்கள் பற்றி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கக்கூட முன்வரவில்லை. அதுமட்டுமல்ல. அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீது கூறப்படும் ஊழல் புகார்களை விசாரிப்பதற்கான லோக் பால் (Lok Pal) மசோதாவையும் முடக்கி விட்டார். அதன் விளைவாக இந்திரா காந்தி உயர்மட்ட ஊழலுக்கு உறுதுணையாக உள்ளார் என்ற எண்ணம் மக்களிடையே பரவலாயிற்று,

#### நகர்வாலா வழக்கு

நகர்வாலா (Rustom Shortab Nagarwala) என்பவர் இந்திரா காந்தி மற்றும் அவரது செயலாளர் ஹக்சார் குரல்களில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு புதுடெல்லியிலிருந்த இந்திய ஸ்டேட் வங்கியின் தலைமைக் கணக்கர் வேத் பிரகாஷ் மல்கோத்ராவிடமிருந்து பங்ளாதேஷ் போர்ச் செலவுக்கென்று ஆறு மில்லியன் ரூபாய் பெற்றுக் கொண்டார். அவர் 1971 மே 24–ஆம் தேதி கைது செய்யப்பட்டு, கீழ்க்கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டார். நகர்வாலா 'வங்கித் திருட்டு' வழக்கை விசாரித்த போலீஸ் அதிகாரி காஷ்யப் மாரடைப்பால் மாண்டார். அந்த வழக்கை விசாரித்த மற்றொரு போலீஸ் அதிகாரி சாலை விபத்தில் பலியானார். நகர்வாலா வழக்கை மறுவிசாரணை செய்த மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதி கீழ்க்கோர்ட்டில் 'நீதிக் கருச்சிதைவு' (Miscaviage

of justice) நடந்து விட்டதாகத் தீர்ப்பளித்தார். அவ்வழக்கு மேல் விசாரணைக்கு வந்த
அந்த சமயத்தில் நகர்வாலா சிறைக்காவலில் மாரடைப்பால் மாண்டார் என்
அறிவிக்கப்பட்டது (1972 மார்ச் 2). பிரதமர் இந்திரா காந்தியை சம்மந்தப்படுத்தி
நகர்வாலா 'மர்ம வழக்கு' அவரது நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியது.

**மாருதி கார் திட்டப்பிரச்னை**

இந்திரா காந்தியின் இரண்டாவது மகன் **சஞ்சய் காந்தி** (Sanjay Gandhi
அரியானாவில் இரண்டு சிறிய மோட்டார் கொட்டில்களில் **'மாருதி கார்'** தயாரிக்கும்
திட்டத்தைத் துவக்கினார். பங்ளாதேஷ் போர் முடிந்தபின் மாருதி கார் கொட்டிலைப் பெரி
தொழிற்சாலையாக விரிவுபடுத்த விரும்பினார். அரியானா முதலமைச்சர் பன்சிலால்
சஞ்சய் காந்திக்கு உறுதுணையாக இருந்தார். அரியானா இராணுவத் தளத்துக்
அருகாமையில் 'தடை செய்யப்பட்ட பகுதி' யில் மிகவும் மலிவான விலைக்குத் தேவையா
நிலத்தை ஆர்ஜிதப்படுத்திக் கொடுத்தார். இராணுவத் தளமும் வேறு இடத்துக்கு
மாற்றப்பட்டது. சஞ்சய் காந்தி தொழிற்சாலைக்குத் தேவைப்பட்ட பெருந்தொகை
நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார். எனினும் மாருதி
கார் திட்டம் வெற்றி பெறவில்லை. மாருதிகார் திட்டம் பற்றிய பிரச்னை நாடாளுமன்றத்தில்
கடுமையாகக் கண்டிக்கப்பட்டது. அத்திட்டத்தின் முறைகேடுகள் விவாதத்து
குள்ளாயிற்று.

மாருதிகார் திட்டம் **'வெளிப்படையான உறவுச் சலுகை'** என்று கு
கூறப்பட்டது. இத்திட்டம் **'இந்திராவின் வாட்டர்கேட்'** (Indira's Watergate) என்
பத்திரிகைகளால் வர்ணிக்கப்பட்டது. சஞ்சய் காந்தி இந்திரா காந்தியின் கழுத்தி
கட்டப்பட்ட குழவிக்கல் ஆனார். "இந்திரா காந்தியின் அகந்தை அதிகரித்தது... சஞ்சய்
காந்தி அவரை ஆக்கிரமித்திருந்தார். இந்திரா காந்திக்கு சஞ்சய் காந்தியைத் தவிர வே
எவர் மீதும் பொறுமையில்லை... பங்ளாதேஷ் போருக்குப் பின் இந்திரா காந்தி சமநிலை
இழந்து விட்டார். சஞ்சய் காந்தி இன்றேல் இந்திரா காந்தி புகழ்மிக்கப் பிரதமராக
திகழ்ந்திருப்பார்" என்று கூறினார் பிரதமரின் முன்னாள் தனிச் செயலர் என்.கே.சேஷன்

### 15.1.7. நீதிபதி நியமனப் பிரச்னை, 1973

பணிமூப்புக்கு முன்னுரிமை கொடுத்து நீதிபதிகளை நியமிப்பது நிர்வாக மரபா
இருந்தது. அம்மரபை மீறி முதன் முறையாக **அஜித் நாத்ரே** (Ajit Nath Ray) உச்ச
நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படக் காரணமாக இருந்தார் இந்திரா காந்தி
பணிமூப்பு முன்னுரிமையுடைய திறமையான ஜே.எம்.ஷெலாட், கே.எஸ். ஹெக்டே
ஏ.என்.குரோவர் ஆகிய மூன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளை ஒதுக்கிவிட்டு
நியமிக்கப்பட்டார். பிரதமர் இந்திரா காந்தி குடியரசுத் தலைவர் வி.வி.கிரியை
கருவியாகக் கொண்டு அஜித் நாத் ரேயை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியா
நியமித்ததாகப் பத்திரிகை உலகு கருதியது. இந்நியமனம் பழிவாங்கும் நடவடிக்கை என்
இந்திய "பார் கவுன்சில்கள்" கண்டனம் செய்தன. நீதித்துறை சுதந்திர
பறிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது. இந்திரா காந்தியின் யதேச்சதிகாரத்துக்கு எதி
நீதித்துறையின் ஒருமித்த எதிர்ப்பு எழுந்தது. 1773 மே மாதம் 3–ஆம் தேதி 'நீதித்து
ஒற்றுமை நாளா' (Bar Subdarity Day)கக் கொண்டாடப்பட்டது. பணி ஒய்வு பெற்ற
நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.எம். சிக்ரி, ரேயின் நியமனம் 'நீதித்துறை சுதந்திரத்
மீது விழுந்த இடி' யாகும், என்று குறிப்பிட்டார். நீதித்துறையின் சுதந்திரத்தை
மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமாயின் பணிமூப்புடைய புறக்கணிக்க



மூன்று நீதிபதிகளும் மறுநியமனம் செய்யப்படுவதே நியாயம் என்று மாநிலங்கள்
அவையில் எதிர்க்கட்சிகள் வாதாடின. "சுதந்திர இந்தியாவின் இருபத்தைந்தாண்டு கால
வாழ்வில் முதன் முறையாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நீதித் துறையில் இயற்கைக்கு
விரோதமான அசாதாரணமான சூழ்நிலை உருவாக்கப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார்
குர்யே.

## 15.2. நெருக்கடி நிலைக்கான சூழ்நிலைகள்

### 15.2.1. கிளர்ச்சிக் காடு

1974–ஆம் ஆண்டு அமைதியின்மையும், போராட்டங்களும், சட்டச் சீர்குலைவும் நிறைந்த ஆண்டு ஆகும். நாட்டின் பொருளாதார நிலை கவலைக்குரியதாக இருந்தது. வெள்ளமும் பஞ்சமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. விலைவாசிகள் உயர்ந்த வண்ணம் இருந்தன. அத்யாவசியப் பொருள்கள் பற்றாக்குறை மக்களின் அன்றாட வாழ்க்கையை வெகுவாகப் பாதித்தது. கடைக்குச் செல்வது கவலைக்குரிய விஷயமாயிற்று. 1974–ஆம் ஆண்டில் அந்நியக் கடன் பாக்கி 2,000 மில்லியன் டாலராக இருந்தது. அது இந்தியா பெற்ற நிகர அந்நிய உதவியைவிட அதிகம். நகர்ப்புறத் தொழிலாளர்கள் அமைதி இழந்து வந்தனர். வேலையின்மைப் பிரச்னையால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல்லூரி பல்கலைக்கழக மாணவர்கள் பொறுமை இழந்தனர். 1972 ஆகஸ்டு–செப்டம்பரில் தொற்று நோய் போன்று தோன்றிய தொழிலாளர் வேலை நிறுத்தங்களும், மாணவர் ஆர்ப்பாட்டங்களும் 1974–இல் கொள்ளை நோய் போலாயிற்று. சுருங்கக்கூறின், 1974–ஆம் ஆண்டில் இந்தியா கிளர்ச்சிக் காடாகக் காட்சியளித்தது.

### 15.2.2. குஜராத் கிளர்ச்சி, 1974

1974 பிப்ரவரி மாதம் குஜராத்தில் தோன்றிய கலவரம் நாட்டின் கவனத்தைக் கவர்ந்தது. நீருபூத்த நெருப்பாக இருந்த மக்களின் மனக்கொதிப்பு குஜராத்தில் கொந்தளிப்பாக உருவெடுத்தது. குஜராத்தின் 60 மில்லியன் மக்களில் ஐந்தில் நான்கு பேர் எழுத்தறிவற்றோர்; மூன்றில் இரண்டு பேர் வறுமையில் வாடினர்; ஐம்பது விழுக்காட்டுக்கு மேல் நிலமற்றோர்; பணவீக்கம் முப்பது விழுக்காடாக உயர்ந்தது. இரண்டாண்டுகளாக தொடர்ந்து பஞ்சம் நீடித்தது. குஜராத் முதலமைச்சராயிருந்த சிமன்பாய் பட்டேலின் மக்கள் விரோதப்போக்கு கலவரத்துக்குக் காரணமாயிற்று. முதலமைச்சர் பட்டேலின் யதேச்சதிகாரப் போக்கும், ஊழல் நடவடிக்கைகளும் உணவுப் பொருள்கள் பற்றாக்குறையும், விலைவாசி உயர்வும் கலவரத்துக்கான இடு பொருள்களாயின.

குஜராத் கலவரத்தை மாணவர்கள் துவக்கினர். ஒரு பொறியியல் கல்லூரியில் உணவுக் கட்டண உயர்வை எதிர்த்து மாணவர்களால் துவக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மக்கள் இயக்கமாக விரிவடைந்தது. குறைகள் களையப்படாமையால் மாணவர்கள் குஜராத் மாநிலம் முழுவதும் **'இளைஞர் எழுச்சிக் குழுக்கள்'** (Niman Yuvak Samithis) அமைத்தனர். இளைஞர் முன்னேற்றக் குழுக்கள் **'நவநிர்மாண் இயக்க'**த்தின் உந்தீட்டிகளாயின. குஜராத் முதலமைச்சர் பதவி விலகவேண்டும், சட்டப் பேரவை கலைக்கப்பட வேண்டும், சட்டமன்றத்துக்கு மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி மக்கள் கிளர்ச்சி செய்தனர். கலவரம் காட்டுத் தீ போல் பரவியது.

ஜெயப்பிரகாஷ் நாராயண் குஜராத் கிளர்ச்சியை ஆதரித்தார். இந்திய இளைஞர்கள் குஜராத்தை முன் மாதிரியாகக் கொண்டு நாடு தழுவிய புரட்சியைத் துவக்க

வேண்டும் என்றார் மொரார்ஜி தேசாய். குஜராத் கிளர்ச்சியை ஆதரித்தும், முதலமைச் சிமன்பாய் பட்டேலின் காங்கிரஸ் அமைச்சரவை கலைக்கப்பட வேண்டும் என்று கோரி புதுடெல்லியில் சாகும் வரை அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார். இந்திரா கா வேறு வழியின்றி குஜராத் முதலமைச்சரைப் பதவி விலகச் செய்து, சட்டப் பேரவை கலைத்து, அம்மாநிலத்தைக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந் தேசாய் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். அமைச்சரவை கலைக்கப்பட்டவுடன் சட் பேரவைக்குத் தேர்தல் நடத்தக்கோரி மற்றொரு உண்ணா விரதம் மேற்கொண் தேசாய். மறுதேர்தல் நடத்தப்பட்டது ! குஜராத் கிளர்ச்சி, கட்சித் தாவல் இன்றியே மா முதலமைச்சரைப் பதவி விலகச் செய்யலாம், சட்டப் பேரவையைக் கலைக்கச் செய்து தேர்தலுக்கு வழி வகுக்கலாம் என்ற பாடத்தைக் கற்றுக் கொடுத்தது. அப்பாடத் கற்று பீகார் குஜராத் வழி சென்றது.

### 15.2.3. ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், 1974

1974 மே மாதம் நாட்டில் நிலவிய அமைதியின்மையைத் தங்களுக் சாதகமாக்கிக் கொண்டு ரயில்வே ஊழியர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்த இறங்கினர். ரயில்வே ஊழியர்கள் சங்கத் தலைவராயிருந்த **ஜார்ஜ் பெர்னாண்டஸ்** உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும் வரை காலவரையற்ற வே நிறுத்தத்தைத் துவக்கினார். பிரதமர் இந்திரா காந்தி ரயில்வே தொழிலாளர்களின் வே நிறுத்தத்தை இரும்புக் கரம் கொண்டு முறியடித்தார். ஜார்ஜ் பெர்னாண்டஸ் உள் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். 10,000 தொழிலாளர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களது குடும்பங்கள் அரசாங்கக் குடியி புகளிலிருந்து வெளியேற்றப்பட்டன. இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்குப் ப முறிவு ஏற்பட்டு அதன் விளைவாக ஓய்வூதியம் மற்றும் பிற சலுகைகளை இழக் நிலையில் இருந்தனர். இராணுவத்தின் உதவியோடு ரயில்வே தொழிலாளர் வே நிறுத்தம் ஒடுக்கப்பட்டது. "இந்திரா காந்தி இரக்கமின்மையின் உச்ச கட்டத்துக் சென்றுவிட்டார்" என்று குறிப்பிட்டுள்ளார் பூபுல் ஜெயகர்." குஜராத் கிளர்ச்சியின் போ மாணவர்களையும் மக்களையும் பகைத்துக் கொண்ட இந்திரா காந்தி ரயில் ஊழியர்களின் விரோதத்தைத் தேடிக் கொண்டார். இந்த வேலை நிறுத்தத்தின் போ தான் போக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது. அந்த சத்தத்தில் ரயில் வேலை நிறுத்தம் மறந்து போயிற்று என்று கூறுகிறார் கே.பிராங்க் (K. Frank).

### 15.2.4. பீகார் கிளர்ச்சி, 1974

குஜராத் கிளர்ச்சி, ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் தொட 1974 ஜூன் மாதம் பீகார் கிளர்ச்சி துவக்கப்பட்டது. பீகார் கிளர்ச்சிக்கு ஜெயப்பிரகா **நாராயண் தலைமை தாங்கினார்.** குஜராத்தில் ஊழல் ஆட்சியை அகற்றியதைப் போ பீகாரிலும் நிகழ வேண்டியது இன்றியமையாதது என்று கருதினார். நாட்டில் உண பற்றாக்குறை; வேலையில்லாத் திண்டாட்டம்; கட்டுக் கடங்கா விலைவாசி உய பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு; உயர்நிலை ஊழல்; கலவரம்; கிள வேலை நிறுத்தம்; நாசவேலை; அமைதியின்மை; சட்டச்சீர்குலைவு போன்ற எதி விளைவுகள் பிரதமர் இந்திரா காந்தி விதைத்த விதைகளின் விளைச்சல் என ஜெயப்பிரகாஷ் நாராயணின் கணிப்பாகும். எனவே, இந்தியப் புரட்சியின் துவக்க பீகார் கிளர்ச்சியைத் துவக்கினார்..



பீகார் கிளர்ச்சி குஜராத் கிளர்ச்சியைப் போலன்றி வன்முறையாக உருவெடுத்தது. போலீஸ் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தடியடிப் பிரயோகம்.. கண்ணீர்க் குண்டு வெடிப்பு.. கைது செய்தல்... சிறையிலடைத்தல்.. பிரமாண்டமான ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஜெயப்பிரகாஷ் நாராயண் போலீஸ் தாக்குதலிலிருந்து தப்பினார். 1974 ஜூன் 5–ஆம் தேதி பாட்னாவில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் முழங்கிய ஜெயப்பிரகாஷ் நாராயண் ஊழலின் உரைவிடமான பீகார் அமைச்சரவை நீக்கப்பட்டு சட்டப்பேரவை கலைக்கப்பட வேண்டும் என்று கோரினார். அக்கூட்டத்தில்தான் ஜெயப்பிரகாஷ் நாராயண் **'முழுப்புரட்சி'** (Total Revolution) பற்றி பேசினார்.

நாட்டு நலனில் அக்கறை கொண்ட மக்களால் மிகவும் மரியாதையோடு மதிக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரரும், காந்தியவாதியுமான **அச்யுத் பட்வர்த்தன்** புரட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கும், பிரதமர் இந்திரா காந்திக்குமிடையே சமரசம் செய்ய முயன்றார். அவரது முயற்சியின் விளைவாக இரு தலைவர்களும் 1974 நவம்பர் மாதம் சந்தித்துப் பேசினர். இருசாராரும் தங்களது நிலைகளை விட்டுக் கொடுக்காமையால் அப்பேச்சு வார்த்தை தோல்வியுற்றது. பீகாரில் துவக்கப்பட்ட 'முழுப்புரட்சி' இந்திய மக்கள் இயக்கமாக விரிவடைந்தது.

### 15.2.5. ஜெயப்பிரகாஷ் நாராயண் (1902–1979)

ஜெயப்பிரகாஷ் நாராயண் (ஜே.பி.) 1902 அக்டோபர் 11–ஆம் தேதி பீகார் மாநிலத்தில் சீதாப்தியாரா என்ற கிராமத்தில் ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே அளவுக்கு மீறிய அறிவாற்றலைப் பெற்றிருந்த ஜே.பி.பாட்னா கல்லூரிப் பள்ளியில் பயின்றார். பள்ளிப் பருவத்திலேயே பாட்னாவில் தேசிய அரசியல் மையமாக விளங்கிய சரஸ்வதி பவன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். 1920 மே 16 ஆம் தேதி ஜே.பி. பிரபாவதியைத் திருமணம் செய்து கொண்டார்.

1922 அக்டோபர் 8–ஆம் தேதி ஜே.பி. அமெரிக்கா சென்றார். அங்கு பகுதி நேர வேலை செய்து சம்பாதித்து கலிபோர்னிய, ஐயோவா, சிக்காகோ, ஒஹியோ பல்கலைக்கழகங்களில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். அறிவியல், கணிதம், பொருளாதாரம், சமூகவியல், உளவியல், வரலாறு, இலக்கியம், மொழியியல், உடற்கூறியல், நுண்ணுயிரியல் போன்ற பாடங்களை ஆர்வத்துடன் கற்றார். ஐரோப்பிய அறிவாளிகளுடன் தொடர்பு கொண்டு மார்க்சிய சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டார். அமெரிக்காவில் ஏழாண்டுகளைக் கழித்த ஜே.பி. 1929 நவம்பர் மாதம் இந்தியா திரும்பினார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய ஜே.பி. இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1929 டிசம்பர் மாதம் வார்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது ஜே.பி. க்கு காந்தி, நேரு ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது ஜே.பி. காங்கிரஸ் தொழிலாளர் துறையின் செயலராக நியமிக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரானார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சார்பாக தென் மாநிலங்களில் பயணம் செய்து கொண்டிருந்த ஜே.பி. 1932 செப்டம்பர் 7–ஆம் தேதி சென்னை ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார். நாசிக் சிறையில் இருந்தபோது மினோ மசானி, அச்யுத் பட்வர்த்தன், அசோக் மேத்தா, என்.ஜி.கோரே, எஸ்.எம்.ஜோஷி, எம். எல்.தண்ட்வாலா போன்றோருடன் சோஷலிஸ்ட் கட்சியைத் துவக்குவது பற்றிக் கலந்தாலோசித்தார். அதன் விளைவாக 1934–ஆம் ஆண்டு காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது.

ஜே.பி. விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கேற்றமைக்காக 1937,1939, ஆண்டுகளில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். 1942 நவம்பர் மாதம் ஹசாரிபாக் சிறையிலிருந்து தப்பிச் சென்றார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்றார். தலைமறைவாக இருந்து கொண்டு விடுதலைப் போராட்டத்தை ஊக்குவித்து வந்த ஜே.பி. நேபாளத்தில் கைது செய்யப்பட்டு ஹனுமான் நகர் சிறையில் அடைக்கப்பட்டார் (1943 மே). அச்சிறையிலிருந்து தப்பிய ஜே.பி. நேதாஜியின் "அசாத் ஹிந்த் இராணுவத்துடன் தொடர்பு கொள்ள முயன்றார். 1943 செப்டம்பர் 18 ஆம் தேதி அமிர்தசரசில் கைது செய்யப்பட்டு, லாகூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டு, ஆ சிறைக்கு மாற்றப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார் (1946 ஏப்ரல் 11).

1946–இல் நேரு இடைக்கால அரசாங்கத்தில் சேர சம்மதித்ததை அரசியலமைப்புச் சட்டசபையில் இடம் பெற இசைந்ததையும் ஜே.பி. கடுமையாக எதிர்த்து இந்தியாவை மற்றொரு போராட்டத்துக்குத் தயார் செய்ய வேண்டுமென்று கோரி 1947 பிப்ரவரி மாதம் ஜே.பி. யும் அவரது சகாக்களும் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி பெயரை சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்றினார். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் பிரதமர் நேருவுடன் கருத்து மாறுபாடு கொண்டார். 1948 நாசிக் மாநாட்டில் சோஷலிஸ்ட் கட்சி தாய்க்கட்சியான காங்கிரசை விட்டுப் பிரிவதென்று தீர்மானித்தது. 1949 மாதம் பாட்னாவில் ஜே.பி.யின் தலைமையில் பிரமாண்டமான 'விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 1952–இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட்டது. 1954–ஆம் ஆண்டு ஜே.பி. சோஷலிஸ்ட் கட்சியை விட்டு விலகி வினோபாவே அடிகள் துவக்கியிருந்த சர்வோதயா இயக்கத்தில் சேர்ந்தார்.

சர்வோதய இயக்கத்தில் சேர்ந்த ஜே.பி. வினோபாவே அடிகள் நடத்திய கிராமதான, பூதான, சம்பத்தான இயக்கங்களில் ஆர்வத்துடன் பங்கேற்றார். பௌனார் ஆசிரமத்தில் வினோபாவே அடிகளுடன் தங்கியிருந்தபோது 'முழு புரட்சி (Total Revolution) யின் தேவை பற்றிக் குரல் கொடுத்தார். பீகார் நக்சலைட்டுகள் பிரச்னை முசாபர்பூரில் சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரர்கள் ஜே.பி. யிடம் சரணடைந்தது முழுப்புரட்சியின் தேவையை உணர்த்தியது. 1974 இல் குஜராத்தில் வெடித்த கிளர்ச்சி ஜே.பி. யின் முழுப்புரட்சி துவக்கப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. பீகார் கிளர்ச்சியின் போது முழுப்புரட்சி துவக்கப்பட்டது. அதன் விளைவாக 1977–இல் ஜே.பி. யின் தலைமையில் ஜனதா கட்சி துவக்கப்பட்டது. அக்கட்சி தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஜே.பி.யின் முழுப்புரட்சி 'ஜனதா புரட்சி' யாக உருவெடுத்தது.

## 5.2,6 முழுப்புரட்சி (Total Revolution)

ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு இலட்சிய சமுதாயம் பற்றிய தொலைநோக்கு இருந்தது. அந்த நோக்கை அடைவதற்காக அவர் மார்க்சிய, ஜனநாயக சோஷலிச, சர்வோதய மார்க்கங்களில் சென்றார். அவருக்கு குறுகிய காலத் தீர்வுகளில் நம்பிக்கை இல்லை. மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முயன்றார். முழுப்புரட்சியே இந்தியாவின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழி என்பதை உணர்ந்தார். அறிவந்த மக்கள் பங்கேற்கும் ஜனநாயகம், மக்கள் விழிப்புணர்வுக் கல்வி, அதிகாரப் பரவல் முறை, நிர்வாகத்தில் தூய்மையும் அரசியல் கட்சிகள் குறுக்கீடின்மையும், குறைந்தபட்ச வள ஆதாரங்கள், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ...டுப்பட்ட அரசாங்கப் பணியாளர்கள், ஒருமித்த கருத்து, கட்சியற்ற மக்களாட்சி



...மறைமுக தேர்தல் பற்றிய கருத்துக்களை ஒருங்கிணைத்து முழுப்புரட்சி சித்தாந்தத்தை உருவாக்கினார்.

### பொருள் விளக்கம்

'முழுப்புரட்சி' என்பது புரட்சிகளின் புரட்சி. "முழுப்புரட்சி என்பது ஏழு புரட்சிகளின் தொகுப்பு" என்று வரையறுத்துள்ளார் ஜே.பி. அதாவது சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, குறிக்கோள், கல்வி மற்றும் ஒழுக்கப் புரட்சிகளின் சங்கமமே முழுப்புரட்சியாகும். சமுதாயத்தின் ஒரு துறையிலோ அல்லது ஒருசில துறைகளிலோ மாற்றங்கள் ஏற்பட்டால் போதாது. சமுதாயப் பன்முக மாற்றமே முழுப்புரட்சியைத் தோற்றுவிக்கும். இம்மாற்றங்கள் ஏககாலத்தில் ஏற்பட வேண்டும். அப்போதுதான் சமுதாயச் சமநிலை மலர்ச்சியும், வளர்ச்சியும் உண்டாகும். வளர்ச்சித் திட்டங்களில் பயன் சமுதாயப் பலகணியின் கடைசிப் படியில் உள்ளவரை சென்றடையும். "கடையனுக்கும் கடைத்தேற்றம்" (Unto this last) என்ற சர்வோதய சமுதாயம் முடிவு என்றால் முழுப்புரட்சி அந்த இலக்கை அடைவதற்கான மார்க்கமாகும்.

### சிறப்பியல்புகள்

ஜே.பி. யின் 'முழுப் புரட்சி' தனித்தன்மை வாய்ந்தது. அதன் சிறப்பியல்புகளாவன 1) இலட்சிய சமுதாயம் சுதந்திரம், சமத்துவம், அமைதி, அகிம்சை, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளின் அடிப்படையில் அமைக்கப்படும். 2) சிறிய சமுதாயமே அழகான அமைப்பாகும் (Small is Beautiful). 3) அனைவரது நலனும், மகிழ்ச்சியும், முன்னேற்றமுமே முக்கியம். 4) அமைதிவழி மனமாற்றமே சமூக சமத்துவத்துக்கான உத்திரவாதமாகும். 5)முடிவை (End) ப் போன்றே மார்க்கமும் (Means) முக்கியமாகும். 6) அதிகாரக் குவிப்பும் ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. 7) கிராம ராஜ்யம்தான் சுயாட்சியின் ஆணிவேர். 8) இளைஞர்களால் தான் முழுப்புரட்சியைக் கொண்டுவர முடியும். 9) அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மக்கள் பங்கேற்கும் சுதந்திரமான, நேர்மையான, ஊழலற்ற ஆட்சி. 10) ஏழை எளியோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் (Proportional Representation) கொடுக்கப்பட வேண்டும். 11) அரசியல் கட்சிகளற்ற ஜனநாயகம் (partyless Democracy) சிறந்தது. 12) அநீதியும், சுரண்டலும், ஏற்றத்தாழ்வும் எந்த வடிவத்திலும் இருத்தலாகாது.

### சிறப்புக் கூறுகள்

முழுப்புரட்சி **புரட்சிகளின் புரட்சி** (Revolution of Revolutions) ஆகும். இது ஏழு புரட்சிகளின் இரசாயனக் கலவையாகும்.

**1. சமூகப் புரட்சி**

சுரண்டலற்ற சமூக சமத்துவச் சீரமைப்பே சமூகப் புரட்சி ஆகும். சில சமுதாய வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. ஆனால் அசாதாரண வேறுபாடுகளும் மாறுபாடுகளும் நீக்கப்படுதல் வேண்டும் என்றார் ஜே.பி. கிராம நாகரிகமே சமூகப் புரட்சியின் குவிமையாகும்.

**2. பொருளாதாரப் புரட்சி**

பொருளாதாரப் புரட்சி மனிதனை மையமாகக் கொண்டது. தனியார் முதலாளித்துவம் (Private Capitalism) மற்றும் அரசாங்க முதலாளித்துவம் (State Capitalism) இந்தியாவுக்குப் பொருத்தமற்றவை. மனித நடவடிக்கைகளையும்,

நிறுவனங்களையும், தேவைகளையும் மையப்படுத்த வேண்டும். தனி உடைமை (Pri... Property) தனிப்பட்ட உடைமை (Personal Property) யினின்றும் வேறுபடுத்தி ... உடைமையை சமுதாய உடைமையாக்கல் வேண்டும். 'வர்த்தக நோக்கம் கொ... அறிவியலுக்கு பதில் மனிதநேய அறிவியல் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்... பொருளாதாரப் பரவல் முறையே சுயசார்புடைமை சமுதாயத்தின் அடிப்படையாகும்.

### 3. அரசியல் புரட்சி

ஜே.பி.யின் அரசியல் புரட்சி பற்றிய கருத்துக்களை 'சோஷலிசத்திலி... சர்வோதயம் வரை' (From Socialism to Sarvodaya) என்ற நூலில் விவரித்துள்ளார். ... சமூகமே (Stateless Society) இலட்சிய சமூகமாகும். புதிய அரசியல் அமைப்பு ... சிறப்பம்சங்களாவன: 1) ஒருமித்த கருத்து (Consensus) அடிப்படையில் மு... எடுக்கப்பட வேண்டும். 2) கட்சிகளற்ற அரசியல் 3) நலநாடு (Welfare State) என்... பதில் நலச்சமூகம் (Welfare Society) உருவாதல் 4) கட்டாயப்படுத்தும் அதிகார... (Coersive authority) பதில் சுயகட்டுப்பாட்டு அதிகாரத்துக்கு (Self-regulating Autho... முன்னுரிமை கொடுக்க வேண்டும். 5) அரசியல் பிரச்னைகள் அகிம்சை வழி தீர்க்கப்ப... வேண்டும். 6) நேரடித் தேர்தலுக்கு (Direct Election) ப்பதில் மறைமுகத் தேர்தல் (In... Election) அடிப்படையில் பஞ்சாயத்து அதிகாரப் பரவல் முறை அரசியல... வாக்குறுதிகளை நிறைவேற்றாத பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளும் உ... (Right to Recall) மக்களுக்கு இருக்க வேண்டும்.

### 4. கலாச்சாரப் புரட்சி

ஒருவருடைய சுதர்மம் தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும் அக்க... கொள்வதாகும். பிறருக்காகச் செய்யும் சேவையே உண்மையான தியாகம் ஆகும். "... நலன்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நற்செயல்கள் மக்களி... அன்யோன்யத்தை வளர்க்கிறது. தீய செயல்கள் மக்களிடையே பிளவை ஏற்படுத்துகி... மனித மதிப்புகளில் குறிப்பாகப் பொறுமை பணிவு, உண்மை, அன்பு, பரிவு-பற்... இருக்க வேண்டியது இன்றியமையாதது.

### 5. கல்விப் புரட்சி

கல்விக் கொள்கை தேசிய வளர்ச்சித் திட்டத்தோடு தொடர்புபடுத்தப்ப... வேண்டும். அனைவருக்கும் ஆதாரக் கல்வி அளிக்கப்பட வேண்டியது அவசியம் ... தொழிலைச் சுற்றிப் பின்னப்படுதல் வேண்டும். தொடர்புபடுத்தலும், சுயசார்புடை... தேசிய கல்விக் கொள்கையின் குறிக்கோள்களாகும். கல்வி வாழ்க்கையோடு ஒட்டிய... வேண்டும்.

### 6. அறிவுப்புரட்சி

பிரச்னைகளுக்கு அறிவுப்பூர்வமாக அணுகும்போது மனிதன் புரட்சியா... ஆகிறான். அறிவு, உணர்ச்சி, உறுதி ஆகியவற்றுக்கிடையே சமநிலையை ஏற்ப... முற்படுகிறான். அப்போதுதான் மனிதனால் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்கா... ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பைக் காண முடியும். "புதிய கருத்துக்களை... மதிப்புகளையும் ஏற்றுக் கொள்வது கடினம்தான். எனினும், சாதாரண மக்க... படிப்படியாகப் புரட்சிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளத்தக்க திட்டத்தை உரு... வேண்டும்" என்று விரும்பினார் ஜே.பி.



### 7. ஒழுக்கப் புரட்சி

ஒழுக்கம் என்பது மனக்கட்டுப்பாடு. சுயகட்டுப்பாடின்றிப் பொருள்களைக் ...குவிப்பதும், ஆடம்பரமாக வாழ்வதும் ஒழுக்கக் கேடாகும். "பேராசை, வரம்பு மீறல், தீய ...வழியில் சொத்து சேர்த்தல், ஆன்மீக விரோதச் செயல்களாகும்". ஒழுக்கப் புரட்சி ஏற்பட்டால்தான் உயர்ந்தவர்–தாழ்ந்தவர்; பலமானவர்–பலவீனர் என்ற உட்சமூக ...ரண்பாடுகள் மறையும். அமைதி, சுதந்திரம், சமத்துவம் தழைக்கும்.

### ...திப்பீடு

ஜே.பி.யின் 'முழுப்புரட்சி' மேற்கண்ட ஏழு புரட்சிகளின் கூட்டு விளைவாகும் ...க்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளை மாற்றியமைக்கும் இப்புரட்சிகள் ஏககாலத்தில், ...யல்பாக, படிப்படியாக, சாத்வீகமாக, மக்கள் பங்கேற்புடன் ஏற்பட வேண்டியது ...ன்றியமையாதது. "அடிப்படை மாற்றங்களை முதலில் முறையாகச் செய்ய வேண்டும். ...ன்பின் தனிமனித, சமூக மனமாற்றம் தொடரும்" என்றார் ஜே.பி. சுருங்கக்கூறின், ஜே.பி. யின் 'முழுப்புரட்சி' மக்களை மையமாகக் கொண்டது, ஆக்கபூர்வமானது. ...ருத்தமானது, யதார்த்தமானது, அறிவுபூர்வமானது, தேசியத்தன்மை கொண்டது.

## 15.3. உடனடிக் காரணம்

### 15.3.1. அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு, 1975

1975–ஆம் ஆண்டு சமகால இந்திய வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்திய ஆண்டாகும். எதிர்பாரா நிகழ்ச்சிகள் இந்திய அரசியலில் கொந்தளிப்பையும், குழப்பத்தையும், நெருக்கடியையும் ஏற்படுத்தி விட்டன. அவ்வாண்டு ஜூன் மாதம் 12–ஆம் தேதி இந்தியப் பிரதமர் **இந்திரா காந்தி நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது** என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. காரணம் 1971–இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி அவருக்கு எதிராகப் போட்டியிட்ட ராஜ் நாராயணை (Raj Narayan) விட 1,00,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்திரா காந்தி 'நியாயமற்ற நடவடிக்கைகளை' (Unfair Practices)க் கையாண்டு தேர்தலில் வெற்றி பெற்றதாக ராஜ் நாராயண் வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்கை விசாரித்த நீதிபதி சின்ஹா 1) இந்திரா காந்தியின் தேர்தல் செல்லாது; 2) அவர் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடக் கூடாது; 3) அத்தீர்ப்பை எதிர்த்து இருபது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம் என்று தீர்ப்பளித்தார். அத்தீர்ப்பு அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. நம்ப முடியாதது நடந்து விட்டது.

அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு வதந்தியைக் கட்டவிழ்த்து விட்டது. பிரதமர் இந்திரா காந்தி பதவி விலகுவாரா? பதவி விலகினால் அதன் அரசியல் விளைவுகள் என்னவாக இருக்கும்? பதவி விலகாவிட்டால் என்னவாகும்? நீதிமன்றத் தீர்ப்பு நியாயமானதா? இந்திரா காந்தி தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வாரா? காங்கிரஸ் கட்சியின் நிலை என்னவாக இருக்கும்? எதிர்க் கட்சிகள் என்ன செய்யும்?...

### 15.3.2. மேல் முறையீடு

இந்திரா காந்தி அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இந்திரா காந்தி சார்பாக பம்பாயின் பிரபல வழக்கறிஞர் நானி பல்கிவாலா வழக்கை நடத்தினார். கோடை விடுமுறைக்கால உச்ச நீதிமன்ற நீதிபதி கே.ஆர்.கிருஷ்ணய்யர் வழக்கை விசாரித்து 1975 ஜூன் 22–ஆம் தேதி திங்கள் கிழமை பின்வருமாறு தீர்ப்பு வழங்கினார். 1) அலகாபாத் உயர்நீதிமன்றத்

தீர்ப்புக்குப் பகுதி இடைக்காலத் தடை (a Partial stay order) அளிக்கப்பட்ட... உச்சநீதிமன்றத்தின் முழுக்கூட்டம் (Full Bench) மேல்முறையீட்டை விசாரித்து இ... தீர்ப்பு வழங்கும் வரை இந்திரா காந்தி பிரதமராக நீடிக்கலாம்; 3) அவ்வாறு பதவி... நீடிக்கும் காலத்தில் அவர் நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆ... வாக்களிக்கவோ ஊதியம் பெறவோ கூடாது! உச்ச நீதிமன்றத்தின் சர்ச்சைக்குரிய தீ... நாட்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

### 15.3.3. பதவி விலகக் கோரிக்கை

உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்குக் காத்திராமல் எதிர்க்கட்சித் தலைவர்... 'இந்திரா காந்தி பதவி விலக வேண்டும்' என்று குரல் எழுப்பினர். குடியரசுத் தலை... பக்ருதீன் அலி அகமது மாளிகை முன் அமர்ந்து 'தர்ணா' செய்தனர். உச்ச நீதி... தீர்ப்பு வெளியான பின் 1975 ஜூன் 25–ஆம் தேதி டெல்லி ராம் லீலா மைதான... நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசிய ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்... காந்தி பதவி விலகாமையைக் கடுமையாகக் கண்டித்தார். இராணுவத்தின... போலீசாரையும் சட்ட விரோதமான உத்தரவுகளுக்குக் கீழ்ப்பணிய வேண்டாம் எ... கேட்டுக் கொண்டார். "முழுப்புரட்சியே நமது கோஷம்; எதிர்காலம் நமதே" எ... முழங்கினார். முழுப் புரட்சியின் செயல் திட்டத்தையும் அறிவித்தார். அத்திட்டத்... துவக்கமாக ஒரு வாரத்துக்கு (ஜுன் 29 லிருந்து ஜூலை 5 வரை) பிரதமர் இல்லத்... முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று அறிவிக்கப்பட்டது.

### 15.3.4. நெருக்கடி நிலைப் பிரகடனம்

பிரதமர் இந்திரா காந்தி நாட்டின் அரசியல் நிலைமை கட்டுக்கடங்காமல்... உள்நாட்டுப் போரில் முடிந்து விடுமோ என்று அஞ்சினார். எதிர்க்கட்சிகளின் '... வலை' யிலிருந்து தப்ப முடிவு செய்தார். மேற்கு வங்காள முதலமைச்சரும்... வல்லுநருமான **சித்தார்த் சங்கர் ரேயின் ஆலோசனையின் பேரில்** அரசியலமை... சட்டத்தின் 352–வது சரத்தின் படி உள்நாட்டு நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய... செய்தார். 1975 ஜூன் மாதம் 25–ஆம் தேதி இரவு எட்டு மணிக்குப் பிரதமர் இ... காந்தியும் சித்தார்த் சங்கர் ரேயும் குடியரசுத் தலைவரைச் சந்தித்து நிலை... விளக்கினர். அன்று நள்ளிரவுக்கு முன் **குடியரசுத் தலைவர் பக்ருதீன்** அலி அ... நெருக்கடி நிலைப் பிரகடனத்தில் கையொப்பமிட்டார். அமைச்சரவையின் ஒப்புதலி... பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் நெருக்கடி நி... பிரகடனத்துக்குச் சம்மதித்தார். உள் நாட்டு குழப்பங்களால் இந்தியாவின் பாதுகா... ஆபத்து வந்து விட்டதாகக் கூறி நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது (ஜூன் 26).

## 15.4 நெருக்கடிக் கால நடவடிக்கைகள்

### 15.4.1. பிரகடனம்

1975 ஜுன் 25–ஆம் தேதி ஜெயப்பிரகாஷ் நாராயண் முழுப்புரட்சித் தி... வெளியிட்டார். அன்றிரவே தேசிய உள்நாட்டு நெருக்கடி நிலைப் பிரகடனத்தில் கு... தலைவரின் கையொப்பத்தைப் பெற்றார் இந்திரா காந்தி. விடிவதற்குள் ... எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். ஜெய... நாராயணும், மொரார்ஜி தேசாயும் கைது செய்யப்பட்டு டெல்லிக்கு அருகாமை... சோனா டாக் மாளிகை (Sona Dak Bangalow) –யில் தனித்தனி அறைகளி... வைக்கப்பட்டனர். விடிந்தவுடன் (26ஜுன்) அவசரமாகக் கூட்டப்பட்ட அமைச்... கூட்டத்தில் தேசிய நெருக்கடி நிலைப் பிரகடனம் (National Emergency Procla...ation) செய்யப்பட்டதையும், ஜே.பி, மொரார்ஜி தேசாய் போன்றோர் கைது செய்யப்பட்டதையும் அறிவித்தார் பிரதமர் இந்திரா காந்தி. பின்னர் அவர் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் நெருக்கடி நிலை பற்றி உரையாற்றினார். நாடு உறைந்து போயிற்று. மீண்டும் நம்ப முடியாதது நடந்து விட்டது.



### 15.4.2 யதேச்சதிகாரம்

நெருக்கடி நிலையின் போது இந்தியாவில் ஜனநாயகக் கடிகாரம் நிறுத்தப்பட்டது. யதேச்சதிகார சர்வாதிகார வல்லாட்சி கட்டவிழ்த்து விடப்பட்டது. உள்நாட்டு நெருக்கடிப் பிரகடனத்தின் மூலம் 1) **42வது சட்ட திருத்தத்தின் மூலம்** இந்தியக் கூட்டமைப்புச் சாத்துக்களும், அடிப்படை உரிமைகளும் நிறுத்தி வைக்கப்பட்டன. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. 2) அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் தடை செய்யப்பட்டன. அரசாங்க ஊழியர்களின் ஊதியம் முடக்கப்பட்டது. 3)ஜெயப்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய், அடல் பிகாரி வாஜ்பாய், சந்திரசேகர் போன்ற காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், பிரதான பத்திரிக்கையாளர்கள், பேராசிரியர்கள், மாணவர் தலைவர்கள்... நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 4) நாடாளுமன்றம் முடக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதற்கும், மன்ற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கும் தடை விதிக்கப்பட்டன. 5) மாநில அரசாங்கங்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் திமுக அரசாங்கமும், குஜராத்தில் ஜனதா அரசாங்கமும் கலைக்கப்பட்டன. ஒத்துழைப்புத் தராத உத்திரப்பிரதேச மற்றும் ஒரிசா முதலமைச்சர்கள் மாற்றப்பட்டனர். 6) உச்ச நீதிமன்றத்தின் **நீதிப்புனராய்வு** (Judicial Review) அதிகாரம் பறிக்கப்பட்டது. நீதித்துறையை விட ஆட்சித்துறையே அதிகாரமிக்கது என்ற நிலை உருவாக்கப்பட்டது. சுருங்கக்கூறின், வரம்பற்ற ஆட்சி மற்றும் கட்சி அதிகாரம் பிரதமரிடம் குவிக்கப்பட்டது. நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் அதிர்ச்சியடைந்த காமராஜர் **"பிரிட்டிஷ் ஆட்சியில் கூட இதற்கு இணையான நிகழ்ச்சி நடந்ததில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டதைப் போல் இருக்கிறேன்"** என்றார்.

### 15.4.3 விளைவு

பிரதமர் இந்திரா காந்திக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை இருந்தபோதிலும் எதிர்ப்பை அரசியல் களத்தில் சந்திக்காமல் அரசியலமைப்புச் சட்டத்தை முடக்கி அவசரகால சர்வாதிகார ஆட்சியின் மூலம் முறியடிக்க முயன்றார். அச்சம் என்ற அங்குசத்தைப் பயன்படுத்தி எதிர்ப்பு யானையை அடக்கத் தீர்மானித்தார் அடக்குமுறைக்கு அஞ்சி மக்கள் யதேச்சதிகார ஆட்சிக்கு அடங்கினர். நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்பட்டது. குற்றங்கள் குறைந்தன. இனக்கலவரங்கள் இல்லை. விலைவாசி வீழ்ந்தது. புகை வண்டிகள் காலம் தாழ்த்தாமல் ஓடின. அரசாங்க ஊழியர்கள் நேரப்படி அலுவலகங்கள் சென்றனர். குற்றவாளிகளும் கடத்தல்காரர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். பிச்சைக்காரர்களைப் பார்க்க முடியவில்லை. வீதிகள் சுத்தமாக இருந்தன. சுருங்கக்கூறின், வேலை நிறுத்தங்கள், பகிஷ்காரங்கள், ஆர்ப்பாட்டங்களின்றி மக்கள் அச்சத்தோடு கூடிய கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனர். நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்பட்டது.

# பகுதி III

# பொருளாதாரச் சீர்திருத்த சகாப்தம் 1984-1996

## 20. ராஜீவ் காந்தியின் ஆட்சி 1984-1989

> ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த ஆண்டுகளை அனுதாபத்துடன் புரிந்து கொண்டு மதிப்பிட வேண்டும்.
>
> – பி.ஜி. தேஷ்முக்

### 20.1 வாழ்க்கைக் குறிப்பு

ராஜீவ் காந்தி 1944 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி இந்திரா காந்திக்கும் பெரோஸ் காந்திக்கும் அலகாபாத் ஆனந்த் பவனில் முதல் மகனாகப் பிறந்தார். அக்குழந்தைக்குப் பாட்டி கமலா மற்றும் தாத்தா ஜவஹரை நினைவுபடுத்தும் வகையில் ராஜீவ் ரத்னா என்று பெயர் சூட்டப்பட்டது. ராஜீவ் தனது 12 வது வயதில் டேராடூனில் உள்ள 'டூன் பள்ளி' (Doon School)யில் சேர்க்கப்பட்டார் (1955). டூன் பள்ளியில் படிப்பை முடித்த ராஜீவ் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியில் மோட்டார் தொழிற்கல்வி (Automobile Engineering) பயின்றார். அங்கு மாணவராக இருந்தபோதுதான் ராஜீவ் இத்தாலிய மாணவி சோனியா (Sonia)வைக் காதலித்தார்.

ராஜீவ் காந்தி இந்தியா திரும்பியவுடன் விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று இந்தியன் ஏர்லைன்சில் விமான ஓட்டியாக வேலையில் சேர்ந்தார். 1968 பிப்ரவரி 25-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பெற்றோரின் சம்மதத்தோடு சோனியாவைத் திருமணம் செய்து கொண்டார். சலனமற்றத் தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருந்த ராஜீவ்-சோனியா வாழ்க்கையில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. 1980 ஜூன் 23 ஆம் தேதி ராஜீவின் இளைய சகோதரர் சஞ்சய் காந்தி விமான விபத்தில் இறந்தார். "ஒரு நேரு-காந்தி" தன் அருகில் இருக்க வேண்டியதன் தேவையை உணர்ந்த இந்திரா காந்தியின் விருப்பத்துக்கேற்ப ராஜீவ் தனது விமானி வேலையை ராஜினாமா செய்தார். சூழ்நிலைக் கட்டாயத்தால் ராஜீவ் காந்தி அமேதி தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார் (1981 ஜூன்) ராஜீவ் காந்தி 1981 இல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி 1983 இல் காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகப் பதவி உயர்வு பெற்றார். 1983 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் ராஜீவ் காந்தி நாட்டின் வருங்காலத் தலைவராக அறிமுகப்படுத்தப்பட்டார். 1984 அக்டோபர் 31 ஆம் தேதி இந்திரா காந்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதால் குடியரசுத் தலைவர் மரபை மீறி ராஜீவ் காந்தியைப் பிரதமராக நியமித்தார். இந்திரா காந்தி இறந்த அன்று மாலையே ராஜீவ் காந்தி பிரதமராக்கப்பட்டார் என்று விரிவாகக் கூறியுள்ளார் பி.சி. அலெக்சாண்டர்.

### 20.2 சாதனைகள்

#### 20.2.1. சீக்கியர் எதிர்ப்புக் கலவரங்கள் (Anti-Sikha Riots)

1981 – 84ல் வட இந்தியாவில் மதவாதம் கொதி நிலையில் இருந்த போது பிரதமர் இந்திரா காந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் (1984, அக்டோபர் 31). இக்கொடூரக் கொலை மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தலைநகர் டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிரான கலவரங்கள் காட்டுத் தீ போல் பரவியது. சீக்கியர் குடும்பங்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டன; கடைகளும், கிடங்குகளும் சூறையாடப்பட்டன; தீக்கிரையாக்கப்பட்டன; வாகனங்கள் கொளுத்தப்பட்டன. சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நான்கு நாட்கள் நீடித்த இக்கலவரங்களில் 3,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் உயிரிழந்தனர்; 25,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வீடிழந்து அகதிகளாயினர்! இந்த இனக் கலவரம் திட்டமிட்ட செயலா? அல்லது தற்செயல் நிகழ்வா? இக்கலவரத்தில் காங்கிரசாரின் பங்கு என்ன? சமூக விரோத சக்திகளின் பங்கு என்ன?

இந்திரா காந்தியின் உடல் எரிந்து கொண்டிருந்த போது டெல்லியில் சீக்கியர் வாழ் பகுதிகள் எரிந்து சாம்பலாயின. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. புதிதாகப் பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி இராணுவத்தின் துணை கொண்டு இனக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். இரண்டு சீக்கியப் பாதுகாவலர்கள் இந்திரா காந்தியை கொன்றதற்காக அவர்கள் சார்ந்த சமுதாயமே தண்டிக்கப்பட்டது! இக்கலவரங்களை இந்திரா காங்கிரஸ்காரர்களே தூண்டிவிட்டுப் பங்கேற்றிருக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டு எழுந்ததால் விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. தாயைப் பறிகொடுத்த சோகத்தில் இருந்த பிரதமர் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்: "இந்திரா காந்தி இறந்து விட்டார்; இந்தியா வாழ்ந்து கொண்டிருக்கிறது".

#### 20.2.2. நம்பிக்கை நட்சத்திரம்

ராஜீவ் காந்தி நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார் அவர் இந்தியாவின் 'எதிர்பார்ப்பு சகாப்த' (Era of Expectation) த்தைத்தோற்றுவித்தார். இந்தியா தடைகளைத்தாண்டி 21 ஆம் நூற்றாண்டுக்குள் பெருமையுடன் நுழைய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தார். உயரத்தாண்டி அடுத்த நூற்றாண்டுக்குள் குதிக்க வேண்டும் என்றார். மக்களின் உள்ளங்களில் நம்பிக்கை அலைகள் அடுக்கடுக்காக எழுந்தன. புதிய ஆட்சி புதிய புரட்சிப் பாதையைப் போட்டுக் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பாரிடையேயும் எழுந்தது. நேரு 'சோஷலிச சமுதாயம்' அமைப்பதற்காகப் பாடுபட்டார். இந்திரா காந்தி வறுமையை ஒழிப்போம் என்று சூளுரைத்தார். ராஜீவ் காந்தி 'தொழிநுட்ப ஜனநாயக' த்தை ஏற்படுத்த உறுதி பூண்டார்.

பிரதமர் ராஜீவ் காந்தி 'கொள்கைப் பிரகடனம்' எதையும் செய்யவில்லை. எனினும் அவரது பேச்சுக்களிலிருந்தும், பேட்டிகளிலிருந்தும் பின்வரும் **கொள்கைக் கூறுகளை** அடையாளம் காட்டலாம்; 1) அரசியல் மரபுகளாகப் பெற்ற பஞ்சாப்,அஸ்ஸாம், மிஸோரம் பிரச்னைகளைத் தீர்த்தல்; 2) கட்சித் தாவல் ஊழலுக்குத் தீர்வு காணல்; 3) கருப்புப் பண ஊழலை ஒழித்து தூய்மையான, நேர்மையான, திறமையான நிர்வாகத்தைக் கொடுத்தல்; 4) மத்தியிலும் மாநிலங்களிலும் சாதனைகளைச் செய்யக்கூடிய அரசாங்கங்கள் அமைவதற்கான முயற்சியை மேற்கொள்ளல்; 5) புதிய கல்விக் கொள்கையின் மூலம் இளைய சமுதாயத்தினரின் ஆளுமையையும் நடத்தை நிலையையும் உயர்த்தல்; 6)தொழில்

நுட்ப உத்திகளைக் கையாண்டு, அதிகாரப் பரவல் முறையை ஊக்குவித்து, நாட்டை தன்னிறைவுடைய தேசமாக்குதல்.

### 20.2.3. புதிய பொருளாதாரக் கொள்கை

ராஜீவ் காந்தி இந்தியப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதில் முனைப்பாக இருந்தார். இந்தியா விடுதலை அடைந்ததிலிருந்து நேருவின் நன்கொடையான 'கூட்டுப் பொருளாதார' த்தை வேத வாக்காகப் பின்பற்றி வந்தது. இந்திரா காந்தியின் இடதுசாரி தேசியமயக் கொள்கை 'பொதுத்துறை' யை சமூகத் துறையாக்கி விட்டது. நேருவும் இந்திரா காந்தியும் அரசாங்கக் கட்டுப்பாடுகளை நெம்புகோல்களாகக் கொண்டு தனியார் துறையைக் கட்டுப்படுத்திப் பொதுத்துறையைப் பேணிக் காத்து வந்தனர். ஆனால் பிரதமர் ராஜீவ் காந்தி, நேரு – இந்திரா சோஷலிச பொருளாதார அணுகுமுறையில் **அடிப்படை மாற்றத்தைக்** கொண்டுவரத் தீர்மானித்தார். அதற்குக் காரணம் அரசாங்கத்தால் நடத்தப்படும் பொருளாதார நிறுவனங்கள் திறமையற்றதாகத்தான் இருக்கும் என்பது ராஜீவ் காந்தியின் துணிவு. அதிக மூலதனம், அதிகத் தொழிலாளர்கள், குறைவான உற்பத்தித் திறன் என்பதே பொதுத்துறையின் சிறப்பியல்புகளாக இருந்தன. பொதுத் துறையும் திறமையின்மையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். **போட்டி** (Competition) தான் திறமையான பொருள் அல்லது சேவை உற்பத்தியின் அடிப்படைத் தத்துவம். எனவே, பொதுத்துறை பொருளாதாரத்துக்கு பதில் **போட்டிச் சந்தைப் பொருளாதாரமே** (Market Economy) ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் குவிமையமாக இருந்தது.

**தாராளமயமாக்கல்** (Liberaliszation), **உலக மயமாக்கல்** (Globalisation), **நவீனமயமாக்கல்** (Modernisation), **நகர்மயமாக்கல்** (Urbanisation) ஆகியவை ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்களாகும். 1) சுதந்திர தொழில் முனைவின் மூலம் திறந்த வெளிப் பொருளாதாரம்; 2) நவீன மேலாண்மை முறை; 3) புத்துணர்ச்சி யூட்டப்பட்ட ஆட்சி; 4)ஊழலற்ற திறமையான நிர்வாகம் ஆகியவை ராஜீவின் **புதிய மாற்றம்** (Rajiv's Perestroika) ஆகும்.

ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றவுடன் அரசாங்கத் துறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். அவரது புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான வி.பி.சிங்கை நிதி அமைச்சராக நியமித்தார். வி.பி.சிங்கும் ராஜீவ் காந்தியைப் போன்றே பொருளாதாரப் புரட்சி செய்வதில் பேரார்வம் கொண்டிருந்தார். எனவே, வி.பி.சிங் நிதி அமைச்சரானவுடன் இந்தியப் பொருளாதாரத்தைச் சலவை செய்யத் தீர்மானித்தார். கருப்புப் பணக்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள், அன்னியச் செலாவணி மோசடிக்காரர்கள், வரிஏய்ப்பாளர்கள், சட்டப்புறம்பாக இரகசிய வங்கிக் கணக்குகள் வைத்திருப்போர், முறையான உரிமம் பெறாமல் இறக்குமதி செய்வோர், கொள்ளை இலாபம் பெறும் வர்த்தகர்கள் ஆகியோர் மீது போர் தொடுத்தார்.

வி.பி.சிங் பொருளாதாரச் சீர்திருத்தத்தைத் தீவிரமாக மேற்கொண்டார். சந்தேகிக்கப்பட்ட வர்த்தகப் பேரரசுகளின் தலைவர்கள் வீடுகளும் சோதனை செய்யப்பட்டன. சிலர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பொருளாதாரக் குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் வர்த்தக–தொழில்–வியாபார சமூகத்தைத் திருத்துவதற்காக வி.பி.சிங் மேற்கொண்ட முயற்சிகள் தொழிலதிபர்களுக்கு



அதிர்ச்சியைத் தந்தன; மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். வி.பி.சிங்கின் அதிரடி நடவடிக்கைகள் தடையின்றி மேற்கொள்ளப்பட்டால் இந்தியப் பொருளாதாரம் புதுபலத்துடன் முன்னேறும் என்ற நம்பிக்கை மக்களிடையே எழுந்தது. வி.பி.சிங், ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக தேசத் தலைவர் அந்தஸ்தைப் பெற்றார். 'பொருளாதார சவோநாரோலா' (Girloamo Savonarola) என்ற பெயரைப் பெற்றார். இத்தாலிய இளவரசரான சவோநாரோலா (1452–1498) புளோரன்ஸ் நகரம் பாபத்தில் திளைப்பதை விட அந்நகரத்தை எரித்துவிடுவதே மேல் என்று கருதியவர்.

### 20.2.4 நாடாளுமன்றத் தேர்தல், 1984

ராஜீவ் காந்தி காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரும், மக்களை உறுப்பினராகவும் இருந்தபோது தனது தனித்தன்மையை நிலைநாட்டிக் கொள்வதில் குறியாக இருந்தார். சஞ்சய் காந்தி செய்த தவறுகளை மனதில் கொண்டு அரசியலில் நேர்மையையும், அரசாங்கத்தில் திறமையையும், நிர்வாகத்தில் கட்டுப்பாட்டையும் கொண்டு வர வேண்டும் என்று விரும்பினார். **திருவாளர் பரிசுத்தம்** (Mr.Clean) என்று மக்களால் பாராட்டப் பட்டார். ஒத்த மனதுடைய அறிவும் ஆற்றலுமிக்க இளைஞர்களைத் துணை சேர்த்துக் கொண்டார். டூன் பள்ளியிலும், டிரினிட்டி கல்லூரியிலும் அறிமுகமான நண்பர்கள் பலர் ராஜீவுக்குக் கைகொடுத்தனர். குறிப்பாக ராஜீவ் தார், அருண்சிங், அருண்நேரு போன்றோர் ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார்கள். ராஜீவ் காந்தியின் **தொலைநோக்கும் தூயமுயற்சியும்** (Vision and Mission) மக்களின் பேராதரவைப் பெற்றுத்தந்தன.

இந்திரா காந்தி பதவியிலிருந்தபோது கொலை செய்யப்பட்டதால் ராஜீவ் காந்தி பிரதமராக நியமிக்கப்பட்டார். மக்களின் ஆதரவோடும் ஒப்புதலோடும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக வேண்டும் என்று தீர்மானித்தார். ராஜீவ் காந்தி தனது பிரதமர் பதவியை சட்டப்படி முறைப்படுத்த (legitimacy) முடிவு செய்தார். அதன் விளைவாக 1984 டிசம்பர் மாதம் மக்களவைத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலுக்காக ராஜீவ் காந்தி இந்திரா காந்தியைப் போன்றே 'சூறாவளிச் சுற்றுப் பயணம்' மேற்கொண்டார். தேர்தல் பிரச்சாரத்துக்குத் திரைப்பட நட்சத்திரங்களைத் திறமையாகப் பயன்படுத்தினார். குறிப்பாக வட இந்திய திரைப்பட உலகின் 'சூப்பர் ஸ்டாராக'த் திகழ்ந்த அமிதாப்பச்சன் தன்டுன் பள்ளித் தோழனுக்காக அரசியல் பிரவேசம் செய்தார். அலகாபாத் தொகுதியில் போட்டியிட்டார். சுனில் தத் பம்பாயில் போட்டியிட்டார்.

1984 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மக்களவையின் 508 இடங்களில் 401 இடங்களில் வெற்றி பெற்றது. அதாவது மக்களவையில் ஐந்தில் நான்கு இடங்கள் காங்கிரசுக்குக் கிடைத்தன. **இது நேருவும், இந்திராவும் பெற்ற அதிகபட்ச இடங்களை** விட அதிகம். இத்தேர்தலின் மூலம் நேரு–காந்தி வாரிசு பாத்யதைக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத்தது. மக்களாட்சியில் தேர்தல் மூலம் குடும்ப வாரிசு பாத்யதையை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்பதற்கு 1984 தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டாகும். இடைக்கால மன்னர் குடும்ப வாரிசு மரபு தற்காலத் தேவைக்கேற்ப அரசியல் உருமாற்றம் அடைந்தது.

### 20.2.5. போப்பால் பேரழிவு

ராஜீவ் காந்தி தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போது மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போப்பாலில் **யூனியன் கார்பைடு** (Union Carbid) என்ற

### 20.2.8 ராஜீவ் காந்தி – லோங்கோவால் உடன்பாடு, 1985 (Rajiv Gandhi - Longowal Agreement)

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் எதிர் கொண்ட சவால்களில் ஒன்று பஞ்சாப் பிரச்னை ஆகும். பஞ்சாப் மொழிவழி மாநிலமாவதை நிராகரித்தார் நேரு (1356). அரியானாவைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, சண்டிகாரை யூனியன் பிரதேசமாக்கி பஞ்சாப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கண்டார் இந்திரா காந்தி (1966). அவர் பஞ்சாப் பயங்கரவாதத்துக்குப் பலியானார் (1984). பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி சீக்கிய பிரச்னைக்கு 'இராணுவத் தீர்வு' க்குப் பதில் நல்லிணக்கத் தீர்வு காண விரும்பினார். அதன் விளைவாக 1985 ஜூலை 24 ஆம் தேதி பிரதமர் ராஜீவ் காந்தி பஞ்சாப் அகாலி தளத் தலைவர் சந்த் லோங்கோவாலுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க உடன்பாடு செய்து கொண்டார்.

**மதிப்பீடு**

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் செய்த முதல் காரியம் சீக்கிய எதிர்ப்புக் கலவரம் பரவாமல் தடுத்ததாகும். அதையடுத்து அவர் அஸ்ஸாம் அகதிகள் பிரச்னைக்குத் தீர்வு கண்டார். அதன்பின் ராஜீவ் காந்தி அகாலிதளத் தலைவர் லோங்கோவாலுடன் செய்து கொண்ட உடன்பாடாகும். முப்பத்தி மூன்று மணி நேரம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியபின் அவ்வுடன்பாடு ஏற்பட்டது. அரசியல் நோக்கர்கள் அந்த உடன்பாட்டை லோங்கோவாலின் தனிப்பட்ட தீரச்செயல் என்று கருதினர். ராஜீவ் காந்தி சீக்கிய தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதேபோன்று லோங்கோவாலும் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தார். அதற்காக இருவருமே விமர்சிக்கப்பட்டனர். லோங்கோவால் ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அகாலி தளத்தின் ஒப்புதலைப் பெற்றார் (ஜூலை 26).

ராஜீவ் காந்தி இராணுவத் தீர்வுக்கு பதில் லோங்கோவாலுடன் அமைதித் தீர்வு கண்டமைக்காகப் பொதுவாகப் பாராட்டப்பட்டார். எனினும் அரியானாவும் ராஜஸ்தானும் அந்த உடன்பாட்டில் ஆர்வம் காட்டவில்லை. விளைவுகள் என்று பார்க்கப்போனால் ராஜீவ் காந்தி லோங்கோவால் உடன்பாடு எதையும் சாதிக்கவில்லை; எந்த பிரச்னையையும் தீர்க்கவில்லை! ராஜீவ் காந்தியும் லோங்கோவாலும் ஜனரஞ்சக 'வக்கணை வாசங்களை' வாரி வழங்கினர். பஞ்சாப் பிரச்னைக்குரிய தீர்வைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு கமிஷன்களிடம் விடப்பட்டது.

இந்த உடன்பாடு சூட்டைத்தணிக்க உதவியதேயன்றி ஜுரத்தைப் போக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலம் அந்த உடன்பாட்டுக்கு அங்கீகாரம் காண முயன்றார் ராஜீவ் காந்தி. ஆனால் 1985 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி தேர்தலுக்கு முன் லோங்கோவால் ஷெர்பூர் கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் நடைபெற்ற பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் அகாலி தளம் வெற்றி பெற்றது. சுர்ஜித் சிங் பர்னாலா முதலமைச்சரானார். எனினும் பஞ்சாபின் நீலநட்சத்திர நடவடிக்கையின் அதிர்ச்சித் தாக்கத்திலிருந்து விடுபடவில்லை. அகாலி தளம் உட்கட்சிப் பூசலாலும் பிளவாலும் பலமிழந்தது.

### 20.2.9 தொழில்நுட்ப மிஷன்கள் (Technology Missions)

சோதனைகள் வேதனைகளுக்கிடையே அஸ்ஸாம் மற்றும் பஞ்சாப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்ட பிரதமர் ராஜீவ் காந்தி இந்தியாவை 21-ம் நூற்றாண்டின்



சவால்களை எதிர்கொள்வதற்குத் தயாராக்கும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார். தொழில்நுட்பத் திறமைகளை வளர்த்துக் கொள்வதன் மூலமே இதைச் சாதிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்த ராஜீவ் காந்தி **சாம் பிட்ரோடா** (Sam Pitroda)வின் ஆலோசனையின் பேரில் 6 **தொழில்நுட்ப மிஷன்** (Technology Missions)களைத் தோற்றுவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியால் துவக்கப்பட்ட 6 தொழில்நுட்ப மிஷன்களாவன: 1) **குடிநீர் மிஷன்** (Drinking Water Mission). இந்தியர் அனைவருக்கும், குறிப்பாக கிராம மக்களுக்கு நன்கு பாதுகாக்கப்பட்ட, சுகாதாரமான, போதிய குடிநீர் கிடைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மண்ணியல் (Geology), சிவில் பொறியியல் (Civil Engineering), உயிர் வேதியல் (Bio-Chemistry) ஆகியவற்றின் துணை கொண்டு செயற்கைக்கோள்கள் (Satellites) மூலம் நாட்டிலுள்ள நீர்வளங்களைக் கண்டறிந்து, வெளிக் கொண்டு வந்து, சேமித்து, தூய்மைப்படுத்தி மக்களுக்கு வினியோகிக்கும் மாபெரும் முயற்சியில் குடிநீர் மிஷன் ஈடுபட்டது. 2) **எழுத்தறிவு மிஷன்** (Literacy Mission). 'மக்கள் எழுத்தறிவில்லை' (Mass Illiteracy) என்ற களங்கத்தைப் போக்கி இந்திய கிராமங்களை எழுத்தறிவு மூலம் தேசிய வளர்ச்சி நீரோட்டத்தோடு இணைக்கும் மகத்தான முயற்சி இது. இத்திட்டத்தின் மூலம் கிராமங்களில் தொலைக்காட்சி (Television), பார்த்தல் – கேட்டல் ஒலி நாடாக்கள் (Video and Audio Cassettes), கற்பித்தல் சாதனங்கள் முறைகள் மூலம் '**அனைவருக்கும் எழுத்தறிவு**' என்ற கல்வித் திட்டம் துவக்கப்பட்டது. இதுவே பின்னர் '**முழு எழுத்தறிவு இயக்க**'மாக மலர்ந்தது.

3) நோய் தடுப்பு **மிஷன்** (Immunisation Mission) குழந்தைப் பேறுகால இறப்பு, இளம்பிள்ளை வாதம், தட்டம்மை போன்ற மழலை நோய்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தோடு நோய் தடுப்பு மிஷன் துவக்கப்பட்டது. 4) **பால் உற்பத்தி மிஷன்** (Milk Production Mission). சத்துணவுக்கு ஆதாரமான பால் உற்பத்தியைப் பெருக்கி வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான செயல் திட்டம் இது. 5) **சமையல் எண்ணெய் மிஷன்** (Edible Oill Mission). சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு அந்நிய செலவாணி விரயமாவதைத் தடுத்து 'சமயலெண்ணெய் சுயதேவைப் பூர்த்தி' என்ற இலக்கை எட்டுவதற்காகத் துவக்கப்பட்ட மிஷனாகும். 6) **தொலைபேசி மிஷன்** (Telephone Mission). 'ஒரு கிராமத்துக்கு ஒரு தொலைபேசி' என்ற குறிக்கோளுடன் 20–ம் நூற்றாண்டு முடிவதற்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற இலக்குடன் இந்த மிஷன் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 20.2.10 தொலைத் தொடர்பு புரட்சி ( Telecommunication Revolution)

பிரதமர் ராஜீவ் காந்தி சாம் பிட்ரோடாவின் ஆலோசனையின்படி தொலைத் தகவல் தொடர்பில் மாபெரும் மாற்றங்களைச் செய்தார். தானியங்கி தொலைத் தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்வதற்குப் பதில் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. கண்ணாடி இழை (Fiber Optics) தயாரிப்பதற்காக இரண்டு தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. இந்தியாவின் பெரிய நகரங்களை இணைப்பதற்காக '**உயர் வேக கண்ணாடி இழை பெருவழி**' (High Speed Fiber-Optic High Way) உருவாக்கப்பட்டது. 400 மாவட்டத் தலைமையகங்கள் தானியங்கி தொலைத் தொடர்பால் இணைக்கப்பட்டன. 120 நாடுகளுடன் **தொலைத் தொடர்பு** (International Direct Dialing) ஏற்படுத்தப்பட்டது. **பொதுத் தொலைபேசி நிலையங்கள்** (Public Call Offices) நாடு முழுவதும் துவங்கப்பட்டன. ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்ட **தொலைபேசிகள்** (Telephones) அன்றாடத் தேவைக்கான அவசியப் பொருளாயிற்று. 1980–ல் இருந்த 2.5 மில்லியன்

## 21.4. 'சார்க்'கில் இந்தியாவின் பங்கு (Role of India in SAARC)

### 21.4.1 'சார்க்' கின் தோற்றம்

ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் உருவான **'பிராந்தியக் கூட்டுறவுக்கான தெற்காசியப் பிராந்தியக் கூட்டமைப்பு** (South Asian Association for Regional cooperation) வரலாற்று முக்கியத்துவமுடைய வளர்ச்சியாகும். 1980 மே மாதம் 2 ஆம் தேதி பங்களாதேஷ் முனைப்போடு எடுத்த முயற்சியே 'சார்க்' அமைப்பாக மலர்ந்தது. 1984 ஆம் ஆண்டில் புது டெல்லியில் கூடிய தெற்காசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் 'சார்க்' கருத்தைச் செயல் திட்டமாகத் தீட்டினர். 1985 டிசம்பர் மாதம் 'சார்க்' நாடுகளின் முதல் உச்ச மாநாடு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது. பங்களாதேஷ் அதிபர் எர்ஷாத் அம்மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். பிரதமர் ராஜீவ் காந்தி ஆர்வத்துடன் பங்கேற்றார்.

### 21.4.2. புது டெல்லி 'சார்க்' உச்ச மாநாடு, 1986

1986 நவம்பர் 17,18 தேதிகளில் 'சார்க்' கின் இரண்டாவது உச்ச மாநாடு புது டெல்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் பல **முக்கிய முடிவுகள்** மேற்கொள்ளப்பட்டன: 1) பெண்கள் வளர்ச்சி நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான தொழில்நுட்பக் குழுக்களை அமைத்தல். 2) போதைப் பொருள் வர்த்தகத்துக்கு முடிவு கட்டல். 3) 'சார்க்' நடவடிக்கைகளை ஒலிபரப்புத் திட்டம், கற்றுணர் வளர்ச்சி, மாணவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் தேவையான வசதிகளைக் கொடுத்தல், இளைஞர்களின் இலட்சியத்துக்கு வடிகால் அமைத்தல் போன்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தல். 4) உறுப்பு நாடுகளின் பகுதிகளைப் பயங்கரவாதிகள் பயன்படுத்துவதைத் தடுத்தல். 5) அமைதி, கூட்டுறவு மற்றும் சர்வதேசச் சட்டங்களைப் பின்பற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கல். 6) 'சார்க்' செயலகத்தை காட்மாண்டுவில் ஏற்படுத்தல்.

1987 ஜூன் மாதம் 16–17 தேதிகளில் 'சார்க்'கின் **நிலைக் குழு** புது டெல்லியில் கூடி பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான செயல் திட்டத்தைத் தயாரித்தது. 1987 ஜூன் 18 ஆம் தேதி தெற்காசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றிய ராஜீவ் காந்தி "சார்க் அமைப்பு நமது குறிப்பிட்ட தேவைகளையும், முன்னுரிமைகளையும், தனித் தன்மையையும் பிரதிபலிக்கிறது" என்று குறிப்பிட்டார். சார்க்கின் சாதனைகளை விரிவுபடுத்தி வலுப்படுத்த வேண்டியதின் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

### 21.4.3. இஸ்லாமாபாத் உச்ச மாநாடு, 1988

1988 டிசம்பர் 29 ஆம் தேதி இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர்புட்டோவின் தலைமையில் நடைபெற்ற தெற்காசியப் பிராந்தியக் கூட்டமைப்பின் நான்காவது உச்ச மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் ராஜீவ் காந்தி எழுச்சியுறையாற்றினார். சார்க் நாடுகள் மேலும் முனைப்புடன் செயல்பட வேண்டும்; நிழல்களோடு விளையாடுவதில் பயனில்லை; வர்த்தக விரிவாக்கம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் பங்கேற்பு போன்ற கருத்துக்களை வலியுறுத்தினார். சுருங்கக்கூறின், பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலம் தெற்காசியப் பிராந்தியக் கூட்டமைப்பின் வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு ஆக்கப்பூர்வமானதாகவும், பெருமைக்குரி.யதாகவும் இருந்தது எனலாம்.

# 22. தேசிய முன்னணி ஆட்சி 1989–1991

> அரசியலுக்கு வந்தது நான் செய்த தவறு என்று உண்மையிலேயே உணர்கிறேன். இது என்னுடைய மிகப் பெரிய தவறு. மிகவும் முட்டாள் தனமான செயல்.
>
> – வி.பி.சிங்

## 22.1. பிரதமர் வி.பி.சிங்

### 22.1.1. வாழ்க்கைக் குறிப்பு

விஷ்வநாத் பிரதாப் சிங் (வி.பி.சிங்) 1931 ஜூன் 25 ஆம் தேதி அலகாபாத்தில் பிறந்தார். அவரது தந்தை ராஜா பகவதி பிரசாத்சிங் பாரம்பரியமிக்க **தைய்யா** (Daiya) அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். வி.பி.சிங் டேராடூனிலிருந்த கர்னல் பிரௌன் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலக் கல்வி பெற்றார். சிங் பிரௌன் 'போர்டிங்' பள்ளியில் படிப்பில் தேர்ச்சி பெறவில்லையாயினும் அபரிமிதமான தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டார். வி.பி.சிங் குடும்பச்சூழல் காரணமாக அலகாபாத்துக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்த பள்ளியில் சேர்க்கப்பட்டார் (1949). பின்னர் பனாரசிலிருந்த உதய் பிரதாப் கல்லூரியின் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். வி.பி.சிங் ஷத்திரியா கல்லூரி மாணவராக இருந்த போது மாணவர் மன்ற நடவடிக்கைகளிலும் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டார். பிறகு அலகாபாத் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவப் பாடங்களைப் பயின்றார். வி.பி.சிங் பொருளாதார முதுகலைப் படிப்பைத் தொடராமல் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார்.

1955–ல் வி.பி.சிங் ***சீதா குமாரியை*** திருமணம் செய்து கொண்ட பின் பூனா பெர்கூசன் கல்லூரியில் சேர்ந்தார். அங்கிருந்து மீண்டும் அலகாபாத்துக்குத் திரும்பி வந்து இயற்பியல் முதுகலைப் படிப்பில் சேர்ந்தார். அப்படிப்பையும் தொடரவில்லை. வி.பி.சிங்குக்குப் படிப்பில் பிடிப்பில்லையே தவிர கவிதை எழுதுவதிலும் ஓவியம் தீட்டுவதிலும் ஆர்வம் இருந்தது! வி.பி.சிங்கின் 'பம்பாய் காக்காய்' (Bombay crow) ஓவியம் பிரபல ஓவியர் எம்.எப்.ஹீசைனின் 'மாதுரி தீக்ஷீத்' (Maduri Dixit) ஓவியத்தைவிட அதிக விலைக்கு விற்கப்பட்டது!

வி.பி.சிங் மாணவராயிருந்தபோதே இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் ஆர்வம் காட்டினார். வினோபா பாவேயின் பூதான் இயக்கத்தால் பெரிதும் கவரப்பட்ட வி.பி.சிங் பாஸ்னா கிராமத்தில் அவருக்குச் சொந்தமான 100 ஏக்கர் வளமான நிலத்தைக் கொடையாகக் கொடுத்தார். அந்நிலத்தில் அரிசனங்களுக்கு வீடுகளும், ஆதிவாசிகளுக்குப் பள்ளிகளும் கட்டப்பட்டன. பின்னர் அவர் காங்கிரஸில் சேர்ந்தார். அவருக்கு லால் பகதூர் சாஸ்திரியோடு தொடர்பு ஏற்பட்டு சாஸ்திரி குடும்பத்தின் அணுக்க நண்பரானார். அவருக்கு தினேஷ்சிங், பகுகுணா போன்ற அரசியல் பிரபலங்களுடன் தொடர்பு ஏற்பட்டது. வி.பி.சிங்கின் செல்வாக்கு அலகாபாத்தில் அதிகரித்தது. பிரதமர் இந்திரா காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரமுகர்களின்

ஆதரவோடும் ஆசியோடும் **சோரன்** (Soraon) சட்டப்பேரவைத் தொகுதியில் காங்கிரஸ்
வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்திரா காந்தியைத் தன்னிகரற்ற
தலைவராக ஏற்றுக் கொண்டார். மக்கள் செல்வாக்கு பெற்ற சட்டமன்ற உறுப்பினராகத்
திகழ்ந்தார். இந்திரா காந்தியின் அரசியல் ஏற்ற இறக்கங்களின் போது வி.பி.சிங் அவரைத்
தயக்கமின்றி ஆதரித்தார். பூல்பூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி
பெற்றார் (1971).

வி.பி.சிங் மக்களவை விவாதங்களில் ஆர்வத்துடன் பங்கேற்று **'விஞ்ஞான ராஜ'**
என்று பெயர் பெற்றார். இந்திரா காந்தி அமைச்சரவையில் வர்த்தக இணை அமைச்சராக
இடம் பெற்றார். நெருக்கடி நிலையின் போது வி.பி.சிங் பிரதமர் இந்திரா காந்தியின்
தோன்றாத் துணையாக உறுதியாக இருந்தார். வி.பி.சிங் ராஜாங்க அமைச்சராகப் பதவி
உயர்வு பெற்றார் (1976). பின்னர் அலகாபாத் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட
வி.பி.சிங் இந்திரா காந்தி எதிர்ப்பு அலையால் தோல்வியுற்றார் (1977). இந்திரா காந்தி
மீண்டும் பிரதமரானவுடன் அவரது விசுவாசியான வி.பி.சிங்கை உத்திரப்பிரதேச
முதலமைச்சராக்கினார் (1980).

ராஜீவ் காந்தி அமேதி மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டபோது வி.பி.சிங்
அவருக்கு ஆதரவாகத் தீவிரபிரச்சாரம் செய்தார். ராஜீவ் காந்தி வெற்றி பெற்றார்.
இந்திரா காந்தியின் அகால மரணத்திற்குப்பின் பிரதமரான ராஜீவ் காந்தி வி.பி.சிங்கை
நிதி அமைச்சராக்கினார். **'தூய்மையான அரசாங்கம்'** என்ற ராஜீவ் காந்தியின் கவர்ச்சி
சொல்லாட்சி (Retoric) யை நடைமுறைப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்திய வி.பி.சிங்
பிரதமரோடு கருத்து மாறுபாடு கொண்டார். வி.பி.சிங் நிதித்துறையிலிருந்து பாதுகாப்புத்
துறைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அமைச்சர் பதவியிலிருந்து விலகிய வி.பி.சிங்
காங்கிரசிலிருந்தும் நீக்கப்பட்டார். காங்கிரசிலிருந்து நீக்கப்பட்ட சிங் **ஜன்மோர்ச்சா** (Jan
Morcha) அல்லது மக்கள் முன்னணியை துவக்கினார். 1984–ல் ஜனதா ஆட்சி லோக்தள்
கட்சியுடன் இணைந்து **ஜனதா தளம்** என்ற புதிய அமைப்பு உருவானபோது வி.பி.சிங்
அதனுடன் சேர்ந்தார். 1989–ல் வி.பி.சிங் பிரதமராகி தேசிய முன்னணி ஆட்சி அமைத்தார்.

## 22.1.2. நாடாளுமன்றத் தேர்தல், 1989

9வது நாடாளுமன்ற மக்களவையின் பதவிக்காலம் 1990 ஜனவரி மாதம் வரை
இருந்தது. எனினும் ராஜீவ் காந்தி அதற்கு முன்பே 1989 நவம்பர் மாதம் மக்களவைத்
தேர்தலை நடத்துவதென முடிவு செய்தார். அதற்குக் காரணம் பிரதமர் ராஜீவ் காந்தி
தேர்தலைத் தீக்குளிப்பாகக் கருதித் தன்னை நிரபராதி, கறைபடாக்கரங்களை உடையவர்,
திருவாளர் பரிசுத்தம் என்பதை நிரூபிக்க விரும்பினார். மக்களின் வாக்கைப் பெற்றுத்
பிரதமராகத் தொடரத் தீர்மானித்தார். அதிகார அமுதத்தின் ருசி கண்ட ராஜீவ் காந்தி
தேர்தல் அக்னிப் பரீட்சையில்வெற்றி பெற்று ஆட்சிக் கட்டிலேறும் நோக்கத்தோடு
மக்களவைத் தேர்தலை முன் கூட்டியே சந்திக்கத் தயாரானார். சுருங்கக்கூறின் 1989
பொதுத் தேர்தல் யார் பிரதமராக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கான
மக்கள் வாக்கெடுப்பாகும்.

திக்குத் தெரியாது திரிந்து கொண்டிருந்த எதிர்க்கட்சிகளுக்கு நாட்டின்
ஒன்பதாவது பொதுத் தேர்தல் வரப்பிரசாதமாக வந்தது. கட்டுப்பாடு குலைந்து
வேறுபட்டிருந்த எதிர்க்கட்சிகளுக்கு ஒரு காரணமும், காரியமும், தலைமையும் கிடைத்தன.
1977 இல் நெருக்கடி அத்துமீறல்களுக்குப்பின் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது
ஜனதா கூட்டணி உருவானதைப் போன்று ராஜீவ் காந்தியின் அதிகார அத்துமீறல்களை



முன்வைத்து ஒரு **'தேசிய முன்னணி'** (National Front) தோன்றியது. ஊழலின்
உறைவிடமாகக் கருதப்பட்ட காங்கிரசுக்கு எதிராக எலியும் பூனையும் போன்றிருந்த
வலதுசாரி பாரதீய ஜனதா கட்சியும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஜனதா
தளத்துடன் ஓரணி சேர்ந்தன! இச்சந்தர்ப்பவாதக் கூட்டணியின் நோக்கம் ஊழல்
ஒழிப்பாகவும், ராஜீவ் காந்தியைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குவதாகவும், அதற்கான
தலைமை வி.பி.சிங்காகவும் இருந்தது. 1977–ல் ஜனதா கூட்டணி இந்திரா காந்திக்கு
எதிராகத் தேர்தல் பிரச்சாரம் செய்தது. 1989–ல் தேசிய கூட்டணி ராஜீவ் காந்திக்கு
எதிராகப் பிரச்சாரம் செய்தது. வி.பி.சிங் ஊழல் அரக்கனான ராஜீவ் காந்தி என்ற
கோலியத்தை வீழ்த்த வந்த டேவிட்டாகச் சித்தரிக்கப்பட்டார். எனவே, பாரதத்தின் அடுத்த
பிரதமர் வி.பி.சிங்கா அல்லது ராஜீவ் காந்தியா என்பதைத் தீர்மானிப்பதற்காக 1989
பொதுத் தேர்தல் நடைபெற்றது எனலாம்.

ஜனதா தளத்தின் தேர்தல் அறிக்கையும், வி.பி.சிங்கின் தலைமையும் மக்களின்
உள்ளங்களையும் கொள்ளைகொண்டன. அஜித் சிங்கின் கோஷ்டியும், என்.டி.ராமா
ராவின் தெலுங்கு தேசமும், தமிழ்நாட்டுத் தி.மு.க.வும் ஜனதா தளத்தை ஆதரித்தன.
பி.ஜே.பி. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிலிருந்து ஜனதா தளத்தை ஆதரிக்க
முன்வந்தன. ஒவ்வொரு மக்களவைத் தொகுதியிலும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு
எதிராக ஒரு பொது வேட்பாளரை நிறுத்த எதிர்க்கட்சிகள் முடிவு செய்தன. அத்தேர்தல்
தந்திரம் நல்ல பலனைக் கொடுத்தது. 1989 தேர்தலில் காங்கிரசுக்கு 193 இடங்களும்,
ஜனதா தளத்துக்கு 141 இடங்களும், பி.ஜே.பிக்கு 88 இடங்களும், கம்யூனிஸ்ட்
கட்சிகளுக்கு 55 இடங்களும் கிடைத்தன. எந்த கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை
கிடைக்கவில்லை. இத்தேர்தலில் பெரும்பான்மை வாக்காளர்கள் ராஜீவ் காந்திக்கு
எதிராக வாக்களித்தனர் என்பது தெளிவாயிற்று. ராஜீவ் காந்தியின் ஆட்சியின்
விளைவாக காங்கிரஸ் 222 மக்களவை இடங்களை இழந்தது. காங்கிரஸ் தனிப்பெரும்
கட்சியாக இருந்தபோதிலும் ராஜீவ் காந்தி அரசாங்கம் அமைக்க முன்வரவில்லை. எனவே
ஜனதா தளத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வி.பி.சிங் பிற கட்சிகளின் ஆதரவோடு
மற்றொரு காங்கிரஸ்வாத **'சிறுபான்மை அரசாங்க'** த்தை அமைத்தார்.

## 22.2 தேசிய முன்னணிப் பிரதமர் வி.பி.சிங்

1989 மக்களவைத் தேர்தலுக்குப்பின் ஜனதா தளம் **தேசிய முன்னணி** (National
Front) அரசாங்கத்தை அமைக்க முன்வந்தது. குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன்
அக்கோரிக்கையை ஏற்றார். ஆனால் யார் பிரதமராவது என்பதில் சிக்கல் ஏற்பட்டது.
வி.பி.சிங் அடுத்த பிரதமர் ஆவார் என்ற எதிர்ப்பார்ப்பில் வாக்காளர்கள் வாக்களித்தனர்.
தேர்தல் முடிந்தபின் வி.பி.சிங், தேவிலால், சந்திரசேகர் ஆகியோரிடையே பிரதமர்
பதவிக்கான போட்டி ஏற்பட்டது. தேசிய முன்னணி நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்தில்
**'தேவிலாலின் சூழ்ச்சி'**யால் சந்திரசேகர் 'ஏமாற்றப்பட்டு' வி.பி.சிங் கட்சித் தலைவராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று கூறுகிறார் சீமா முஸ்தபா. 1989 டிசம்பர் 2 ஆம் தேதி
வி.பி.சிங்குக்கு பதவிப் பிரமாணம் செய்யப்பட்டது. அப்பதவிப் பிரமாண விழாவில்
தேவிலால் குடியரசுத் தலைவர் 'அமைச்சர்' என்று கூறியதற்கு பதில் தன்னைத் **'துணைப்
பிரதமர்'** (Deputy Prime Minister) என்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்!
தேவிலாலின் பொறுமையற்ற செயல் பொறுப்பற்ற தவறான நடைமுறையாகும். இது
மோசமான முன்மாதிரி. மரபுமீறிய செயல். 30 நாட்களுக்குள் மக்களவையின் நம்பிக்கை
வாக்கெடுப்பைப் பெறவேண்டும் என்ற நிபந்தனையோடு வி.பி.சிங் பிரதமர்
பொறுப்பேற்றார் (டிசம்பர் 5).

குடியரசுத் தலைவரால் நிராகரிக்க முடியவில்லை. வி.பி.சிங்கின் பொருத்தங்கெட்ட நடவடிக்கையை அவரது சகாக்களே எதிர்த்தனர். அதிகாரிகளின் அத்துமீறல்கள், அமைச்சர்களின் மோசமான குளறுபடிகள், செயல்–எதிர்செயல்கள், பிரதமரின் பலவீனங்கள் ஆகியவை காஷ்மீர்க் கொள்கையைக் கேலிக்கூத்தாக்கி விட்டது என்று குறிப்பிட்டுள்ளார் சீமா முஸ்தபா.

### 22.3.5. போபர்ஸ் பீரங்கி பேரப்பிரச்னை

வி.பி.சிங் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் எதிர்ப்பு அலையின்மீது பயணம் செய்து பிரதமரானவர். இவர் பிரதமர் பொறுப்பேற்றவுடன் போபர்ஸ் பிரச்னை பற்றி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் முனைப்புடன் ஈடுபட்டார். ரூ.1,70[illegible] கோடிக்கான போபர்ஸ் பீரங்கி பேரத்தைப் பற்றி விசாரிக்க உத்திரவிட்டார். போபர்ஸ் நிறுவனம் கையூட்டு வாங்கியோரின் பெயர்களை வெளியிடும் வரை பீரங்கிகள் வாங்குவதை நிறுத்தி வைத்தார். போபர்ஸ் விவகாரத்தைத் தீவிரமாக விசாரிக்குமாறு மத்திய புலனாய்வுத்துறை முடுக்கிவிடப்பட்டது. தேசிய தணிக்கைத் துறையின் முழு அறிக்கையையும் கொடுக்குமாறு சுவீடன் அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டது. பீரங்கி பேரம் நடைபெற்றபோது 'கமிஷன்' பெற்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கு அந்த அரசாங்கத்தின் உதவியும் நாடப்பட்டது.

வி.பி.சிங் அரசாங்கம் போபர்ஸ் விவகாரம் பற்றிய கோப்பைத் தயாரித்து போபர்ஸ் பீரங்கிப் பேரத்தின் போது பெறப்பட்ட கமிஷன் தொகை சுவிஸ் வங்கிகளில் போடப்பட்டதற்கான ஆவணங்கள் திரட்டப்பட்டது. அந்த ஆவணங்களின் நகல்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இரகசிய சுவிஸ் வங்கிக்கணக்குக்கான சங்கேத வார்த்தைகளான **'லோட்டஸ்' 'மான்ட்பிளாங்க்' 'டுலிப்'** மக்களிடையே பிரபலமாயின. வி.பி.சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கம் சுவீடன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து போபர்ஸ் பீரங்கி பேரத்தின்போது கையூட்டுகள் கொடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தீர்ப்பையும் பெற்றது. இதற்கிடையே இந்த ஊழலை மறைப்பதில் **இந்துஜாக்களுக்கும்** (Hindujas) பங்குண்டு என்பதற்கான ஆவண ஆதாரம் கிடைத்ததாகக் கூறப்பட்டது. எனினும் போபர்ஸ் பீரங்கிபேர ஊழலால் ஆதாயம் அடைந்தோரைக் கண்டுபிடிக்க முடியவில்லை!

### 22.3.6. இட ஒதுக்கீட்டுப் பிரச்னை

**இட ஒதுக்கீட்டுக் கொள்கை** (Reservation Policy): இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கான அடித்தளம் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது. **மார்லி–மிண்டோ சீர்திருத்தங்கள்** (Morley-Minto Reforms, 1909) முதன் முதலில் **வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை** (Communal Representation) அறிமுகப்படுத்தியது. இச்சீர்திருத்தங்கள் "மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு முதன் முறையாக முஸ்லீம்களின் நன்மைக்கான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது" **லக்னோ உடன்பாடு** (Lucknow pact, 1916) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை விரிவுபடுத்தியது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் (Montegu-Chemsford Reforms 1919) இப்பிரதிநிதித்துவத்தை மேலும் விரிவுபடுத்தியது. **சைமன் கமிஷன் அறிக்கை** (Simon Commission Report, 1930) தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி நிலையங்களிலும் தேர்தல்களிலும் இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தது. பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டோனால்டு வெளியிட்ட வரலாற்று முக்கியத்துவமுடைய 'வகுப்பு வாரித்



தீர்வி' (Communal Award, 1932) ல் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. **பூனா உடன்பாடு** (Poona Pact, 1932) தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கும் பொதுத்தொகுதிகளில் இட ஒதுக்கீடு செய்வதென முடிவு செய்தது.

இந்தியா விடுதலை அடைந்தபின் **1950 ஜனவரி 26 ஆம் தேதி** நடைமுறைக்கு வந்த அரசியலமைப்புச் சட்டத்தில் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்குச் சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இட ஒதுக்கீடு **10 ஆண்டுகளுக்கு (1950–1960)** மட்டுமே பின்பற்றப் படவேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் கூறியது **(சரத்து 334)** எனினும் இட ஒதுக்கீடு 8 (1960), 23 (1969), **45 (1980), 62 (1989)** வது சட்டத்திருத்தங்கள் மூலம் பத்தாண்டுகளுக்கொருமுறை புதுப்பிக்கப்பட்டு நீடிக்கப்பட்டது. 62வது திருத்தப்படி இட ஒதுக்கீட்டுக் கொள்கை கி.பி.2000 வரை நீடிக்கப்பட்டது.

**மண்டல் கமிஷன் அறிக்கை (Manda! Commission Report)**

பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் **1979 ஜனவரி முதல் தேதி** பி.பி.மண்டல் (B.P. Mandal) தலைமையில் **இரண்டாவது பிற்பட்ட வகுப்புகள் கமிஷன்** (Backward Classes Commission) நியமிக்கப்பட்டது. மண்டல் கமிஷன் தனது அறிக்கையை 1980 டிசம்பர் 31ஆம் தேதி சமர்ப்பித்தது. பத்தாண்டு காலம் கிடப்பில் போடப்பட்ட மண்டல் கமிஷன் அறிக்கைக்கு உயிர்கொடுக்க விரும்பினார் பிரதமர் வி.பி.சிங். வி.பி.சிங் அரசு 1990 ஆகஸ்டு 7 ஆம் தேதி மண்டல் அறிக்கையை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது அதன்படி;

1. இட ஒதுக்கீட்டுத் திட்டத்தின் முதல் கட்டமாக மண்டல் கமிஷன் அறிக்கைப் பட்டியலிலும், மாநிலங்கள் பட்டியல்களிலும் பொதுவாகக் காணப்படும் பிற்பட்ட வகுப்பாருக்கு இடஒதுக்கீட்டுச் சலுகை அளித்தல்.
2. சமூக மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள பிற்பட்ட வகுப்பாருக்கு 27% இட ஒதுக்கீடு செய்தல்.

இந்த இடஒதுக்கீடு மத்திய அரசாங்கப் பணிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பின்பற்றப்படும்.

வி.பி.சிங் அரசாங்கம் சமர்ப்பித்த இடஒதுக்கீட்டுத் திட்டத்தை நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஏற்றுக் கொண்டன. மத்திய அரசாங்கம் மண்டல் கமிஷன் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு 27% இடஒதுக்கீடு செய்வதாக அறிவித்தது (1990 ஆகஸ்டு 7). "பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு சமுதாய அதிகார அமைப்பிலும் முடிவெடுப்பதிலும் உரிய பங்களிக்க வேண்டும். மண்டல் கமிஷன் அறிக்கையை செயல்படுத்துவது அதற்கான முதல்படியாகும். "பலவீனப் பிரிவினருக்கு நீதி வழங்க சில துணிகரமான தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது" என்று உறுதியாகக் கூறினார் பிரதமர் வி.பி.சிங்.

**மண்டல் ஆர்ப்பாட்டம் (Mandal Agitation)**

வி.பி.சிங் அரசாங்கத்தின் பிற்பட்ட வகுப்பாருக்கு 27% இட ஒதுக்கீடு என்ற அறிவிப்பு (1990 ஆகஸ்டு 7) குடுவைக்குள் கிடந்த பூதத்தைக் கிளப்பி விட்டது போலாயிற்று. வட இந்திய மாநிலங்களில் வன்முறை வெடித்தது (ஆகஸ்டு 8). பல பிரதான நகரங்களில் மத்தியதர மற்றும் உயர் வகுப்பைச் சேர்ந்தோர் அரசாங்கத்தின் இடஒதுக்கீட்டுத் திட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். குறிப்பாக

மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதான பங்கேற்றனர். பீகாரில் துவங்கிய வன்முறைக் கிளர்ச்சி பிற மாநிலங்களுக்கும் காட்டுத்தீ போல விரைந்து பரவிற்று. அரசாங்க சொத்துக்கள் அழிக்கப்பட்டன. டெல்லி, கோரக்பூர், வாரணாசி, கான்பூர், மதுபானி, தான்பாத் போன்ற நகரங்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலர் இறந்தனர். போலீஸ் அராஜகம் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. ராஜஸ்தானத்தில் ஆர்ப்பாட்டத்தை அடக்க இராணுவத்தை அனுப்ப வேண்டியதாயிற்று. டெல்லியில் மாணவர்கள் பல்கலைக்கழகப் பட்டங்களைக் கிழித்தெறிந்தனர்.

மண்டல் ஆர்ப்பாட்டம் கொதிநிலையை எட்டியது. அமைச்சரவைக்குழுவின் அரசியல் விவகாரங்கள் கமிட்டி 5லிருந்து 10% இடங்களைப் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பாருக்கு ஒதுக்குவது பற்றிய திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்தது (ஆகஸ்டு 27). இதுபற்றி பரிசீலிப்பதற்காகக் கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிகள் கூட்டம் இச்சிறப்பு **இடஒதுக்கீட்டை** (Special Reservation) நிராகரித்தது (டிசம்பர் 4). அக்கூட்டத்தில் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. இடஒதுக்கீட்டு பற்றிக் காங்கிரசில் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. இடஒதுக்கீட்டுத் திட்டத்தை எதிர்த்து எதிர்க் கட்சிகளும் ஆர்ப்பாட்டத்தில் குதித்ததால் நிலைமை மோசத்திலிருந்து படுமோசமாயிற்று. டெல்லி பல்கலைக்கழக மாணவர் ராஜீவ் **கோஸ்வாமி** (Rajiv Goswami) தீக்குளித்தார். மாணவர்கள் கொதித்தெழுந்தனர். உச்ச நீதிமன்றம் அரசாங்கத்தின் இடஒதுக்கீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதைத் தடை செய்ய மறுத்துவிட்டது (செப் 22). **எஸ்.எஸ்.சௌகான்** (S.S.Chowhan) என்ற மற்றொரு மாணவரும் தீக்குளித்தார் (செ. 25). வன்முறைக்கிளர்ச்சி உச்சகட்டத்தை எட்டியது. உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலிருந்து நிறுத்தி வைத்தது (அக். 1).

பிரதமர் வி.பி.சிங் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுக் கொள்கையையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதை **'வரலாற்றுக் கட்டாயமா'**கக் கருதினார். புறக்கணிக்கப்பட்ட சகோதரர்களுக்குச் சமூக நீதி வழங்க வேண்டியதைக் 'கட்டாயக் கடமை'யாகக் கொண்டார். **'கட்டாயப்படுத்தாமல் வரலாற்றை மாற்ற முடியாது'** என்றார். எனவே ஆதரவுக் கட்சிகளைக்கூட கலந்தாலோசிக்காமல் 'மண்டல் முடிவை' மேற்கொண்டார். இம்முடிவைக் காங்கிரஸ் கூண்டோடு எதிர்த்தது. பா.ஜ.க.வும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பொருளாதார அளவுகோலின்படி இடஒதுக்கீடு செய்வதை விரும்பின. பத்திரிகைகளும் வி.பி.சிங்கின் தீவிரத் திட்டத்தை ஆதரிக்க வில்லை. எனினும், சமகால இந்திய வரலாற்றில் பிற்பட்ட வகுப்பாருக்கு அதிகாரமளித்த (empowerment) பெருமை வி.பி.சிங்கையே சேரும் எதற்கும் ஒரு விலையைக் கொடுக்க வேண்டும் என்றார் வி.பி.சிங். மண்டல் அறிக்கையை நிறைவேற்றமுற்பட்ட வி.பி.சிங் பிரதமர் பதவியை விலையாகக் கொடுத்தார்.

### 22.3.7. ராமஜென்மபூமி பிரச்சனை

பிரதமர் வி.பி.சிங் மண்டல் கமிஷன் அறிக்கையை செயல்படுத்தியதால் வடஇந்தியா எரிந்து கொண்டிருந்தபோது அயோத்தியாவில் ராமர் கோயில் கட்டும் **பிரச்னை** விசுவரூப மெடுத்தது. 1989 இறுதியில் விஸ்வ இந்து பரிஷத் அயோத்தியாவில் ராமர் கோயில் கட்டுவதற்காக **அடித்தளம் அமைக்கும் திட்டத்தை** (Shilanyas)த் **தீவிரமாகப் பின்**பற்றியது (நவ. 9). அதை ஆதரித்த பா.ஜ.க. 1989 பொதுத் தேர்தலில் **தன்** பலத்தைப் பெருக்கிக் கொண்டது. தேசிய முன்னணி அரசாங்கத்தைத் **தீர்மானிக்கும் சக்தி**யாக உருவெடுத்தது. வி.பி.சிங் மண்டல் சீட்டை விளையாடியபோது



ராஷ்ட்ரிய சுவயம் சேவக் சங்கமும் விஸ்வ இந்து பரிஷத்தும் ராமர் கோயில் துருப்புச் சீட்டைப் போட்டது. வி.பி.சிங் மண்டல் அறிக்கையின் பெயரில் 52 விழுக்காடு பிற்பட்ட வகுப்பாரின் வாக்குகளைப் பெற விரும்பும் போது பா.ஜ.க. ஏன் மந்திர் கோரிக்கையை எழுப்பி 80 சதவிகித இந்துக்களின் வாக்குகளைப் பெறக்கூடாது என்று எண்ணியது. ராமஜென்ம பூமி பிரச்னை பூதாகாரமாக உருவெடுத்தது.

### 22.3.8. வி.பி.சிங்கின் வீழ்ச்சி

பா.ஜ.க., வி.பி.சிங் அரசாங்கத்துக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதால் தேசிய முன்னணி – பா.ஜ.க உறவு முறிந்தது. தேசிய முன்னணி அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை இழந்தது. வி.பி.சிங் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்யாமையால் குடியரசுத் தலைவர் அவரை நவம்பர் 7–ஆம் தேதி நாடாளுமன்றத்தின் நம்பிக்கை வாக்கெடுப்பைப் பெறுமாறு கோரினார். அதற்குள் ஜனதா தளக் கோட்டைக்குள் "குத்துவெட்டு" துவங்கியது. அதிருப்தியாளர்கள் வி.பி.சிங்கால் பதவியிலிருந்து விலக்கப்பட்ட முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் சந்திரசேகருடன் சேர்ந்துகொண்டனர்.

ஜனதா தளக் "கிளர்ச்சிக்காரர்கள்" தனியேகூடி சந்திரசேகரைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். ஜனதா தளம் பிளவுபட்டது. வி.பி.சிங் சந்திரசேகரையும் மற்றும் 29 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சியிலிருந்து விலக்கினார். அந்த நேரம் பார்த்து ராஜீவ் காந்தி சந்திரசேகருக்கு நேசக்கரம் நீட்டினார். 1990 நவம்பர் 7–ஆம் தேதி அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. பதினோறுமணி நேர காரசார விவாதத்துக்குப்பின் நம்பிக்கைத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வி.பி.சிங்குக்கு ஆதரவாக 142 வாக்குகளும் எதிராக 346 வாக்குகளும் கிடைத்தன. நம்பிக்கை வாக்கைப் பெற முடியாத வி.பி.சிங் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.

## 22.4. பிரதமர் சந்திரசேகர்

### 22.4.1. வாழ்க்கைக் குறிப்பு (1927– )

எஸ். சந்திரசேகர் 1927 ஜூலை முதல் தேதி உத்திரபிரதேசத்தில் உள்ள பல்லியா மாவட்டத்தைச் சேர்ந்த இப்ராஹிம் பேட் என்ற சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவர் அலகாபாத் ப்லகலைக் கழகத்தில் அரசியலில் முதுகலைப்பட்டம் பெற்றார் (1951). சந்திரசேகர் மாணவராக இருந்தபோதே காங்கிரசில் சேர்ந்து தீவிர தொண்டாற்றினார். பல்லியா மாவட்ட மாணவர் காங்கிரஸ் தலைவரானார். பின்னர் ஆச்சார்ய நரேந்திர தேவாவின் சோஷலிசக் கொள்கையால் கவரப்பட்டார். பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அக்கட்சியின் உ.பி.கிளைக்கு கிளைச் செயலாளரானார் (1955). நாடாளுமன்றத்தின் மாநிலங்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1962).

1965 ஆம் ஆண்டு சந்திரசேகர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து விலகி மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார். நாடாளுமன்ற உறுப்பினரானார். நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் பழமை வாதிகளுக்கெதிராக இளைய உறுப்பினர்களை ஒன்று திரட்டினார். "இளம் துருக்கியர்" (Young Turks) என்று அறியப்பட்ட அவர்கள் இந்திரா காந்தியின் சோஷலிச முற்போக்குத் திட்டங்களுக்குத் தீவிர ஆதரவளித்தனர். நிதி அமைச்சராயிருந்த மொரார்ஜி தேசாயின் மகன் காந்திபாய் தேசாயின் ஊழல்களை அம்பலப்படுத்தினார். 1969–ல் காங்கிரஸ் பிளவுபட்ட போது சந்திரசேகர் இந்திரா காந்தியின் தீவிர ஆதரவாளராக இருந்தார்.

# 28. நரசிம்ம ராவ் ஆட்சி (1991–1996)

> பி.வி.நரசிம்ம ராவ் கூடுமுனையை அடையும் வரை அதிகாரத்தைக் குவித்தார்.
>
> – சயீத் நக்வி

## 23.1 வாழ்க்கைக் குறிப்பு (1921 – 2004)

பி.வி.நரசிம்ம ராவ் 1921 ஜுன் 28 ஆம் தேதி ஆந்திராவில் வாரங்கல் மாவட்டத்தில் நரசப்பேட்டா தாலுகாவைச் சேர்ந்த லகனேபள்ளி என்ற கிராமத்தில் மத்தியதர பிராமண குடும்பத்தில் பிறந்தார். வங்கரா மற்றும் எலூரு கிராமப் பள்ளிகளில் படித்த நரசிம்மராவ் உயர்நிலைக் கல்வி பெற வாரங்கல் வந்தார். மெட்ரிக் தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றார் (1937). வாரங்கல் நகரக் கல்லூரியில் 'இண்டர் மீடியட்' படித்தார். அரசியலில் தீவிர பங்கேற்றதால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப் பட்டார் (1938). பின்னர் நாகபுரி பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இண்டர் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய ராவ் புனா பர்கூசன் கல்லூரியில் படித்து அறிவியலில் இளங்கலைப்பட்டம் பெற்றார். பின்னர் சட்டப்பட்டம் பெற்றார்.

நரசிம்ம ராவ் மாணவராயிருந்தபோதே அரசியலில் ஈடுபாடு கொண்டார். காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. ஐதராபாத்தில் வக்கில் தொழில் செய்தபோதும் அரசியலில் பங்கேற்றார். 1942–ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தொடங்கிய போது ராவ் வக்கீல் தொழிலைத் துறந்துவிட்டு தேச விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். இந்தியா விடுதலை அடைந்தபின் நரசிம்மராவ் ஐதராபாத்தை நிஜாமின் ஆட்சியிலிருந்து விடுவிக்க சுவாமி இராமானந்த தீர்த்தர் துவக்கிய போராட்டத்தில் கலந்து கொண்டார். மதக்கலவரத்தை மையமாக வைத்து அவர் எழுதிய **'நீலநிற பட்டுப் புடவை'** என்ற சிறுகதை சலசலப்பை ஏற்படுத்தியது.

ஐதராபாத் இந்தியாவுடன்இணைக்கப்பட்டபின் (1948) நரசிம்மராவ் தெலுங்கானா சென்றார். ராவ் கரீம் நகர்த் தொகுதியில் போட்டியிட்டு மக்களவை உறுப்பினரானார். வினோபாபாவின் பூதான இயக்கத்துக்கு ஆதரவளித்தார் (1951). விசால ஆந்திரம் அமைக்கப்பட்டபின் ராவ் கரீம் நகர் ஜில்லாவில் 'மந்தளி' சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றி பெற்றார் (1957). ராவ் மீண்டும் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் சஞ்சீவி ரெட்டி அமைச்சரவையில் இடம் பெற்றார். பின்னர் பிரம்மானந்த ரெட்டியின் அமைச்சரவையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1967 தேர்தலில் வெற்றிபெற்ற ராவ் தொடர்ந்து அமைச்சராகப் பணியாற்றினார்.

தெலுங்கானா கிளர்ச்சியின் போது பிரதமர் இந்திரா காந்தி தலையிட்டு சமரசத் தீர்வு கண்டார். அதாவது தெலுங்கானாவைச் சேர்ந்தவர்கள் ஆந்திராவின் முதலமைச்சராக வேண்டும். அதன்படி பிரம்மானந்த ரெட்டி முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். நரசிம்மராவ் முதலமைச்சரானார் (1971). 1972–ல் மீண்டும் மார்ச் மாதம்



பெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் ராவ் 'மந்தளி' தொகுதியில் போட்டியிட்டு வென்றார். ஆந்திராவின் முதலமைச்சராகத் தொடர்ந்து திறமையாகப் பணியாற்றினார். இந்திரா காந்தியின் ஆலோசனைப்படி நரசிம்ம ராவ் 1973 ஜனவரி 17 ஆம் தேதி முதலமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார். இந்திரா காந்தியின் இதயப்பூர்வமான ஆதரவாளரான ராவ் 1977 தேர்தலில் போட்டியிட்டு 'ஜனதா அலை' யையும் மீறி மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1980 தேர்தலில் ஹனுமந் கொண்டா மக்களவைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற ராவ் இந்திரா காந்தியின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்திரா காந்திக்குப்பின் பிரதமரான ராஜீவ் காந்தி ராவை பாதுகாப்பு அமைச்சராக்கினார். சந்திரசேகர் அரசு கவிழ்ந்தவுடன் நரசிம்ம ராவ் பிரதமர் பொறுப்பேற்றார் (1991 ஜுன் 21).

## 23.2 பத்தாவது நாடாளுமன்றத் தேர்தல், 1991

சுதந்திர இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 1991 ஆம் ஆண்டு இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. அத்தேர்தல் தலைமைத்தேர்தல் கமிஷனர் டி.என்.சேஷன் கொண்டு வந்த பல புரட்சிகரமான நடைமுறைகளால் மிகுந்த எச்சரிக்கையுடன் நடத்தப்பட்டது. 1991 மே 20 ஆம் தேதி முதல் சட்டத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் கோரமாகக் கொல்லப்பட்டார் (மே 21). ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால் மே 23 ஆம் தேதி நடக்கவிருந்த இரண்டாம் கட்டத் தேர்தல் ஜுன் 15 ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டது. இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட இத்தேர்தலில் எக்கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. சந்திரசேகரின் ஜனதா தளம் (சோஷலிஸ்ட்) பரிதாபகரமாகத் தோற்றது. காங்கிரஸ் 225 இடங்களைப் பெற்றுத் தனிப்பெரும் கட்சியாக இருந்தது. பா.ஜ.க வுக்கு 119 இடங்களிலும், ஜனதா தளத்துக்கு 53 இடங்களும் கிடைத்தன. 1989 பொதுத் தேர்தலைப் போன்றே இத்தேர்தலிலும் எக்கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்காமையால் மீண்டும் **"தொங்கு நாடாளுமன்றம்"** (Hung Parliament) அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

## 23.3. சிறுபான்மை அரசாங்கம்

### 23.3.1 அமைச்சரவை

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால் அடுத்த காங்கிரஸ் தலைவ... தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. சில காங்கிரஸ் தலைவர்கள் ராஜீவ் காந்தி... மனைவி சோனியா காந்தி அப்பொறுப்பை ஏற்கவேண்டும் என்றனர். சோனியா காங்கி... தலைவராக மறுத்ததால் காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் பி.வி. நரசிம்ம ராவ், அர்ஜு... சிங், சரத் பவார் ஆகியோர் பரிசீலிக்கப்பட்டனர். 1991 ஜுன் 20 ஆம் தேதி நாடாளும... காங்கிரஸ் கட்சி மக்களவை உறுப்பினராக இல்லாத நரசிம்மராவை ஒரு மனதாக அ... தலைவராகத் தேர்ந்தெடுத்தது. மக்களவை தனிப்பெரும் தலைவரான நரசிம்மரா... அரசாங்கம் அமைக்குமாறு அழைப்பு விடுத்தார் குடியரசுத் தலைவர் (ஜுன் 2). குடிய... தலைவர் ஆர்.வெங்கட்ராமனால் பதவிப் பிரமாணம் செய்துவைக்கப்பட்ட மூன்றா... பிரதமரான ராவ் இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராகப் பொறுப்பேற்றுச் சிறுபான்... அரசாங்கத்தை (Minority Government) அமைத்தார். 58 அமைச்சர்களைக் கொ... அமைச்சரவை நரசிம்மராவ் தலைமையின்கீழ் ஆட்சிப் பொறுப்பேற்றது.

### 22.3.2 சபாநாயகர் தேர்தல்

1991 ஜூலை 9–ல் பத்தாவது மக்களவையின் முதல் கூட்டம் கூட்டப்பட்டது. சபாநாயகரை முறையாகத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டது. மரபுவழி சபாநாயகர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பார். ஆனால் காங்கிரசுக்கு அறுதிப் பெரும்பான்மையின்மையால் மற்றொரு கட்சியின் ஆதரவின்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்க இயலாது. ஜனதா தளமும் இடதுசாரிக் கட்சிகளும் ஓய்வு பெறவிருந்த சபாநாயகர் ரபிராயைத் தேர்ந்தெடுக்க விரும்பினர். பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் 'மதவாதக் கட்சி' யான பா.ஜ.க.வின் ஆதரவோடு முன்னாள் துணை சபாநாயகரான **சிவராஜ் பட்டீலை** சபாநாயகராக்கினார். பா.ஜ.க. வைச் சேர்ந்த ஒருவரைத் துணை சபாநாயகராக்கக் காங்கிரஸ் சம்மதித்தது. சிறுபான்மை அரசாங்கம் சமயச்சார்பின்மைக் கொள்கையை விட்டுக்கொடுத்து முதல் தடையைக் கடந்தது!

### 23.3.3 நம்பிக்கை வாக்கெடுப்பு

1991 ஜூலை 11ஆம் தேதி குடியரசுத் தலைவர் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். 1991 ஜூலை 15ஆம் தேதி மக்களவை நம்பிக்கை வாக்கெடுப்பில் தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் கலந்துகொள்ளாமையால் நரசிம்ம ராவின் சிறுபான்மை அரசாங்கம் உயிர் பிழைத்தது. நான்கு நாட்கள் விவாத முடிவில் நம்பிக்கைத் தீர்மானத்துக்கு ஆதரவாக 241 வாக்குகளும், எதிராக 111 வாக்குகளும் கிடைத்தன. ராவ் ஆட்சியைக் கவிழ்த்து இடைத் தேர்தலை சந்திக்க எந்த கட்சியும் தயாராயில்லை. எனவே, நரசிம்ம ராவ் நம்பிக்கை வாக்கெடுப்பு பெறுவதற்குச் சூழ்நிலைக் கட்டாயம் சாதகமாக இருந்தது.

## 23.4. புதிய பொருளாதாரக் கொள்கை

### 23.4.1. பொருளாதார நெருக்கடி

நரசிம்ம ராவ் பிரதமர் பொறுப்பேற்றபோது இந்தியாவின் பொருளாதார நிலை மிகுந்த கவலை அளிக்கக் கூடியதாக இருந்தது. நாடு பொருளாதார நெருக்கடியில் நலிந்து கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அந்நியச் செலவாணி அடிமட்டத்தில் இருந்தது; ஏற்றுமதி–இறக்குமதி தேக்க நிலையை அடைந்தது; தொழில் வளர்ச்சி விகிதம் எதிர் மறையாக இருந்தது; உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் மிகக் குறைவாக இருந்தன; கடன் சுமை அபாய அளவை எட்டியது; வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் (non-resident Indians-NRIs) தங்களது இந்திய சேமிப்பைக் குறைக்கலாயினர்; சர்வதேச வங்கிகள் இந்தியாவுக்குக் கடனுதவி அளிக்கத் தயங்கின; வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருள்கள், குறிப்பாகப் பெட்ரோலியப் பொருள்கள், இறக்குமதி செய்வது இயலாத காரியமாயிற்று... சுருங்கக்கூறின் இந்தியப் பொருளாதாரம் நோயுற்ற நிலையில் இருந்தது.

### 23.4.2. டாக்டர் மன்மோகன் சிங்

டாக்டர் மன்மோகன் சிங் நரசிம்ம ராவ் அரசாங்கத்தில் நிதி அமைச்சராக இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சிக்கு வெளியிலிருந்து அழைத்துவரப்பட்டவர். பொருளாதார மேதை. சர்வதேச நிதி நிறுவனங்களுடன் நன்கு தொடர்பு கொண்டிருந்தவர். உலக நிதி நிலைபற்றி நன்கறிந்தவர். இந்தியாவை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியை, குறிப்பாக அந்நியச் செலாவணிச் சவாலைச் சமாளிக்கக்கூடிய திறமையுடையவர். அவரது பொருளாதார அணுகுமுறை சமகால இந்தியப் பொருளாதார வரலாற்றில் குறிப்பிடத்தக்க திருப்பு முனையை ஏற்படுத்தியது எனலாம்.



### 23.4.3. பொருளாதாரப் புரட்சி

மூச்சுத் திணறிக் கொண்டிருந்த இந்தியப் பெருளாதாரத்துக்கு உலக வங்கி (World Bank)க் கடன்கள் என்ற பிராண வாயுவைச் செலுத்தி உயிர்பிழைக்க வைக்கும் முயற்சியை மேற்கொண்டார் நிதி அமைச்சர் மன்மோகன் சிங், ஆனால் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் பல நிபந்தனைகளை விதித்தது; 1) பண வீக்கத்தை 8% ஆகக் கட்டுப்படுத்த வேண்டும்; 2) பணச் செலவுப் பற்றாக் குறையை (Fiscal deficit)க் குறைக்க வேண்டும்; 3) ரூபாய் மாற்று விகிதத்தை (Convertibility of rule)ப் படிப்படியாக மாற்றியமைக்க வேண்டும்; 4) தங்கத் தீர்வைத் தடையை நீக்க வேண்டும்; 5) அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை விலக்க வேண்டும். எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டு ராவ் அரசாங்கம் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொலைநோக்குடன் வகுத்துத் துணிவுடன் செயல்படுத்தியது.

அமைப்பு மாற்றம் (Structural change), **தாராளமயமாக்கல்** (liberalisation), **தனியார் மயமாக்கல்** (Privitisation), **நவீனமயமாக்கல்** (modernisation), **உலகமயமாக்கல்** (globalisation) ஆகியவை புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்கள் அல்லது சிறப்பியல்புகள் ஆகும். சோஷலிசம், கலப்புப் பொருளாதாரம், பொதுத்துறைக்கு முன்னுரிமை கைவிடப்பட்டது. மாறாக, தனியார் துறையை ஊக்குவித்து, போட்டிப் பொருளாதாரத்துக்கு வாய்ப்பளித்து, சந்தைப் பொருளாதார முறை பின்பற்றப்பட்டது. பிரதமர் ராஜீவ் காந்தி துவக்கிய பொருளாதாரப் புரட்சி ராவ் அரசாங்கத்தால் முழு மூச்சுடன் முன்கொண்டு செல்லப்பட்டது.

ஒருங்கிணைந்த புதிய பொருளாதாரத் திட்டத்தின் விளைவாக 1) பொருளாதார, தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் அரசாங்கக் குறுக்கீடும், கட்டுப்பாடும், நிர்வாக நடைமுறைகளும் தளர்த்தப்பட்டு, எளிதாக்கப்பட்டன; 2) சந்தைப் பொருளாதாரத்திற்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது; 3) அரசு மானியம் படிப்படியாகக் குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது; 4) நஷ்டத்தில் இயங்கி வந்த பொதுத்துறை நிறுவனங்களின் அரசாங்க முதலீடு படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு அதற்கு பதில் தனியார் முதலீடு ஊக்குவிக்கப்பட்டது; 5) அத்யாவசியத் தொழில்கள் தவிர பிற தொழில்களுக்கு உரிமம் (Licence) வழங்கும் முறை பெரிதும் தளர்த்தப்பட்டது அல்லது விலக்கிக் கொள்ளப்பட்டது; 6) சர்வதேச சந்தையின் தரக்கட்டுப்பாட்டுக்கேற்ப ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் ராவ் அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு நம்பகமான வடிவம் கொடுத்துச் செயல்படுத்தினார்.

புதிய பொருளாதாரச் சீர்திருத்தத்தின் விளைவாகப் பல **நன்மைகள்** ஏற்பட்டன. 1) பணவீக்க விகிதம் கணிசமாகக் குறைந்தது; 2) ஏற்றுமதி அதிகரித்ததால் அந்நியச் செலாவணி சேமிப்பு அதிகரித்தது; 3) தாராளமயப் பொருளாதாரக் கொள்கையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனம் பெருகியது. 4) வரிக்கொள்கை மாற்றத்தின் மூலம் சேமிப்பை அதிகரித்தது; அரசாங்க வருவாயைப் பெருக்கி, உற்பத்தி அளவு உயர்த்தப்பட்டது; 5) இந்தியா சர்வதேச சந்தையில் வெளிநாடுகளுடன் போட்டியிட்டு விற்பனை செய்யும் தன்னம்பிக்கையையும் துணிவையும் பெற்றது; 6) வெளிநாட்டு இந்தியர்கள் தடையின்றித் தங்கம் கொண்டு வருவதற்கு அனுமதி அளித்ததின் மூலம் தங்கத்தின் விலை கட்டுப்படுத்தப்பட்டது; 7) அந்நியச் செலாவணி அதிகரித்ததன் மூலம் இந்திய வளர்ச்சிக்கழகத்தின் சேமிப்பு உயர்ந்தது; 8) தொழில் நுட்பங்களால் ஏற்படும் விளைவுகளிலிருந்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக 'தேசிய நவீன

மாநாட்டை நடத்தினார் ராவ். நரசிம்மராவ் திருப்பதி மாநாட்டில் காங்கிரஸ் தலைவராக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் தலைவராக இருபது ஆண்டு கால இடைவெளிக்குப் பின் ராவ் தேர்ந்தெடுக்கப்பட்டது அவரது சட்ட முறைமையையும், நம்பகத்தன்மையையும், உண்மையான கட்சி அங்கீகாரத்தையும் அளித்தது.

## 23.7 பாபர் மசூதி – ராம ஜென்ம பூமி பிரச்னை

### 23.7.1 'பாபர் மசூதி'

முகலாய மன்னர் **சாகிர் உதீன் முகமது** என்ற **'பாபர்'** (சிங்கம்) இந்தியாவை ஆட்சி செய்த போது (1526 – 1930) தற்போதைய உத்திரப் பிரதேசத்தில் உள்ள அயோத்தியில் **1528** ஆம் ஆண்டு கட்டப்பட்ட மசூதி 'பாபர் மசூதி' என்று அழைக்கப்படுகிறது. 18–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாபர் மசூதிக்கு அருகாமையில் இருந்த ஒரு சிறு மேடை தான் ராமர் பிறந்த இடம் என்று எண்ணி இந்து யாத்ரீகர்கள் வழிபட்டதாக 1786ல் **தீபன்தாபர்** (P.Tieffenthaper) என்ற ஜெஸ்யூட் பாதிரியார் கொடுத்த வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது. 1853ல் **இந்து துறவிகள்** (Hindu Bairagis) பாபர் மசூதி ராமர் பிறந்த இடத்தில் கட்டப்பட்டதாகக் கூறி **அதைத் தாக்கினர்!** அதன்பின் ஏற்பட்ட **சமரசப்படி** பாபர் மசூதிக்கு வெளியே இருந்த மேடையில் இந்துக்கள் பூஜை செய்யலாம் என்று முடிவாயிற்று. அதன்படி இந்து பூசாரிகளும் பக்தர்களும் அந்த மேடையில் (Ghabookra) வழிபாடு செய்து வந்தனர். **1857** பெருங் கிளர்ச்சிக்குப் பின் பாபர் மசூதிக்கு உரிமை கொண்டாடி இந்துக்களும் முஸ்லீம்களும் பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் **வழக்கு** தொடர்ந்தனர். 1883ல் ஒரு பண்டிதர் இந்துக்கள் வழிபட்டு வந்த மேடை இருந்த இடத்தில் ஒரு கோயில் கட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை பிரிட்டிஷ் அதிகாரிகள் நிராகரித்ததாக குறிப்பிட்டுள்ளார் எஸ்.கே.திரிபாதி.

### 23.7.2 மசூதிக்குள் ராமர் சிலை!

இந்தியா விடுதலை அடைந்தவுடன் ராமஜென்ம பூமிப் பிரச்னை எழுப்பப்பட்டது. **'அகில பாரதீய ராமாயண மகாசபை'** என்ற அமைப்பைச் சேர்ந்தவர் பாபர் மசூதிக்கு முன்னால் 9 நாட்கள் தொடர்ந்து **'ராமச்சந்திரமனஸ்'** என்ற ராமாயணத்தைப் படித்து வந்தார்; பாபர் மசூதிக்குப் பக்கத்தில் **இருந்த முஸ்லீம் கல்லறைகள் அவமதிக்கப்பட்டன** என்று கூறுகிறார் எஸ்.ஸ்ரீவஸ்தவா. **1949 டிசம்பர் மாதம் நள்ளிரவில் சிலர்** பாபர் மசூதியின் பூட்டை உடைத்து, உள்ளே **நுழைந்து** ராமர் **சிலைகளை வைத்து** விட்டனர்! இந்துக்கள் இச்சிலைகளை **'அதிசயம்'** என்றனர்; **முஸ்லீம்கள் இதை 'அடாவடித்தனம்'** என்றனர்!

### 23.7.3 சர்ச்சைக்குரிய பகுதி

பாபர் மசூதி ராமர் கோயிலாக மாற்றப்பட்டுவிட்டதாகவும், அந்த இடத்தில் 'யக்ஞம்' நடத்தப்பட்டதாகவும், அதில் மக்கள் பெருந்திரளாக வந்து கலந்து கொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பேச்சுக்கள் மத உணர்ச்சியைத் தூண்டக் கூடியதாக இருந்தன. காந்தி, நேரு மற்றும் காங்கிரஸ்காரர்கள் வெளிப்படையாக நிந்திக்கப்பட்டனர்! அப்போது உத்திரப்பிரதேச முதலமைச்சராக இருந்த **கோவிந்த் வல்லப பந்த்** பாபர் மசூதிக்குள் வைக்கப்பட்ட ராமர் சிலைகளை அகற்றுமாறு மாவட்ட **நீதிபதி கே.கே.நாயருக்கு உத்தர**விட்டார். ஆனால் நாயர் அந்த ஆணையை நிறைவேற்ற மறுத்து விட்டார்! எனவே நாயர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் (பின்னர் நாயர் ஜன சங்கத்தில் சேர்ந்து, சட்டமன்ற உறுப்பினராகவும் (1965), நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1967) தேர்ந்தெடுக்கப்பட்டார்).



ஆரிய சமாஜமும், இந்து மகா சபையும் இப்பிரச்னையில் பிரதான பங்கேற்றன. நேரு அரசாங்கம் இந்து – முஸ்லீம் கலவரத்தைத் தவிர்க்கும் பொருட்டு, ராமர் சிலைகளை அகற்றாமல், பாபர் மசூதிக் கதவுகளைப் பூட்டி விட்டு, அப்பகுதியை **'சர்ச்சைக்குரிய பகுதி'** என்று அறிவித்தது! நேருவும் பட்டேலும் பாபர் மசூதியை ராமர் கோயிலாக மாற்றும் முயற்சியை முறியடித்துவிட்டதாகக் கூறுகிறார் டி.தாஸ். அரசாங்கத்தின் உறுதியான நடவடிக்கையால் இந்து தேசியவாதிகள் ராமஜென்ம பூமி பிரச்னையை அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தப்படுவது தடுக்கப்பட்டது என்று கருதுகிறார் ஜாப் ரெலாட்.

### 23.7.4 ராமஜென்ம பூமி பிரச்னை

1950க்குப் பின் வலுவிழந்து மக்களால் மறக்கப்பட்ட ராமஜென்ம பூமி பிரச்னை 1980களில் மீண்டும் தலைதூக்கியது. **1984 ஏப்ரல் மாதம் விளச்பி** கூட்டிய முதல் **'தர்ம சனத்'** அயோத்தியில் 'ராமர் பிறந்த **இடத்தை விடுவிக்க வேண்டும்'** என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அடுத்த மாதமே வி.எச்.பி **'பஜ்ராங்தள்'** (Bajrang Dal) என்ற அமைப்பை உருவாக்கியது. இது அனுமானைப் போன்ற வலிமையுடையவர்களைக் கொண்ட விளச்பியின் தீவிரவாதக் கிளையாகும். இந்த **'வானரப் படை'**யின் தலைவராக **அகில** பாரதீய வித்யார்த்தி பரிஷத் (ABVP)தின் அமைப்புச் செயலராகவும் (1970 – 74), 1980லிருந்து ஆர்.எஸ்.எஸ்ஸின் பிரச்சாரகராகவும் இருந்த **வினாய் கத்யார்** நியமிக்கப்பட்டார். விளச்பி பஜ்ராங்தளத்தை ராமர் கோயிலை 'விடுவிப்பதற்காக'ப் பயன்படுத்தியது!

### 23.7.5 யாத்திரைகள்

1984 ஜூலை 27–ம் தேதி **ஸ்ரீராமஜென்ம பூமி முக்தியக்ன சமிதி** என்ற அமைப்பு மகந்த் அவைத்ய நாத்தின் தலைமையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டது! தியாகம் செய்து ராம ஜென்ம பூமியை விடுவிப்பதே இதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தோடு இந்த அமைப்பு பீகாரிலுள்ள **சித்தார்மாகி**யிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு லக்னோ வழியாக டெல்லி செல்லத் திட்டமிட்டது. இதேபோன்று விளச்பியும் ராமஜென்ம பூமியை முஸ்லீம்களிடமிருந்து விடுவிக்க பீகாரிலிருந்து அயோத்தியாவுக்கு ஒரு வார கால ரத யாத்திரைக்கு ஏற்பாடு செய்தது. ஆனால் பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்டதால் இவ்விரு முயற்சிகளும் கைவிடப்பட்டன! **1984** இறுதியில் நடைபெற்ற தேர்தலில் பாஜவுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டதால் விளச்பி ராமர் கோவில் பிரச்னையை எழுப்பவில்லை. எனினும் 1985 அக்டோபர் **31** ஆம் தேதி விளச்பி உடுப்பியில் கூட்டிய இரண்டாவது 'தர்ம சனத்' கூட்டத்தில் அடுத்த ஆண்டு மார்ச் முதல் தேதியிலிருந்து சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது. அந்த அறிவிப்பைத் தொடர்ந்து உத்திரப்பிரதேசத்திலும், பீகாரிலும் 25 தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திலிருந்து ராமர் – ஜானகி ரத **யாத்திரிகைகள்** புறப்பட்டன (1985 நவம்பர் – டிசம்பர்)!

### 23.7.6 நீதிமன்றத்தில் வழக்கு

1986 ஜனவரி 26–ம் தேதி அயோத்தியில் **1950–ல்** தொடரப்பட்ட வழக்குக்கு சம்பந்தமில்லாத யு.எம்.**பாண்டே** என்ற வழக்குரைஞர் முன்சீப் நீதிமன்றத்தில் பாபர் மசூதி பூஜைக்குத் திறந்து விடப்பட வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். ஆனால் முன்சீப் நீதிமன்ற உத்திரவின்றி இந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். பாண்டே பைசாபாத் செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்தார். வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி மசூதியைத் திறந்துவிட உத்தரவிட்டார் (1986 பிப்ரவரி 1).! அடுத்த 40 நிமிடங்களில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின்பேரில் பாபர்

# 46. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, 2004-2009

> *என்னுடைய பதவிக் காலத்தில் தூய மனதுடன் தேசத்துக்காக, மக்கள் நலனை முன் வைத்து எனது கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றினேன். இதைத் தவிர வேறெந்த சாதனையையும் நான் செய்யவில்லை.*
>
> *– மன்மோகன் சிங்.*

## 6.1 கூட்டணி அரசாங்கம்

14–வது மக்களவைத் தேர்தல் சமகால இந்திய வரலாற்றில் மாபெரும் மாற்றத்தை ற்படுத்தியது. தற்பெருமைத் தன்னம்பிக்கையோடு தேர்தல் களமிறங்கிய பா.ஜ.க. தோல்வியைத் தழுவியது! தன்னடக்கத்தோடு தேர்தலை சந்தித்த காங்கிரஸ் வெற்றிவாகை சூடியது!! 2004 மே 22–ம் நாள் டாக்டர் **மன்மோகன் சிங்** இந்தியாவின் 4–வது பிரதமராகப் பொறுப்பேற்றார். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த மக்களவை உறுப்பினர் **சோம்னாத் சட்டர்ஜி** சபாநாயகராகவும், காங்கிரஸ் பிரமுகர் **பிரணாப் முகர்ஜி** மக்களவைத் தலைவராகவும், **அதல் பிகாரி வாஜ்பாயி** பா.ஜ.க. மக்களவைக் கட்சித் தலைவராகவும், **எல்.கே.அத்வானி** எதிர்க்கட்சித் தலைவராகவும் செயல்பட்டனர். காங்கிரஸ் தலைவர் **சோனியா காந்தி** ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மற்றும் தேசிய ஆலோசனைக் குழு (National Advisory Committee)யின் தலைவரானார். குறைந்தபட்ச செயல் திட்டத்துடன் (Common Minimum Programme) ஐக்கிய முற்போக்கு அரசாங்கம் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவோடு செயல்படத் துவங்கியது.

## 46.2 சொல்லும் செயலும்

நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் கொள்கைகளையும் செயல்திட்டங்களையும் விவரித்தார். பிரதமர் மன்மோகன்சிங் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் புதிய ஆட்சியின் பொறுப்புக்களைக் கோடிட்டுக் காட்டினார். சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் பேசியபோது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே தனது தலையாய கடமை என்று குறிப்பிட்டார்.

## சுனாமிச் சவால், 2004

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்ற ஆண்டு இறுதியில் **சுனாமி** (Tsunami) ஊழிப் பேரழிவுச் சவாலை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. **2004** டிசம்பர் 5-ம் நாள் ஏற்பட்ட அசுரச் சூறாவளி மற்றும் கடல் கொந்தளிப்பால் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா மற்றும் ஆந்திர மாநிலங்களின் கடலோரப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கானோர் உயிரையும், உடமைகளையும் இழந்தனர். புதிதாகப் பதவிப் பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் இச்சவாலைத் துணிவுடனும் திறமையுடனும் சமாளித்தது. துயர் துடைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. **தேசிய பேரழிவு மேலாண்மை ஆணையம்** (National Disaster Management Agency) அமைக்கப்பட்டது. **சுனாமி எச்சரிக்கை முறை** (Tsunami Warning System) உருவாக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. மத்திய ரசு சுனாமிச் சவாலை வெற்றிகரமாக சந்தித்து உலக நாடுகளின் பாராட்டைப் பெற்றது.

# 46.3 முற்போக்கு மிஷன்கள்

## தேசிய கிராமப்புற சுகாதார மிஷன்

2005 ஏப்ரல் மாதம் **கிராமப்புற சுகாதார மிஷன்** (National Rural Health Mission) திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்புதிய திட்டத்தின் செயல் நோக்கங்கள்: 1) அனைத்து கிராம மக்களுக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய உடல் நல சேவை; 2) அவர்களின் சுகாதார உடனடி உணர் தேவைகளைப் பூர்த்தி செய்தல்; 3) பேறுகால சிசுச் சாவைக் குறைப்பது; 4) நோய்களைக் கட்டுப்படுத்துதல்; 5) ஒருங்கிணைக்கப்பட்ட அகல் விரிவான ஆரம்ப சுகாதார சேவை அனைவருக்கும் கிடைக்கச் செய்யல்; 6) மக்கள் தொகையை நிலைப்படுத்துவதன் மூலம் ஆண்–பெண் விகிதத்தை சமன்படுத்துதல். இத்திட்டத்தின் துவக்கமாக ஆரம்ப சுகாதார கட்டுமான வசதிகள் மிகக் குறைவாக உள்ள 18 மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்னர் பிற மாநிலங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

## சச்சார் கமிஷன், 2005

இந்திய முஸ்லீம்களின் சமூக–பொருளாதார–கல்வி–வேலைவாய்ப்பு–மற்றும் அரசியல் நிலை பற்றிக் காலனி ஆட்சிக் காலத்திலிருந்தே தெளிவுபடுத்தப்படாமல் இருந்து வந்தது. பல குழுக்கள் அமைக்கப்பட்டும் இதுபற்றிய தீர்வு காணப்படவில்லை. எனவே, பிரதமர் மன்மோகன் சிங் உச்ச நீதிமன்ற நீதிபதி **ராஜேந்தர் சச்சார்** (Rajendar Sachar) தலைமையில் 7 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உயர்மட்ட ஆய்வுக் குழுவை நியமித்தார் (ஏப்ரல் 2005). இக்குழு நாடு முழுதும் பயணம் மேற்கொண்டு தகவல்களைத் திரட்டி, தொகுத்து, பகுத்து இந்திய முஸ்லீம்களின் அடையாளம், பாதுகாப்பு, சமத்துவம் பற்றிய அறிக்கையை அளித்தது. இது சமகால இந்திய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட முறையான, அறிவியல்பூர்வமான முயற்சியாகும்.

## நிர்வாக சீர்திருத்தக் கமிஷன்

இந்திய நிர்வாகத்தை மேலும் சீர்திருத்தி செம்மைப்படுத்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் முடிவு செய்தது. அதன்படி பிரதமர் மன்மோகன்சிங் முன்னாள் கர்நாடக முதலமைச்சர் **வீரப்ப மொய்லி** (Veerappa Moily) தலைமையில் நிர்வாக சீர்திருத்தக் கமிஷனை (Administrative Reforms Commission) நியமித்தார். இக்கமிஷன் அதன் முதல் அறிக்கையை **2006** ஜூன் 9-ம் தேதியும், எஞ்சிய அறிக்கைகளை 2007 பிப்ரவரி 12-ம் தேதியும் அளித்தது.



இவ்வறிக்கைகளில் தகவல் அறியும் உரிமை; வேலை வாய்ப்பு உத்திரவாதம்; நெருக்கடி நிர்வாகம்; பொது ஒழுங்கு மற்றும் நிர்வாக சிக்கல் தீர்ப்பு; பொதுச் சேவைகள் சீரமைப்பு; உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் மற்றும் நிதிப் பங்கீடு; நல்லாட்சி; நிர்வாக ஒழுக்கம்; பொது நிர்வாக முறைப் புனரமைப்பு; மத்திய அரசாங்க அமைப்பு மாற்றம்; அரசாங்க அலுவலர் நிர்வாகம்; நிதி மேலாண்மை முறை; கூட்டாட்சி அமைப்பு; மின்–அரசாங்க நிர்வாகம்; பொது ஒழுங்குப் பாதுகாப்பு; நெருக்கடி நிர்வாகம்; மாநில–மாவட்ட நிர்வாகச் சீரமைப்பு பற்றிய பரிந்துரைகள் கூறப்பட்டுள்ளன. இக்கமிஷன் பிரதமர் நேருவின் ஆட்சிக் காலத்துக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட மகத்தான முயற்சியாகும்.

## தேசிய அறிவுக் கமிஷன் (National Knowledge Commission)

2005 ஜூன் 13-ம் தேதி பிரதமர் மன்மோகன் சிங் பிரபல தகவல் தொழில்நுட்ப வல்லுநர் சாம் பிட்ரோடா (Sam Pitroda) தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அறிவுக் **கமிஷனை** நியமித்தார். இக்குழுவின் நோக்கங்களாவன: 1) 21-ம் நூற்றாண்டின் அறிவுச் சவால்களை சமாளிக்கும் வகையில் கல்வி நிறுவனங்களின் தரத்தையும், போட்டித் திறனையும் வளர்த்தல்; 2) அறிவியல்–தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களில் அறிவுப் பெருக்கத்துக்கு ஆவண செய்தல்; 3) 'அறிவுப் பொருள் உரிமைகள்' (Intellectual Property Rights) சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் மேலாண்மைத் திறனை உயர்த்தல்; 4) விவசாயம் மற்றும் தொழில் சார்ந்த பயன்பாட்டு அறிவை ஊக்குவித்தல்; 5) அரசாங்கம் திறமையாகவும், வெளிப்படையாகவும், பொறுப்பாகவும் செயல்பட்டு பொது மக்களுக்கு சேவை செய்வதற்கான வழிமுறைகளைக் கூறல்; 6) பொது நலனைப் பெருக்கும் வகையில் அறிவைப் பகிர்ந்து கொள்ளல்.

அறிவுக் கமிஷனின் பல்வேறு செயற்குழுக்கள் சம்மந்தப்பட்ட நிபுணர்கள், பயனாளிகள், பங்குதாரர்களுடன் கலந்து பேசி, விவாதித்து அதன் அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பித்தது (12 ஜனவரி 2007). அந்த ஆய்வறிக்கையில் 1) நூலகங்கள்; 2) அறிவு; 3) மின்–ஆட்சி; 4) மொழி பெயர்ப்பு; 5) மொழிகள்; 6) தேசிய இணைய தளங்கள் ஆகிய தலைப்புகளில் பல பரிந்துரைகளை இக்கமிஷன் செய்துள்ளது. இப்பரிந்துரைகளில் பல செயல்படுத்தப்பட்டுள்ளன. அறிவுக் கமிஷன் தொடர்ந்து பிரதமருக்கு கல்விக் கொள்கை, ஆராய்ச்சி மையங்கள், அறிவுப் பொருளாதாரத் திறமை பற்றிய ஆலோசனைகளை வழங்கும்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்

தகவல் அறியும் **உரிமைச் சட்டம்** (Right to Information Act) 2005 அக்டோபர் 12-ம் நாள் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன: 1) இச்சட்டத்தில் **"தகவல் அறியும் உரிமை"** என்ற சொற்றொடர் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது; 2) இவ்வுரிமை தகவல் வெளிப்படையாகவும், தகவல் தருவோர் தரும் தகவலுக்குப் பொறுப்பாக்கப்படுவதற்கும் வழிவகுக்கிறது; 3) இச்சட்டம் மத்திய, மாநில, உள்ளாட்சி மற்றும் அரசு சாரா அமைப்புகளைப் 'பொது அதிகார மையங்கள்' (Public Authorities) என்ற பிரிவின் கீழ் கொண்டு வருகிறது; 4) மத்திய தகவல்

ஆணையம் (Central Information Commission) அமைக்கப்படல் வேண்டும்; 5) அதேபோன்று மாநில தகவல் மையங்களை அமைக்க வேண்டும்; 6) குடிமகன் தகவல்கோரும் விண்ணப்பத்தை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற வழிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. உரிய அதிகாரிகள் 30 நாட்களுக்குள் தகவல் தர வேண்டும்; தவறினால் தண்டிக்கப்படுவார்கள்.

புரட்சிகரமான இச்சட்டம் இதுவரை இரகசியமாக வைத்தும், பாதுகாக்கப்பட்டு வந்த அரசாங்க ஆவணக் கதவுகளை குடிமக்களுக்குத் திறந்து விடுகிறது; தகவல் பரிமாற்றத்தை வெளிப்படையாக்குகிறது; அரசாங்க அதிகாரிகள் பொது மக்களுக்குப் பொறுப்பாக்கப்படுகின்றனர். சுருங்கக்கூறின், தகவல் அறியும் உரிமைச் சட்டம் "திறந்த வெளி அரசாங்க சகாப்பதத்தை" (Era of Open Government)த் துவக்கி வைக்கின்றது எனலாம்.

## முல்லை–பெரியார் அணைத் தகராறு

முல்லை–பெரியார் **அணைத் தகராறு** (Mullai-Periyar Dam Dispute) தமிழ் நாட்டுக்கும் கேரளாவுக்குமிடையே தீராத் தலைவலியாக இருந்து வந்தது. உச்ச நீதிமன்றம் இதற்காக நல்ல தீர்வைத் தந்தது (நவம்பர் 10). அத்தீர்ப்பின்படி, ஒரு தொழில்நுட்ப நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அக்குழு அணையின் பகுதிகளைப் பார்வையிட்டு இவ்வணை பாதுகாப்புடன் உறுதியாக இருப்பதாகவும், அசாதாரண நீர்க்கசிவு எதுவுமில்லை என்றும்; அணையைத் தமிழ்நாடு முறைப்படி பராமரித்துப் பலப்படுத்திக் கொண்டிருப்பதாகவும், அணையின் உயரத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதால் அணைக்கோ அல்லது சுற்றுச்சூழலுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாதென்றும் அதன் ஆய்வறிக்கையில் தெளிவுபடுத்தியது. நிபுணர் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், தமிழ்நாடு அரசு அணையின் உயரத்தை உயர்த்திக்கொள்ள உத்திரவிட்டது (பிப்ரவரி 27, 2006). ஆனால், கேரள அரசாங்கம் அந்த உத்திரவுக்கெதிராக மேல்முறையீடு செய்துள்ளது! **சிக்கலும் சர்ச்சையும்** நீடிக்கின்றன!!

## தேசிய நகர்ப்புற புனரமைப்பு மிஷன்

தேசிய கிராமப்புற சுகாதார மிஷன் போன்றே நகரத்தின் ஏழை எளிய மக்களுக்கான **தேசிய நகர்ப்புற புனரமைப்பு மிஷன்** (National Urban Renewal Mission) திட்டம் 2005–ம் ஆண்டு இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது (டிசம்பர்). இது ஒரு ஏழாண்டுத் திட்டம். இத்திட்டம் இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டது: 1) வீடு மற்றும் குடிசை மாற்று வளர்ச்சித் திட்டம் (Housing and Slum Development Programme); 2) நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளைக் கொடுப்பது. இத்திட்டங்களை நிறைவேற்றும் மாநிலங்களுக்கு மத்திய அரசு மானிய நிதியுதவி அளிப்பது. இவ்வாறு ஒரு ஆண்டுக்கு மட்டும் 20 நகரங்களில் ரூ.35 பில்லியன் செலவில் 56 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது (செப்.2006). சமகால இந்திய வரலாற்றில் முன்னுதாரணமில்லா முன்னேற்றத் திட்டம் இது.

## நதிகள் ஒருங்கிணைப்பு (Interlinking of Rivers)

இந்திய நதிகளை ஒருங்கிணைப்பது சுதந்திர இந்தியாவின் கனவுத் திட்டமாகும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் இத்திட்டத்திற்கு முன்னுரிமை முக்கியத்துவம்



கொடுத்து செயல்வேகத்தை துரிதப்படுத்தியது. 2005 ஆகஸ்டு மாதம் உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்கள் **கென்** (Ken)–**பெட்வா** (Betwa) நதிகளை இணைப்பதற்கான **புரிந்துகொள் ஒப்பந்தத்தில்** (Memorandum of Understanding) கையொப்பமிட்டன. ரூ.4,263 கோடித் திட்டம் இது. இந்த ஒப்பந்தத்தின்படி, திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கான முழுச் செலவையும் ஏற்க மத்திய அரசு முன்வந்தது. இதேபோன்று, ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்கள் **பார்வதி–காலி** (Parvati-Kali); **சிந்து–சம்பால்** ஆகிய (Sindh-Chambal) இரு மாநில நதிகளை இணைக்கச் சம்மதித்தன. இவ்விணைப்பை ராஜஸ்தானில் உள்ள **பனாஸ்** (Banas) நதிக்கும் விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

## இன வன்முறை தடுப்பு மசோதா

இனவாதம், பயங்கரவாதம், **நக்சலிசம்** ஆகியவை சமகால இந்தியப் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும், அமைதிக்கும் எதிராக எழுந்துள்ள அச்சுறுத்தல்களாகும். இவற்றுள் **இனவாதம்** (Communalism) உடனிருந்து கொல்லும் உயிர்க்கொல்லி நோய் போன்றது. இந்நோய்க்கான அருமருந்தாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் **இன வன்முறை தடுப்பு மசோதா** (Communal Violence-Prevention, Control and Rehabilitation Bill)வை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது (டிச.2005). இனவாத வன்முறையை முளையிலேயே கிள்ளி எறியக்கூடிய பல சிறப்புக் கூறுகளைக் கொண்ட இச்சிறந்த சட்ட மசோதா சட்ட வடிவம் பெறவேண்டியது இன்றியமையாதது.

## 46.4 பாரத் நிர்மாண்

### பாரத் நிர்மாண் திட்டம், 2006

கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே பாரத் நிர்மான் திட்டத்தின் (Bharat Nirman Programme) நோக்கமாகும். 2006 ஜனவரி 11–ம் நாள் பிரதமர் மன்மோகன் சிங் இந்த போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த **5 அம்சத் திட்டத்தை** அறிவித்தார். இத்திட்டத்தின்படி 1) அனைத்து கிராம மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்; 2) குடிநீரின் தரத்தை உயர்த்தல்; 3) குடிநீர் வினியோக மேலாண்மைப் பொறுப்பை பஞ்சாயத்து நிறுவனங்களிடம் ஒப்படைத்தல்; 4) புல்லிதழ் உள்ளாட்சி நிறுவனங்களின் செயல்திறனை உயர்த்துதல்; 5) பாதுகாப்பான உத்திரவாதமுள்ள குடிநீர் கிடைப்பதற்கான நீர்நிலைகளை முறையாகப் பராமரித்தல்; 6) இதற்கான கிராமக் கட்டுமானத்தையும், அடிப்படை வசதிகளையும் உறுதியுடன் மேம்படுத்துதல்.

## கட்டாயத் திருமணப் பதிவு (Compulsory Registration of Marriage)

2006–ம் ஆண்டுத் துவக்கத்தில் **தேசியப் பெண்கள் மிஷன்** (National Commission for Women) கிராமப் பெண்களுக்கு அதிகாரமளிக்கக்கூடிய பேராா்வமிக்க ஒரு திட்டத்தை அறிவித்தது. அத்திட்டத்தின்படி கிராமப் பெண்களிடையே பாலியல் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பெண்களுக்குத் தேவைப்படும் சட்ட மற்றும் காவல்துறை உதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

யாவற்றுக்கும் மேலாக உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டலின்படி (பிப்.14) எந்த சமயத்தைச் சார்ந்தவராயினும் திருமணத்தைக் கட்டாயப் பதிவு செய்ய வேண்டும்;

இதற்கான விதிமுறைகளில் தக்க திருத்தங்களைச் செய்ய வேண்டும்; குழந்தைத் திருமணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது; இருதார / பலதார திருமணங்கள் கட்டுப்படுத்தப்பட்டது; மணமான பெண்கள் திருமணம் செய்து வைக்கப்பட்ட குடும்பங்களிலேயே வாழ வழிவகுக்கப் பட்டது; கணவன் இறந்துவிட்டால் விதவைப் பெண்கள் அவர்களுக்குரிய மரபுரிமைகளையும் பிற உரிமைகளையும் கோரிப் பெறுவதற்கான வசதி செய்யப்பட்டது; திருமணம் என்ற பெயரால் பெற்றோர் பெண்களை விற்பதற்கும், மணமானபின் கணவன் மனைவியை புறக்கணித்து ஒதுக்குவதற்கும் தடை விதிக்கப்பட்டது. இச்சமுதாயச் சீர்திருத்தம் சமகால இந்தியப் பெண்ணுரிமை வரலாற்றில் முக்கிய மைல்கல்லாகும்.

### தேசிய கிராம வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம்

### National Rural Employment Guarantee Scheme

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் பல்வேறு வறுமைக் குறைப்பு மற்றும் வேலை வாய்ப்பு விரிவாக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றுள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் 2005 செப்டம்பர் திங்களில் நிறைவேற்றி அடுத்த ஆண்டு பிப்ரவரி 2–ம் நாள் நடைமுறைப்படுத்திய **தேசிய கிராம வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டச் சட்டம்** வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

இப்புரட்சிகரமான கிராமப் பொருளாதாரத் திட்டத்தின் தலையாய நோக்கம் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமக் குடும்பத்திற்கும் குறைந்தது 100 நாட்கள் வேலைக்குச் சட்ட உத்திரவாதம் அளிப்பதாகும். முதல் கட்டமாக நாடு முழுவதும் 200 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த ஐந்தாண்டுகளில் இத்திட்டம் அனைத்து கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.150,000 கோடி செலவிட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. சமகால இந்திய வரலாற்றில் முதன் முறையாக மேற்கொள்ளப்பட்ட சட்ட உத்திரவாதமுடைய புரட்சிகரமான பிரமாண்ட கிராம வேலைவாய்ப்புத் திட்டம் இதவேயாகும்.

## 46.5 வளர்ச்சிப் பயணம்

### மத்தியக் கல்வி நிலைய இடஒதுக்கீட்டுச் சட்டம், 2007

### Central Educational Institutions (Reservation in Admissions Act, 2007)

வீரப்ப மொய்லி நிர்வாக சீர்திருத்தக் கமிஷினின் பரிந்துரையின்படி இடஒதுக்கீட்டு முறையை **மத்திய கல்வி நிறுவனங்களில்** கொண்டு வருவதற்கான **மத்தியக் கல்வி நிலைய இடஒதுக்கீட்டுச் சட்டத்தை** இயற்றி 2007 ஜனவரி மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்புதிய சட்டத்தின்படி, மத்தியக் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 7.5% மற்றும் பிற பிற்பட்ட வகுப்பாருக்கு 27% என்ற விகிதத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்தது. இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் (IITs), மற்றும் இந்திய மேலாண்மை நிறுவனங்களில் (IIMs) இருக்கும் இடங்களைக் குறைக்காமல் இப்புதிய இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என்றபோதும், உச்சநீதிமன்றம் பிற பிற்பட்ட வகுப்பாருக்கு இட ஒதுக்கீடு செய்யும் முடிவை நிராகரித்தது! மத்திய அரசு இம்முட்டுக்கட்டையை அகற்ற முடிவு செய்தது!!



### காவேரி தீர்ப்பாயத்தின் தீர்ப்பு (Cauvery Tribunal Award)

காவேரி நதிநீர்ப் பங்கீடு முடிவில்லா தொடர்கதை போல் உள்ளது! மூன்று உறுப்பினர்களைக் கொண்ட **காவேரி நதிநீர் தகராறு தீர்ப்பாயம்** (Cauvery Water Dispute Tribunal) தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி அரசாங்கங்கள் முன்வைத்த வாதங்களையும், ஏராளமான ஆதாரங்களையும் வாதப் பிரதிவாதங்களையும் 130 முறை அமர்ந்து பரிசீலித்த பின்னர் அதன் என்பது பக்கத் தீர்ப்பை வழங்கியது (பிப்.5, 2007). இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மாநிலங்களும், யூனியன் பிரதேசமும் பெற வேண்டிய நீரின் அளவையும் இந்தத் தீர்ப்பில் துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறியது. அதோடு காவேரி மேலாண்மை மன்றம் (Cauvery Management Board), **காவேரி** நீர்க்கட்டுப்பாட்டுக் கமிட்டி (Cauvery Water Regulation Committee) போன்ற புதிய அமைப்புகளை ஏற்படுத்துவது போன்ற ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் தீர்ப்பாயம் வழங்கியது. 16 ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்கப்பட்ட இத்தீர்ப்பு சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை! எனவே, இம்மாநிலங்கள் மேல்முறையீடு செய்துள்ளன!! தகராறு தீர்ந்தபாடில்லை!!!

### உ.பி. தேர்தல்

2007 மே மாதம் உத்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் சமகால இந்திய வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. ஏழு கட்டங்களாக நடத்தப்பட்ட இத்தேர்தலின் போது **மாயாவதியின்** தலைமையிலான **பகுஜன் சமாஜவாதிக் கட்சி** (BSP) 'பகுஜன் **சமாஜ்**' கோஷத்தை '**சர்வஜன் சமாஜ்**' கோஷமாக விரிவுபடுத்தி, அனைத்துத் தரப்பு வாக்காளர்களையும் குறிப்பாக பிராமணர்களின் ஆதரவைப் பெற்று சட்டமன்றத்தின் **403** இடங்களில் **206** இடங்களைப் பெற்று, தனிப் பெரும்பான்மைக் கட்சியாக அரசாங்கத்தை அமைத்து, '**அரசியல் அதிச**'யத்தை நிகழ்த்தியது. உத்திரப் பிரதேசத்தில் பலமிக்க ஒரு கட்சி ஆட்சி அமைந்தது. இது மத்தியிலும் ஒரு கட்சி ஆட்சி அமைவதற்கான முன்னுதாரனமாகக் கருதப்பட்டது!

### குஜ்ஜார் கிளர்ச்சி (Gujjar Agitation)

ராஜஸ்தானில் பிற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த **குஜ்ஜார்கள்** தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் (STs) **பட்டியலில்** சேர்க்க வேண்டும் என்று போராடி வந்தனர். ஆனால் முன்னமேயே பிற்படுத்தப்பட்டோர் நிலையிலிருந்த **மீனாக்கள்** (Meenas) இக்கோரிக்கையை மிகக் கடுமையாக எதிர்த்தனர். குஜ்ஜார் கிளர்ச்சிக்குக் காரணம் 2003–ம் ஆண்டு நடைபெற்ற மாநில சட்ட மன்றத் தேர்தலின் போது அம்மாநில பா.ஜ.க. குஜ்ஜார்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் அந்தஸ்து பெற்றுத் தருவதாகக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாததேயாகும். பின்னர் வாஜ்பாயி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் ஜாட் (Jats) சாதியினரை பிறபிற்பட்ட வகுப்பார் பட்டியலில் சேர்த்தது குஜ்ஜார் கோரிக்கைக்குப் புதுப்பலம் சேர்த்தது. விளைவு?

2007 மே 29–ம் நாள் ஒய்வு பெற்ற **கர்னல் கிரோய் சிங் பைன்ஸ்லா** (Col.(retd) Kiroi Singh Bainsla) தலைமையில் குஜ்ஜார்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்களின் வன்முறைக் கிளர்ச்சி ராஜஸ்தானிலிருந்து உத்திரப் பிரதேசம், அரியானா, டெல்லி வரை காட்டுத்தீ போல் பரவியது. உச்ச நீதிமன்றம் இக்கிளர்ச்சியை தேசிய அவமானம் (National Shame) என்று கண்டித்தது. சுதந்திர இந்தியாவில் சாதி இடஒதுக்கீடு குடுவையிலிருந்து திறந்துவிடப்பட்ட பூதம்போல் பலம்பெற்று வருகிறது!

# 47. மன்மோகன் சிங்கின் வெளியுறவுக் கொள்கை

*இன்றைய இந்தியா குருட்டுத்தனமான பழைய பழக்கங்களுக்கும், அடிமைத்தமான அயல்நாட்டு மோகத்துக்கும்மிடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இரண்டுமே நல்லதல்ல. சுதந்திரமாகச் செயல்படும் போது, புதிய விடியல் தோன்றும்; எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.*

*– ஜவஹர்லால் நேரு.*

## 47.1 அடிப்படைக் கொள்கை

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம், இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை ஆதாரக் கொள்கைகளான சுதந்திர தற்சார்வுடைமை; ஏகாதிபத்திய எதிர்ப்பு; கூட்டுச் சேராமை; உலக அமைதிக்கும், சக வாழ்வுக்கும் பாடுபடுதல்; பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்தல்; அணு ஆற்றலை அமைதிக்காகப் பயன்படுத்தல்; நீதி, நேர்மை, நியாயம் ஆகிய ஒழுக்க நியதிகளின் வழி உலக நாடுகளுடன் ஒத்துழைத்தல் ஆகியவற்றை முழுமனதுடன் பின்பற்ற முடிவு செய்தது.

## 47.2 அயல்நாடுகளுடன் உறவு

### இந்திய–அமெரிக்க உறவு

இந்திய–அமெரிக்க உறவு கடந்த 60 ஆண்டுக்கும் மேலாக ஏற்ற இறக்கங்களுடன் அடைந்து வந்தது. மன்மோகன் சிங் இந்த உறவை புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்றார். அவர் பதவி ஏற்றபின் அமெரிக்கா சென்ற போது அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் அணு அற்றல் பற்றிய **உடன்பாடு ஏற்பட்டது (2005 ஜூலை 18).** இதுபற்றி இரு நாடுகளுக்கிடையே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றது. பிரதமர் மன்மோகன் சிங் இந்த **இராணுவம் சாரா அணு ஆற்றல் உடன்பாடு (Civilian Nuclear Deal)** பற்றி நாடாளுமன்றத்தில் தன்நிலை விளக்கம் அளித்தார். இவ்வுடன்பாடு பற்றி எழுப்பப்பட்ட பல்வேறு வினாக்களுக்கு விளக்கமாக விடையளித்தார் (2006 பிப்.27). அமெரிக்க அதிபர் புஷ் இந்தியாவுக்கு வந்த போது **அணு வர்த்தகம்** மற்றும் **அணு ஆற்றல் தொழில்நுட்பம்** பற்றிய உடன்பாடு உருவாயிற்று (மார்ச் 2). இவ்விரு உடன்பாடுகளும் இறுதியில் இந்திய–அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தமாயிற்று.

## பிரதமரின் அணு ஆயுதக் கொள்கை

நேருவுக்குப் பிறகு **அமைதிக்கு அணு** (Atom for Peace) என்ற அணு ஆயுதக் கொள்கையை உறுதியுடன் உடும்புப் பிடியாகப் பின்பற்றினார் பிரதமர் மன்மோகன்சிங். அணு ஆற்றலை ஆக்கப்பூர்வமான நாட்டு முன்னேற்றத்திற்கும், உலக அமைதிக்கும் பயன்படுத்த வேண்டுமேயன்றி, அழிவுக்கு வழிகோலக்கூடாது என்பது பிரதமரின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அணு ஆயுத உற்பத்திக் குறைப்பு; அணு ஆயுத இருப்பை மட்டுப்படுத்துதல்; அணு ஆயுதப் படையைக் குறைத்தல்; இறுதியில் அணு ஆயுதங்களை அடியோடு அகற்றல் ஆகிய ராஜீவ் காந்தியின் 4 அம்ச திட்டத்தை வழுவிற் பின்பற்றினார் சிங். சுருங்கக் கூறின், அணு ஆற்றல் நாட்டு வளர்ச்சிக்கான கருவியாகப் பயன்பட வேண்டும் என்பதே பிரதமர் மன்மோகன் சிங்கின் அணு ஆயுதக் கொள்கையின் உயிர் நாடியாகும்.

## இந்திய–அமெரிக்க அணு அற்றல் ஒப்பந்தம்

2005 ஜூலை 18–ம் நாள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இருநாட்டு அணு அற்றல் பற்றிய கூட்டு அறிவிப்பு இந்திய–அமெரிக்க அணு ஆயுத ஒப்பந்தத்துக்கான அடிப்படை ஆவணமாகும். பின்னர் இந்த ஒப்பந்தத்துக்கான அடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது (2006 மார்ச் 2). அதன்படி இந்தியா அமெரிக்காவுடன் அணு ஆற்றல் வர்த்தகம் மற்றும் அணு ஆற்றல் தொழில் நுட்பப் பரிவர்த்தனை செய்து கொள்ளும். அதோடு **அணு ஆயுதம் சாராத–அணு ஆயுதம் சார்ந்த பிரிவுத் திட்டத்தை** (Separation Plan) **சர்வதேச அணு ஆற்றல் முகமை** (International Atomic Energy Agency-IAEA)யுடன் முடிவு செய்யும்.

இந்த உடன்பாடு பற்றி எதிர்க்கட்சிகள், குறிப்பாக இடதுசாரிக் கட்சிகள், பல குற்றச்சாட்டுக்களை எழுப்பின. 2006 ஆகஸ்டு 17–ம் நாள் நாடாளுமன்ற மேலவையில் எதிர்க்கட்சிகள் எபப்பிய சர்ச்சைகளுக்கு பதில் அளித்ததோடு இந்த உடன்பாடு இந்தியாவின் சுதந்திரமான அணு ஆயுதக் கொள்கைக்கும், நாட்டின் இறையாண்மைக்கும் எந்த விதத்திலும் குந்தகம் ஏற்படுத்தாது என்று உறுதி அளித்தார். அதன் பின் பிரதமர் மன்மோகன் சிங் வரலாற்று முக்கியத்துவமிக்க **ஹெடுச் சட்டத்தில்** (Henry J.Hyde US-India Peaceful Atomic Energy Cooperation Act) கையொப்பமிட்டார் (டிச.16).

2007 ஜூலை மாதம் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நான்கு நாட்கள் டைபெற்ற தீவிர ராஜதந்திர பேச்சுவாாத்தைக்குப் பிறகு **123 உடன்பாடு** (123 greement) ஏற்பட்டது. இப்படி அழைக்கப்படுவதற்குக் காரணம் அமெரிக்க அணு ஆற்றல் ட்டத்தின் 123 பிரிவு சர்வதேச உடன்பாடு பற்றிக் கூறுவதேயாகும். இந்த உடன்பாட்டின் ளைவாக இந்தியாவுக்குப் பல நன்மைகள் ஏற்படும்; குறிப்பாக, கடந்த 40 ஆண்டுகளாக னிமைப்படுத்தப்பட்டிருந்த இந்தியா உலக அணு ஆயுத நாடுகளுக்கிணையான த்தைப் பெறும். பல தடைகளைத் தாண்டி செய்து கொள்ளப்பட்ட வரலாற்று க்கியத்துவமிக்க இந்த ஒப்பந்தம் நடைமுறை சாத்தியமான முற்போக்கு முயற்சியாகும்.

## ந்திய–ரஷ்ய உறவு

இந்தியாவும் ரஷ்யாவும் நட்பு நாடுகள். ரஷ்ய அதிபர் **விளாடிமிர் புதின்** (Vladimir n) புதுடெல்லி வந்த போது (26 ஜன.2007) குடியரசு நாள் கொண்டாட்டத்தில் கற்று இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டார். ரஷ்ய அதிபர் புதினும் இந்தியப்



பிரதமர் மன்மோகன் சிங்கும் பாதுகாப்பு, தற்காப்பு, வர்த்தகம், விண்வெளி ஆய்வு, கலாச்சாரப் பரிமாற்றம் பற்றிப் பேசியதோடு இந்திய–ரஷ்ய உறவு ஏற்பட்ட 60–வது ஆண்டு நிறைவை 2007 ஏப்ரல் 13–ம் நாள் கொண்டாடுவதைத் தீர்மானித்தனர்.

யாவற்றுக்கும் மேலாக, இந்திய–அமெரிக்க அணு அற்றல் ஒப்பந்தத்தையும், ஐ.நா. பாதுகாப்பு அவையில் இந்தியா நிரந்தர உறுப்பினர் இடத்தை அடைவதையும் புதின் ஆதரித்தார். அதோடு தமிழ்நாடு **கூடங்குள அணு ஆற்றல் நிலையத்தை** மேம்படுத்தவும், மேலும் நான்கு **அணு உலைக் கலங்களை** (Nuclear Reactors) வழங்கவும், ரஷ்ய **புவிச்சுற்றுக் கோள் அமைப்பில்** (Russian Global Navigation Satellite System) இடம் தரவும் ரஷ்யா முன்வந்தது. மேலும் ரஷ்யாவிடம் அபரிமிதமாக உள்ள ஹைட்ரோ–கார்பன் (Hydro-Carbon) கனிம வளத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளவும் ரஷ்யா சம்மதித்தது. இவற்றின் காரணமாக இந்திய–ரஷ்யா உறவு புதிய பரிமாணத்தைப் பெற்றது.

## இந்திய–பிரான்ஸ் உறவு

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக் காலத்தில் இந்திய–பிரான்சு வெளியுறவில் ஒரு புதிய சகாப்தம் உருவாயிற்று எனலாம். பிரெஞ்சு அதிபர் **நிக்கோலஸ் கார்கோசி** (Nicolas Sarkosy) அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்தபோதும், (ஜன.25–26), பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பிரான்சுக்குச் சென்றபோதும் இருநாட்டு உறவும் புதுப்பிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டது. பிரெஞ்சு அதிபர் இந்தியக் குடியரசு நாள் கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்

இந்தியாவுக்கும் பிரான்சுக்குமிடையே மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின: 1) இந்தியாவுக்கு அணு அற்றல் உலைக்கலங்களையும், அவற்றுக்கான மூலப் பொருள்களையும் வழங்கல்; 2) அறிவியல்–தொழில்நுட்பப் பரிமாற்றம்; 3) இரு நாடுகளிலுமுள்ள இந்திய, பிரெஞ்சு குடிமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு. மேலும் இந்திய பி.எஸ்.எல்.வி. (PSLV V) விண்கலத்தைப் பயன்படுத்துவது பற்றிய தொலைநோக்கு உடன்பாடும் ஏற்பட்டது. உலக அணு ஆயுத நாடுகள் இந்தியா மீது விதித்திருந்த தடைகள் விலக்கிக் கொண்டபின் இந்திய–அமெரிக்க அணு ஆற்றல் ஒப்பந்தத்தை ஆதரித்து இத்றையில் இந்தியாவுக்கு முழு ஒத்துழைப்புதர முன்வந்த முதல் நாடு பிரான்ஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய–ஐரோப்பிய உறவு

இந்திய–ஐரோப்பிய **ஒன்றிய உச்ச** மாநாடு (Indo-European Summit) 2005 செப்டம்பர் மாதம் புதுடெல்லியில் கூடியது. மாநாட்டு முடிவில் பயங்கரவாத எதிர்ப்பு பற்றிய 19 பக்க **கூட்டுச் செயல் திட்டம்** (Joint Action Plan) வெளியிடப்பட்டது. ஐரோப்பாவின் கலிலியோ **விண்வெளித் திட்டத்தில்** (Galileo Space Programme) பங்கேற்குமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடப்பட்டது. அதோடு **சர்வதேச அணு ஆராய்ச்சி அணு ஆற்றல் உலைக்கலத்திட்டத்திலும்** (International Thermo-nuclear Experimental Reactor Project) கலந்து கொள்வதற்காக தடை நீக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் **டோனி பிளேரும்** (Tony Blair) இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் ராஜஸ்தான் உதய்பூரிலிருந்து வெளியிட்ட உலகப் பாதுகாப்பு பற்றிய கூட்டு அறிக்கை இந்திய–ஐரோப்பிய ஒன்றிய உறவில் குறிப்பிடத்தக்க திருப்பு முனையை